வெளியீடு: 10-1-2018 Issued: 10-1-2018

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
## (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
## (FIFTEENTH ASSEMBLY)

**திங்கட்கிழமை, ஜூன் 19, 2017—தொகுதி 24—எண் 2**

**Monday the 19th June 2017—Volume 24—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 19–06–2017

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் — ***391-440***

**2. தகவல் கோரல்—**

இந்திய தேர்தல் ஆணையம் பரிந்துரைத்தபடி வழக்கு பதிவு செய்யப்படாதது — *441-452*

திரு. மு.க. ஸ்டாலின் — *441, 444-447, 450-451*

திரு. கரி. இராமசாமி — *448-449*

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — *450-452*

**3. ஊடக/பத்திரிகைச் செய்தி ஆதாரமாகாது– பேரவைத் தலைவரின் தீர்ப்பு** — *452-456*

**4. கவன ஈர்ப்பு—**

ரிஷிவந்தியம் தொகுதி, கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, நிலுவைத் தொகை தீர்வு — *456-462*

திரு. க. கார்த்திகேயன் — *457-461*

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — *457-462*

**5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—**

(அ) உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள், அறிவுத்திறன் வகுப்பறை, பள்ளிக் கல்வி இயக்ககத்திற்குப் புதிய கட்டடம், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை — *462-465*

பக்கங்கள்

**5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்**—*தொடர்ச்சி*

*(ஆ) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், புதிய கலை மற்றும் அறிவியல் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் தொடங்குதல், புதிய பாடப் பிரிவுகள் அறிமுகம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை* — *465-467*

*(இ) காஞ்சிபுரத்தில் புதிய விளையாட்டு வளாகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் நீச்சல் குள வளாகம், காஞ்சிபுரத்தில் முதன்மை நிலை விளையாட்டு மையம் ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை* — *467-468*

*(ஈ) நியாய விலைக் கடைகளுக்கு விரல்ரேகை படிப்பி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் மைய வங்கியியல் கணினி சேவை முறை உருவாக்குதல், கூட்டுறவு நிறுவனங்களை நவீனமயமாக்குதல், மாதவரத்தில் நவீன சேமிப்புக் கிடங்கு கட்டுதல், சூரிய ஒளி கூரையுடன் சேமிப்புக் கிடங்குகள், நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பணியாளர்களின் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்த முதலமைச்சரின் அறிக்கை* — *468-472*

பக்கங்கள்

**5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்**—*தொடர்ச்சி*


*(உ) பணியின்போது உயிரிழக்கும் வனத் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்வு, தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017 உருவாக்குதல், பவானி ஆற்றில் இணைய வழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை* *472-473*

**6. பள்ளிக் கல்வி, உயர் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி—** *473-478*

*மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்* *473-475*

*திரு. மு.க. ஸ்டாலின்* *474-475*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்* *475-476*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* *476*

*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்* *477*

*மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்* *477-478*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்* *478*

பக்கங்கள்

**7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*(அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை*

*(ஆ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)* ... *479-646*

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 479, 494, 505, 508-510, 512-527, 529-532, 559-560, 564, 571-572, 576, 593-639, 641-642 |
| திரு. எஸ். ஆஸ்டின் | 506-512, 514-535, 639-641 |
| *திரு. கே.வி. இராமலிங்கம் | 535-550, 643 |
| *திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் | 550-558 |
| திரு. எச். வசந்தகுமார் | 483, 497, 558-578 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 561-563, 571, 573, 577, 586 |
| மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் | 565 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 566-567 |
| திரு. இரா. சந்திரசேகர் | 578-588 |
| திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் | 588-593, 600-602 |

பக்கங்கள்

**7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. மு.க. ஸ்டாலின் 595-596, 637-638, 644

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன் 599

*மாண்புமிகு திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் 599

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன் 643

**8. அறிவிப்பு**—

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.) 645

**9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)**— 646-666

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி 647, 663-665

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 647-653

மாண்புமிகு திரு. பி. தங்கமணி 652

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் 653-654

திரு. மு.க. ஸ்டாலின் 653-654, 659, 664

திருமதி எஸ். விஜயதரணி 654-658

*திரு. தங்க. தமிழ்ச்செல்வன் 654-655

*திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் 658-659

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 659-663

**10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 666-669

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஹேவிளம்பி, ஆனி 5, திருவள்ளுவர் ஆண்டு – 2048

## 2017 ஜூன் 19, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்."*

*தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவி, தகுந்த காலம், செய்ய வேண்டிய முறை, தகுந்த இடம் ஆகிய ஐந்தினையும் குறித்து நன்கு தெளிவாக ஆராய்ந்து செய்ய வேண்டும்.*

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**31—**

### தார்ச் சாலை அமைத்தல்

***9926—திரு. தா. உதயசூரியன்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2017 ஜூன் 19

*சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*சங்கராபுரம் தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள், "கல்வராயன் மலைப் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?" என்று எழுப்பிய கேள்விக்கு தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளக்குறிச்சி வனக் கோட்டத்திலுள்ள கல்வராயன் மலைப் பகுதியில் வசிக்கும் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில், பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வனவாழ் மக்கள் வன உரிமைகள் அங்கீகரிப்புச் சட்டம், 2006–ன்படி, 1 ஹெக்டேர் 2.25 ஏக்கர் வன நிலத்திற்குக் குறைவாக இருந்த 11 சாலைகளுக்கு மொத்தம் 9.38 ஹெக்டேர் வன நிலம் மாற்றம் செய்து அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. வன நிலம் 1 ஹெக்டேருக்குமேல் தேவைப்படும் 11 சாலைகள் அமைப்பதற்கு 15.87 ஹெக்டேர் நிலத்திற்கு, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி, மத்திய அரசிடம் உடனடி அனுமதி பெற சாத்தியக்கூறுகள் கொண்ட சாலைகளின் அனுமதிக்காக பயனீட்டாளர்களான மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையினர் இணையதளம்மூலம் விண்ணப்பம் செய்ய உரிய வழிவகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.*

*மேலும், 1 ஹெக்டேருக்கும் அதிகமான வன நிலம் தேவைப்படும் 3 சாலைகளுக்கு 2.88 ஹெக்டேர் நிலத்திற்கு, உரிய விவரங்களோடு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி, பயனீட்டாளர்களான மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையினரால் மத்திய அரசிடம் அனுமதி பெறும்பொருட்டு, முதற்கட்ட நடவடிக்கை எடுத்து, இணையதளம்மூலம் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்களின் சட்டமன்றத் தொகுதியில் 25 சாலைகள் அமைப்பதற்காக உரிய நடவடிக்கைகள் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர்*

*2017 ஜூன் 19]*

*அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

**திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ஐப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.* NABARD, PMGSY, SBGF *மற்றும்* THAI *ஆகிய நான்கு திட்டங்களின்கீழ் சுமார் 55.45 கி.மீ. தூரத்திற்கு சாலைகள் போட டெண்டர் விடப்பட்டது. இந்த டெண்டர்* PMGSY *திட்டத்தின்கீழ் 19–3–2013 அன்றும்,* SBGF *திட்டத்தின்கீழ் 4–6–2014 அன்றும்,* THAI *திட்டத்தின்கீழ் 22–8–2013 அன்றும்,* NABARD *திட்டத்தின்கீழ் 27–1–2015 அன்றும் விடப்பட்டது. இன்றைக்கு 1 வருடத்திற்கு மேல் ஆகிறது. கல்வராயன் மலைப் பகுதியில் நடைபெற்ற கோடை விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் பேசியபோது, "எந்தப் பேச்சையும் பேசக் கூடாது. கோரிக்கையை மட்டும் சொல்லுங்கள்" என்று சொன்னர்கள். அப்போது இந்தக் கோரிக்கையைத்தான் நான் வைத்தேன். 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் டெண்டர் விடப்பட்டது. விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அரசாணைகள் போடப்பட்டு, இரண்டு முறை ஜல்லிகள் பரப்பப்பட்டு, தார்ச் சாலை போடுகின்றபோது பணி நிறுத்தம் செய்யப்பட்டிருக்கின்றது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன், உங்களுக்கு மற்றொரு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு அளிக்கப்படும். நீங்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

*முற்பகல் 10–05*

**திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5,258.5 மீட்டர் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது; 67 சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2 முறை ஜல்லி போடப்பட்ட பிறகு, வனத் துறை மூலமாக, தார்ச் சாலை போடக் கூடாது என்ற விதி*

இருக்கிறது என்று சொல்லப்பட்டு, தார்ச் சாலை போடும் பணி தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு வருடம் 4 நாட்களுக்கு முன்பாகவே நான் இந்தக் கோரிக்கையை வைத்தேன். இப்போது ஒரு வருடம் 4 நாட்கள் ஆகின்றன. சின்ன திருப்பதி என்ற ஊரும் இருக்கிறது. நான் பேசுகின்றபோதுகூட சொன்னேன். 'சீனிவாசப் பெருமாளுடைய பெயரை வைத்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களே இங்கு வந்திருக்கிறார், அங்கே சின்ன திருப்பதி இருக்கிறது' என்று. இப்போது அந்த மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியில் ஜல்லியெல்லாம் கொட்டப்பட்டு, பரப்பப்பட்டிருக்கிறது. வனத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோதே ** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்ததையெல்லாம் நான் அனுமதிக்கவில்லை. அதை நீங்கள் பதிவு செய்யாதீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. தா. உதயசூரியன்:** ஈட்டு நிலம் வனத் துறை மூலமாக ஒரு ஹெக்டேர்தான் என்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். 73 கிலோ மீட்டருக்குமேல் 1989–1990, 1996–2001, 2006–2011 ஆம் ஆண்டுகளில் கலைஞர் அவர்கள் ஆட்சியில், முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி அந்த மலைவாழ் மக்களுக்கு தார்ச் சாலை போடப்பட்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டு சட்டம்தான் அப்போதும் இருந்தது. இப்போதும் இருக்கிறது. அந்த மலைவாழ் மக்களுடைய நலனைக் கருதி, எழுத்தூர், எட்டரைப்பட்டி, தேர்ப்புலி, வலாம்பட்டி, சின்ன திருப்பதி, பாச்சேரி, தெற்குப்பட்டி, கொடமாத்தி, சிறுக்களூர் போன்ற இடங்களிலெல்லாம் தார்ச்சாலை அமைக்க வேண்டும். நான் சட்டமன்ற உறுப்பினராகி இப்போது ஒரு வருடமாகிவிட்டது. அந்த ஊர்களுக்கு என்னால் போக முடியவில்லை. ஜல்லி கொட்டப்பட்டு அப்படியே பரவிக்கிடக்கிறது. தார்ச் சாலை போடுவதற்கு materials கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் ஈட்டு நிலம் வேண்டுமென்று சொல்கிறார்கள். விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மரக்காணம் பகுதியில் ஈட்டு நிலமும்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

*2017 ஜூன் 19]*

*கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிடம் விரைந்து எடுத்துச் சொல்லி வனத் துறை வழக்கறிஞர்கள் மூலமாக உடனடியாக பரிசீலனை செய்து 2 அல்லது 3 மாத காலத்திற்குள்ளாக அந்தத் தார்ச் சாலைகளை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்களும், கள்ளக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. குமரகுரு அவர்களும் முதன்முதலாக ஆட்சி அமையப்பெற்றவுடன் கலந்துகொண்ட நிகழ்ச்சியில், அவரிடம் எடுத்துச் சொன்னோம். அதைத்தான் நான் என்னுடைய பதிலிலே சொல்லியிருக்கிறேன். தமிழ்நாடு அரசாங்கத்தின் மூலமாக ஒரு ஹெக்டேர் வன நிலத்திற்கும் குறைவாக இருந்ததால் 11 சாலைகளுக்கு 9.38 ஹெக்டேர் வன நிலம் மாற்றம் செய்யப்பட்டு அங்கீகாரம் தரப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிய நிலை வந்து ஒரு ஹெக்டேருக்கு குறைவானதெல்லாம் முடித்தாகிவிட்டது. இப்போது மத்திய அரசாங்கத்தினுடைய சாலைகள் 11. வனச் சட்டம், 1980–ன்படி மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை இணையதளம்மூலம் ஆன்லைனில் விண்ணப்பம் செய்வதற்கு கொடுத்தாகிவிட்டது. இணையதளம்மூலம் விண்ணப்பம் செய்துவிட்டால் வனத் துறைக்கு மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தே தீரவேண்டும் என்கின்ற விதி இருக்கிறது. எனவே, ஒரு ஹெக்டேருக்கும் அதிகமான நிலம் தேவைப்படும் 3 சாலைகளுக்கு அனுமதி கிடைத்தவுடனே விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*1989 ஆம் ஆண்டிலிருந்து அவர்களுடைய மூன்று முறை ஆட்சிக் காலத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் குறிப்பிட்டு, அது செய்யப்பட்டது; இது செய்யப்பட்டது என்றார். எல்லோருடைய காலத்திலேயும் 1980 ஆம் ஆண்டு சட்டம்தான் இருந்தது.* It is common and applicable to all. It is not for

our Government alone. *நீங்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.* It is applicable to your Government as well as to our Government. *அந்தச் சட்டத்தின்படி ஓர் ஏக்கருக்கு என்ன இருக்கிறதோ அதைக் கொடுத்து நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்ட பல்வேறு சாலைகளான மான்கொம்பு பிரிவு, தும்மராம்பட்டு, மேலாத்துப்பிரிவு, பெரணாம்பட்டு ஆகிய 11 சாலைகள் ஏறத்தாழ 9.3796 கிலோ மீட்டர், கருநெல்லி–மனப்பாட்சி சாலை, கள்ளிப்பட்டு–துரூர் சாலை ஆகிய 11 சாலைகள் 15.865 கிலோ மீட்டர். மேலும், வனத் துறைமூலம் அத்திகுளி–சிறுகாளூர், கங்கப்பாடி–ஊத்துகாடு, மட்டப்பிரிவு–வயலாம்பாடியில் உள்ள 2.88 கிலோ மீட்டர் சாலைகள் முதல் கட்டமாக உடனடியாக எடுப்பதற்குரிய கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஊரக வளர்ச்சித் துறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. உங்களுக்கே தெரியும் இது நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற மாதம். நிதி ஒதுக்கீடு செய்தவுடனே முதல் வேலையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் குறிப்பிட்ட சங்கராபுரம் தொகுதிக்கு ஏற்கெனவே உள்ள விதிகளின்படி விரைவாக நடவடிக்கை எடுத்து தார்ச் சாலைகள் அமைக்கப்படும் என்கின்ற உறுதியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. உதயசூரியன், செய்து தருகிறேன் என்று உறுதி சொல்லிவிட்டார். நீண்ட விளக்கம் வேண்டாம். 9 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒரு கேள்விக்கே இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டால் நான் என்ன செய்ய முடியும்? சீக்கிரம் முடியுங்கள்.*

*முற்பகல் 10–10*

**திரு. தா. உதயசூரியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஆரம்பத்திலேயே இந்தச் சட்டத்தைச் சொல்லி நிறுத்தியிருந்தால் சரி. கிட்டத்தட்ட 31 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்* PMGSY *திட்டத்தின்கீழ் இரண்டு* layers *ஜல்லி போட்ட பிறகு தார்ச் சாலை போடவில்லை; இப்போது அதனை இரத்து செய்துவிட்டனர். அந்தப் பணத்தை திரும்பக் கேட்டுவிட்டனர். இதுகுறித்து ஒப்பந்தக்காரர்களிடம் கேட்டால், வேலை நின்று போய்விட்டதற்குக் காரணம் அதிகாரிகள் என்று சொல்கின்றனர். கொடுத்த பணத்தை திரும்ப வாங்கிவிட்டனர். அப்படியென்றால் மீண்டும்* fund *வாங்கி,*

TRUTH ALONE TRIUMPHS

2017 ஜூன் 19]

சாலையை போடுகின்ற சூழ்நிலை உருவாகும். தடுப்புச் சுவர் கட்டியாகிவிட்டது. கல்வெட்டுகள் கட்டப்பட்டு, இரண்டு layers ஜல்லி போடப்பட்டு, தார்ச் சாலை போடுகின்றபோதுமட்டும் குறுக்கே வந்து நிறுத்துகின்றனர். ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தியிருந்தால் இந்தப் பிரச்சினை இருக்காது. எங்கள் தலைவர் கலைஞர் ஆட்சியில் 1989, 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் இதே சட்டத்தைப் பயன்படுத்தித்தான்—கிட்டத்தட்ட 55 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் உள்ள மலைவாழ் மக்கள் வசிக்கும் 27 கிராமங்களுக்கு மின்சார வசதியே இல்லை. முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கிராமப்புற . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உதயசூரியன், நீங்கள் நீண்ட நேரம் கேள்விக் கேட்டீர்களென்றால், உங்கள் மூலக் கேள்வியின்போது, துணைக் கேள்வி கேட்க வேறு யாருக்கும் வாய்ப்புக் கொடுக்க இயலாது. நீங்களே விரிவாக இரண்டு துணைக் கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருந்தீர்களென்றால் சரியாக இருக்காது. மணியை பாருங்கள். இந்த மூலக் கேள்வி தொடங்கி 11 நிமிடங்கள் ஆகின்றன. ஒரு கேள்விக்கு 11 நிமிடங்கள் எடுத்துக்கொண்டால், நான் எப்போது அவையை நடத்தி முடிப்பது?

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்நேரம் கேட்டு முடித்திருப்பேன். நான் இந்நேரம் பேசியே முடித்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒரு நல்ல பேச்சாளர்; அது வேறு. அதற்காக ஒரு கேள்விக்கு 11 அல்லது 12 நிமிடங்கள் எடுத்துக்கொண்டால் நான் எப்படிச் சபையை நடத்துவது? கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, பெரிய மலை என்று நினைத்தேன். எங்கள் கொடைக்கானல் போன்றல்ல; சாதாரண மலை என்று சொன்னார். கிராமத்தில் சொல்வது போன்று, பூண்டு, செடி உள்ள இடம்தான். Pinus மரம், Silver oak tree போன்று கப்பல் கட்டுகிற மரங்களெல்லாம் அங்கு கிடையாது. சாதாரண மலைவாழ் மக்கள்தான் அங்கு வசிக்கின்றனர். ஆகவே, மறுபரிசீலனை செய்து, உடனடியாக நிறுத்தி வைக்கப்பட்ட சாலையைப் போடவேண்டும். அந்த நிதியெல்லாம் திரும்ப வாங்கிவிட்டனர். அதனை திரும்பக்

கொடுப்பதற்கு வனத் துறைமட்டும்தான் தடையாக இருக்கிறது. 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலின்போது, கல்வராயன் மலைக்கு முதன்முதலில் தார்ச் சாலைகளை கலைஞர் வழங்கியதால் எங்கள் M.P., M.L.A.-க்கு ஓட்டுப்போட்டனர். ஆகவே, அந்த மலைவாழ் மக்களின் நலனைக் கருதி அந்தச் சட்டத்தைத் தளர்த்தி, கூடிய விரைவில் மீண்டும் தார்ச் சாலை போடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதையொட்டிய இன்னொரு கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்கிறேன். Forest Rights Committee போட்டிருக்கிறீர்கள். அதில் ஓர் ஊராட்சிக்கு 15 பேர் என்று போடுகிறீர்கள். அதனை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். அந்த 15 பேர் போடுகையில் கணவன், மனைவி, மகன், மருமகள் என்று போட்டுவிடுகின்றனர். அப்படிப் போடும்போது, Reserve Forest ஆக்குவதற்கு அவர்கள் நிலங்களில் பயிர் செய்கிறார்களா, இல்லையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறுக்களூர் நீர்வீழ்ச்சி பற்றி சொன்னார்கள். சிறுக்களூரில் மொத்தம் 11 வீடுகள் அப்போது இருந்தன. இப்போது அவர்களுக்கு குழந்தைகள் பிறந்து வளர்ந்துவிட்டனர். 32 வீடுகளுக்கு நான் அனுமதி தரமாட்டேன் என்று மாவட்ட வன அலுவலர் இப்போது சொல்கிறார். குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாது. 11 வீடுகளுக்கு மட்டும்தான் rights கொடுப்பேன்; மீதமுள்ள வீடுகளையெல்லாம் நான் அகற்றுவேன்; அங்கே தார்ச் சாலை போட நான் வழிவகை செய்யமாட்டேன் என்று சொல்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, Forest Rights Committee–க்கு முறையாக 15 பேர் போடப்பட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அங்குள்ள மலைவாழ் மக்களுக்குப் பாதுகாப்பும், அவர்களுக்கு வாழ்வாதாரமும் ஏற்படுத்தி, அடிப்படை வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் குறிப்பிட்ட மலைவாழ் மக்கள் உற்பத்தி செய்கிற பொருட்களை, அவர்கள் எளிய முறையில் விற்பனை செய்ய, அவர்களுக்கு ஆதாரமாக பணம் கிடைப்பதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கு அடிப்படையே சாலைகள்தான்.

2017 ஜூன் 19]

அதுபோல, அவர்கள் வாழ்வதற்கு வீடுகள் அமைத்துத் தரப்படும். ஆதி திராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் வனத் துறை மூலமாக பழங்குடியின மக்களுக்குச் செய்ய வேண்டிய அனைத்துப் பணிகளும் செய்யப்படுகின்றன. நீங்கள் குறிப்பிட்டுச் சொல்கின்ற அந்த 32 குடும்பங்கள் மற்றும் அதிகாரிகள் குறித்த பிற விஷயங்களையெல்லாம் ஆய்வு செய்து உங்களுக்கு உரிய பதில் அனுப்பப்படும். எந்த வகையிலும் பழங்குடியின மக்களுக்கு ஆதரவில்லாமல் இந்த அரசு இருக்காது. சட்டமன்ற உறுப்பினராக வந்து இப்போது ஒரு வருடம் ஆகிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலேயே இவற்றை வேகப்படுத்தி நீங்கள் முதலிலே முடித்திருக்க வேண்டும். திரு. உதயசூரியன், நீங்கள் எத்தனை முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) நீங்கள் நான்காவது முறையாக வந்திருக்கிறீர்கள். என்னுடைய தவறு இதில் என்னயிருக்கிறது? இப்போது நாம் பேசியிருக்கிறோம். இப்போது கொடுக்கிற கணக்குப்படி (குறுக்கீடு) அதுதான், நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன். (குறுக்கீடு) இல்லை. இப்போது எல்லா பணிகளும் எடுக்கப்பட்டு, ஆய்வுக்கு வந்துவிட்டது. இந்த வருடம் அதுகுறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். நிதி பெறுகின்ற மார்ச், ஏப்ரல், ஜூன் மாதங்களில் வந்துவிட்டோம். இந்த வருடம் எவ்வளவு வேகப்படுத்த முடியுமோ அவ்வளவு வேகப்படுத்தி, நமக்காக இல்லாவிட்டாலும், பழங்குடியின மக்களின் வாழ்க்கைக்கு, ஆதாரமாக இருக்கின்ற சாலைகள் சரி செய்யப்படும்; விரைவில் தார்ச் சாலைகள் போடப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**32—**

## நூலகக் கட்டடம்

***9755—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி நகரத்தில் உள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தென்காசி கிளை நூலகம், ஏற்கெனவே இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்காக இடிக்கப்பட்டு, அதன் மூலமாக அந்த நூலகம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. மாத வாடகையாக ரூ.21,850/– அந்தக் கிளை நூலகத்திற்குச் செலுத்தி வருகிறோம். ஆகவே, அந்த இடத்தைத் தவிர வேறு இடத்தில் நூலகம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை சிறப்பாக நடத்தி வரக்கூடிய முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தில், கல்வித் துறைக்காக அதிகமான திட்டங்களைச் செயலாற்றி, மாணவ, மாணவிகளெல்லாம் சிறப்பாகப் பயிலுவதற்காக விலையில்லா பொருட்களையெல்லாம் வழங்கினார்கள். அதேவழியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் பல திட்டங்களை அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணமாக பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும்,

2017 ஜூன் 19]

தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், மாணவ மாணவிகள் சார்பாகவும், ஆசிரியர்கள் சார்பாகவும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமக்கெல்லாம் கடவுளாக இருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆன்மா கட்டாயம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தென்காசி நகரத்தில் உள்ள நூலகமானது மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் உடனடியாக கட்டித் தரப்படும் என்று தெரிவித்ததற்காக மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தென்காசி தொகுதிக்குட்பட்ட வீரகேரளம்புதூரில் நூலகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்த நூலகமும் இன்றைக்கு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து, சொந்தக் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 4,603 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சொந்தக் கட்டடத்தில் 1,753 நூலகங்களும், வாடகை இல்லா இலவசக் கட்டடத்தில் 2,516 நூலகங்களும், வாடகைக் கட்டடங்களில் 320 நூலகங்களும், 14 நடமாடும் நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட 37 அறிவிப்புகளில் 11 அறிவிப்புகள் நூலகத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால், தேவைப்படுமாயின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

[2017 ஜூன் 19

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி நகரத்தில் உள்ள நூலகத்தைப் பொறுத்தவரையில், அங்கு தினமும் குறைந்தது 500 வாசகர்கள் பயின்று வருகின்றனர். T.N.P.S.C. தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் அனைத்தும் அங்கு நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நூலகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று தெரிவித்தமைக்காக மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 2006 முதல் 2011 வரையிலான தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கோட்டூர்புரத்திலே கட்டப்பட்ட பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நூலகத்திற்கு சுமார் 5 கோடி ரூபாயிலே புத்தகங்கள் மற்றும் அதைப் புனரமைப்பதற்காக நிதி வழங்கப்படும் என்றும் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளில் நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்வது, 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த நேரத்திலே, தமிழகத்தில் 12,524 ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கட்டப்பட்ட நூலகங்கள் எல்லாம் இன்னும் பயன்பாட்டிற்கு வராமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நூலகங்களையெல்லாம் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு கொறடா அவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டிருக்கிற நூலகங்கள் செயல்படுத்தப்படுமா என்று கேட்டார்கள். இந்தக் கேள்வி

2017 ஜூன் 19]

துணைக் கேள்வியாக இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில் அரசு ஆய்வு செய்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

**டாக்டர் V.P.B. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் புதிதாகக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, இப்பொழுது அதிகமான இளைஞர்கள் படிக்கின்ற பழக்கத்தை கற்றுக்கொண்டு வருகிறார்கள். இங்கிருக்கின்ற ஊராட்சிகளில் இயங்குகின்ற நூலகங்களெல்லாம் தண்ணீர் தொட்டிகளுக்கடியில் இருக்கக்கூடிய கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் நிறைய நூலகக் கட்டடங்கள் இன்னும் உள்ளாட்சித் துறையின் வசம் இருக்கின்ற ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து, உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற நூலகக் கட்டடங்களையெல்லாம் District Library Officer அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து, விரைவாக அந்த நூலகக் கட்டடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு தர வேண்டும். Facebook, WhatsApp என்று இளைஞர்கள் தங்களுடைய நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், படிக்கின்ற பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக, உள்ளாட்சித் துறையின் வசம் இருக்கின்ற நூலகங்களை நூலகத் துறையின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

அனைத்து நூலகங்களிலும் கணினி மற்றும் wi-fi வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, e–reading என்று சொல்லக்கூடிய கணினிமூலம் அனைத்துப் புத்தகங்களையும் வாசிக்கக்கூடிய வசதியை அனைத்துக் கிராமங்களிலும் ஏற்படுத்த முடியாவிட்டாலும்கூட, பெரிய ஊராட்சிகள் மற்றும் ஒன்றியங்களின் தலைமையகமாக விளங்கக்கூடிய பகுதிகளில் ஏற்படுத்தித் தந்தால் நன்றாக இருக்கும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலமாகச் செலுத்தப்படுகின்ற வரிகளில் 15 சதவிகிதம் நூலகத்திற்காகச் செலுத்தப்படுகிறது. இதுகுறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்குப் பிறகு நூலகத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், உள்ளாட்சித் துறையின்கீழ் பல நூலகங்கள் இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றையும் மாற்றியமைக்க வேண்டுமென்ற நிலையில் நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*நூலகங்கள் அனைத்திலும் wi-fi வசதி செய்து தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதற்குப் பதிலாக, அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் இத்தகைய வசதியை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இதன் மூலமாக மாணவர்கள் பயன்பெறுவார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**33—**

## கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடம்

***11034—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சரல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு (Y45) புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*2017 ஜூன் 19]*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியிலுள்ள சரல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட தீர்மானிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 16–6–2017 அன்று ரூ.20 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.12 இலட்சம் சங்கத்தின் சொந்த நிதியிலிருந்து செலவிடப்படும் என்பதையும், இச்சங்கத்திற்கான கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட காரங்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் (Y 26) 6,000 உறுப்பினர்களைக் கொண்ட மிகப் பெரிய வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமாகும். அங்கு இருக்கக்கூடிய கட்டடங்கள் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அதேபோல, வாள்வச்சகோஷ்டம் பகுதியில் (Y 178) இரவிபுதூர்கடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் இடப் பற்றாக்குறை இருக்கிறது. அந்தக் கட்டடங்கள் பழுதடைந்த கட்டடங்களாக இருக்கின்றன. அதேபோன்று, கட்டிமாங்கோடு (Y26) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 3,500 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அங்கும் இதே பிரச்சினை இருக்கிறது. கட்டடங்கள் இல்லை. அதுவும், மிகவும் பழுதடைந்த கட்டடமாகக் காணப்படுகிறது. வட்டவளை (Y136) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 2,830 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அங்கு கட்டடங்கள் சரியாக இல்லாமல் ஆபத்தான நிலையில் இருக்கின்றன. உடனடியாக அந்தக்*

கட்டடங்களை மாற்றி, புதிய கட்டடங்களையும், இடவசதியையும் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2, 3 கோரிக்கைகளைத் தொடர்ந்து சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்த பிறகுதான் ஏறத்தாழ 211 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பல்வேறு நிதிகள் மூலமாக, அதாவது கூட்டுறவு வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிதி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதி அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றிலிருந்து பெற்று கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றி சொல்கிறேன். பல்வேறு கட்டடங்கள் பழுதடைந்து காணப்படுகிற சூழ்நிலையிலே நீங்கள் அதைக் கட்டுவதற்கு உரிய வழிகளைச் செய்திருக்கிறீர்கள். நான் பாராட்டுகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகளின் கடன் தொகைக்கான வரியைப் பல பகுதிகளில் இரத்து செய்திருக்கிறீர்கள். வறட்சிக் காலமாகவும் கடன் தொகை அதிகமாகவும் இருப்பதால் கஷ்டத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு வரியைத் தள்ளுபடி செய்தால்கூட எந்த பயனும், நன்மையும் இல்லை. Yield பெறாத சூழ்நிலையிலே அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை காத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த கடனையே தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா? அதுபோல, தற்போது சங்கங்களில் விவசாயக் கடன் கிடைக்கவில்லை, அரசு அதற்கு அனுமதிக்கவில்லை போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயக் கடனைப் பெற்று, விவசாயம் செய்து வாழ்கின்ற

*2017 ஜூன் 19]*

*மக்களுக்கு, தொடர்ந்து கடன் தொகையை அந்தந்த சங்கங்கள் மூலமாக உடனடியாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறீர்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடத்தில் ஆரம்பித்து இப்பொழுது கடன் கொடுப்பதில் போயிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை உரிய முறையில் பரிசீலிக்கும். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.*

*தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வரன்முறைக்குட்பட்டு, கூட்டுறவுச் சங்கத்தினுடைய விதிகளுக்குட்பட்டு எவ்வளவு நிதி கொடுக்க முடியுமோ அவ்வளவு நிதி அவர்களுடைய பயிர்களுக்கு தங்குதடையின்றி பயிர்க் கடனாக வழங்குவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். இப்பொழுது குறியீடு எல்லாம் இல்லை. நீங்கள் சொல்வதுபோல் விவசாயிகளுக்குத் தேவையான நிதிகளைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை வழிநடத்தும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் வழி வகுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் கூட்டுறவுக் கடன் சங்கம் நீண்ட நெடுநாட்களாக வாடகைக் கட்டடத்தில் பாதுகாப்பின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் பேரூராட்சித் தலைவராக இருந்தபொழுது உள்ளாட்சியில் அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியருடைய கருத்துரு வாங்கப்பட்டுள்ளது. இன்றுவரை அந்தச் சங்கம் வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டிலே இருக்கின்ற கூட்டுறவுக் கடன் சங்கங்களில் இது அதிகப்படியான*

இலாபத்தை ஈட்டுகின்ற மிகப் பெரிய கடன் சங்கமாக இருப்பதனால் பாதுகாப்பு நலன் கருதி பெட்டக வசதியோடு இயங்குகின்ற இந்தச் சங்கத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

கூட்டுறவுக் கடன் சங்கத்தில் நாம் டெபாசிட்தாரர்களுக்கு 7 சதவிகித வட்டிதான் தருகின்றோம். ஆனால், நகைக் கடனுக்கு 11 சதவிகிதத்திலும், வீடு கட்ட கடன் வாங்குபவர்களுக்கு 13 சதவிகிதத்திலும் தருகின்றோம். 7 சதவிகிதம் வாங்குகின்ற வட்டி. நூற்றுக்கு நூறு சதவிகிதம் அதிகமான வட்டிக்கு மக்களுக்கு வழங்குகிறோம். நம்மிடம் கடன் வாங்குகின்றவர்கள், கடன் சுமையில் தவிக்கின்றார்கள். 3 சதவிகிதம் இருந்தால் போதும் என்று அரசு நிபந்தனை இருக்கின்றது. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு சோழிங்கநல்லூர் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு இந்த வட்டியைக் குறைக்க வேண்டும். மேடவாக்கம் கூட்டுறவுச் சங்கமும் அதேபோன்று இயங்குகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில்கொண்டு நாட்டு மக்களுக்கு நலன் செய்திட முன்வருவார்களா எனக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சோழிங்கநல்லூர் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அந்தச் சங்கத்திற்கு இடம் இருக்கும்பட்சத்தில் உடனடியாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும். இல்லாதபட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நிலம் பெற்றுத் தருவாரேயானால் அதைப் பரிசீலித்து, வருகிற இந்த ஆண்டிலேயே கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் வட்டி அதிகம் என்று சொல்கிறார்கள். அந்த மாதிரி இல்லை. குறைந்த வட்டிக்குத்தான் கொடுக்கப்படுகிறது. வீடு கட்டுபவர்களுக்கு அதிகமான வட்டியில் கொடுக்கிறோம் என்றார். காரணம், பயிர்க் கடன் எனும்போது 7 சதவிகிதம், 3 சதவிகிதம் மானியம் வந்துவிடுகிறது. எனவே, அந்த அடிப்படையில்தான் நாம் கொடுக்கிறோம். சொந்த நிதியைக் கொண்டுதான் தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை நடத்த வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு நிதி கொடுக்க வேண்டும்.

*2017 ஜூன் 19]*

*அரசு நிதி கொடுப்பது கிடையாது. சம்பளங்கள் மற்ற செலவுகள் எல்லாம் இருக்கின்றன.*

*முற்பகல் 10–30*

*எனவே, இந்தச் செலவுகளையெல்லாம் சமாளிக்க வேண்டுமென்றால், இப்போது ஏறத்தாழ 9 சதவிகித வட்டிக்கு வாங்கி அவர்களுக்குக் கடன் கொடுக்கிறோம். எனவே, இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் இப்போது 12 சதவிகிதம், 13 சதவிகிதத்தில் கொடுக்கலாம் என்று துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்கெனவே பரிசீலித்து, அது நடவடிக்கையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**34—**

### வண்ண மீன் பூங்கா

***5542—திரு. மு.க. ஸ்டாலின்:**

*மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கொளத்தூர் தொகுதியில் வண்ண மீன் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:** ***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*** *தமிழகத்தின் வண்ண மீன் வளர்ப்புப் பண்ணையாளர்களுக்கு அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளையும், தொழில்நுட்பங்களையும் அளித்து, வண்ண மீன் உற்பத்தியை மேம்படுத்திட மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் விதி எண் 110–ன்கீழ்,*

'வண்ண மீன் வானவில் தொழில்நுட்பப் பூங்கா' அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தின் மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் ரூ.10 கோடியே 30 இலட்சம் செலவில், 'வண்ண மீன் வானவில் தொழில்நுட்பப் பூங்கா' நிறுவப்பட்டு வருகிறது. எனவே கொளத்தூர் தொகுதியில் வண்ண மீன் பூங்கா அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாடு மாநில திட்டக் குழுவால் 12–5–2015 அன்று 'வண்ண மீன் வானவில் தொழில்நுட்பப் பூங்கா' அமைக்க பரிந்துரை செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இதே சட்டமன்றத்தில் 23–9–2015 அன்று அன்றைய முதல்வர் அவர்களால் இந்தத் திட்டம் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தத் திட்டம் தொடங்கி 30 மாதங்கள் கடந்திருப்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதேபோல, வண்ண மீன்கள் விற்பனை செய்யக்கூடிய கடைகள் தமிழகத்திலே 1,500–க்கும் மேற்பட்டவை இருந்தாலும், கொளத்தூரிலே 200–க்கும் மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. இங்கு 150 வகையான வண்ண மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன. நேரடியாகவும், மறைமுகமாகவும் கொளத்தூரில் மாத்திரம் 15,000 பேர் இதன்மூலமாக வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள். தினந்தோறும் ரூ.30 இலட்சம் அளவுக்கு உள்ளூரிலும், வெளி மாநிலங்களுக்கும் இந்த மீன்கள் விற்பனைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய லட்சுமிபுரம், காவாங்கரை, சோத்துப்பாக்கம், செங்குன்றம், தாம்பரம் ஆகிய பகுதிகளிலும், மதுரை, தூத்துக்குடி, ஊத்துக்கோட்டை, ஆத்தூர், தேவம்பேடு ஆகிய இடங்களிலும் 3,000–க்கும் மேற்பட்ட வண்ண மீன் வளர்ப்புக் குட்டைகள் இருக்கின்றன. இதில் கொளத்தூர்தான் இந்தியாவிலேயே வண்ண மீன்களுடைய தாய் ஆக இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம்,

2017 ஜூன் 19]

கொளத்தூர் பகுதியிலே நிலத்தடி நீரினுடைய தன்மை வண்ண மீன்கள் வாழ்வதற்கு ஏதுவான நிலையிலே அமைந்திருக்கிறது. அதனால், கொளத்தூர் பகுதியிலே இந்தத் தொழில் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, கொளத்தூர் பகுதியிலே வண்ண மீன் வளர்க்கக்கூடிய, சிறு தொழில் மேலும் வளர்ச்சியடைய அந்தப் பகுதியிலேயே வண்ண மீன் ஆராய்ச்சி மையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் தொகுதியில் வண்ண மீன் ஆராய்ச்சி நிலையம் அமைப்பது குறித்து அரசுக்கு மாறுபட்ட கருத்து ஏதும் கிடையாது. நிலம் அதிகமான அளவுக்குத் தேவைப்படுகின்ற காரணத்தினால், நிலம் இருந்தால் நிச்சயமாக அந்த இடத்திலே ஆரம்பிப்பதற்கு அரசு முழுமையான அளவுக்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய வசதிக்காகத்தான் அவர்களைக் கேட்டறிந்து, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒரு ‘வண்ண மீன் வானவில் தொழில்நுட்பப் பூங்கா’ அமைத்திட வேண்டுமென்று உத்தரவிட்ட ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ‘வண்ண மீன் வானவில் தொழில்நுட்பப் பூங்கா’ விரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட இருக்கின்றது. அதுவும் அலுவலகம், ஆய்வகம், சுழல் நீர்த்தொட்டி, உயிர் உணவு உற்பத்திக் கூடம், இனப்பெருக்கக் கூடம் இவை அனைத்துமே முடிந்துவிட்ட நிலையில், விரைவிலேயே இதைத் திறப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி வண்ண மீன் வளர்ப்பவர்கள் கொளத்தூர் பகுதியிலிருந்து மாதவரம் பகுதியில் இடம் கேட்டால் நிச்சயமாக அவர்களுக்கு மாதவரம் பால் பண்ணை வளாகப் பகுதியிலே வண்ண மீன் வளர்க்க இடம் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜூன் 19

முற்பகல் 10—35

அதிலும் குறிப்பாக, உலக அளவில் வண்ண மீன்களைப் பொறுத்தவரை மார்க்கெட் என்று சொன்னால், ஏறக்குறைய 2000 ஆண்டைப் பொறுத்தவரை 177.7 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. அது 2014 ஆம் ஆண்டு 347 மில்லியன் அமெரிக்க டாலர் என ஆனது. அதில் இந்தியாவின் பங்களிப்பு மட்டும் 1.7 மில்லியன் அமெரிக்க டாலர். உலக அளவில் 125 நாடுகள் அலங்கார மீன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளன. 2,500—க்கும் மேற்பட்ட மீன் இனங்கள் அலங்கார மீன் வகையில் உள்ளன. அலங்கார மீன் வளர்ப்பில் தற்போது கேரளா முன்னிலை வகிக்கின்றது. இந்த வண்ண மீன் பூங்கா திறக்கப்பட்டு அது செயல்பாட்டிற்கு வரும்போது இந்தியாவிலேயே வண்ண மீன் ஏற்றுமதியிலே முதலாவது மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு நிச்சயமாகப் பெறும் என்கின்ற அந்தச் செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வண்ண மீனைப் பொறுத்தவரை, குறிப்பாக, 120—க்கும் மேற்பட்ட நாடுகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மீன் இனங்கள் இருந்தாலும்கூட அதிலே மக்களால் விரும்பப்படுவது ஏஞ்சல் மீன், பைட்டர் மீன், ஆஸ்கர் மீன், மலர்க்கொம்பு மீன், கப்பீஸ் மீன் இனங்களாகும். இந்த கப்பீஸ் மீன் அதிகளவில் குஞ்சு பொறிக்கின்ற இனம் ஆகும். அதாவது சராசரியாக 50—லிருந்து 100 குஞ்சுகள் ஒவ்வொரு முறையும் பொறிக்கின்ற தன்மை உடையது. அதேபோன்று Red cap Oranda Gold, Lionhead Gold, Pearlscale Gold, Ryukin Gold, Pearl danio, Giant danio, Zebra danio, Black Widow Tetra, Neon Tetra என இந்த வகை மீன்களோடு வாஸ்து மீன் என்பது இப்போது பிரபலமாகிக்கொண்டு வருகின்றது. வாஸ்து மீன்களில் இரண்டு வகை உண்டு. Flowerhorn fish and Arowana fish. இந்த ஐந்து இன்ச் Arowana விலை மட்டும் எவ்வளவு தெரியுமா? ரூ.25 ஆயிரம். அதனால்தான் இப்போது எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தத் தொழிலுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முழுமையான அளவுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து இதை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற வகையிலே செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வண்ண மீன் விற்பனைக்கு அதிகமான அளவுக்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் வேலை தேடுகின்ற இளைஞர்கள் இதுபோன்ற ஒரு சுயதொழிலில்

2017 ஜூன் 19]

ஈடுபடலாம். ஏறக்குறைய 100 சதுர அடி இடம் இருந்தாலே போதும், மாதம் கிட்டத்தட்ட ரூ.10 ஆயிரம் அவர்கள் சுயமாகச் சம்பாதிக்கக்கூடிய ஒரு நிலை நிச்சயமாக உருவாகும். எனவே, அவர்கள் வண்ண மீன் வளர்ப்பு குறித்த தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்ற நிலையில் கேட்டால் நிச்சயமாக, மீன் வளப் பல்கலைக்கழகம் அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யத் தயாராக இருக்கின்றது என்ற அந்த நிலையையும் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், நாம் உணவாக உட்கொள்கின்ற மீன்களைப் பொறுத்தவரை இப்போது GIF Tilapia, புல்கெண்டை, Common Carp, Silver Carp போன்ற மீன்கள் எல்லாம் மூன்று மாதத்திலே நன்றாக வளரக்கூடிய மீன்கள். அதேபோன்று முறேல் என்று சொல்லக்கூடிய விரால் என்ற மீனும் சுவையாக இருக்கக்கூடியது. Vannamei என்று சொல்லக்கூடிய இறால், நன்னீர் இறால் அது ஏறக்குறைய எட்டு மாதத்தில் வளரும். ஆனால், ஒரு ஹெக்டேருக்கு செலவு எவ்வளவு என்றால், 3½ இலட்சம் ரூபாய்தான். வருமானம் என்று பார்த்தால் கிட்டத்தட்ட மூன்று அல்லது எட்டு மாதங்களுக்குள் ஏறக்குறைய 3½ இலட்சம் ரூபாய் சம்பாதிக்கின்ற ஒரு நிலை உருவாகும். எனவே, விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களை இளைஞர்கள் கண்டறிந்து இப்படி வண்ண மீன்கள் வளர்ப்புக்கும், அதேபோன்று உண்பதற்கு உகந்த மீன்கள் வளர்ப்பிற்கும் அரசின் உதவிகோரி கோரிக்கை வைத்தால் நிச்சயமாக அரசு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ண மீன் உற்பத்தியாளர்கள் மீன்களுடைய உணவான இயற்கை தீவனங்கள் கிடைப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலை நாடுகளில் வண்ண மீன்கள் வளர்ப்பவர்களுக்கு மீனின் உணவிற்கான இடத்தை அமைத்துக் கொடுப்தோடு, ஆராய்ச்சி மையமும் மானியமும் வழங்குகிறார்கள். அதுபோல நம்முடைய மாநிலத்திலும் அதிகளவில் உற்பத்தி செய்யக்கூடிய, விற்பனை நடக்கக்கூடிய இடத்திற்கு அருகிலேயே மீன்களுக்கு இயற்கை தீவன உணவு கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை இந்த அரசு செய்ய முன்வருமா?

*15–7–2015 அன்று மாதவரத்திலே வண்ண மீன் குஞ்சு பொறிப்பகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அது எந்த நோக்கத்திற்காகத் திறந்து வைக்கப்பட்டதோ, அது நிறைவேறாமல் இருக்கிறது. இப்போது கொளத்தூரில் இருந்துதான் மீன் குஞ்சுகள் பெற்றுவருவதாக அறிகிறேன். அதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

*வண்ண மீன் தொழில்முனைவோருக்கு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர் அட்டை வழங்கியதோடு, வண்ண மீன் உற்பத்தியாளர்களுக்கு 3A மின்சாரம் வழங்கப்பட்டது கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தற்போது அந்த மானிய விலை மின்சாரம் தடைபட்டிருக்கிறது. மீண்டும் அதை வழங்குவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும்.*

*முற்பகல் 10–40*

*நிறைவாக, நான் கேட்க விரும்புவது, வண்ண மீன்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய நிலையில் வண்ண மீன் ஏற்றுமதி மையமும், வண்ண மீன்களுக்கென்று தனி வாரியமும் இந்த அரசு அமைக்க வேண்டும். அதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ண மீன் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டும் என்ற கருத்துருவே கொளத்தூர் பகுதியிலிருக்கின்ற வண்ண மீன் வளர்ப்போரினுடைய கருத்தினைக் கேட்டுத்தான் மாதவரத்தில் அமைக்கப்பட்டது. எனவே, கொளத்தூர் பகுதியிலே இருக்கும் வண்ண மீன்கள் வளர்க்கின்ற மக்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படும். இதில் மாறுபட்ட கருத்து இல்லை. கொளத்தூர் பகுதியிலே நிலம் இருந்தால், அங்கே மீன் குஞ்சு பொறிப்பகம் அமைப்பதற்கும், மீன் தீவனம் உற்பத்தி செய்வதற்கும், தேவையான* infrastructure *செய்து கொடுப்பதற்கு அரசுக்கு எந்த மாறுபட்ட கருத்தும்*

*2017 ஜூன் 19]*

*இல்லை. ஆனால், கொளத்தூர் நகரம் மாநகராட்சியின் ஒரு பகுதியாக இருப்பதனால், அங்கு நிலம் கிடைப்பதிலே சிக்கல் இருக்கிறது என்ற நிலையில்தான் அங்கு அமைக்க முடியவில்லை. வண்ண மீன் பூங்கா என்பது, ஒட்டுமொத்தமாக,* integrated *ஆக இருக்க வேண்டும், அதாவது, அலுவலகம், ஆய்வகம், சுழல் நீர்த் தொட்டி, மீன் குஞ்சு இன உற்பத்தி, உயிர் வகை உற்பத்திக் கூடம், இனப்பெருக்கக் கூடம் ஆகியவை ஒருங்கிணையும்போது, அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற வண்ண மீன்கள் ஒரு* buy–back arrangement *ஆக மேலைநாடுகளில் உள்ளதுபோல், நேரடியாக அங்கேயே வந்து உடனடியாகக் கொள்முதல் செய்கின்ற வாய்ப்பு நிச்சயமாக உருவாகின்ற ஒரு நிலை ஏற்படும். அப்பகுதி மக்களுடைய நலன் கருதித்தான் வண்ண மீன் பூங்கா மாதவரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதில் மாறுபட்ட கருத்து எதுவும் கிடையாது. கொளத்தூரில் நிலம் இருந்தால், மீன்குஞ்சு பொறிப்பகம் மற்றும் மீன் தீவனம் உற்பத்தி அந்த இடத்திலேயே ஆரம்பிக்க முடியுமா என்பது குறித்த சாத்தியக்கூறுகளை அரசு ஆராயும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**35—**

## நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***6862—திரு. சி. ராஜா:**

*மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, தேவூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதிக்குட்பட்ட தேவூர் பேரூராட்சியில் கடைசியாகத் திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூன்று மாதங்கள் செயல்பட்டுள்ளது. அதில் 44 மெட்ரிக் டன் சன்ன இரக நெல்லும், 25 மெட்ரிக் டன் பொது இரக நெல்லும், ஆகமொத்தம், 69 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதன்பின், நெல் வரத்து இல்லாத காரணத்தால், நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. தற்போது தேவை ஏற்படின், நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. சி. ராஜா, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***8576—திரு. ஆர். தங்கதுரை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு ஒன்றியம், தெப்பத்துப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*2017 ஜூன் 19]*

*(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டு ஒன்றியம், தெப்பத்துப்பட்டி கிராமம், மக்கள்தொகை மற்றும் தூரம் ஆகிய விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினால் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.*

**திரு. ஆர். தங்கதுரை:** *பொறுமையின் சிகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். தமிழகத்தின் முன்னாள் முதல்வர், நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடன் நம் கழகத்தைக் கட்டிக் காத்துவரும் மாண்புமிகு சின்னம்மா அவர்களை வணங்குகின்றேன். தமிழகத்தில், நம் இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் மாண்புமிகு அண்ணன் டி.டி.வி. அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் செலுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டங்களைச் செயல்படுத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி மலை அடிவாரத்தில் உள்ள தெப்பத்துப்பட்டி, சுமார் 10 கிராமங்களையும், சுமார் 1,000 மக்கள்தொகையும் கொண்ட கிராமமாக உள்ளது. அங்கு ஆரம்ப சுகாதார மையம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மருத்துவக் கல்லூரியோ அல்லது ஒரு மருத்துவக் கல்லூரிக்குத் தகுந்த மருத்துவமனையோ திண்டுக்கல் மாவட்டத்திலேயே இல்லை. எனவே, தெப்பத்துப்பட்டி மக்கள் 10 கிலோ மீட்டருக்கு தொலைவிலுள்ள வத்தலக்குண்டு அல்லது 10 கிலோ மீட்டருக்கு தொலைவிலுள்ள விரிவேடு பகுதிகளுக்குத்தான் அவசரக் காலங்களில் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வருங்காலங்களில் எங்களுடைய மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும் அமைத்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன். இதையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, தமிழ்நாட்டில் 1,747 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. கடந்த 6 ஆண்டுகளில் 212 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 167 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு 30 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற ஒன்றியத்தில் உள்ள விரிவேடு உள்ளிட்ட பகுதிகளில் மக்கள்தொகைக்கேற்ப ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இருப்பினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வத்தலக்குண்டு பகுதிக்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையமும், திண்டுக்கல் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியும் வேண்டுமென்ற கூடுதல் கோரிக்கையை வைத்துள்ளார்கள். இதையாவது செய்து தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் கிடைக்கும்; இதுவும் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஆண்டுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்கின்ற அந்தத் திட்டத்தின்கீழ், திண்டுக்கல் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையும் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற தெப்பத்துப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க துறை ரீதியாக உரிய ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.*

**திரு. ஆர். தங்கதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதி என்பது மிகவும் பழமை வாய்ந்த தொகுதியாகும். அங்குள்ள தாலுகா மருத்துவமனையைத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், திண்டுக்கல் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி மட்டுமல்லாமல்*

2017 ஜூன் 19]

அனைத்து வசதிகளையும் அம்மா அவர்களுடைய அரசு செய்யும் என்று கூறிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நிலக்கோட்டை தொகுதி சார்பாக மட்டுமல்லாமல், திண்டுக்கல் மாவட்டம் சார்பாகவும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.

**திரு. எ. ராமர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், கூடலூர் ஊராட்சி, பேரூரில் இயங்கிவந்த துணை ஆரம்ப சுகாதார நிலையம் நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ளது. மக்கள் பயன்பாட்டிற்கு அதைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் மூடப்படுவது இல்லை. தாங்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதி குறித்து துறை ரீதியாக, உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

**திருமதி மு. சந்திரபிரபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, தமிழக மக்களுக்காக நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், எஸ். கொடிகுளம் பேரூராட்சி, கூமாப்பட்டியில் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதி, விதிமுறைகளுக்குட்பட்டு ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மோகனூர் ஒன்றியம், குட்லாம்பாறை, புதுப்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய தொகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டேதான் இருப்பார்கள். அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தொடர்ந்து இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கூடுதலாக அமைக்க வேண்டுமென்பதற்காக, மத்திய அரசு, மாநில அரசு நிதி ஒப்புதலோடு விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலித்து வருகிறது. அதனால்தான் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு இந்த 6 ஆண்டுகளில் நான் சொன்னதைப்போல 212 புதிய ஆரம்ப

*2017 ஜூன் 19]*

*சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கைகளையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு 30 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய ஒப்புதல் கிடைக்கப் பெற்றிருக்கிறது. சமவெளிப் பகுதியாக இருந்தால் 30 ஆயிரம் மக்கள்தொகையும், மலைப் பகுதியாக இருந்தால் 20 ஆயிரம் மக்கள்தொகையும் இருக்க வேண்டும். ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இன்னோர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 8 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டுமென்ற விதிமுறையை மத்திய அரசு கொடுத்துள்ளது. அந்த விதிமுறைகளுக்குட்பட்டு எந்தெந்தப் பகுதிகள் எல்லாம் வருகின்றனவோ அங்கு தொடங்கப்படும். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகக் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

**திரு. கே.வி. சேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதியில், போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சந்தவாசல் ஊராட்சி அதிக மக்கள்தொகை கொண்ட ஊராட்சியாக இருக்கிறது. இங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சந்தவாசல் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பது குறித்து துறை ரீதியாக உரிய ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2017 ஜூன் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் அழகாபுரி, அங்கியம், ஆலத்துடையான்பட்டி மற்றும் பச்சபெருமாள்பட்டி ஊராட்சியில் சுமார் 20 கிராமங்கள் உள்ளன. இதன் அருகிலேயே புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான புளியஞ் சோலை அமைந்துள்ளது. இந்தப் புளியஞ்சோலைக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் அதிகமாக விபத்துக்குள்ளாகின்றனர். எனவே இந்த நான்கு ஊராட்சிகளின் மையப் பகுதியான பச்சபெருமாள்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது தொடர்பாக துறை ரீதியாக ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கதுரை, நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று இங்கே கேட்டிருந்தார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் அந்தத் திட்டத்திற்கு பூஜை போடப்பட்டு நிறைவேற்றப்படாமல் அப்படியே இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் எங்கள் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. தங்கதுரை மற்றும் மாண்புமிகு டாக்டர் V.P.B. பரமசிவம் ஆகியோர் எல்லாம் இருந்து

*2017 ஜூன் 19]*

*பேசியிருக்கிறோம். வருடத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி திறக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அந்த அடிப்படையில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு இந்த வருடம் மருத்துவக் கல்லூரி அறிவித்து, நிதி ஒதுக்குங்கள் என்று கேட்டிருக்கிறோம். நிதி நிலையைப் பொறுத்து ஆவன செய்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும். இந்த முறை அவர் பதிலில் கூறியபடி அறிவிக்கும்போது முதலாவதாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி அமைக்க அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த சபையின்மூலம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**37—**

**புதிய வட்டம்**

***12986—திரு. கே.எஸ். விஜியகுமார்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி தொகுதி, மாதர்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். திரு. தங்க. தமிழ்ச்செல்வன் வாய்ப்புத் தருகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, அதுதான் விருப்பமென்றால் நான் என்ன செய்வது? நேரம் கருதிதான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இப்படி வற்புறுத்தி எல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடு) பேரவைத் தலைவரை இவ்வாறு நீங்கள் வற்புறுத்த முடியாது. நான் வாய்ப்புத் தருகிறபோது வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவையிலிருந்து வெளியேறினார்)*

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை நாள் 9–6–2003 இல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை பூர்த்தியாகாததால், மாதர்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் உருவாக்கித்தர சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள்.*

**திரு. கே.எஸ். விஜியகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்று வாழ்ந்த எங்கள் அம்மா தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் இந்திய அளவில் மட்டுமல்ல உலக நாடுகள் அளவில் தலைநிமிர்ந்து நிற்க, எங்களையெல்லாம் விட்டு விண்ணுலகம் சென்றாலும், எங்கள் இதயங்களிலே என்றும் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.*

*முற்பகல் 10–55*

*கும்மிடிப்பூண்டி தொகுதியில், கும்மிடிப்பூண்டி மற்றும் ஊத்துக்கோட்டை ஆகிய வட்டங்கள் உள்ளன. கும்மிடிப்பூண்டி வட்டத்தின் மொத்த பரப்பளவு சுமார் 513 சதுர கிலோ மீட்டர். 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி இப்பகுதியின் மக்கள்தொகை 1,90,541. கும்மிடிப்பூண்டி வட்டத்தில் 61 ஊராட்சிகளும், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியும் அடங்கி உள்ளன. இதில் 88 வருவாய்க் கிராமங்கள் உள்ளன. ஊத்துக்கோட்டை வட்டத்தின் மொத்த பரப்பளவு சுமார் 375 சதுர கிலோ மீட்டர். ஊத்துக்கோட்டை வட்டத்தின் மக்கள் தொகை 1,70,000 ஆகும். ஊத்துக்கோட்டை வட்டத்தில் மொத்தம் 70 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் ஊத்துக்கோட்டை பேரூராட்சியும் அடங்கும். மொத்த வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை சுமார் 100 கிராமங்கள். கும்மிடிப்பூண்டி தொகுதி சுமார் 900 சதுர கிலோ மீட்டர் உள்ளது. ஆந்திர எல்லையையொட்டி இருக்கின்றது.*

*2017 ஜூன் 19]*

*மக்கள் தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் பல்வேறு கோரிக்கைகள் வைத்தால், நீண்ட காலம் ஆகிறது. நில அளவு உள்ளிட்ட கோரிக்கைகளை மக்கள் கொடுக்கும்போது* seniority*படி செய்ய வேண்டுமென்பதால் இரண்டு, மூன்று மாதங்கள் ஆகின்றன. நீண்ட நாட்களாக அதாவது, 1972 முதல் அந்தத் தொகுதி மக்கள் இந்தக் கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மக்களின் வசதிக்காக, மக்களுக்காகச் செயல்படுகின்ற இந்த அரசு, இந்தக் கோரிக்கையை நிச்சயமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். அரசாணை மற்றும் விதிகள் சிலவற்றைத் தளர்த்தி, அந்தத் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்மாதிரியான நடவடிக்கைகள் எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.*

*பொதுமக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, மக்கள்தொகை, நிலப் பரப்பு மற்றும் வருவாய்க் கிராமங்கள் அடிப்படையில், வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே கடந்த ஆறு ஆண்டுகளிலே 70 புதிய வருவாய் வட்டங்களையும், 9 புதிய கோட்டங்களையும் உருவாக்கித் தந்த ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*புதியதாக ஒரு வட்டம் உருவாக்கப்பட வேண்டுமானால், குறைந்த அளவு 250 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு இருக்க வேண்டும். ஆனால், மாதர்பாக்கம் வட்டம் பிரிக்கப்பட்டால், 114 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மட்டுமே இருக்கும்.*

மேலும், குறைந்தது 1,00,000–க்கு அதிகமாகவும், அதிகளவு 5,50,000 மக்கள்தொகையும் இருக்க வேண்டும். மேற்படி குறு வட்டத்தின் தற்போதைய மக்கள்தொகை 40,440 மட்டுமே உள்ளது. குறைந்தது இரண்டு அல்லது மூன்று முழு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்க வேண்டும். கும்மிடிப்பூண்டி வட்டத்தைப் பொறுத்தளவில், ஓர் ஒன்றியம் மட்டுமே உள்ளது. குறைந்த அளவு 30 வருவாய்க் கிராமங்கள் அடங்கியிருக்க வேண்டும். ஆனால், 19 வருவாய்க் கிராமங்கள் மட்டுமே உள்ளன. எனவே, கும்மிடிப்பூண்டி தொகுதி, மாதர்பாக்கத்தை தனி வட்டமாகப் பிரிக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும்கூட, இந்த வரையறைகளெல்லாம் பூர்த்தியாகின்றபோது, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிச்சயமாகப் பரிசீலனை செய்து நிறைவேற்றும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்மிடிப்பூண்டி வட்டத்தை மட்டும் கணக்கில் கொண்டு இங்கே பதில் வழங்கிக் கொண்டிருக்கிறார். அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையும், என்னுடைய கோரிக்கையும் என்னவென்றால், கும்மிடிப்பூண்டி வட்டம் மற்றும் ஊத்துக்கோட்டை வட்டம் இரண்டையும் இணைத்து அதை மூன்று வட்டங்களாகப் பிரிக்க வேண்டும் என்பதுதான். அதாவது, ஊத்துக்கோட்டை வட்டமும் வேண்டும்; கும்மிடிப்பூண்டி வட்டமும் வேண்டும்; புதியதாக மாதர்பாக்கம் வட்டமும் வேண்டும். 70 ஊராட்சிகள் கொண்ட ஒரு வட்டம் என்றால், அது எவ்வளவு பெரிதாக இருக்கும் என்பதை நீங்கள் கருத்தில்கொள்ள வேண்டும். நிருவாக அடிப்படையில் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. ஒரு வட்டத்திற்கு 70 ஊராட்சிகள், இன்னொரு வட்டத்திற்கு 61 ஊராட்சிகள் இருக்கின்றன. சுமார் 70 சதுர கிலோமீட்டர் ஆந்திர எல்லையையொட்டி இருக்கின்றது. கும்மிடிப்பூண்டி தொகுதியிலே தொழிற்சாலைகள் உள்ளன. விவசாயிகளும், நெசவாளர்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியிலே மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளுக்காக வருவாய்த் துறையை சார்ந்து இருக்கின்ற ஒரு சூழ்நிலை

*2017 ஜுன் 19]*

*இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஊத்துக்கோட்டை வட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம் இரண்டையும் இணைத்து மாதர்பாக்கத்தை தலைமையிடமாகக் கொண்டு மூன்றாவது வட்டத்தைத்தான் கேட்கின்றோம். அதேபோல, தமிழ்நாடும், ஆந்திராவும் கலந்து இருக்கின்ற ஒரு தொகுதி கும்மிடிப்பூண்டி. அதாவது ஒரு பகுதி வந்தோமென்றால் தமிழ்நாடும், அடுத்த பகுதி ஆந்திராவாகவும் இருக்கும். அதைக் கடந்தால் மீண்டும் தமிழகம்.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார், உங்கள் உரையைச் சுருக்கமாக முடியுங்கள்.*

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** *இதுபோன்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் எல்லையில் இருக்கின்ற மக்கள் தங்கள் நில அளவைகள் எல்லாம் சரியாக வேண்டும் என்று கேட்கின்றார்கள்.* Border-*ல் இருக்கின்ற சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. நிருவாகம் சீராக இருக்க வேண்டும் என்பது மக்களுடைய கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலைப் பார்த்தோமென்றால், கும்மிடிப்பூண்டி வட்டத்தைத்தான் பிரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார். ஆனால் எங்களுடைய கோரிக்கை என்பது கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை ஆகிய இரண்டு வட்டங்களையும் ஒன்றிணைத்து அதனை மூன்றாகப் பிரித்து மாதர்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மூன்றாவது வட்டம் உருவாக்க வேண்டும் என்பதுதான். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாதர்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பிரிக்கின்றபோது, அருகில் இருக்கின்ற வட்டங்களையும் சேர்த்து பிரித்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நலன் சார்ந்து வழங்கியிருக்கின்ற அந்த ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு,*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, புதிய வட்டத்தை உருவாக்குவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.

**திருமதி வி. கஸ்தூரி வாசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்களின் மனதில் என்றும் நீங்காமல் நிலைத்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆனைமலை ஒன்றியம், 24 ஊராட்சிகளையும், 4 பேரூராட்சிகளையும் கொண்ட பெரிய ஒன்றியமாகும். இந்தப் பகுதி பொள்ளாச்சி வட்டத்தில் உள்ளது. மக்கள்தொகை அதிகமாக உள்ள ஆனைமலை ஒன்றியத்தைப் பிரித்து, ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அறிவிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள புதிய வட்டங்களை உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்திருக்கின்றது. அந்த உயர்மட்டக் குழுவில், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று உயர் அலுவலர்கள் உள்ளனர். வரைமுறைகள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டு, தகுதியுள்ள புதிய வட்டங்களைக் கண்டறிந்து, ஒவ்வோர் ஆண்டும் அறிவித்து வருகின்றார்கள். வருவாய்த்

*2017 ஜூன் 19]*

*துறையின் வரலாற்றில் ஒவ்வோர் ஆண்டும் புதிய வட்டங்களை உருவாக்குவதற்கு ஆணைகள் பிறப்பித்து இதுவரை 70 புதிய வட்டங்களை உருவாக்கித் தந்த ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆனைமலை வட்டம், அனைத்து வரையறைகளையும் பூர்த்தி செய்திருக்கின்றது. அது உயர்மட்ட அலுவலர்களுடைய ஆய்வில் இருக்கின்றது. அவர்கள் பரிந்துரை செய்கின்றபட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய புதிய வட்டம் அமைப்பதற்கான கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**38—**

## போக்குவரத்துக் கழக பணிமனை

***2231—திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பத்தூர் தொகுதி, சிங்கம்புணரியில் புதிய போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதியில் உள்ள சிங்கம்புணரியில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்குப் பணிமனை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.

**திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பணிமனைக்கான கோரிக்கையை நான் வைக்கவில்லை. ஓர் ஆட்சி மாறி அடுத்த ஆட்சி வருகின்ற நேரத்திலும், அரசு என்பது தொடர்ந்து இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றது. கடந்த 2009–2010 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், தலைவர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் அன்றைக்கு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள், இதே சட்டமன்றத்தில் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் சிங்கம்புணரி பல கிராமங்களை உள்ளடக்கியது என்பது மட்டுமல்ல, குறிப்பாக பல மாவட்டங்களான மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருச்சி, சிவகங்கை ஆகிய மாவட்டங்களை இணைக்கின்ற மையப் பகுதி என்பதை உணர்ந்து, அந்தப் பகுதியினுடைய வழித்தடங்களில் கூடுதலாக போக்குவரத்து வழித்தடங்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அங்கே பணிமனை அமைக்கப்பட வேண்டும் என்று அறிவித்தார்கள். ஆக அறிவித்து, அதற்காக சிவகங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட இடம் தேர்வு செய்யப்பட்டது. பிறகு 2011–ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. பிறகு வந்த உங்களுடைய அரசு அதைக் கவனிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது, அன்று போக்குவரத்துத் துறை அமைச்சர்களாக இருந்த இருவர், மாண்புமிகு திரு. V. செந்தில் பாலாஜி அவர்களும், மாண்புமிகு திரு. பி. தங்கமணி அவர்களும் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள்.

முற்பகல் 11–05

இந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தில் நான் பேசியபோதுகூட, என்னுடைய தொகுதித் தேவையை நான் குறிப்பிட்டுச் சொன்னேன். தற்போதைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிசீலிப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது, அதற்கான வாய்ப்பு இல்லையென்று சொல்கிறார்கள். நான் கேட்பது, புதிய அறிவிப்பை அல்ல, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை இந்த அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான். ஆகவே, அதனுடைய முக்கியத்துவத்தையும், கடந்த காலங்களில் இரண்டு அமைச்சர்கள் அளித்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றுகின்ற வகையில், அதை

*2017 ஜூன் 19]*

*நிறைவேற்றித் தருவதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்த சிங்கம்புணரியிலிருந்து சுமார் 23 கி.மீ. தொலைவில் திருப்பத்தூரில் ஒரு பணிமனையும், 30 கி.மீ. தொலைவில் பொன்னமராவதியில் ஒரு பணிமனையும், 30 கி.மீ. தொலைவில் மேலூர் மற்றும் நத்தம் ஆகிய இடங்களில் இரண்டு பணிமனைகளும் அமைந்திருக்கின்றன. இந்த 4 பணிமனைகளின் மூலமாக அந்த பகுதிகளுக்குப் போதிய பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், தற்போதுள்ள அரசாணையின்படி, புதிய பணிமனை அமைக்க குறைந்தபட்சம் 40 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். எனவே, சிங்கம்புணரியில் புதிய பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், நான் குறிப்பிட்ட அந்த 4 பணிமனைகளிலும் குறைந்த அளவில்தான் பேருந்துகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. திருப்பத்தூரில் 45 பேருந்துகளும், பொன்னமராவதியில் 52 பேருந்துகளும், மேலூரில் 73 பேருந்துகளும் மற்றும் நத்தத்தில் 48 பேருந்துகளும்தான் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி மையப் பகுதியாக இருக்கிறது; அங்கு புதிய பணிமனை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்ற 5 ஆண்டுகளில் 74 புதிய பணிமனைகளை அமைப்பதற்கு உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் இன்று தமிழகத்தில் 40 புதிய பணிமனைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மீதி உள்ள பணிமனைகளில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அங்கு தேவை இருக்குமாயின், உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்.

**திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது குறித்து முற்றுப்புள்ளி வைத்துவிடாமல், இப்போது அளித்த பதிலை comma–வாக வைத்துக்கொண்டு தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும் அரசுப் குளிர்சாதன பேருந்துகள் சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. சிவகங்கையிலிருந்து இயக்கப்படும் குளிர்சாதனப் பேருந்து சிவகங்கை, திருப்பத்தூர் மார்க்கமாக வந்து, புதுக்கோட்டை வழியாகச் செல்கிறது. புதுக்கோட்டையிலிருந்து ஒரு பேருந்து அந்த மாவட்டத் தலைநகருக்கு இயக்கப்படுகின்றது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, சிவகங்கை, திருப்பத்தூர், சிங்கம்புணரி மார்க்கமாகச் சென்றால், எங்கள் பகுதி மக்கள் பயன்பெறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

மேலும், கடந்த ஒரு மாத காலத்திற்குள், காரைக்குடி டிப்போவில் மட்டும் ஏறத்தாழ 35 பேருந்து வழித்தடங்களை நிறுத்தியுள்ளீர்கள். அதற்கு வருவாய்க் குறைவு காரணமோ அல்லது என்னவென்று தெரியவில்லை. குறிப்பாக கிராமப் பகுதிகளுக்கு சேவை செய்வதற்காகத்தான் அரசு போக்குவரத்துக் கழகங்களை அன்றைக்கு உருவாக்கியது, கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் தனியாரிடமிருந்து நாட்டுடமையாக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு, இலாப நோக்கம் ஒன்றையே கருத்தாகக் கொண்டு, வருவாய்க் குறைவு என்று கூறி வழித்தடங்களை நிறுத்துவது இந்த அரசுக்கு நல்லதல்ல. குறிப்பாக, திருப்பத்தூர் டிப்போவிலிருந்து இயங்குகின்ற 12 ஏ பேருந்து வழித்தடம், குறைந்தபட்சம் 11 வழித்தடங்களில் நேர காலங்கள் மாற்றியமைக்கப்பட்டு இயக்கப்படுகிறது. அந்த 12 ஏ பேருந்து நிறுத்தப்படுவதால் மட்டும், ஏறத்தாழ 10 வழித்தடங்களில் அந்தப் பேருந்து சேவை இல்லாமல், மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகிறார்கள். ஆகவே, மற்ற பேருந்துகளையும் நீங்கள் மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, குறிப்பாக 12 ஏ வழித்தடத்தை திருப்பத்தூரிலிருந்து நீங்கள் மீண்டும் இயக்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*2017 ஜூன் 19*]

*மேலும், திருப்பத்தூர்–மதுரை, அதேபோன்று, சிங்கம்புணரி–மதுரை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்காமல் comma–விலேயே போய்க்கொண்டிருக்கிறீர்கள்.*

**திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பே நீங்கள் தருவதில்லை. கிடைக்கின்ற வாய்ப்பிலும் இடையில் குறுக்கிட்டால் என்ன செய்வது? நான் அது வாழ்க, இது வாழ்க என்று சொல்லவில்லை. நேராக விஷயத்திற்குத்தான் வந்தேன். திருப்பத்தூர் வழியாக தஞ்சாவூர், புதுக்கோட்டை, தேவக்கோட்டை, காரைக்குடி போன்ற வழித்தடங்களில் பல சேவைகள் இருக்கின்றன. ஆனால், திருப்பத்தூருக்கும், சிங்கம்புணரிக்கும் நேரடியாக மதுரை அருகிலே இருக்கிற நகரம் என்ற காரணத்தால், புதிய வழித்தடத்தை உருவாக்கித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 12 ஏ வழித்தடம் ஆய்வு செய்யப்பட்டு, அந்தப் பேருந்தை இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த வழித்தடங்களையும் ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குறுக்கிடுவது தவறு. இருந்தாலும், என்னுடைய பெயரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதால், அதற்கு பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டபொழுது 'பரிசீலிக்கப்படும்' என்று இரண்டு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் சொன்னார்கள். இப்பொழுது அவர் 'இல்லையென்று சொல்கிறார்' என்ற கேள்வியைக் கேட்டார்கள். இதேபோல, 2006–2011–ல் நாங்கள் ஒரு கேள்வியைக் கேட்டோம். அன்றையதினம் முதல்வராக இருந்தவர் சொன்ன பதில், 'பரிசீலிக்கப்படும்' என்று சொன்னால், அது பரிசீலனையில்தான் இருக்கும் என்று சொல்லியிருக்கின்றார். அதே பதிலை உங்களுக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, திசையன்விளை பகுதியிலே ஒரு பணிமனை இருக்கிறது. அது தனியார் இடத்திலே இருந்தது. வழக்கு நிலுவையில் இருந்த அந்த இடம் சம்பந்தமான தீர்ப்பு தனியாருக்குச் சாதகமாக வந்துவிட்டதனால், அந்தப் பணிமனை அருகிலே இருக்கிற சாத்தான்குளத்திற்குச் சென்றுவிடும் என்று பொதுமக்கள் மத்தியில் ஒரு பேச்சு இருக்கிறது. நான் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது, 'அதற்கு உகந்த இடமிருந்தால் சொல்லுங்கள்' என்று ஏற்கெனவே என்னிடம் கேட்டிருந்தார்கள். அது பரிசீலனையில் இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். நான் எதற்காக அரசினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன் என்றால், இதற்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார், 'இதற்கு முற்றுப்புள்ளி வைத்திடாமல், comma வைத்து விடுங்கள்' என்று சொன்னார். இந்த அரசு inverted comma–க்குள் இயங்குகிற அளவிற்கு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி கொண்டிருக்கிற அரசு ஆகும். எனவே, அரிய திட்டங்களை தந்து ஆச்சரியக்குறியை ஏற்படுத்துகிறவிதத்திலே இருக்கிற அரசு என்பதனால், (குறுக்கீடு) என்னுடைய தொகுதியிலே, (குறுக்கீடு) திசையன்விளையிலேயே இந்தப் பணிமனையை அமைப்பதற்கு

*2017 ஜூன் 19]*

*உகந்த நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், கேள்விதான் கேட்கிறார் வேறொன்றுமில்லை. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திசையன்விளை பகுதியிலே பணிமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். வழக்கு சம்பந்தமான கேள்வியைக் கேட்டிருக்கிறார். வழக்கு சம்பந்தப்பட்ட அந்த இடத்தை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பணிமனை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**39—**

### சமுதாயக் கூடம்

***4771—திரு. எஸ். பவுன்ராஜ்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருக்கள்ளாச்சேரி ஊராட்சி, ஆற்றங்கரை தெரு ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு முகம் தந்தவர் அம்பேத்கர். ஆனால், ஆதி திராவிட மக்களுக்கு முகவரி தந்தவர்*

யார் என்றால், அகிலமே சொல்கிறதே, அக்ரஹாரத்து அம்பேத்கர் எங்கள் அம்மா என்று. தாயின் திருவடிகளைப் பணிந்து, என்னுடைய பதிலை அளிக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடம் கட்டப்பட்டு வருகின்றது. அந்த வகையில், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருக்கள்ளாச்சேரி ஊராட்சி, ஆற்றங்கரை தெரு பகுதியில் ஆதி திராவிட மக்களுக்காக சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் ஆராய்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. எஸ். பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதில் நீக்கமற வாழ்ந்து கொண்டிருக்கிற என் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், திருக்கள்ளாச்சேரி ஊராட்சிக்குட்பட்ட ஆற்றங்கரை தெருவிலே 500–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுத்தால், விசேஷ காலங்களிலே அந்தப் பகுதி மக்கள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, முன்னுரிமை அடிப்படையில் அந்தப் பகுதியில் ஒரு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

*2017 ஜூன் 19]*

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் தங்களின் சுப நிகழ்ச்சிகள், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதற்காக, 1971 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளிலிருந்து சமுதாயக் கூடங்கள் படிப்படியாகக் கட்டப்பட்டு வருகின்றன. அவ்வகையில் நிதி ஒதுக்கீட்டைக் கணக்கில்கொண்டு, சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

**திரு. எஸ். பவுன்ராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**40—**

## கால்நடைக் கிளை நிலையம்

***3211—திரு.** V.T. **கலைச்செல்வன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், மு. பரூர் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2017 ஜூன் 19

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எனக்கு இந்த அரிய வாய்ப்பினை வழங்கிய, மறைந்தும், மறையாமலும் தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று தமிழுக்கும், தமிழக மக்களின் உரிமைகளுக்கும் பாடுபட்டு, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு "Vision-2023" என்ற பாதையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கனவினை நனவாக்க ஆட்சி செய்து கொண்டிருக்கும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், மு. பரூர் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினைக் கேட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுகளில் தமிழகத்தில் 810 கிளை நிலையங்களைக் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியும், 200 கால்நடைக் கிளை நிலையங்கள் புதியதாக உருவாக்கப்பட்டும், 1,615 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டும், 1,163 பழைய கட்டடங்கள் புனரமைக்கப்பட்டும், 843 புதிய கால்நடை உதவி மருத்துவர்களை நியமனம் செய்தும், மனிதர்களுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவச் சிகிச்சை கிடைத்திடவும், கிராமங்களில் கால்நடை மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தி, கால்நடைகளுக்கு நோய் நொடி இல்லாமல் விவசாயப் பெருமக்கள் சிறப்பாக வாழ்வதற்கும் வழி செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், மு. பரூர் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால், (அதாவது 4,224

2017 ஜூன் 19]

அலகுகள்) மு. பரூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் (Sub Centre) அமைக்க உள்ள சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

**திரு. V.T. கலைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறியாத வயதில் தந்தையை இழந்தும், அறியவரும் வயதில் தாயை இழந்தும், அன்புருகும் வயதில் தமையனை இழந்தும், ஊன்றுகோல் உதவியின்றி உச்சங்களைத் தொட்ட உலகத்தின் அதிசயம், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழரைக் கோடி தமிழ் இனத்தை இமையாகக் காத்து, உழைக்கரிசி விலையில்லா தந்து, உலகத்தர கல்வித் தந்து, பொன்னி நதியை மீட்டெடுத்த புரட்சித் தாயின் பொற்கால ஆட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) நடத்தி வருகின்ற, சோதனைகளைக் கடந்து சாதனைகளைத் தருகின்ற ஒப்பில்லா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 11–20

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட, மு. பரூர் கிராமம் கால்நடைகள் மிகுந்த, பின்தங்கிய மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கிறது. இப்பகுதியில் உள்ள வேளாண் பெருமக்களின் வேண்டுகோளை நிறைவேற்றுகின்ற வகையில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று கால்நடைக் கிளை நிலையத்தினை அமைத்துத் தருவேன் என்று பதிலளித்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியை எனது சார்பாகவும், அப்பகுதிவாழ் மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புதிய கால்நடைக் கிளை நிலையத்தினை இந்த நிதியாண்டிலேயே அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து கண்டிப்பாக ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

**திரு. V.T. கலைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், ராஜேந்திரப்பட்டினம் கிராமம், ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான அலகுகளும், விதிகளும் பொருந்தும் வகையில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அங்கு ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

# 2. தகவல் கோரல்

## இந்திய தேர்தல் ஆணையம் பரிந்துரைத்தபடி வழக்கு பதிவு செய்யப்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையத்தின் மூலமாக ஓர் அறிவிப்பு தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டு, அதுகுறித்து இதுவரையில் வழக்கு போடப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதும், சில அமைச்சர்கள் மீதும் அந்த வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று,* R.T.I. *மூலமாகப் பெற்றிருக்கக்கூடிய அந்தச் செய்தி, நேற்றும் இன்றும் செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. எனவே, இதுகுறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க தாங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று இன்று காலையில் உங்களிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறேன். அதற்குரிய ஆதாரத்தினையும் தங்களிடத்தில் தந்திருக்கிறேன். அதற்குத் தாங்கள் அனுமதி வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்று காலை 9–30 மணிக்குத்தான் அதுபற்றிய விவரங்களை என்னிடத்தில் கொடுத்தீர்கள். இருந்தாலும் அதை நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் எழுப்பியிருக்கிறீர்கள், அவ்வளவுதான். அதற்கு விரிவான பதில் பெறுவதற்கு (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதைப்பற்றி பேச நான் அனுமதிக்காதபோது, (குறுக்கீடுகள்) நீங்கள் அதுகுறித்து* raise *செய்ய வேண்டும் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தகவல் கோரல் என்ற முறையில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்குள்ள* details... *(குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. சாமி. (குறுக்கீடுகள்) காலையில் 9–30 மணிக்கு உங்கள் கட்சிக் கொறடா அவர்கள் அறிவிப்புக் கொண்டு வந்து*

என்னிடத்தில் கொடுத்துள்ளார்கள். விதி எண் 55 மற்றும் விதி எண் 56–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். என்னிடத்தில் கொடுத்தவுடன் நான் அதைப் படித்துப் பார்த்தேன். அதுகுறித்த முழு விவரங்களையும் நான் கேட்பதற்கு நேரம் இல்லை. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தகவல் கோரல் என்ற முறையில் பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எழுப்பியிருக்கிறீர்கள். அதை நான் முழுவதுமாக அனுமதித்துள்ளேன். நீங்களும் எழுப்பியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, சொல்வதைக் கேளுங்கள். இதை நான் முழுவதுமாக அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) விதி எண்கள் 55 மற்றும் 56–ல் அனுமதி கோரியதில் நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருப்பது ஆய்வில்தான் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) இருந்தாலும் முக்கியமான பிரச்சினை என்கின்ற காரணத்தினால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அதை அவையில் எழுப்புவதற்கு அனுமதி கொடுத்தேன். அத்துடன் சரி. (குறுக்கீடுகள்) தகவல் கோரல் என்ற முறையில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விதிகள் 55 மற்றும் 56–ன்கீழ் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடுகள்) அதற்கு நான் மரியாதை கொடுத்து, முக்கியமானது என்று எழுப்பியதால் (குறுக்கீடுகள்) இல்லை, காலை 9–30 மணிக்குக் கொடுத்துவிட்டு 10–00 மணிக்கு பதில் கொடுங்கள் என்றால் எப்படி? அரசாங்கம் எப்படி பதில் தயார் செய்து தர முடியும்? (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் தர முடியுமா என்ன? அப்படியெல்லாம் தர முடியாது. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–25*

அவையெல்லாம் என் ஆய்வில் இருக்கின்றன. நீங்கள் எழுப்புவதற்கு அனுமதி கொடுத்தேன். எழுப்பியாகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு தகவல் கோரல் என்ற முறையில் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் சொன்னதைப் பதிவு செய்துவிட்டேன். விதி எண்கள் 55 மற்றும் 56–ன்கீழ் கொடுத்திருக்கிறீர்கள். என்ன பிரச்சினை என்று சொல்வதற்கு (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் விதி எண்கள் 55 மற்றும் 56–ன்படி கொடுத்தது, என்ன பிரச்சினை என்று இந்த அவையிலே சொல்வதற்கு, நான் உங்களுக்கு அனுமதி கொடுத்தேன். நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். அதன்மீது விவாதம் ஒன்றும் இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். தகவல் கோரல் என்ற முறையில் நான் மாண்புமிகு முதலமைச்சர்

*2017 ஜூன் 19]* [பேரவைத் தலைவர்]

*அவர்களை அதற்கு விளக்கம் அளிக்க அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று தொடர்ந்து குறுக்கீடு செய்தனர்.)*

*நீங்கள் அவையில் இருக்கிற (குறுக்கீடுகள்) இருங்கள், விதிகளின்படிதான் (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் எதிர்க்கட்சித் தலைவரை அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன். நீங்கள் சொல்வது மாதிரி நான் செய்ய முடியாது. நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். சபையை நடத்த வேண்டியது நான். நீங்கள் என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் விதி எண்கள் 55 மற்றும் 56–ன்கீழ் கொடுத்ததை நான்* record *செய்துகொண்டேன். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று* record *செய்துவிட்டேன். இல்லை, இல்லை, நீங்கள் இன்று காலை 9–30 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதைப் பதிவுசெய்து, அதை நீங்கள் அவையில் சொல்வதற்கு உங்களுக்கு அனுமதி கொடுத்து விட்டேன். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, முழு விவாதம் நடத்துவதற்கு, நான் அனுமதிக்காதபோது சபையை ஒத்தி வைப்பதைப் பற்றி எப்படிக் கேட்க முடியும்? நான் அதை அனுமதிக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றி எழுப்பியதால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், நீங்கள் விதி எண்கள் 55 மற்றும் 56–ன்கீழ் கொடுத்துள்ளதை நான் அனுமதிக்காவிட்டாலும், உங்களுக்கு மரியாதை கொடுத்து (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் தகவல் கோரல் என்ற முறையிலே நான் உங்களுக்கு அனுமதி அளித்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விளக்கம் கூற அனுமதித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவரங்களைச் சொல்வார்கள். அவ்வளவுதான். மீதி இருந்தால் பிறகு பார்க்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். நான் உங்களை* record *செய்வதற்கு அனுமதித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உட்காருங்கள், திரு. வேலு உட்காருங்கள் நீங்கள். எல்லோரும் எழுந்து நின்று ஒவ்வொரு உறுப்பினரும் பேசினால், எப்படி? நானும், எதிர்க்கட்சித் தலைவரும் பேசுவதற்குக்கூட விடமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு மரியாதை கொடுத்துதான்... (குறுக்கீடுகள்) சொல்வதை ஒரு நிமிடம் கேளுங்கள். நீங்கள் விதி எண்கள் 55 மற்றும்*

56–ன்கீழ் கொடுத்த அறிவிப்புகளை எடுத்துக் கொள்வதற்குப் போதிய அவகாசம் எனக்கு இல்லை. விளக்கமான அறிக்கை பெறுவதற்கு நேரம் இல்லை. நீங்கள் எழுப்புவது முக்கியப் பிரச்சினை என்பதால், நான் தகவல் கோரல் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை விளக்கம் சொல்ல அனுமதிக்கிறேன். பதில் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் வேண்டுமென்றால் detail-ஆகப் போகாமல் மேலெழுந்தவாரியாக ஒரு நிமிடத்தில் என்ன விளக்கம் வேண்டும் என்பதைச் சொல்லுங்கள். பதிவு செய்துகொள்கிறேன். அவ்வளவுதான். Detail-ஆகப் போனீர்கள் என்றால் நேரமில்லை. Detail-ஆகச் சொன்னீர்கள் என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அதற்கான பதில் தயாரிப்பதற்கு நேரமில்லை. மேலெழுந்தவாரியாகக் கேளுங்கள், பதில் சொல்லச் சொல்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதியினுடைய இடைத்தேர்தல் 12–4–2017 அன்று நடந்திருக்க வேண்டும். ஆனால் 8–4–2017 அன்று **

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதுதான். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை Election Commission பரிந்துரையில் என்ன கொடுக்கப்பட்டுள்ளது? Election Commission அதையெல்லாம் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. இப்படியெல்லாம் அவர்கள் விளக்கமாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாததையெல்லாம் record செய்தால் எப்படி? (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் மேலெழுந்தவாரியாகச் சொல்லுங்கள். நான் அனுமதிக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9–4–2017 அன்று தேர்தலை இரத்து செய்து, தேர்தல் ஆணையம் ஆணையிட்டிருக்கிறது. தலைமை தேர்தல் ஆணையர் உள்ளிட்ட மூன்று ஆணையர்கள் கொண்ட Full Commission

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

உத்தரவிலே ** எனவே, அதை நான் விட்டு விடுகிறேன். ** நான் சொல்கிறேன். ** ஆனால், தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? அதனை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான் விடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. பிரச்சினை அவ்வளவுதான், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. பிரச்சினை அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இதற்குமேல் விளக்கமாகப் போகவேண்டாம். வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பதைத்தான் நீங்கள் கேட்க வேண்டும். அவ்வளவுதானே! (குறுக்கீடுகள்) அதைக் கேட்டுவிட்டு, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி, நீங்கள் எனக்கு உத்தரவெல்லாம் போட முடியாது. (குறுக்கீடு) உத்தரவை நீங்கள் போட முடியாது. (குறுக்கீடுகள்) உத்தரவை நான்தான் போட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, வழக்கை பதிவுசெய்ய வேண்டியது காவல் துறை. அந்தக் காவல் துறையின் பொறுப்பை கையில் வைத்திருக்கக்கூடியவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். எனவே, ** ஆக, அந்த அடிப்படையில்தான். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வாறெல்லாம் detail–ஆக கேட்க முடியாது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போதும், போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பரிந்துரை அங்கிருந்து வந்திருக்கிறது. வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பதுதான் உங்களுக்குத் தெரியவேண்டும். அது நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்கள். அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பதில் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) ** (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

அவர்கள் போதும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், நீங்கள் இப்படியெல்லாம் சொன்னால் நான் எப்படி அவையை நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விதி எண்கள் 55 மற்றும் 56—ன்கீழ் கொடுத்ததை அனுமதிக்காமலேயே, உங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பதனால்தான், தகவல் கோரல் என்ற முறையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பதில் சொல்லுமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றேன். நீங்கள், மேற்கொண்டு எனக்கு இந்தச் சபையை நடத்துவதற்கு ஒத்துழைக்காமல் விவாதத்தை நீட்டித்துக்கொண்டு போனால் எப்படி? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) விவாதத்தை நீட்டிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** எனவே, இது முறையான, முழுமையான, நிறைவான விசாரணையாக அமைய வேண்டும் என்று சொன்னால், ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வழக்கைப் பற்றி கேளுங்கள். (குறுக்கீடுகள்) வழக்குதான், எதற்கு நீங்கள் (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அதையெல்லாம் நீங்கள் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. தேர்தல் ஆணையத்தின் தாக்கீதில் அப்படியெல்லாம் கேட்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் வழக்கைப் பற்றிதான் கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அது வழக்குதான். (குறுக்கீடுகள்) அதோடு நில்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அதற்கு மேற்கொண்டு, ** சொன்ன வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அவையெல்லாம் தேவையில்லை. (குறுக்கீடுகள்) அந்த மாதிரி வார்த்தைகள் எல்லாம் நீங்கள் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) சரி, அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ** அவ்வளவுதான் வேறு ஒன்றுமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி உட்காருங்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

*2017 ஜூன் 19]*

*முற்பகல் 11–35*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்கிறபோது அவர்கள் இந்திய அரசியல் சட்ட சாசனத்தின்படி நாங்கள் எங்கள் கடமையை ஆற்றுவோம் என்ற உறுதிமொழியை எடுத்துக் கொண்டுதான் பதவி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே இந்த விசாரணை முறையாக நடைபெற வேண்டுமென்று சொன்னால், ** இதற்கு உடன்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். ஒரு நிமிடம். இதை நீங்கள் சொல்ல வருகிறீர்கள் என்றுதான் நான் முன்பே சொன்னேன். எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) இந்தச் சபையிலே நானும் 1977–லிருந்து இருக்கிறேன். நீங்கள் என்ன பேச வருகிறீர்கள் என்று எனக்குத் தெரியாதா? (குறுக்கீடுகள்) அதனால்தான் நான் சொன்னேன். நீங்கள் அதையேதான் சொல்லியிருக்கிறீர்கள். அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். கேட்காத வார்த்தையை நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்? தாக்கீதில் இருக்கிறதா?*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*

*தாக்கீதில் அந்த மாதிரி இருக்கிறதா? கிடையாது. நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள். நான் பார்த்து விட்டேன். அந்தமாதிரி இல்லை. உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நடந்து கொள்வது நன்றாக இல்லை. உட்காருங்கள். உட்காருங்கள்.*

*ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதி*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கொஞ்சம் அமைதியாக இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது சொன்ன வார்த்தையை நான் நீக்கியதற்கு, திரும்பவும் வேண்டுமென்று கேட்கிறார். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். தேர்தல் ஆணையத்தினுடைய தாக்கீதிலே நடவடிக்கை எடுங்கள் என்ற மாதிரி (குறுக்கீடுகள்) மனுதாரர்கள்தான் அந்தப் பெயர்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்களேயொழிய, தேர்தல் ஆணையம் இவரிவர்கள் என்று பெயரைச் சொல்லவில்லை. தெளிவாக இருக்கிறது. நான் பார்த்து விட்டேன். நீங்களும் ஒரு முறை பார்த்துவிடுங்கள். ஆனால், அதைப்பற்றி எல்லாம் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) இருங்கள். நீங்கள் பேசியது, குறிப்பிட்டது, தேவையில்லாமல் பேசியது, நான் திரும்பப் பெற்ற அந்த வார்த்தைகள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். நீங்கள் கடைசியாகச் சொன்னதையும் நான் நீக்கிவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் ஆர்.கே. நகரிலே நடந்த தவறைச் சுட்டிக்காட்டி, ** வழக்கு தொடர வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, இருங்கள். இப்போதுதான் நான் ஒரு விளக்கம் கொடுத்தேன்.

**திரு. கரி. இராமசாமி:** நான் யாரையும் mention பண்ணவில்லை. நான் உங்களைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நான் நீக்கிய வார்த்தைகளை நீங்கள் திரும்ப record செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் இப்போதுதான் எதிர்க்கட்சித் தலைவருக்கு சொன்னேன். அதாவது நீங்கள் சொல்லுகிற பெயர்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

*2017 ஜூன் 19]* [பேரவைத் தலைவர்]

எல்லாம் (குறுக்கீடு) இருங்கள். நீங்கள் சொன்ன பெயர்களை எல்லாம் அந்த மனுதாரர்தான் சொல்லியிருக்கிறாரேயொழிய, தேர்தல் ஆணையம் அவர்கள் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. தாக்கீதிலும் அதைப்பற்றிய விவரம் இல்லை. ஆகவே, அதுகுறித்து நீங்கள் பேச வேண்டாம். அதுகுறித்து பேசியதையெல்லாம் நான் ஏற்கெனவே நீக்கிவிட்டேன். நீங்கள் மேற்கொண்டு பதிவுசெய்ய முயற்சி செய்ய வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர், ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கரி. இராமசாமி:** *இல்லை. அது இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, அது வேண்டாம். வேறு ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருடைய பெயரையும் நான் சொல்ல விரும்பவில்லை. முதலில் அதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஆனால், தேர்தல் ஆணையம் அரசுக்கு ஒரு தகவலை அனுப்பியிருக்கிறது. அந்த தகவல்மீது உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். அதிலே காலதாமதம் இருக்கக் கூடாது. (குறுக்கீடு) விரைவாக இதுகுறித்து, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து இந்தச் சட்டமன்றத்திற்கு நீங்கள் தெரிவிக்கவேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கையேதவிர, வேறு என்ன சொல்கிறோம்? நாங்கள் தவறுதலாகப் பேசவே மாட்டோம். (குறுக்கீடு)*

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ரொம்ப நன்றி, உட்காருங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *நாங்கள் தவறுதலாகப் பேசவே மாட்டோம். ஆனால், தவறு செய்தால் அதைச் சுட்டிக்காட்டுவோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எம்.பி. வைரக்கண்ணன், வழக்கறிஞர், இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன்கீழ், தன்னுடைய மனுவில், "ஆர்.கே. நகர் தொகுதி இடைத்தேர்தலில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்ற விவரங்களைக் கேட்டுள்ளார். அதைப் பற்றித்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும் இங்கே பிரச்சினை எழுப்பியிருக்கின்றார்கள். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிக்கையில், வருமான வரித் துறையின் சோதனையின்போது, ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலின்போது சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அதன் அடிப்படையில், தேர்தல் நடத்தும் அதிகாரியே முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்திட ஏதுவாக புகார் மனு அளித்திட அறிவித்திருந்தது. அதன் தொடர்பாக, பெருநகர் குற்றவியல் நடுவர் அவர்களிடம் அனுமதி பெற்று, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது; வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களுக்கும் அவையில் உள்ளவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** *வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் (குறுக்கீடு) நேற்று தெரியவில்லை; இன்று தெரிந்துவிட்டது, அவ்வளவுதானே! (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நான் இன்னொரு பதிலைத் தருகிறேன். நான் தரும் பதிலையும் கேட்டுவிட்டு, பிறகு முடிவு செய்யுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மைக் கொடுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள், "இந்த வழக்கு சம்பந்தமாக இதுவரை எந்தத் தகவலும் எனக்கு வரவில்லை" என்று சொல்லியிருக்கிறார். ஆனால், இன்றையதினம், "வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது" என்று சொல்கிறார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இப்போது முதலமைச்சர் அவர்கள்*

அளித்திருக்கக்கூடிய இந்த விளக்கம் முறையானதாக இல்லை, திருப்தியானதாக இல்லை. ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இறுதியாகச் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலின்போது, தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக தி.மு.க.–வின்மீது 48 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில், 12 வழக்குகள் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தது தொடர்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் விளக்கம் கேட்டார்கள்; அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். நேற்றைய தினம் பேட்டி கொடுத்ததாக சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அதைப் பற்றி நான் கேட்டு, இப்போது அவருக்கு பதிலளித்திருக்கின்றேன்; அந்த விவரத்தைத்தான் கொடுத்திருக்கின்றேன். நேற்றையதினம் எனக்கு பதில் வரவில்லை; இன்றையதினம் பதில் வந்திருக்கிறது. அந்த பதிலைத்தான் நான் அவர்களுக்கு வழங்கியிருக்கின்றேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

தினந்தோறும் சட்டமன்றத்திற்கு வருவதும், ஏதாவது ஒரு பிரச்சினையை எழுப்புவதும். அதில் ஏதாவது கிடைக்குமா என்று எதிர்பார்க்கின்றனர். நிச்சயமாக எதுவுமே கிடைக்காது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நான்காண்டுக் காலம் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

செய்கின்ற அரசாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. ஊடக/பத்திரிகைச் செய்தி ஆதாரமாகாது–பேரவைத் தலைவரின் தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் ஒரு பிரச்சினையை எழுப்ப 14–6–2017 அன்று அனுமதி கோரினார்கள். தி.மு.க. உறுப்பினர்களுடைய கோரிக்கையை நான் ஏற்கவேண்டுமென்றால், சட்டப் பேரவையில் அதுசம்பந்தமாக விவாதிக்க ஒன்று, விதிகளின்கீழ் வழி இருக்க வேண்டும் அல்லது மரபுகளின்கீழ் சாத்தியப்பட வேண்டும். என்ன பிரச்சினை என்பது சம்பந்தமாக என்னிடத்திலே சொல்லி அவர்கள் முன்னரே அனுமதி கோரவில்லை. அவர்கள் எழுப்ப முயன்ற பிரச்சினை நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ள பொருள். நம்முடைய சட்டமன்றப் பேரவை விதி 92–ன்கீழ் 'உறுப்பினர் உரையாற்றுகையில் நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருள்மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றி குறிப்பிடவோ கூடாது' என உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை சம்பந்தமாக அவர்கள் சென்னை நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்துள்ளார்கள். நீதிமன்றத்திலே உள்ள பிரச்சினைக் குறித்து விவாதிக்கக் கூடாது என்று ஏற்கெனவே நான் தீர்ப்பளித்திருக்கிறேன்.*

*அதற்கு அடுத்த நாள் 15 ஆம் தேதி, இதே பிரச்சினைக் குறித்து, பத்திரிகையிலே வந்த செய்தியைக் காட்டி எழுப்ப முயன்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு இன்னும் அனுமதிக்கப்படவில்லை, அதனால் விவாதிக்கலாம் என்று வாதம் செய்து, நான் அனுமதிக்காத காரணத்தினால் வெளிநடப்புச் செய்தார்கள். அந்தப் பிரச்சினையை அனுமதிக்காத காரணத்தை அப்போதே நான் விளக்கி என்னுடைய தீர்ப்பாக வழங்கிவிட்டேன். மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை 16 ஆம் தேதி 'இதோ என் கையிலே ஆதாரம் இருக்கிறது' என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேரம் இல்லா நேரத்தில் அந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்பினார்கள். அதை என்னிடம் கொடுக்கவும் முற்பட்டார்கள். மரபின்படி, விவாதிக்க இருக்கும் குற்றச்சாட்டு குறித்து, ஆதாரத்தை*

பேரவைத் தலைவரிடம் முன்னரே அளித்து அனுமதியைப் பெற்ற பின்னர்தான் உறுப்பினர்கள் பிரச்சினையை எழுப்ப முடியும் என்கின்ற காரணத்தால் அவையிலே ஆதாரத்தைத் தரக் கூடாது, என்னுடைய அறைக்கு வந்து தாருங்கள், அது என்ன என்று பார்த்து உங்களுக்குண்டான பதிலை அளிக்கின்றேன் என்றும் கூறினேன். 'புதிதாக ஆதாரம் ஏதோ தருகிறார்கள் அதைப் பரிசீலித்து முடிவெடுக்கலாம்' என்று நானும் நினைத்து, மரபின்படி என்னுடைய அறைக்கு வந்து தாருங்கள், நான் பரிசீலிக்கிறேன் என்று அப்போது சொல்லியிருந்தேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் என்னுடைய அறைக்கு வந்து ஆதாரமாக ஒரு குறுந்தகட்டை அளித்தார்கள். என்னிடம் அளிக்கப்பட்ட குறுந்தகட்டை நான் போட்டுப் பார்த்தேன். அந்தக் குறுந்தகட்டை போட்டுப் பார்த்தபொழுது அதுவும் ஓர் ஊடகச் செய்தி நகல் என்று தெரிய வந்தது. பத்திரிகைச் செய்தி என்பது Print Media, Electronic Media இரண்டையும் உள்ளடக்கியது. முதல் நாள் எதிர்க்கட்சித் தலைவர் நாளிதழ்களை அதாவது Print Media என்பதற்கு ஆதாரம் கொடுத்தார். எதிர்க்கட்சித் தலைவர் சார்பாக திரு. பிச்சாண்டி அவர்கள் அடுத்த நாள் என்னிடம் அறையிலே வந்து கொடுத்த தகடு Electronic Media. அதிலே ஓர் ஆங்கிலத் தொலைக்காட்சியில் வந்த ஓர் ஒளிபரப்பினைப் பதிவு செய்து ஆதாரமாகக் கொண்டு வந்து கொடுத்தார்கள். மொத்தத்தில் ஊடகச் செய்திதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த ஆதாரம். ஊடகச் செய்தியை ஆதாரமாக வைத்து விவாதம் நடைபெறக் கூடாது என்பதற்கு ஏற்கெனவே நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன். இந்தச் சட்டமன்றப் பேரவையில் பல்வேறு பேரவைத் தலைவர்கள் ஊடகச் செய்தியை ஆதாரமாக வைத்து குற்றச்சாட்டு கூறுவது சரியல்ல என்று தீர்ப்புரை வழங்கியிருக்கிறார்கள். மரபுகளைக் கடைபிடித்தும், அவர்கள் எழுப்ப நினைக்கின்ற பிரச்சினையை எழுப்ப இயலாது என நான் கடந்த 15 ஆம் தேதி விளக்கமாக குறிப்புரை வழங்கினேன். மரபு இல்லாவிட்டாலும் இவர்கள் கேட்கிறார்கள். கடந்த சட்டமன்றப் பேரவைகளிலே அது மாதிரி நடந்திருக்கிறதா என்று பார்த்தேன். அந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11–50*

*1998 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள் அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள், 'பத்திரிகையிலே வருகின்ற ஹேஷ்யங்களை வைத்து நாம் இங்கே விவாதம் செய்வது அழகல்ல' என்று குறிப்பிட்டுள்ளதையும், 2011 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் நாள் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு உரையாற்றுகையில் சொன்னதை மீண்டும் பதிவு செய்கிறேன். அன்றைக்கு பேரவை முன்னவராக இருந்த மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் 2010 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் இங்கே உரையாற்றுகையில் குறிப்பிட்டதையே மீண்டும் பதிவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்ப நினைக்கிற பிரச்சினைக்கு நான் மறுப்பதற்கான காரணத்தை விளக்குகிறேன்.*

அன்றைக்கு பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் சொன்னது. "ஒரு செய்தி தன்னுடைய காதிற்கு வந்தால்கூட அது ஒரு குற்றச்சாட்டு வடிவம் எடுக்கிறது என்று சொன்னால், அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டறிந்து, அதன் பின்னர்தான் இந்த அவையிலே சொல்ல வேண்டும். வெளியில் எத்தனையோ செய்திகள் வரலாம், அப்படி வருகிற செய்திகளையெல்லாம், இங்கே பதிவு செய்வதற்கு இது ஒன்றும் பதிவுத் துறை அலுவலகம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், இந்த அவையிலே உள்ள யாரையும் அவமதிக்கிற செய்தியை வெளியிலே யார் சொன்னாலும், அதை மறுபடியும் இங்கே வந்து சொல்வதற்குத் தேவையான அனுமதி இந்த அவையிலே கிடையாது. அப்படி அனுமதிக்கக்கூடிய, குறைசொல்லக்கூடிய ஒரு குற்றச்சாட்டு இருக்குமானால், முன்கூட்டியே அதை அவைத் தலைவரிடத்திலே தெரிவித்து, அதற்கான ஆதாரத்தைக் காட்டிவிட்டு, அதற்குப் பிறகுதான் இந்த அவையிலே வந்து, அவருடைய அனுமதியோடுதான் அப்படியெல்லாம் சொல்ல வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அப்படியல்லாமல் விதிகளை மீறி சொல்லுகிற செய்தி, எதுவாக இருந்தாலும், இந்த அவையிலே பதிவு செய்யக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியுள்ளார். இது அன்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

*2017 ஜூன் 19]* [பேரவைத் தலைவர்]

*எனவே, தொலைக்காட்சியிலோ அல்லது பத்திரிகையிலோ ஒரு செய்தி வந்துள்ளது அல்லது ஒரு குற்றச்சாட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை மாத்திரம் வைத்துக்கொண்டு, அது இங்கே விவாதிக்கப்படுமானால், அது சரியாக இருக்காது. மேலும் பத்திரிகையிலே வந்திருந்தாலும், நிரூபிக்கத்தக்க ஆதாரம் இல்லாத வரையில் அதுசம்பந்தமாக அவையிலே பேசப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டால், அது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.*

*பத்திரிகையிலே பல விஷயங்கள் வருகின்றன. ஒவ்வொரு உறுப்பினரும் அதைப்பற்றி பேச வேண்டும், இங்கே அவையிலே விவாதிக்க வேண்டும் என்று கொண்டு வந்தால் சரியாக அமையுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். குறுந்தகட்டிலே பேட்டியளித்ததாகக் கூறப்படும் உறுப்பினர்கள், தாங்கள் அவ்வாறு பேசவில்லையென்று பத்திரிகைச் செய்தியாகவும் வெளிவந்திருக்கிறது. இந்த நிலையிலே ஆதாரம் என மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த குறுந்தகட்டிலே உள்ள செய்தி, ஓர் ஆங்கில தொலைக்காட்சியிலே வந்த ஓர் ஒளிபரப்பின் பிரதி என்பதனால், அதை அடிப்படையாகக்கொண்டே, இந்தப் பேரவையிலே உறுப்பினர் அவர்கள் விவாதிக்க சட்டமன்ற விதிகளின்படி அனுமதி தருவதற்கு வழிவகை இல்லை, மரபுகளும் அதனை ஆதாரமாக ஏற்கமுடியாத நிலையிலே இருக்கின்றன என்பதனையும் தெரிவித்து, கடந்த 14 சட்டமன்றங்களிலேயும், இதேமுறைதான் பின்பற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பேரவைத் தலைவர்கள் எல்லாம் இதே முறையைத்தான் பின்பற்றி, இந்த அவையை நடத்தியிருக்கிறார்கள். அந்த நடைமுறையையே நானும் பின்பற்றி, அந்த மரபுகளின்படி ஏற்கமுடியாத நிலை உள்ளதாலும், ஏற்கெனவே, நான் அளித்த தீர்ப்பை உறுதிசெய்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்துள்ள குறுந்தகட்டு செய்தியை ஆதாரமாகக் கொண்டு இந்தப் பிரச்சினையை இங்கே விவாதிக்க இயலாது எனத் தீர்ப்பளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தயவுசெய்து, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுசம்பந்தமாக இனிமேல் இந்த அவையிலே பேசவேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு, அந்தத் தீர்ப்பின்மேல் நீங்கள் பேசமுடியாது. எதிர்க்கட்சிக் கொறடா உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் வேண்டுமென்றே எழுந்திருக்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள். திரு. ஆஸ்டின், நீங்களும்*

டெல்லியில் எம்.பி.–யாக இருந்திருக்கிறீர்கள். இதெல்லாம் தெரியும். தெரிந்தும் இப்படி வந்து (குறுக்கீடு) இல்லை, கிளாரிஃபிகேஷன் எல்லாம் இதிலே வராது. மாண்புமிகு பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டால், அந்தத் தீர்ப்பின்மீது நீங்கள் விவாதிக்க முடியாது. கிளாரிஃபிகேஷனும் கேட்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதன்பிறகு பார்க்கலாம் உட்காருங்கள்.

*முற்பகல் 11–55*

இன்னொரு செய்தி இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். ஒரு நிமிடம் உட்காருங்கள். திரு. ஆஸ்டின், நீங்கள் உட்காருங்கள்.

இன்னொரு செய்தி. 14–6–2017 அன்றைக்கு பேரவை விதிகளுக்கு முரணாக நடந்துகொண்டு, வேண்டுமென்றே பேரவையின் அலுவலை நடத்தவிடாமல் இடைமறித்து, இடையூறு செய்ததால், தொடர்ந்து பேரவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்த காரணத்தால், பேரவை விதி 121 (1)–ன்கீழ் இடையூறு செய்த தி.மு.க. உறுப்பினர்களின் பெயரைக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடுகையில், கூச்சல்–குழப்பத்தின் காரணமாக, திரு. பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன், திரு. பி. மூர்த்தி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோரின் பெயர்களையும் குறிப்பிட்டிருந்தாலும், “நான் படித்தவற்றில், அவைக்கு வராத உறுப்பினர்கள் பெயர் இருக்குமேயானால், அவை வருகைப் பதிவேட்டினைப் பார்த்து சரி செய்யப்படும்; அந்த பெயர்கள் திரும்பப் பெறப்படுகின்றன” எனக் குறிப்புரைக்கப்பெற்று, அப்போதே அவர்களுடைய பெயர்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன என்பதை இப்பேரவையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### ரிஷிவந்தியம் தொகுதி, கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, நிலுவைத் தொகை தீர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

*2017 ஜுன் 19]*

**திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டு, கள்ளக்குறிச்சி, யூனிட்–I கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை தீர்வு செய்ய வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

**அறிக்கை**

*விழுப்புரம் மாவட்டம், மூங்கில்துறைப்பட்டில் அமைந்துள்ள கள்ளக்குறிச்சி–I கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நாளொன்றுக்கு 2,500 மெட்ரிக் டன் கரும்பு அரைவை செய்யும் திறனுடையது. இவ்வாலை நடப்பு 2016–2017 அரைவைப் பருவம் வரை கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு மத்திய அரசின் விலையான நியாயமான மற்றும் ஆதாய விலை முழுவதும் வழங்கிவிட்டது. இதற்காக 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளில் ரூ.168.69 கோடி வழங்கப்பட்டுள்ளது.*

*கடந்த மூன்று ஆண்டுகளில் சர்க்கரை மற்றும் உபபொருட்களின் விற்பனை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக, கள்ளக்குறிச்சி–I கூட்டுறவுச் சர்க்கரை ஆலையால் மாநில அரசின் பரிந்துரை விலை நிலுவையை வழங்க நிதி ஆதாரம் இல்லை. எனவே, கடந்த 2015–2016 ஆம் அரைவைப் பருவத்தில் அரைவை செய்த 3.44 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பிற்கு ரூ.15.50 கோடியும், 2016–2017 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் அரைவை செய்த 3.89 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பிற்கு ரூ.17.50 கோடியும் ஆக மொத்தம் ரூ.33 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளது. 2015–2016 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகையை வழங்க அரசிடம் வழிவகைக் கடன் கோரப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. 2016–2017 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் உள்ள நிலுவையில் ரூ.4 கோடி, விவசாயிகளுக்கு*

ஆலையால் வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

**திரு. க. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் வைரவிழா காணும் தமிழினத் தலைவர் கலைஞர் ஐயா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், எங்களை வழிநடத்துகின்ற தளபதியார் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கள்ளக்குறிச்சி, மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் சுமார் 30,000 விவசாயப் பங்குதாரர்கள் உள்ளனர். ஆண்டொன்றுக்கு 15,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட கரும்பு அரைவை செய்யப்படுகிறது. 2015–2016 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 15 கோடியே 50 இலட்சம்; 2016–2017 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூபாய் 17 கோடியே 30 இலட்சம். ஆக மொத்தம், ரூபாய் 32 கோடியே 80 இலட்சம். ஆலை நிருவாகத்தின்மூலம் 4 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள 29 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. மேலும், மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 284 கோடி ரூபாய் கடன் சுமையில் தத்தளிக்கிறது. ஆண்டொன்றிற்கு 12 கோடி ரூபாய் நிருவாகத்தின்மூலம் இதற்கு வட்டியாகச் செலுத்தப்படுகிறது. ஆனால், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே நலிவடைந்த கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகைக் கடன்–ways and means– பெற்றுத் தந்து, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைச் சிறப்பாகச் செயல்பட வைத்துள்ளார்கள். ஆனால், இந்த அரசுக்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின்மீதும், ஏழை விவசாயிகளின்மீதும் எந்தவித அக்கறையும் இல்லை. இதனால், ஏழை விவசாயிகளின் வாழ்க்கைச் சூழல் பாதிக்கப்பட்டு, கரும்பு பயிரிட்டவர்களின் வாழ்க்கை கசப்பானதாக மாறிவிட்டது. மேலும், விவசாயிகள் பலமுறை போராட்டம் நடத்தியும் பயனில்லை.

மேலும், எங்கள் மாவட்டத்திலுள்ள பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலும் 60 கோடி

2017 ஜூன் 19] [திரு. க. கார்த்திகேயன்]

ரூபாய் நிலுவைத் தொகை உள்ளது. இதற்காக திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள் பலமுறை குரல் கொடுத்தும் இதுவரை பயனில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரிலேயே உடனடியாக நிலுவைத் தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். எனவே, இதுவரை எவ்வளவு வழங்கினார்கள், எவ்வளவு மீதம் வழங்க வேண்டுமென்பதை அறிய விரும்புகின்றேன். ஆகவே, விவசாயிகளின் துயர்துடைத்திட அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி-I கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை தீர்வு செய்ய வேண்டியது குறித்து ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கவன ஈர்ப்பாகக் கொடுத்துள்ளார். அதனடிப்படையில் மத்திய அரசினுடைய நியாயமான மற்றும் ஆதாய விலை முழுவதும், அதாவது 168.69 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2015–2016 ஆம் ஆண்டிற்கான நிலுவைத் தொகை, மாநில அரசினுடைய பரிந்துரை விலையை வழங்க வழிவகைக் கடனாக அரசிடம் கோரப்பட்டுள்ளது. அது பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 2016–2017 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் 4 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு ஆலையால் வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையினை வழங்குவதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு பொதுத் துறை சர்க்கரை ஆலையான செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு 2015–2016 ஆம் ஆண்டு மாண்புமிகு திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் கேட்டதற்கிணங்க 17.42 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும், என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு 2.41 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

[திரு. எம்.சி. சம்பத்] [2017 ஜூன் 19

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை modernisation செய்வதற்கு 316 கோடி ரூபாய் அரசு வழிவகைக் கடனாகக் கேட்கப்பட்டுள்ளது. அதுவும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசைப் பொறுத்தவரையில், விவசாயிகளுடைய நலன் பாதுகாக்கப்படுகின்ற அரசு. விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக இந்த அரசு தொடர்ந்து கவனத்தை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

**திரு. க. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசு வழிவகைக் கடன் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கின்றார். ஆனால், கடந்த 4 வருடங்களாக அதற்கான எந்த முகாந்திரமும் நடக்கவில்லை, எந்தக் கையெழுத்தும் இடப்படவில்லை. 2009–2010 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே மூங்கில்துறைப்பட்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் co-generation–இணை மின் உற்பத்தி நிலையம் அமைக்க உத்தரவிடப்பட்டது. விவசாயிகளின் பங்குத் தொகையாக ரூபாய் 9 கோடியும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் ரூபாய் 81 கோடியும், ஆகமொத்தம் 90 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. அந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளில் முடிக்கப்பட்டு ஆலையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால், 2011 ஆம் ஆண்டு, உங்களது ஆட்சி வந்தவுடன் 60 சதவீதம் பணிகள் முடிந்த இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டது. இந்தத் திட்டம் நடைபெற்றிருக்குமேயானால், ஆண்டொன்றிற்கு நிருவாகத்திற்கு 5 கோடி ரூபாய் இலாபம் கிடைத்திருக்கும். ஆக, 2012 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி இந்தத் திட்டம் நடைபெற்றிருக்குமேயானால் கடந்த 5 வருடங்களில் அந்த ஆலைக்கு 20 கோடி ரூபாய் வருவாய்

*கிடைத்திருக்கும். இதன்மூலம் விவசாயிகளுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகையை வழங்கியிருக்கலாம். மேலும், இந்த ஆண்டு கடுமையான வறட்சியின் காரணமாக. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், நீங்கள் எழுதிக் கொண்டு வந்து உரைமாதிரி பேசினால் எப்படி?*

**திரு. க. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள். முடிந்தது, இரண்டு நிமிடங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இது விவர அறிக்கையில் இருப்பதுதானே?*

**திரு. க. கார்த்திகேயன்:** *இந்த நேரத்திற்கு நான் பேசியிருப்பேன். இந்த ஆண்டு கடுமையான வறட்சியின் காரணமாக, கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் போதிய நிவாரணம் வழங்க வேண்டும். நிலுவைத் தொகையையும் உடனடியாக வழங்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணை மின் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதுவும் தொடர்ந்து படிப்படியாக நடந்து கொண்டிருக்கிறது. 2010–ல் வால்சன் கம்பெனிக்கு வழங்கப்பட்ட திட்டம்தான் அது. தொடர்ச்சியாக 4 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு முடிக்கப்பட்டுள்ளது. மேலும், மூங்கில்துறைப்பட்டு, கள்ளக்குறிச்சி–I கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு உடனடியாக நிறைவேற்றுவதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருக்கு கள்ளக்குறிச்சி–II–ல்* SAP, FRP *இரண்டையும் கொடுத்துவிட்டோம். பொதுவாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தருமபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை போன்ற ஐந்து ஆலைகளுக்கும் கொடுத்துவிட்டோம்.*

ஆலைகளும் இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சர்க்கரை விலை வீழ்ச்சிதான் இதற்கு முக்கியக் காரணம். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், தனியார் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குண்டான நிலுவைத் தொகை குறித்து அரசினுடைய முழு கவனத்தில் இருக்கிறது. நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வாங்கித் தருவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ், (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், முனைவர் பொன்முடி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். நீங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள் இந்த அவையில் மிக மூத்த உறுப்பினர். நீங்கள் அமைச்சராகவும் பணியாற்றியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதாவது கவன ஈர்ப்புத் தீர்மானத்தை, யார் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் விவரம் கேட்பதற்கோ, மற்ற கேள்வி கேட்பதற்கோ அனுமதியுண்டு. நீங்கள் அறிவிப்புக் கொடுக்காத நிலையில் நான் அனுமதியளித்தால் அனைத்து உறுப்பினர்களும் வாய்ப்பு கேட்பார்கள். அப்போது நான் அனைவருக்கும் வாய்ப்பளிக்க முடியாது. அமைச்சரும் சேர்த்து பதிலளிக்க முடியுமா? அதனால் தரமுடியாது, உட்காருங்கள்.*

## 5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள், அறிவுத்திறன் வகுப்பறை, பள்ளிக் கல்வி இயக்ககத்திற்குப் புதிய கட்டடம், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*2017 ஜுன் 19*]

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். அன்பின் வடிவமே, அறிவுப் பெருங்கடலே, ஆற்றலின் பிறப்பிடமே, ஐந்தெழுத்து அற்புதமே, (மேசையைத் தட்டும் ஒலி) பைந்தமிழ் பொக்கிஷமே, பூமிக்கு வந்த புண்ணியமே, கழகத்தின் காவல் தெய்வமே, ஒப்பிட்டுச் சொல்லமுடியாத உலக அதிசயமே, ஏங்கி நின்ற ஏழைகளைத் தாங்கி நின்ற அன்னையே, திரும்பும் திசையெல்லாம் தெய்வமாய் நிற்பவரே தங்களை வணங்கிப் போற்றுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–05*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழை, எளிய மக்கள் பொருளாதார வளர்ச்சி பெற்று ஏனையோருக்கு இணையாக உயர்வடைய வேண்டும் என்றால் அவர்கள் கல்வி வளர்ச்சி பெற வேண்டும். மாநிலம் முழுவதும் சிறந்த கல்வி அளிக்கப்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சி அடித்தட்டு மக்களுக்கும் சென்றடையும். எனவேதான், கல்விக்கும் அதன் வளர்ச்சிக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார்கள்.*

*கடந்த ஆறு ஆண்டுகளில், மாணவ, மாணவியருக்கு 4 இணைச் சீருடைகள், விலையில்லா பாடநூல்கள், விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா புத்தகப் பை, விலையில்லா கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ், நில வரைபடப் புத்தகம் ஆகிய கல்வி உபகரணங்கள், ஓர் இணைக் காலணிகள், விலையில்லா மிதிவண்டிகள், கட்டணமில்லா பேருந்துப் பயணச் சலுகை, சத்தான மதிய உணவு போன்ற பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்கள்.*

*மேலும், மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மொத்தம் 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை போன்ற உன்னதத் திட்டங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பள்ளிக் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்:*

*1. வளர்ந்துவரும் தொழில்நுட்ப சவால்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில், அரசுப் பள்ளி மாணாக்கர்கள் போதிய கணினி திறன்களை அடையும் வகையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள்* (Hi-tech Labs) *ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, 3,090 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 10 கணினிகளும், 2,939 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா 20 கணினிகளும், (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடன் தொடர்புடைய இதர சாதனங்களும் வழங்கப்படும். இதற்கென அரசுக்கு ரூ.437 கோடியே 78 இலட்சம் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*2. அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புற மாணவர்களுக்குக் கணினி மூலமாக பாடங்களைப் பயிற்றுவிக்கும் வகையில் முதற்கட்டமாக 3,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஓர் அறிவுத் திறன் வகுப்பறை, அதாவது* Smart Classroom *ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு பள்ளிக்கும் 2 இலட்சம் ரூபாய் வீதம் 60 கோடி ரூபாய் இதற்கென அரசால் செலவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*3. பள்ளிக் கல்வி இயக்ககம் 100 ஆண்டுகளுக்கும் மேலாக டி.பி.ஐ. வளாகத்தில் செயல்பட்டு வருகின்றது. இக்கட்டடம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இதனால், இதனைப் பராமரிப்பது கடினமாகவும், மிகுந்த செலவினம் கொண்டதாகவும் உள்ளது. அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களிலிருந்து அலுவலர்களும், பணியாளர்களும் அதிக அளவு இங்கு வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது. மேலும், இந்த இயக்ககத்தில் இயங்கும் பல்வேறு பிரிவுகளுக்காக கூடுதல் இடவசதி தேவைப்படுகிறது. இதற்காக, ஒரு இலட்சம் சதுர அடியில் 33 கோடி ரூபாய் செலவில் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கட்டடம் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம்" என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2017 ஜூன் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

4. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணாக்கர்களுக்கும் தரமான கல்வியை அளிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்கள் சிறப்பான சூழ்நிலையில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், அறிவியல் உபகரணங்கள், கலை மற்றும் கைவினை அறைகள், கணினி அறைகள், நூலகம், கழிவறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 39 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், புதிய கலை மற்றும் அறிவியல் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் தொடங்குதல், புதிய பாடப் பிரிவுகள் அறிமுகம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறைக்கு அளித்துவரும் அதே அளவு முக்கியத்துவத்தை உயர் கல்விக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்துவந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 6 ஆண்டுகளில் 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் என 65 புதிய கல்லூரிகளும், (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் தேசிய சட்டப் பள்ளி ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன. எனவேதான், உயர் கல்வியில் தேசிய மாணவர் சேர்க்கை விகிதம் 24.5 என இருந்தாலும், தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை விகிதம் 44.3 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

உயர் கல்வித் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்:

பிற்பகல் 12–10

1. கல்வியின் தரத்தினையும், மாணாக்கர்களின் அறிவுத் திறனையும் உயர்த்தும்பொருட்டு, கடந்த 6 ஆண்டுகளில் அரசு

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 961 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்மூலம் 2011–2012 ஆம் கல்வியாண்டில் 7,17,442 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2016–2017 ஆம் கல்வியாண்டில் 9,85,974 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளர்ச்சிக்கு மேலும் வலு சேர்க்கும் வகையில் 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கழிப்பறைகள், ஆசிரியர் ஓய்வறைகள், மாநாட்டு அறைகள், கூட்டரங்கங்கள், கூடுதல் அறைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் 210 கோடி ரூபாய் செலவில் இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 43 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கட்டப்படும் கட்டடங்கள், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள்” என்ற பெயரில் அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென, முதற்கட்டமாக இந்த ஆண்டு 105 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 105 கோடி ரூபாய் அடுத்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாணவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து உயர் கல்வி கற்பதை தவிர்க்கும்பொருட்டும், குறைந்த கட்டணத்தில் உயர் கல்வி பெறுவதற்கும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 7 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 புதிய (மேசையைத் தட்டும் ஒலி) பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2017–2018 ஆம் கல்வியாண்டில் துவங்கப்படும். இதற்காக அரசுக்கு 100 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மிகக் குறைந்த கட்டணத்தில் மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இம்மாணாக்கர்கள், வேலைவாய்ப்பினை பெறுவதற்குத் தேவைப்படும் புதிய பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகிறது. மாநிலத்தில் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மாணவர்கள்

மற்றும் அதிகளவில் மாணவிகள் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2017–2018 ஆம் கல்வியாண்டிலிருந்து 268 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இப்பாடப் பிரிவுகளை கையாள 660 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்காக அரசிற்கு ஆண்டிற்கு 40 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## (இ) காஞ்சிபுரத்தில் புதிய விளையாட்டு வளாகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் நீச்சல் குள வளாகம், காஞ்சிபுரத்தில் முதன்மை நிலை விளையாட்டு மையம் ஏற்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள் நாட்டின் செல்வம். விளையாட்டு, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம், நேர்மையாக செயல்படும் பக்குவம் ஆகியவற்றை கற்றுத் தருவதுடன், வெற்றி, தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனத் திண்மையையும் அளித்து சிறந்த பண்புகளைக்கூடிய மனிதனாக உருவாக்க உதவுகின்றது. எனவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளித்த அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வந்தார்கள்.*

*மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் இந்த அரசின் சார்பாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்:*

*1. காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு 42 ஆண்டுகள் ஆகிவிட்டதால், இந்த வளாகத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்கள் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்புகளை இடித்துவிட்டு அதே இடத்தில் நவீன தரத்துடன்கூடிய புதிய விளையாட்டு வளாகம் ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளாகம் பார்வையாளர் மாடம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அறை, நிருவாக அறை, பயிற்சியாளர் அறை, வீரர்கள் உடை மாற்றும் அறை, கழிவறைகள், சேமிப்பு அறை முதலான வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.*

*2.* திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் *5* கோடி ரூபாய் செலவில் நீச்சல் பந்தய குளம், பயிற்சி நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம், உடை மாற்றும் அறைகள், கழிவறைகள், அலுவலகம் மற்றும் பயிற்சியாளர்கள் அறையுடன்கூடிய உலகத்தரம் வாய்ந்த நீச்சல் குள வளாகம் அமைக்கப்படும்.

*3.* கெனாயிங் மற்றும் கயாக்கிங் எனும் நீர் விளையாட்டு உலகம் முழுவதும் பிரபலம் அடைந்துள்ளது. தற்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இவ்விளையாட்டு நடத்தப்பட்டு வருகிறது. சர்வதேச ரெகெட்டா எனப்படும் மிகப்பெரிய அளவிலான படகு போட்டிகளை நடத்தும் மையமாக சென்னை திகழ்கிறது. எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகம் அருகில், கெனாயிங் மற்றும் கயாக்கிங் விளையாட்டுகளுக்கு, முதன்மை நிலை விளையாட்டு மையம் ஒன்று *4* கோடியே *60* இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12–15*

## (ஈ) நியாய விலைக் கடைகளுக்கு விரல்ரேகை படிப்பி மற்றும் அச்சுப்பொறி வழங்குதல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் மைய வங்கியியல் கணினி சேவை முறை உருவாக்குதல், கூட்டுறவு நிறுவனங்களை நவீனமயமாக்குதல், மாதவரத்தில் நவீன சேமிப்புக் கிடங்கு கட்டுதல், சூரிய ஒளி கூரையுடன் சேமிப்புக் கிடங்குகள், நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பணியாளர்களின் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிப்பது நமது பொது விநியோகத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். நாடு முழுவதும் செயல்படும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நாம் பின்பற்றினாலும், வருமான அடிப்படையினைக் கருத்தில் கொள்ளாமல், பாகுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும்

2017 ஜூன் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பொதுவானதாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் தனிச் சிறப்பாகக் கருதப்படுகின்றது. இப்படிப்பட்ட புரட்சிகரமான முன்னோடித் திட்டங்களைத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி செயல்படுத்தினார்கள்.

இச்சிறப்புமிக்க நமது பொது விநியோகத் திட்டத்திற்கு நம் கூட்டுறவுச் சங்கங்களே பக்கபலமாக இருக்கின்றன. தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படும் இச்சங்கங்கள் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியப் பங்காற்றுகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படியே கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைமூலம் சிறப்பான திட்டங்களைத் தீட்டி அதை மக்களின் நலனுக்காக செயல்படுத்துகின்றது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்:

1. தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தை முழு கணினிமயமாக்கலின் ஒரு பகுதியாக அனைத்து நியாய விலைக் கடைகளிலும் விற்பனை இயந்திரம் வழங்கப்பட்டு, அதன்மூலம் குடும்ப அட்டைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. குடும்ப அட்டைதாரர் கோரும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விவரம் மேற்படி இயந்திரத்தில் பதிவு செய்தவுடன், குடும்ப அட்டைதாரரால் பதிவு செய்யப்பட்டுள்ள கைப்பேசி எண்ணிற்கு அவர் பெற்ற பொருட்கள் விவரம் குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்கான பட்டியல் (Bill) தற்போது வழங்கப்படுவதில்லை. இதை சரி செய்யும் விதமாகவும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள் பயோமெட்ரிக் முறையில் வழங்கப்பட வேண்டுமென்பதாலும், தமிழகத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரல் ரேகை படிப்பி (Finger Print Reader) மற்றும் அச்சுப்பொறி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜூன் 19

2. நமது நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, வணிக வங்கிகளுக்கு இணையாக, விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் வழங்கும் சேவையை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் பொதுமக்களுக்கு நவீன வங்கி சேவையினையும் வழங்க நபார்டு வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் அனைத்தும் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்டு மைய வங்கியியல் கணினி சேவை முறை 134.67 கோடி ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கூட்டுறவு நிறுவனங்களில், சொந்த அடிமனை இருந்தும், வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து சங்கங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையை செயல்படுத்திட, இந்த ஆண்டில் 114 கூட்டுறவு நிறுவனங்களுக்கு 23 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மதுரை மாவட்டம், விரகனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 70 இலட்சம் ரூபாய் செலவில் வணிக வளாகம் கட்டப்படும். வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே சேவை அளிக்கும் பொருட்டு திருச்சி மற்றும் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் 15 புதிய கிளைகள் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு நிறுவனங்களின் தோற்றப் பொலிவினை அழகுபடுத்தும் பொருட்டு, வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறவும், வணிக வங்கிகளுக்கு ஈடாக கூட்டுறவுச் சங்கங்களின் சேவையை வழங்க 27 கூட்டுறவு நிறுவனங்கள் 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.

4. சிறு வணிகர்கள், தனியாரிடமிருந்து அதிக வட்டியில் கடன் பெறுவதைத் தவிர்த்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறு வணிகக் கடன் உச்ச வரம்பினை 10,000/– ரூபாயிலிருந்து 25,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சென்னையில் அண்ணா நகர், நந்தனம், திருவான்மியூர், தங்கசாலை மற்றும் கோபாலபுரம் ஆகிய 5 இடங்களில் கிடங்கு வளாகங்கள் உள்ளன. அவற்றில் 86,068 மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் இருப்பு வைத்து கையாளப்படுகிறது. இதிலிருந்து சென்னை மாநகரைச் சுற்றிலும் 30 கிலோ மீட்டர் சுற்றளவில் பொது விநியோகத் திட்டத்திற்கான பொருட்கள் நகர்வு செய்யப்படுகின்றன. உணவு தானிய சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவினை மேலும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, சென்னை பெருநகரை ஒட்டியுள்ள மாதவரம் பகுதியில் 12,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட விஞ்ஞான முறையிலான, இயந்திரத்தைக் கையாளும் திறனுடன்கூடிய நவீன சேமிப்புக் கிடங்கு 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 9.82 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சொந்தக் கிடங்குகளும், பிற நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து வாடகை அடிப்படையில் 2.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிடங்குகளும் சேர்த்து 288 கிடங்குகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இக்கிடங்குகளின் சேமிப்பு கொள்ளளவு தற்போதைய தேவைக்குப் போதுமானதாக இல்லை என்பதால், இவற்றின் கொள்ளளவினை அதிகப்படுத்திடும் வகையில், முதற்கட்டமாக 9 மாவட்டங்களில் 14 சொந்த இடங்களில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30,000 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட சூரிய ஒளி கூரைகொண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் 25 கிடங்கு வளாகங்களுக்கு உட்புற சாலை வசதி, சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குடிநீர் வசதி, ஓய்வு அறை மற்றும் அடிப்படை வசதிகள் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 25 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 40 வருட தொடர் பயன்பாட்டில் இருந்துவரும் பழைய 15 சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் அடிப்படை பராமரிப்பு பணிகளும்

அங்கு பணிபுரியும் சுமைதூக்கும் பணியாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களின் நலன் சார்ந்த பணிகளும் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (உ) பணியின்போது உயிரிழக்கும் வனத் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்வு, தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017 உருவாக்குதல், பவானி ஆற்றில் இணைய வழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன வளம், வன உயிரின வளம் பெருக சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை சார்பாக கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்:

1. வன வளத்தையும், வன உயிரினங்களையும், பொதுமக்களையும் பாதுகாக்கும் மகத்தான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள வனப் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது வன உயிரினத் தாக்குதலால் உயிரிழக்கும் துயர நேர்வுகளிலும், வனக் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுடனான மோதல்களில் உயிரிழக்க நேரிடும் நேர்வுகளிலும், வீர தீர செயல் மற்றும் எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலை போன்ற நேர்வுகளிலும், காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற இழப்பீட்டுத் தொகைக்கு இணையாக வனப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையை 4 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 2013 முதல் 2015 வரையிலான காலத்திய இந்திய வன அளவை நிறுவனத்தின் வன அறிக்கையின்படி நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும், வனம் மற்றும் மரங்கள் அடர்ந்த பரப்பளவு தமிழகத்தில் மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது. தமிழகத்தினுடைய வன வளத்தை மேலும் பாதுகாக்கவும், அவ்வுணர்வினை அனைவரிடமும் வளர்க்கவும், வனப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற மலைவாழ் மக்களுடைய இயற்கை சார்ந்த

2017 ஜூன் 19] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வாழ்க்கை முறையினைத் தற்கால சந்ததியினருக்கு, குறிப்பாக, மாணாக்கர்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலும், உள்ளூர் மக்களை இயற்கைச் சுற்றுலா திட்டத்தில் முழுமையாக பங்கேற்கச் செய்து அவர்களது வேலைவாய்ப்பைப் பெருக்குவதுடன், சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் வகையிலும் தமிழ்நாடு சூழல்சார் சுற்றுலாக் கொள்கை, 2017 உருவாக்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பவானி ஆறு, நீலகிரி மலையில் உற்பத்தியாகி காவேரி ஆற்றில் கலக்கின்றது. இந்த ஆற்றின் நீர் 90 சதவிகிதம் கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் பாசனத்திற்குப் பயன்படுகின்றது. மேலும், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் பவானி ஆறு விளங்குகிறது. பவானி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் வடிகால் கழிவுநீர் வெளியேற்றத்தால் ஆற்று நீரில் ஏற்படும் தாக்கத்தைக் கண்காணிக்கும்வண்ணம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தற்போது மாதம் ஒருமுறை நீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்கின்றது. ஆற்று நீரின் தன்மையைத் தொடர்ச்சியாக 24 மணி நேரமும் கண்காணிக்கும் நோக்கத்துடன் நடப்பு நிதியாண்டில் பவானி ஆற்றில் 2 இடங்களில் இணைய வழி தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்நிலையங்கள் தலைமை அலுவலகம் மற்றும் உரிய மாவட்ட அலுவலகங்களுடன் இணைய வழியாக இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. பள்ளிக் கல்வி, உயர் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ் இன்று பல்வேறு அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். இந்த

அரசு, செயல்படுகிறதா என்ற ஒரு கேள்வியை எதிர்க் கட்சியினர் கேட்கிறார்கள். இந்த அரசு எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.569.79 கோடி நிதியை இன்றைக்கு கல்வித் துறைக்காக வழங்கி ஒரு சரித்திரத்தை தமிழகத்தில் படைத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய செயல்பாடுகள் உங்களைப் போன்றவர்களுக்குத் தெரிகிறதோ, இல்லையோ, எங்களைப் போன்றவர்களுக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக திட்டங்களை நிறைவேற்றுகிற ஆற்றல்மிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலில் நடைபெறுகிற அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிக் கல்வித் துறையின் பல்வேறு செயல்பாடுகளை மனம்திறந்து பத்திரிகையாளர்கள், ஊடகங்கள், கல்வியாளர்கள் மற்றும் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்டினார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

பிற்பகல் 12—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110—ன்கீழ் அறிவித்த அறிவிப்புகளுக்கு அவர் நன்றியைத்தானே சொன்னார்கள். (குறுக்கீடு) அவர் நன்றியைத்தான் சொன்னார்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவரைப்பற்றி அவர் ஒன்றும் குறை சொல்லவில்லை. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுகள், வாழ்த்துகள் எல்லாம் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, விதி 110—ன்கீழ் முதலமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளை இங்கே அறிவித்ததையொட்டி, இது செயல்படாத அரசு என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இது செயல்படக்கூடிய அரசுதான் என்று அவர் பெருமையோடு இங்கே சொல்லியிருக்கின்றார்கள். நான் அதை வாதத்திற்கு

ஏற்றுக்கொண்டாலும், வனத் துறை, பள்ளிக் கல்வித் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்கள் முடிந்தபிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் சில அறிவிப்புகளை அறிவிக்கின்றார்களே என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். மானியக் கோரிக்கை நடைபெறுகின்ற நேரத்தில் அதற்குரிய அந்த அறிவிப்புகளை வெளியிடாமல், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வெளியிடுவதற்கு என்ன காரணம்? ஆக, ஏற்கெனவே விதி 110–ன்கீழ் அறிவித்த அறிவிப்புகள் எந்த அளவிற்கு நிறைவேற்றப்படாமல் இருக்கின்றனவோ, அதே நிலையில்தான் இந்த அறிவிப்புகளும் இருக்கப் போகின்றனவா? ஆகவேதான் இது செயல்படாத அரசு என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். இப்போதும் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கும் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு துறையின் சார்பாக அந்த மானியக் கோரிக்கை முடிந்ததற்குப் பிறகுதான், விதி 110–ன்கீழ் அறிவிப்புகளை வெளியிடுவார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். விதி 110–ன்கீழ் நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் அப்படித்தான் நடைபெற்றிருக்கிறது. முக்கிய அறிவிப்புகள் அனைத்தையுமே மாண்புமிகு அம்மா அவர்கள் அப்படித்தான் அறிவித்திருக்கின்றார்கள். அவர்களுடைய வழியிலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் அறிவித்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன மோதல்களில் உயிரிழக்க நேரிடும் நேர்வுகளிலும், வீர, தீர செயல் மற்றும் எதிர்பாராத அசம்பாவித சூழ்நிலை போன்ற நேர்வுகளிலும், காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற இழப்பீட்டுத் தொகைக்கு இணையாக, வனப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும்

இழப்பீட்டுத் தொகை ரூ.4 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தி, அவர்களுடைய வாழ்வை வளமாக்கி, அவர்களுடைய வயிற்றிலே பால் வார்க்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்த அறிவிப்புகளுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய பல்வேறு பிரிவுகளின்கீழ் இயங்குகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொது விநியோகத் திட்டம் போன்றவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும், கூட்டுறவுச் சங்கங்களுடைய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காகவும் இன்றைக்கு அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்தபிறகு, இந்தத் துறையானது வரலாற்றுச் சாதனை புரிந்து வருகின்றது. மேலும், ஒரு மைல் கல்லாக பல்வேறு பணிகளில் மக்களுக்குச் சேவையாற்றுகின்ற இந்த நற்பணியின் அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் இன்றைக்கு விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்புகளுக்கு இங்கே உள்ள மாமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், என்னுடைய துறையின் சார்பாகவும், தமிழக மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற அற்புதமான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி, தமிழக மக்களுடைய நம்பிக்கையைப்பெற்று, இந்த அரசு நான்காண்டுகள் மட்டுமல்ல, அடுத்து வருகின்ற 2021–லும் அம்மா அவர்களுடைய அரசுதான் அமையும் என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*2017 ஜுன் 19]*

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 6 ஆண்டுக் காலத்திலே உயர் கல்வியை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தோடும், தமிழ்நாட்டை உயர் கல்வியில் இந்தியாவினுடைய முதன்மை இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடும் செயல்பட்டதன் அடிப்படையிலே, அதை உயர்த்திக் காட்டினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, உயர் கல்வியை தொடர்ந்து உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு இன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஏழும், பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் மூன்றும், காலசூழ்நிலைகளுக்கேற்ப புதிய பாடப் பிரிவுகள் 268 மற்றும் அதற்குத் தேவையான கட்டட வசதிகள் எல்லாம் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். கடந்த காலத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து கட்டடங்கள் வழங்கினார்கள். இன்றைக்கு அதேபோல், புதிய பாடப் பிரிவுகளுக்கு ஏற்றார்போல் கட்டடங்கள் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு புரட்சித் தலைவருடைய நூற்றாண்டு விழா கட்டடம் என்று சொல்லி அதற்காக 210 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்து உயர் கல்வியை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும் உயர் கல்வித் துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை இன்றைக்கு இந்தியாவில் மிகவும் சிறப்பான துறை என்று மத்திய அரசால் போற்றப்பட்டிருக்கின்றது. அந்தத் துறைக்கு மீண்டும் சிறப்பு சேர்க்கும் வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பவானி ஆற்றிலே இரண்டு இடங்களில் நீர் தர கண்காணிப்பு மையம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக*

பவானி சட்டமன்றத் தொகுதி சார்பாக மட்டுமல்லாமல் தமிழக மக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி தேடி அலைவோர் பலர் இருக்க, அந்த வெற்றியே தேடித்தேடி வந்து 32 ஆண்டுகளுக்குப் பின்னர் (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரிய வெற்றியை இந்த இயக்கத்திற்கு கொடுத்துவிட்டுச் சென்றிருக்கக்கூடிய எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை முதலிலே வணங்குகிறேன். வெற்றி என்பது தானாக வருவதில்லை. அது வியர்வைத் துளிகளுடைய விளைச்சல். அந்த அடிப்படையிலேதான் தன்னுடைய உழைப்பால் இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதலமைச்சராக இங்கே வீற்றிருக்கக்கூடிய அன்பிற்குரிய அண்ணன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். உணவுத் துறை சார்ந்த பல்வேறு அறிவிப்புகளை விதி 110—ன்கீழ் அறிவித்து சிறப்புச் செய்திருக்கிறார்கள். கிடங்குகள், கணினிமயமாக்குதல் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை எங்கள் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். 2011 ஆம் ஆண்டுக்கு முன்னால் 12 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவாக இருந்த கிடங்குகளின் கொள்ளளவு இன்றைக்கு 21 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சாதனைக்கு மெருகூட்டுகிற வகையிலே இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உணவுத் துறைக்கு விதி 110—ன்கீழ் வெளியிடப்பட்டிருக்கிற இந்த அறிவிப்புகளையெல்லாம் துறையின் சார்பிலும் என் சார்பிலும் மனமார வரவேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

# 7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

## (அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

## (ஆ) கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

———

## (அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,474,20,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.*

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 339, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 830, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1227, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1340, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1483, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1786, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1947, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6661, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

**திரு. வாகை சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1124, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1172, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1224, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, இருக்கையில் இல்லை.

பிற்பகல் 12–35

வெட்டுத் தீர்மானம் எண் 405, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், அத்தியூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 553, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திற்குத் தேவையான 15,000 MW மின்சாரம் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 795, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதியில் சூரிய ஒளி மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 464, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் நகராட்சியின் அனைத்து தெருக்களிலும் செல்லும் மின் கம்பிகளைப் பாதுகாப்பாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 803, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.*

**திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆராஞ்சி கிராமத்தில் உள்ள மின் நிலையத்தை 110* M.V. *மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 915, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.*

**திரு. துரை. சந்திரசேகரன்: மா***ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, 70. பெரமூர் ஊராட்சியில் குறைந்த மின் அழுத்தம் உள்ளதைச் சரி செய்ய புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 975, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகரத்தில் சில வார்டுகளில் உள்ள பழுதடைந்த மின் கம்பங்களை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 986, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன்.

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெய்வேலி தொகுதியில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களை மாற்றுவது குறித்தும், உரிய தொகையைக் கட்ட முடியாத ஏழைகளுக்கு விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1045, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1106, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் கட்டபெட்டு, தலைகுந்தா ஆகிய இடங்களில் உள்ள மின் உபயோகப் பொருட்கள் பண்டகச்சாலையை குன்னூரில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1154, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதியில் குறைந்த திறன் கொண்ட மின்மாற்றிகளுக்குப் பதிலாக அதிக திறன் கொண்ட மின்மாற்றிகளை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1254, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, பாச்சூர் கிராமத்தில் உளவயல் வாய்க்கால் கிழபட்டி செல்லும் பாலத்திற்கு அருகில் மின்மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1304, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் சொத்து வரி செலுத்தும் அனைவருக்கும் நிலபாகுபாடின்றி மின் இணைப்பு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1344, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்.

**திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் உள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1405, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1443, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் மற்றும் மதுரை மாவட்டம், மதுரை கிழக்குத் தொகுதியில் உள்ள துணை மின் நிலையங்களில் குறைந்த மின் அழுத்தத்தைச் சீராக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1473, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார்.

**திரு. ஐ.பி. செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி ஆயக்குடி பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1525, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1562, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலப்பட்டியில் உள்ள 33 K.V. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1571, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1617, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1643, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்யும் விவசாயிகளுக்கு மின் இணைப்பினை விரைந்து வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1718, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியில் மின்சாரம் சீராகக் கிடைக்கும் வகையில் கூடுதலாக மின்மாற்றிகள் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1741, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதி மற்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையை நீக்கி இலவச மின்சாரம் வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1751, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

**திருமதி பெ. சீத்தாபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மரக்காணம் பேரூராட்சியில் 16,000 K.V. மின்சாரம் தயாரிக்கும் மின்னாக்கி அமைக்கும் பணியை விரைந்து செயல்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1923, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மின் உற்பத்திக்குக் கூடுதல் திட்டங்கள் தீட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1982, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.*

**திரு. கே.எஸ். மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விவசாயிகளுக்கு விரைந்து மின் இணைப்பு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 2013, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன்.*

**திரு. பி.என்.பி. இன்பசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஒன்றியம், வட்டுவனஅள்ளி ஊராட்சி, ஜெல்மாரம்பட்டி பகுதியில் மின்மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,474,20,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

## (ஆ) கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 3 7–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.107,25,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி.

**திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 348, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

**திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 876, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1226, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1343, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

**திரு. வெ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1774, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

**திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1946, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

**திரு. இ. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2012, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6662, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

**திரு. வாகை சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1125, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1173, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1225, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 420, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் பொதுமக்களின் எதிர்ப்பை மீறி மதுக்கடைகள் திறப்பதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 452, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் பூரண மதுவிலக்கு நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 543, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 796, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதியில் அமைந்துள்ள பாரத் பல்கலைக்கழகத்திற்கு எதிரில் செயல்படும் மதுபானக் கடையினை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 463, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடையநல்லூர் தொகுதி, காசிதர்மம் செல்லும் சாலையில் அமைந்துள்ள விஸ்டம் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடம் மற்றும் செங்கோட்டையில் கோயில் அருகில் உள்ள மதுபானக் கடைகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 804, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்குத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 912, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, மாரனேரி கிராமத்தில் உள்ள அரசு மதுபானக் கடையை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1008, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான்.

**திரு. கே.எஸ். மஸ்தான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேல்மலையனூர் வட்டம், மேல்மலையனூர் கடை வீதியில் உள்ள கடை எண் 11422 மற்றும் 11645 ஆகிய டாஸ்மாக் கடைகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1028, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக்.

**திரு. நா. கார்த்திக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்து மதுபானக் கடைகளையும் அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1031, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் நகர தொடர்வண்டி நிலையத்தின் எதிரில் உள்ள மதுபானக் கடையினை வேறோர் இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1051, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன்.

**திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதியில் மூடப்பட்ட மதுபானக் கடைகளில் பணியாற்றிய ஊழியர்களுக்கு மாற்றுப் பணி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

**திரு. ஆர். கணேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உதகமண்டலம் தொகுதி, பாலாகொலா ஊராட்சி, B. மணிப்பட்டியில் உள்ள டாஸ்மாக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1153, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

**டாக்டர் ஆர்.டி. அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யூர் தொகுதியில் பவுஞ்சூரிலிருந்து கூவத்தூர் செல்லும் வழியில் பாலூர் கிராமத்தில் செயல்படும் மதுபானக் கடையினை அகற்றுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1404, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1440, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1424, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஊராட்சியில் சுடுகாடு அருகில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1533, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன்.*

**திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஒன்றியம், குருக்கத்தி அரசினர் உயர்நிலைப் பள்ளி அருகில் உள்ள மதுபானக் கடையை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1564, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட நகர, கிராமப் பகுதிகளில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள அரசு மதுபானக் கடைகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1623, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.*

**திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூடப்பட்ட டாஸ்மாக் கடைகளில் பணிபுரிந்தவர்களுக்கு வேறு துறைகளில் மாற்றுப் பணி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1714, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதி, 174–வது வார்டு, கணேஷ் நகர், நேதாஜி சாலையில் உள்ள மதுபானக் கடை எண் 692–ஐ அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1744, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி.

**திருமதி ம. வரலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதி, சிங்கபெருமாள்கோவில் ஊராட்சி, விஞ்சியம்பாக்கம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள அரசு மதுபானக் கடையை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1765, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, வடக்கந்தல் பேரூராட்சி, பேருந்து நிலையத்தில் உள்ள மதுக்கடையை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1873, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களில் மதுபானக் கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.107,25,54,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 671 முதல் 787 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்ந்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1957 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 60 ஆண்டுக் காலம் இந்த அவையில் உறுப்பினராக இருந்து, மக்கள் பணியாற்றி, வைர விழா காணும் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எரிசக்தித் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், வெகுவிரைவில் தமிழகத்தை வழிநடத்த இருக்கின்ற எங்களுடைய செயல் தலைவர், அண்ணன் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—40

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் துறை தொடர்பான விவரங்களையெல்லாம் தங்களிடத்தில் வைத்திருப்பீர்கள். நாங்கள் என்ன குற்றச்சாட்டுகள் சொன்னாலும், கோரிக்கைகள் வைத்தாலும், கேள்விகளைக் கேட்டாலும் உடனுக்குடன் நீங்கள் பதிலைச் சொல்லக்கூடியவர்கள். அது சரியான பதிலாக இருந்தாலும் சரி, தவறான பதிலாக இருந்தாலும் சரி, பதிலை உடனடியாகச் சொல்லக்கூடியவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சரியான பதிலைத்தான் சொல்வார்கள், தவறான பதில் அல்ல.

**திரு. எஸ். ஆஸ்டின்:** என்னுடைய பேச்சை முடித்தபின், அந்த பதிலை நீங்கள் சொல்வீர்கள் என்று சொன்னால் அந்த விவாதம் ஆரோக்கியமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அப்படிச்

சொல்வீர்கள் என்று, உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு பாராட்டையும், நன்றியையும் அவர்களுக்குத் தெரிவித்து இந்த அரசு செயல்படக்கூடிய அரசு என்று சொல்லி ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார்கள். எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது செயல்படாத அரசு என்று தெரிவித்தார்கள். கல்வித் துறையின் மானியக் கோரிக்கையில் எங்களுடைய முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் ஒரு கருத்தை இங்கே கூறியிருந்தார்கள். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ICT திட்டத்தின்கீழ் ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்காக 2011–ல் பேரவை விதி 110–ன்கீழ் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள், அது என்ன ஆனது என்று கேட்டார்கள். இன்றைக்கு 6 ஆண்டுக் காலம் ஆகியிருக்கின்றது. இப்போதுதான் மீண்டும் ஓர் அறிவிப்பை நீங்கள் வெளியிட்டிருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்கள் பேசி முடியுங்கள், அவர் பதில் சொல்வார்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகின்றேன். சம்சாரம் இல்லாமல்கூட ஒரு மனிதன் வாழ்ந்துவிடலாம். (சிரிப்பு) ஆனால் மின்சாரம் இல்லாமல் ஒரு மனிதனால் ஒரு நாள்கூட வாழ இயலாது. அந்த அளவிற்கு மனிதனுடைய அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக மின்சாரம் உள்ளது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். எனவே, தட்டுப்பாடின்றி, மக்களுடைய தேவைக்கேற்ப, தொலைநோக்குப் பார்வையோடு மின்சாரத்தை வழங்க வேண்டிய பொறுப்பு ஓர் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. தற்போது மின் வாரியத்தில் கிட்டத்தட்ட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட களப் பணியாளர்கள் பணியிடம் காலியாக இருந்துகொண்டிருக்கின்றது. தமிழகம் முழுவதும் Wireman, LI என்று சொல்லப்படுகின்ற களப் பணியாளர்கள் கிட்டத்தட்ட 53,465 பேர் பணியில் இருக்க வேண்டும். ஆனால், தற்போது 33,081 பேர்தான் பணியில் இருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில்

1,223 பணியாளர்கள் களப் பணியில் இருக்க வேண்டும். இன்றைக்கு 763 பேர்தான் பணியில் உள்ளார்கள், 460 இடங்கள் காலியாக இருக்கின்றன. இவ்வளவு களப் பணியாளர் இடங்களை மின் வாரியம் காலியாக வைத்திருக்கும் என்று சொன்னால், எப்படி உடனுக்குடன் தட்டுப்பாடு இல்லாமல், மின்சாரத்தை வழங்க முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்து உடனடியாக இந்தக் காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தில் 2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் 5–வது முறையாக ஆட்சியில் அமர்ந்ததும், குறு, சிறு, பெரிய விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பு விவசாயிகளின் அனைத்துக் கடனையும் தள்ளுபடி செய்தார்கள். 1989 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள்தான் குறு, சிறு, பெரிய விவசாயிகள் என்று பிரித்துப் பார்க்காமல், அனைத்து விவசாய பம்ப் செட்டுகளுக்கும் இலவச மின்சாரத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக வழங்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று 31–3–2017–ல் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட அந்த இலவச மின்சாரத் திட்டத்தின் மூலமாக 20 இலட்சத்து 60 ஆயிரத்து 442 . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலைச் சொன்னதால், அதற்கு பதில் சொல்ல வேண்டியுள்ளது. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் முதன்முதலாக இலவச மின்சாரத்தை சிறு விவசாயிகளுக்குக் கொடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் பேசி முடித்த பின்னால், நான் பேசலாம் என்று இருந்தேன். களப் பணியாளர்கள் குறைவாக இருக்கின்றார்கள் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். அது நேற்று அல்லது அதற்கு முந்தைய தினமோ வந்த பிரச்சினை இல்லை. இது காலங்காலமாக பணியாளர்கள் ஓய்வுபெறுகின்றபோது வருகின்ற பிரச்சினை. இப்போது புதியதாகப் பணிக்கு ஆட்களை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். கூடியவிரைவில் அந்தக் காலிப்

பணியிடங்களை நிரப்பப் போகிறோம் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் விவசாய சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி அவர்கள் ஒரு பைசா குறைக்கச் சொல்லி போராட்டம் நடத்தியதற்கு துப்பாக்கிச் சூடு நடத்திய அரசு அன்றைய அ.இ.அ.தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகுதான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துப்பாக்கிச் சூடு நடந்தபோது எந்தக் கட்சியில் இருந்தார் என்பதை மட்டும் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்சியில் இருந்தாலும், கட்சியின் தலைமைக்கு நாங்கள் விசுவாசமாக இருக்கக்கூடியவர்கள். கட்சியிலே இருந்துகொண்டு, தலைமைக்குத் துரோகம் செய்வது நாங்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்டதால் நான் பதில் சொன்னேன். எனவே, நீங்கள் குறிப்பிட்டதை நான் மறுக்கவில்லை. எம்.ஜி.ஆர். அவர்கள் குறு, சிறு விவசாயிகளுக்கு மட்டும்தான் கொடுத்தார். நான் குறிப்பிட்டது, குறு, சிறு, பெரிய விவசாயிகள் என்று பிரித்துப்

பார்க்காமல் அனைத்து விவசாயிகளுக்கும் இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச மின்சாரத்தை வழங்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்று அந்தத் திட்டத்தின் மூலமாக 20,60,442 விவசாயிகள் இலவச மின்சாரத்தைப் பெற்று வருகின்றார்கள். தமிழக முதல்வர் அவர்கள் டெல்டா விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்கள். ஏற்கெனவே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், இதுபோன்ற அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, பிறகு நாளொன்றுக்கு 3 மணி நேரம், 4 மணி நேரம், 5 மணி நேரம், 6 மணி நேரம் என்ற அளவில்தான் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டது. அதுபோல், இந்த அறிவிப்பும் வெத்து அறிவிப்பாக இருந்துவிடக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2006 முதல் 2011 வரை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தரக் கூடாது. டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் தருகிறோம் என்று எப்போதும் சொல்லவில்லை. 12 மணி நேரம் மின்சாரம் தருகிறோம். ஆனால் இப்போது, 12 மணி நேரத்திற்கு பதிலாக 18 மணி நேரம் வரைகூட மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 முதல் 2011 வரையிலான ஐந்தாண்டுக்கால தி.மு.க. ஆட்சியில், 2,09,910 விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. ஆனால், 2011 முதல் 2016 வரையிலான ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் கிட்டத்தட்ட 84,987 விவசாயிகளுக்கு மட்டும்தான் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. தற்போது மின் இணைப்புக் கேட்டு, 4,30,767 விவசாயிகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக காத்திருக்கிறார்கள். குறிப்பாக தென் மாவட்ட

விவசாயிகள், இலவச மின்சாரம் கேட்டு விண்ணப்பம் செய்து 15 ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்கிறார்கள். தமிழகத்தில் இப்போது கடும் வறட்சி நிலவுகிறது. நீர் நிலைகள் எல்லாம் வற்றிப்போய்விட்டன. விவசாயிகள் நிலத்தடி நீரை மட்டுமே நம்பியுள்ளார்கள். அவர்களுக்குக் கட்டாயமாக மின் இணைப்பு வழங்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கின்றது. 'தமிழகம் மின்மிகை மாநிலமாக மாறிவிட்டது, பிற மாநிலங்களுக்கும் நாங்கள் மின்சாரத்தை விற்பனை செய்கின்ற அளவிற்கு நாங்கள் வந்துவிட்டோம்', என்றெல்லாம் நீங்கள் அறிக்கை விடுகின்றீர்கள், சொல்லுகின்றீர்கள். எனவே, மின் இணைப்புக் கேட்டு, 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்கின்ற விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கிவிட்டு அதற்குப் பிறகு இருக்கக்கூடிய மின்சாரத்தை நீங்கள் வெளி மாநிலத்திற்கு வழங்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் முதலில் குறிப்பிட்டதுபோல, மின்சாரத் துறை என்பது மக்களுடைய வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கக்கூடிய ஒரு துறை. தொலைநோக்குப் பார்வையோடு கையாண்டால்தான், மக்களுக்குத் தடையில்லா மின்சாரத்தை வழங்க முடியும். மின்சாரம் இல்லையென்றால், விவசாயம் இல்லை, தொழில் உற்பத்தி இல்லை, மாநிலமே முடங்கிப் போய்விடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்பது, ஏதோ இட்லியை அவிப்பதுபோல் அல்ல. அடுப்பைப் பற்ற வைத்தோம். சட்டியை தூக்கி அதில் வைத்தோம். இட்லி மாவை ஊற்றினோம். ஒரு பத்து நிமிடங்களில் இட்லியை அவித்து எடுத்துவிட்டோம் என்ற கதையிலே மின்சாரத்தை உற்பத்தி செய்துவிட முடியாது. ஒரு மின் திட்டத்தைத் தொடங்கினோமானால், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சமையல்கூட நன்கு தெரிந்துள்ளது என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்தையும் தெரிந்தவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். ஒரு மின் திட்டத்தைத் தொடங்கினோம் என்றால், அது தொடங்கப்பட்ட 3 அல்லது 4 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதில் உற்பத்தியை நாம் பெற முடியும். எனவே, தொலைநோக்குப் பார்வையோடு மின்

திட்டங்களை உருவாக்கினால்தான், தடையில்லா மின்சாரத்தை மக்களுக்கு நாம் வழங்க முடியும். ஆண்டுதோறும் குடியிருப்புகள் அதிகமாகும், அடுக்கு மாடிகள் அதிகமாகும், சிறு மற்றும் பெரிய தொழிற்சாலைகள் உருவாகும், விவசாயத்திற்கு மின் தேவை அதிகமாகும். இதையெல்லாம் கணக்கிட்டு, 10 ஆண்டுகளுக்குப் பிறகு எவ்வளவு மின்சாரம் தேவை என்பதை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் ஓர் அரசு பொறுப்பேற்றவுடன், மின் திட்டங்களைத் தொடங்கினால்தான் மின் வெட்டு இல்லாத மாநிலமாக அந்த மாநிலத்தை மாற்ற முடியும். இந்தப் பணியை அ.தி.மு.க. அரசு 2001–2006 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் செய்யத் தவறியதால்தான், 2008 ஆம் ஆண்டில் மின் வெட்டை சந்திக்கக்கூடிய நிலை ஏற்பட்டது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன், நான் முழு உரையையும் முடித்துவிடுகிறேன். பிறகு நீங்கள் பதில் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நானும் அவ்வாறுதான் எண்ணியிருந்தேன். நீங்கள் குற்றச்சாட்டாகச் சொல்லிக்கொண்டே போனால் நான் என்ன செய்வது?

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாயின்டை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசியதற்குப் பின்னால்தான் பதில் சொல்லலாம் என்றிருந்தேன். தொடர்ந்து குற்றச்சாட்டாகச் சொல்லிக்கொண்டே போகும்போது அதற்குண்டான பதிலை நாங்கள் சொல்ல வேண்டும். நாங்கள் உங்களுக்கு அதற்கான நேரத்தைக் கொடுக்கின்றோம். ஏற்கெனவே, நீங்கள் உங்களுடைய

ஆட்சிக் காலத்தில் விவசாயத்திற்கு 2 இலட்சத்து 9 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுத்ததாகச் சொன்னீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 84,000 மின் இணைப்புகள் கொடுத்ததாகச் சொன்னீர்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில் 2 இலட்சத்து 9 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுத்தீர்களேயொழிய, மின்சாரம் இருந்தால்தானே அங்கு மின்சாரம் வரும், மோட்டார் இயங்கும், விவசாயம் செய்திருப்பார்கள்? மாண்புமிகு அம்மா அவர்கள் முழுமையான மின்சாரத்தைக் கொடுத்தார்கள். 84,000 மின் இணைப்புகள் கொடுத்து, அவை முழுமையாக பயன்பாட்டில் இருக்கின்றன.

பிற்பகல் 12–50

மேலும், 2001 முதல் 2006 வரை ஏதோ புதிய திட்டங்களைப் போடவில்லை, அதனால் 2008 ஆம் ஆண்டு மின்வெட்டு வந்தது என்ற தவறான தகவலை சொல்கின்றீர்கள். 2001–2006–ல் மொத்த நிறுவு திறன் 10,011 மெகா வாட். ஆனால், அன்றையதினம் 8,000 மெகா வாட் மட்டும்தான் தேவையாக இருந்தது. நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர் 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கைகளிலே தமிழகத்தில் அதிகமான மின்சாரம் இருக்கின்றது; அதனால், மின் பற்றாக்குறை இல்லையென்று சொல்லியிருக்கின்றீர்கள். திடீரென்று 2008 ஆம் ஆண்டு உச்சபட்ச நேரத்தில் கிட்டத்தட்ட 90 சதவிகிதமும், மற்ற நேரங்களில் 40 சதவிகிதமும் மின்வெட்டைக் கொண்டு வந்தீர்கள் என்று சொன்னால், இது யாருடைய ஆட்சியின் குறை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, புதிய திட்டங்களைப் பற்றி இப்பொழுது நீங்கள் சொன்னீர்கள், எதிர்வரும் காலங்களில் வளர்ச்சிகள் இருக்கின்றன. அந்த வளர்ச்சிக்குப் புதிய மின் திட்டங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நீங்கள் ஏற்படுத்திய மின்வெட்டை 3 ஆண்டுக் காலத்திற்குள் சரி செய்து 5–6–2015–லிருந்து தமிழகத்தில் மின்வெட்டே இல்லையென்ற நிலைமையை உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைச் சரியாகப் படித்திருந்தால் தெரியும், 20,500 மெகா வாட் அளவிற்கான புதிய மின் திட்டப் பணிகளில் பாதி தொடங்கப்பட்டிருக்கின்றன; எஞ்சிய பணிகள் டெண்டர் விடும் நிலையிலிருக்கின்றன.

எனவே, இனிமேல் தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிவிட்டுச் சென்ற மின் கட்டமைப்பால் எந்தக் காலத்திலும் மின்வெட்டு இருக்காது என்பதை மட்டும் இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலேகூட குறிப்பிடப்பட்டிருக்கின்றது; மத்திய அரசினுடைய சமன்பாட்டு அறிக்கையிலேகூட உச்சபட்ச நேரத்தில் கிட்டத்ததட்ட 8,863 மில்லியன் யூனிட் மின்சாரம் தேவைக்கு அதிகமாக தமிழ்நாடு பெற்று மின்மிகை மாநிலமாக இருக்கிறதென்ற கருத்தும் அதில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** நான் குறிப்பிட்டதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கின்றார்கள். 2001 முதல் 2006 வரை மின் தேவை குறைவாக இருந்தது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். எனவேதான், நீங்கள் புதிய திட்டங்களைத் தொடங்கவில்லை. தொலைநோக்குப் பார்வையோடு 2011 வரை எவ்வளவு மின் தேவை என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்து தொடங்கியிருக்க வேண்டும். நிறுவு திறன் 10,011 மெகாவாட் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொன்னேன், பழைய கொள்கை விளக்கக் குறிப்பை எடுத்துப் பார்த்திருந்தால் தெரியும். 2001–லிருந்து 2006 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் 2,200 மெகா வாட் மின் நிறுவு திறனை உருவாக்கினார்கள். ஆனால், 2006–2011 வரை இருந்த உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வெறும் 206 மெகா வாட் மட்டும்தான் நிறுவு திறன் உருவாக்கப்பட்டது. யார் மின் உற்பத்தியைச் செய்யவில்லை என்பதை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 முதல் 2006 வரை மின் உற்பத்திக்காக அன்றைய அ.தி.மு.க. அரசு செலவிட்டது வெறும் 700 கோடி ரூபாய்தான். ஆனால், 2006–லிருந்து 2011 வரை திராவிட முன்னேற்றக் கழக அரசு மின் உற்பத்திக்காக செலவிட்ட தொகை 11,700 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின் உற்பத்திக்கு செலவிட்ட 700 கோடி ரூபாய் பெரியதா அல்லது 11,700 கோடி ரூபாய் பெரியதா என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, 2001–லே அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களைப் போட்டிருந்தால் 2006–லேயே மின் உற்பத்தியை நாம் பெற்றிருக்க முடியும். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. ஆகையால், 2008–2011 காலகட்டத்தில் நாம் மின்மிகை மாநிலமாக மாறவில்லை; மின்வெட்டு இல்லாமல் இல்லை. நீங்கள் ஆண்ட 3 ஆண்டுக் கால ஆட்சியிலேயும் 2014 வரை மிகப் பெரிய அளவில் மின்வெட்டு இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை. 2015–ல் என்றுதான் நான் சொன்னேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–ல் முதலமைச்சராக வருகின்றபொழுது, நீங்கள் கடுமையான மின்வெட்டை 90 சதவிகிதம், 40 சதவிகிதம் அளவிற்கு ஏற்படுத்திவிட்டு சென்றுவிட்டீர்கள். நீங்கள் திட்டத்தைப் போட்டோம் என்று சொல்கின்றீர்கள். ஆனால், எந்தத் திட்டத்தையும் செய்து முடிக்கவில்லை. 3 ஆண்டுக் காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று நீங்களே சொன்னீர்கள். ஐந்தாண்டுக் காலத்தில் மேட்டூர் மின் திட்டத்தை முடித்தீர்களா? வல்லூர் மின் திட்டத்தை முடித்தீர்களா? எந்தத் திட்டத்தையும் நீங்கள் முடிக்கவில்லை. நீங்கள் திட்டப் பணிகளை 40 சதவிகிதம்தான் முடித்திருந்தீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர்தான், 60 சதவிகித திட்டப் பணிகளுக்குண்டான நிதியை ஒதுக்கினார்கள். இப்பொழுது மின்மிகை மாநிலமாகத் தமிழகம் இருக்கிறதென்று

சொன்னால், அதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சிகள் மட்டும்தான். அதுமட்டுமல்ல, நீங்கள் மத்தியிலே காங்கிரஸ் அரசோடு கிட்டத்தட்ட 10 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தீர்கள். வட மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைக் கொண்டு வருகின்ற அந்தப் பாதையை ஏன் ஏற்படுத்தவில்லை? மாண்புமிகு அம்மா அவர்கள் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி, அந்தப் பாதையைக் கொண்டு வந்த காரணத்தினால்தான் இப்பொழுது வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைக் கொண்டு வருகின்ற நிலைமையை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். 10 ஆண்டுக் காலம் மத்திய அரசில் இருந்த நீங்கள் என்ன செய்தீர்கள்? ஏன் அதைக் கொண்டு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ், ஆஸ்டின் அவர்கள்.

பிற்பகல் 12—55

**திரு. எஸ். ஆஸ்டின்:** மின்சார உற்பத்தி என்பது தொடர் செயல்பாட்டின் மூலமாகத்தான் கொண்டுவர முடியும். நாங்கள் தொடங்கியிருந்தால் நீங்கள் முடிப்பீர்கள். நீங்கள் தொடங்கியிருந்தால் நாங்கள் முடிப்போம். இட்லியை அவிப்பதுபோல அன்றைக்கு 2015—ல் ஒரே ஆண்டிலே நீங்கள் மின்சார உற்பத்தியைக் கொண்டு வந்து தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்ற முடியவில்லை. அது ஏற்பட்ட வரலாறு என்னவென்று சொன்னால், 2006—லே தி.மு.க. ஆட்சி ஏற்பட்டவுடன், தொழில் துறையிலே தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையிலே தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே 2006—லே 27 புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. அதில், 24 தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, 2007—2008 ஆம் ஆண்டு 12 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டன. அந்த தொழிற்சாலைகளினுடைய பெயர்களையெல்லாம் குறிப்பிடலாம் என்றால் அதற்குரிய கால அவகாசம் இல்லை. எனவே, அதன்காரணமாக, 2007—2008 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 1000 மெகாவாட் மின்சாரம் அதிகமாகத் தேவைப்பட்டது. அதைப்போல, சாதாரணமாக ஆண்டிற்கு 1 முதல் 1½ இலட்சம் வீடுகளுக்குத்தான் மின் இணைப்பு கொடுக்கப்படும். 2006—2007 ஆம் ஆண்டில், ஆண்டிற்கு 5 இலட்சம் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்ட காரணத்தினால்தான் அன்றைக்கு

மின்சார பற்றாக்குறை ஏற்பட்டது. 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை, நீங்கள் சரியாகத் திட்டங்களைத் தொடங்கவில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். 2001 ஆம் ஆண்டு நீங்கள் திட்டங்களைத் தொடங்கியிருந்தால் 2005 ஆம் ஆண்டே அவை உற்பத்திக்கு வந்திருக்கும், இந்தப் பற்றாக்குறையையும் சரிசெய்திருக்கலாம் என்பதற்காகத்தான் சொன்னேன். 2008 ஆம் ஆண்டு 7,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. ஆனால், அன்றைய தேவை 9,200 மெகாவாட் அளவுக்கு இருந்தது. 1,700 மெகாவாட் பற்றாக்குறையாக இருந்த காரணத்தால்தான் அன்றைக்கு 2 மணி நேரம் மின்வெட்டை நாங்கள் அறிவித்தோம். 2 மணி நேரம்தான் அறிவித்தோம். ஆனால், 2006–லே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நான் விளக்கமாகச் சொல்லவில்லை. சுருக்கமாகத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாகத்தான் சொல்வார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கு நான் சுருக்கமாகத்தான் பதில் சொல்கிறேன். நீண்ட பதிலைக் கொடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தொழிற்சாலைகள் வந்தன, அதன் காரணமாகத்தான் மின்சாரத் தேவை அதிகமாக இருந்தது என்று நீங்களே சொல்கிறீர்கள். எத்தனை தொழிற்சாலைகள் வந்தன? எவ்வளவு மெகா வாட் மின்சாரம் தேவைப்பட்டது? மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 10,011 மெகா வாட் நிறுவுத் திறனுடன் தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக இருந்தது என்று நான் சொன்னேன். 2010 ஆம் ஆண்டுகூட உங்களுடைய உச்சபட்சத் தேவை எவ்வளவு இருந்தது என்று சொன்னால் 9,000 மெகா வாட்தான். மீதமிருந்த 1,000 மெகா வாட் எங்கே சென்றது? 2 மணி நேரம்தான் மின்வெட்டு இருந்ததாகச் சொல்கிறீர்கள்.

உங்களுடைய நிருவாகத் திறமையின்மைக் காரணமாக, தமிழகத்தில் 2 மணி நேரம்தான் மின்சாரமே வந்தது. உங்களுடைய ஆட்சியில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்தவரே எங்களுடைய ஆட்சி மின்சாரத்தினால்தான் போகப் போகிறது என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். நாங்கள் என்ன செய்வது? நீங்கள் அதைச் சரியாகக் கவனிக்காத காரணத்தினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** 2006–ல் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உங்களைப்போல இல்லாமல் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2016 ஆம் ஆண்டிற்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கணக்கிட்டு, 7 மின் திட்டங்களை அன்றைக்கு புதிதாக உருவாக்கினார்கள். 13–8–2007–ல் வல்லூர் 3 அலகுகள், 1,500 மெகா வாட்; 18–2–2008–ல் வடசென்னை 2 அலகுகள், 1,200 மெகா வாட்; 25–6–2008–ல் மேட்டூரில் 600 மெகா வாட்; 28–1–2009–ல் தூத்துக்குடி 2 அலகுகள் 1,000 மெகா வாட்; இப்படி 7 மின் திட்டங்களை உருவாக்கி அதன்மூலமாகக் கிடைத்த மின்சாரத்தை வைத்துத்தான் நீங்கள் 2015–ல் மின்மிகை மாநிலம் என்று சொல்கிறீர்கள். அந்த உற்பத்தி வரவில்லை என்று சொன்னால் இன்றைக்கும் நாம் மின்வெட்டில்தான் இருந்திருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் குறிப்பிட்டதுபோல, 2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரையில், 2 மணி நேரம், 3 மணி நேரம், அதிகபட்சமாகத்தான் 4 மணி நேரம் மின்வெட்டு இருந்தது. ஆனால், 2011 முதல் 2014 வரையுள்ள 3 ஆண்டுகளில் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் மின்வெட்டு இருந்ததா? இல்லையா? என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுவும் அறிவிக்கப்பட்ட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்த மின்வெட்டை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்ததாக மாற்றிச் சொல்கிறீர்கள். மாண்புமிகு

அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 4 மணி நேரம்தான் மின்வெட்டு இருந்தது. அதுவும், நீங்கள் விட்டுச்சென்ற பணி. புதிய திட்டங்களை 5 ஆண்டுக் காலத்தில் முடித்திருந்தால் மின்சாரத் தட்டுப்பாடே இருந்திருக்காது. அதுமட்டுமல்லாமல், நான் இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். நீங்கள், மத்திய அரசோடு இருந்தீர்கள். கூடங்குளம் திட்டத்திற்கு பேச்சுவார்த்தை நடத்தி மின்சார உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தால் இந்த மின்வெட்டு ஏற்பட்டிருக்குமா? ஏதோ, நாங்கள் துவக்கினோம், துவக்கினோம் என்று சொல்கிறீர்களே, பேச்சுவார்த்தையை முடித்திருந்தாலே கிட்டத்தட்ட 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகியிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இதுபோன்ற சூழ்நிலை உருவாகியிருக்காது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எந்த முயற்சியும் எடுக்காமல், ஏதோ நாங்கள் திட்டத்தை அறிவித்துவிட்டோம், நீங்கள் ஆட்சிக்கு வந்து நிறைவேற்றிவிட்டீர்கள் என்று சொன்னீர்கள். காலம் காலமாக நாம் ஒரு திட்டம் போடுகிறோம் என்று சொன்னால் அதன் பிறகு வரும் ஆட்சி அதை நிறைவேற்றும். ஆனால், உங்கள் ஆட்சிக் காலத்தில் வந்த அந்தத் திட்டங்களை மிக வேகமாக நிறைவேற்றி மின்சாரத்தைக் கொண்டு வந்த ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

**திரு. எஸ். ஆஸ்டின்:** 2011 முதல் 2014 வரை நடைபெற்ற ஆட்சிக் காலத்தில்தான், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் குறு, சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டு 6,000 தொழிற்கூடங்கள் மூடப்பட்டன. இது உங்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன். இதை நாம் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம். கிட்டத்தட்ட 60,000 தொழிலாளர்கள் அன்றைக்கு வேலை இழந்தார்கள். எதனால், 14 மணி நேரம், 15 மணி நேரம் மின்வெட்டு இருந்ததால் 6000 தொழிற்சாலைகள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர் தவறாகவே பேசிக்கொண்டிருக்கிறார்.

உங்களுடைய ஆட்சிக் காலத்தில் திருப்பூரில் மின்சாரம் வேண்டும் என்று ஒரு இலட்சம் பேர் திரண்டு போராட்டம் நடத்தினார்கள். அன்றையதினம், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்ததையும், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்ததையும் ஒப்பிட்டுச் சொல்கிறேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மின்சாரம் இல்லாத காரணத்தினால் திருப்பூரின் ஏற்றுமதித் தொகை ரூ.11,000 கோடி. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 2013 ஆம் ஆண்டு ரூ.17,000 கோடி ஆகி, கடந்த ஆண்டு ரூ.21,000 கோடி ஆகியிருக்கின்றது என்று சொன்னால், எங்கு வேலைவாய்ப்பு இருந்தது, யாருடைய ஆட்சியில் சுகமாயிருந்தது, யாருடைய ஆட்சியில் மின்சாரம் இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொண்டு வந்த திட்டங்களிலிருந்து நீங்கள் மின்சாரம் பெற்றதினால்தான் இந்த export கூடியதேதவிர, மற்றபடி உங்களுடைய திறமையால் கூடியது அல்ல. ஏனென்றால் அந்த நேரத்தில் நான் குறிப்பிட்டதைப்போல 60,000 தொழிலாளர்கள் வேலையிழந்தது மட்டுமல்ல, 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ** செய்துகொண்டார்கள். இவற்றையெல்லாம் பத்திரிகைகளில் 2011-லிருந்து 2014 வரை நாம் பார்த்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தையினை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தவறான தகவல். உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அங்குள்ள தொழிலாளர்கள் இடம் பெயர்ந்தார்கள். அந்த இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மீண்டும் திருப்பூர் வந்த காரணத்தினாலேதான் ரூ.10,000 கோடிக்கு ஏற்றுமதி ஆகியிருக்கின்றது என்று நான்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்லியிருக்கின்றேன். நீங்கள் திரும்பத் திரும்ப ஒரு தவறான கருத்தைச் சொல்வதை ** நான் சொல்வது உட்பட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், அது தேவை இல்லாதது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நன்றாகப் பேசி, சீக்கிரம் முடியுங்கள். எதற்கு தேவையில்லாதவற்றைப் பேசுகிறீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, 2008–ல் மின்வெட்டு ஏற்படுவதற்கு, 2001 முதல் 2006 வரை நடைபெற்ற உங்கள் ஆட்சியில் எந்தவித மின் திட்டங்களும் தொலைநோக்குப் பார்வையில் தொடங்காததுதான் காரணம் என்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், 2006–லிருந்து 2009 வரை தொலைநோக்குப் பார்வையோடு பல மின் திட்டங்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கிய காரணத்தினால்தான் இன்றைக்குத் தமிழகம் மின்வெட்டு இல்லாத மாநிலமாக மாறியிருக்கின்றது. எனவே, மின்வெட்டு வருவதற்கு நீங்கள் காரணம். மின்வெட்டு போவதற்கு நாங்கள் காரணம் என்பதை நான் இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், நீங்கள் இப்போது என்ன சொல்கிறீர்கள்? முழு பூசணிக்காயை சோற்றில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு நன்றாகத் தெரியும், 2006 வரை ஒரு நிமிடம்கூட மின்வெட்டு இல்லாத மாநிலமாகத் தமிழகம் இருந்தது. 2008–ல் ஆரம்பித்து உங்களுடைய ஆட்சியில், மக்கள் கோயம்புத்தூரில் போராடினார்கள், திருப்பூரில் போராடினார்கள். இவையெல்லாம் கடந்த காலத்தினுடைய வரலாறு. ஆனால், நீங்கள் அதையெல்லாம் மாற்றி, திசைத் திருப்பப் பார்க்கிறீர்கள். நாங்கள் ஒன்றை மட்டும் சொல்கிறோம். நாங்கள் அப்படி தவறு

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்திருந்தோம் என்று சொன்னால் 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னந்தனியாக நின்று மீண்டும் எப்படி வெற்றி பெற்றிருப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் செய்த தவறை நாங்கள் செய்ததாக மக்கள் புரிந்துகொண்ட காரணத்தினால்தான் அன்றைக்கு மக்கள் எங்களுக்கு ஓட்டு போடவில்லை. 2001 முதல் 2006 வரை நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மின் தேவைக்கும் உற்பத்திக்கும் சரியாக இருந்தது, பற்றாக்குறையாக இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதைத்தான் நான் மீண்டும் சொல்கிறேன், மின் பற்றாக்குறை இல்லை. அது இல்லாததினால்தான், நமக்குதான் மின்சாரம் இருக்கின்றதே, ஏன் திட்டம் போடவேண்டும் என்று சொல்லி, நீங்கள் slackness ஆக விட்டுவிட்டீர்கள். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் தொலைநோக்குப் பார்வையோடு, 10 ஆண்டுகளுக்கு, 15 ஆண்டுகளுக்கு எவ்வளவு தேவை என்பதைக் கணக்கிட்டு திட்டங்களைத் தொடங்கக்கூடிய அரசுதான் நல்ல அரசு. அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. ஆட்சியிலே சூரிய ஒளி மின்சாரத் திட்டத்தின் மூலமாக ஆண்டுக்கு 1000 மெகா வாட் உற்பத்தியைச் செய்வோம் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு எத்தனை மெகாவாட்டினை உற்பத்தி செய்வதற்கு, எத்தனைத் திட்டங்களைத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையில் அறிய விரும்புகிறேன். ஆனால், இன்றைக்கு சூரிய ஒளி மின்சாரத்தினை வாங்குவதற்கு ஓர் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். யாரோடு போட்டிருக்கிறார்கள்? அதானி குழுமத்தோடு. கிட்டத்தட்ட 648 மெகா வாட் சூரிய ஒளி மின்சாரம் வாங்குவதற்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு ஆண்டுகளல்ல 25 ஆண்டுகள் வாங்குவதற்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். என்ன விலையில் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், 313 மெகா வாட் யூனிட் ஒன்றுக்கு 7 ரூபாய் 1 காசு; 335 மெகா வாட் யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 10 காசு. இதே அதானி குழுமம் அதே காலக்கட்டத்தில்

மகாராஷ்டிரா மாநிலத்தோடு சூரிய ஒளி மின்சாரம் ஒரு யூனிட் 5 ரூபாய்க்கும் கீழே தயாரித்துக் கொடுக்கக்கூடிய ஒப்பந்தத்தினைப் போட்டிருக்கிறது. ஒரே காலக்கட்டத்தில் போடப்பட்ட ஒப்பந்தங்களில் ஏன் இந்த விலை வேறுபாடு ஏற்பட்டிருக்கின்றது? அதானி குழுமம் தமிழக அரசை ஏமாற்றியிருக்கின்றதா அல்லது தமிழக அரசு மக்களை ஏமாற்றியிருக்கின்றதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–05

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சூரிய ஒளி மின்சாரத்தைப் பற்றி கேட்டார்கள். தற்போது 1202 மெகா வாட் அளவிற்கு உற்பத்தி வந்திருக்கின்றது. அதானி குழுமத்தினைப் பற்றி கேட்டீர்கள். நீங்கள் கடந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தினால் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கங்களையெல்லாம் மீண்டும் உங்களுக்குச் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எப்பொழுதுமே மின்சார வாரியம் எந்த விலையையும் நிர்ணயிப்பது கிடையாது. அதற்கென்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இருக்கின்றது. அந்த ஒழுங்குமுறை ஆணையம் என்ன விலை நிர்ணயிக்கின்றதோ அந்த விலைக்குத்தான் டெண்டர் போடுவார்கள். அந்த அடிப்படையிலேதான் போடப்பட்டுள்ளது. அதிலேகூட, அன்றையதினம் 7 ரூபாய் 1 பைசா என்று கிட்டதட்ட ஆயிரம் மெகா வாட் கேட்டிருந்தார்கள். ஆனால் குறித்த காலத்தில் முடிக்கவில்லை. அதானி மட்டுமல்ல மற்ற எல்லாம் சேர்ந்தே 927 மெகா வாட் மட்டும்தான் யூனிட் ஒன்றுக்கு 7 ரூபாய் 1 பைசா; மற்றவையெல்லாம் 5 ரூபாய் 10 பைசா என்ற அளவில்தான் வந்திருக்கிறது. இப்பொழுதுகூட புதியதாக tender போட்டிருக்கிறோம். 4 ரூபாய் 46 பைசாவிலிருந்து 4 ரூபாயாக மாற்றுவதற்கு காலத்திற்கேற்ப revised bidding போட்டிருக்கிறோம். அப்பொழுதெல்லாம் நிறுவனத்தினுடைய முதலீடு அதிகமாக இருந்தது. இப்பொழுது technology வந்த காரணத்தினால், முதலீடு குறைகின்ற காரணத்தினால் விலையும் குறைந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது 4 ரூபாய்க்கும்கீழ் வர இருக்கின்றது. அதற்கு

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுவாரா என்பதை இந்த நேரத்தில் கேட்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதானி குழுமத்தோடு யூனிட் ஒன்றுக்கு 7 ரூபாய் 1 காசிற்கு 25 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இந்த 25 ஆண்டுகளுக்கும் இதே விலையில்தான் நீங்கள் வாங்குவீர்களா அல்லது market-ல் விலை குறையும்பொழுது குறைத்து வாங்குவீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தம் என்று ஒன்று போட்டுவிட்டால் அந்த ஒப்பந்தத்தை மீற முடியாது. இருந்தாலும் நாங்கள் கூடியவிரைவில் பேசி அதை குறைப்பதற்குண்டான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஒப்பந்தம் போடுவதிலே அதானி குழுமம் தமிழக அரசை ஏமாற்றியிருக்கின்றதா? தமிழக அரசு மக்களை ஏமாற்றியிருக்கின்றதா? ஏனென்று சொன்னால், சூரிய ஒளி மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே ஆண்டுக்காண்டு விலை குறைந்துகொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். மின்சார வாரியத்திற்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லை. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்ன விலை நிர்ணயிக்கின்றதோ (குறுக்கீடுகள்) இப்பொழுதுகூட என்ன விலை நிர்ணயித்திருக்கின்றதோ அந்த விலையில்தான் தமிழ்நாடு மின்சார வாரியம் revised bidding போட்டிருக்கிறது. அதனால் யாரும்

யாரையும் ஏமாற்றவில்லை. மக்கள் ஏமாந்து போகிறார்கள் என்று நினைத்தீர்களேயானால் ஏமாந்து போவது நீங்கள் மட்டும்தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதானி குழுமத்திலிருந்து வாங்கினாலும் இதற்கெல்லாம் open tender போட்டிருக்க வேண்டும். கமுதியில் அமைக்கப்பட்டுள்ளது உலகத்திலேயே மிகப் பெரிய plant. இந்த plant–லிருந்து மின்சாரம் வாங்க வேண்டுமென்றால் open tender போட்டிருந்தால் 4 ரூபாய்க்குக்கீழ் கிடைத்திருக்கும். வெளிச்சந்தையில் சூரிய ஒளி மின்சாரம் ஆண்டுக்காண்டு விலை குறைந்துகொண்டே வருகிறது. மற்ற மாநிலங்கள் எல்லாம் சூரிய ஒளி மின்சாரத்தை 3 ரூபாய்க்குக்கீழ் வாங்கிக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு மகாராஷ்டிராவில் வாங்கக் கூடிய விலை 2 ரூபாய் 97 காசுகள். அனைத்து புள்ளிவிவரங்களையும் நான் வைத்துள்ளேன். இப்படி வாங்குவதால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இன்றைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் காரணம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது சரிதான். ஆனால், அதில் இருக்கின்ற உள் கருத்து தெரியாமல் இம்மன்றத்தில் தவறான தகவலைக் கூறுகிறீர்கள். அந்த விலைக்கு மகாராஷ்டிரா வாங்கியது உண்மை. மின்சாரம் நாம் எடுக்கவில்லையென்று சொன்னால், fixed cost என்று சொல்லக்கூடிய 1.50 காசு கொடுக்க வேண்டும். ஆனால் அதானி குழுமத்தோடு போட்டிருக்கின்ற ஒப்பந்தம் மின்சாரம் எடுக்கவில்லையென்றாலும் fixed cost கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அப்பொழுது அந்த விலை அதிகம். இப்பொழுதுகூட மற்ற மாநிலங்கள் எல்லாம் மின்சாரம் எடுக்கவில்லையென்று சொன்னால் அந்த fixed cost கொடுக்க வேண்டும் என்ற நிலைமையில் இருக்கின்றன. ஆனால், தமிழ்நாடு அதுபோன்ற நிலைமையில் இல்லை. அதுமட்டுமல்லாமல் இப்பொழுதெல்லாம் ஒளிவு, மறைவில்லாமல்–transparent

ஆக e–tender நடந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். Fixed cost கொடுக்க வேண்டியதில்லை. Market–ல் விலை குறைந்துவிட்டது. ஏன் நீங்கள் ஒப்பந்தத்தை இரத்து செய்யக் கூடாது? விலை குறைந்திருக்கிறதே, இரத்து செய்துவிட்டு புதிய ஒப்பந்தத்தைப் போடலாமே? ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வித்தியாசம் வருகிறதே? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் இன்னொன்று கேட்டுக்கொள்கிறேன், ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று போட்டுவிட்டால் அதை இரத்து செய்கின்றபொழுது அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கின்றேன், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் Nissan Motor Company தமிழ்நாட்டிற்கு வந்தது. ஒரு Company வருகின்றபொழுது கிட்டதட்ட 8 முதல் 10 சதவிகிதம் மட்டும்தான் தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற கார்களை அவர்கள் விற்பார்கள். ஆனால் அவர்கள் ஒரு தவறான ஒப்பந்தத்தைப் போட்டார்கள். உங்களுக்குத் தெரிந்து போட்டார்களா அல்லது தெரியாமல் போட்டார்களா என்பது எங்களுக்குத் தெரியாது. உற்பத்தியாகின்ற அத்தனை கார்களையும் தமிழகத்திலேயே விற்றதைப்போல, இன்னொரு company ஆரம்பித்து, bill எல்லாம் போட்டு ஒரு வருடத்திற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய், ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாய் என்று VAT refund கேட்கிறார்கள். உங்கள் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தம், எப்படி நீங்கள் தவறாகப் போட்டீர்கள்? இப்பொழுது நாங்கள் அதை இரத்து செய்ய முடியுமா? இனிவரும் காலத்தில் வருகின்ற கம்பெனிகள் எல்லாம் இதுபோன்ற நிகழ்வுகளை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காகக்

கடந்த முறை சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். ஆட்சியாளர்கள்மேல் தவறில்லை. ஒப்பந்தத்தைப் போட்டுவிட்டு, அந்த ஒப்பந்தத்தை மீறுகின்றபொழுது அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் செல்கின்றார்கள், உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கின்றார்கள். Nissan Motor Company எப்படியோ, அதுபோல்தான் அதானி குழுமமும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் உரையை சீக்கிரம் முடியுங்கள். 40 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து சரிதான். ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியாது. ஆனால் மின்சாரம் வாங்கவில்லையென்று சொன்னால் fixed cost கட்ட வேண்டியதில்லை என்ற விவரத்தையும் சொன்னார்கள். அதானி குழுமத்திலிருந்து மின்சாரம் வாங்குவதை இன்றிலிருந்து நிறுத்துங்களேன். குறைந்த விலையில் மின்சாரம் வாங்குங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசாங்கத்திற்கு இலாபம்தானே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு முன்னால் அவர்களிடமிருந்து எவ்வளவு மின்சாரம் எடுக்கிறோம் என்பதை தெரிந்துகொண்டு பேசியிருக்க வேண்டும். முழுமையாக எப்பொழுதும் எடுப்பதில்லை. புரிந்துகொள்ளுங்கள் முதலில். எவ்வளவு மின்சாரம் அன்றைக்கு, எப்போது தேவைப்படுகிறதோ, அப்போதுமட்டும்தான் எடுத்துக்கொள்கிறோம். தேவையில்லாத நேரத்தில் மின்சாரத்தை எடுப்பதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** தேவைப்படுவதைக்கூட 3 ரூபாய் விலைக்கு வெளியில் கிடைக்கும் என்றால் அதில் எடுத்துக் கொண்டு, இதில் எடுக்காமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அடுத்த subject–க்கு நான் போய்விடுகிறேன். மின்சார வாரியம் 2013–ல் 11 தனியார் நிறுவனங்களிடமிருந்து 3,300 மெகா வாட் மின்சாரம் வாங்குவதற்கு 15 ஆண்டுக் காலத்திற்கு ஓர் ஒப்பந்தம் போட்டிருக்கிறது. அதில் மூன்று நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. எட்டு நிறுவனங்கள் அண்டை மாநிலங்களில் இருக்கின்றன. தூத்துக்குடியில் உள்ள Coastal Energen Pvt. Ltd., என்ற நிறுவனம் உட்பட மூன்று நிறுவனங்கள் கிட்டத்தட்ட யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 70 காசிலிருந்து 7 ரூபாய் 70 காசு வரையில் ஒப்பந்தம் போட்டிருக்கின்றன. வெளி மாநிலங்களில் உள்ள எட்டு நிறுவனங்களுடன் யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாய் 50 காசில் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். அது குறைவாகத்தான் போட்டிருக்கிறோம். ஆனால், அந்தக் காலக்கட்டத்தில் இதைவிடக் குறைவான விலையில் மார்க்கெட்டில் மின்சாரம் கிடைத்திருக்கிறது. இருந்தாலும்கூட வெளி மாநிலங்களிலே உள்ள நிறுவனங்களுடன் யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாய் 50 காசு என்று போட்டுவிட்டு, தமிழ்நாட்டிலுள்ள மூன்று மின்சார நிறுவனங்களுக்கும் யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 70 காசிலிருந்து 7 ரூபாய் 70 காசு வரை போட்டிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் போடப்பட்டும் எதனால் இவ்வளவு பெரிய வேறுபாடு வந்தது. அதுமட்டுமல்ல. 85% மின்சாரத்தை அங்கே கொள்முதல் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் இருந்தோம் என்று சொன்னால், ஒரு யூனிட்டிற்கு 2 ரூபாய் என்று கணக்கிட்டு அவர்களுக்கு கட்ட வேண்டும் என அந்த ஒப்பந்தத்தில் இருக்கின்றது. ஆக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி, இன்றைக்கு 3,300 மெகா வாட் மின்சாரத்தை முழுமையாக அதானி குழுமத்திலிருந்து எடுக்கிறோமா என்றால் இல்லை. நமது தேவைக்குத்தான் எடுப்போம். 3,300 மெகா வாட் எடுக்க தேவை இருக்கிறதா என்றால், எப்போதும் இருக்காது. காற்று, மழை இருக்கும்போது தேவை இருக்காது. தேவை இருக்கக்கூடிய காலக்கட்டத்தில் சில இடங்களில் 40 சதவிகிதம், 50 சதவிகிதம், 60 சதவிகிதம் எடுப்போம். ஆனால், எடுக்காத மின்சாரத்திற்கும் சேர்த்து அந்த நிறுவனத்திற்கு நாம் இன்றைக்கு பணம் கட்ட வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒப்பந்தத்தை நாம் ஏன் போட வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு போட்ட ஒப்பந்தம் சரிதான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு பின்னால் அவர்களிடத்தில் பேசி, இப்போது 4 ரூபாய் 96 பைசாவிற்குதான் வாங்கிக் கொண்டிருக்கின்றோம். இதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். ஓர் ஒப்பந்தம் போடுகின்றபோது, அவர்கள் வங்கியில் வாங்குகின்ற கடன், மற்றதையெல்லாம் பார்த்து, மின்சாரம் எடுக்கவில்லையென்றால் fixed cost கொடுக்கப்படுகிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில்கூட இது நடந்தது. இது ஏதோ இங்கு தமிழகத்தில் மட்டும் நடப்பது அல்ல; எல்லா மாநிலங்களிலும் நடப்பதுதான். நடைமுறை ஒன்றுதான். மின்சாரம் எடுக்கவில்லை என்று சொன்னால், அதற்குண்டான fixed cost–ஐ கொடுக்க வேண்டும் என்பது நடைமுறையில் இருக்கும் ஒன்றுதான். நாம் ஒரு மாதம் மின்சாரம் எடுக்கவில்லை என்றால், அந்த வங்கியினுடைய guarantee–காக மின்சார வாரியம் கடிதம் கொடுக்கின்றது. நாங்கள் எடுக்கவில்லை என்றாலும்கூட, fixed cost–ஐ இவ்வளவு கொடுப்போம் என்று சொன்னதற்கு பின்னால்தான் அந்த ஒப்பந்தமே போடப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிறைய நேரம் பேசவேண்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 40 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. (குறுக்கீடு) எனக்கு நேரமில்லை. (குறுக்கீடு) அவர் பேசவில்லை என்றால் நான் என்ன செய்வது? எனக்கு நேரம் ஆகிவிட்டது. இதற்கு மேல் நேரமில்லை. இன்னோர் உறுப்பினர் பேசவிருக்கிறார். அவரிடம் கொடுத்து பேசச் சொல்லுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) ஏன் 3,300 மெகா வாட் மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போட்டீர்கள் என்றுதான் நான் கேட்டேன். Fixed cost–ஐ கொடுக்க வேண்டியிருக்கிறது. 3,300 மெகா வாட் மின்சாரத்திற்கு போடாமல் குறைத்து போட்டிருந்தால் நாம் தேவைக்குத் தக்கவாறு மின்சாரத்தை எடுத்துக் கொண்டிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு உறுப்பினர், இதைத்தான் நான் முதலில் சொன்னேன். நீங்கள் மின் பாதையை ஏற்படுத்தி மின்சாரத்தை வாங்கியிருந்தீர்கள் என்று சொன்னால், தமிழகத்தில் மின்வெட்டே இல்லாத நிலைமையை உருவாக்கியிருக்கலாம். 3,300 மெகா வாட் இல்லை, 3,330 மெகா வாட். வட நாட்டிலிருந்து மின்சாரம் கொண்டு வரும் பாதையை ஏற்படுத்திய காரணத்தினால்தான், மின்சாரத்தை வாங்க முடிந்தது. அதனால்தான் இப்போது மின்வெட்டு இல்லாத மாநிலத்தை நாம் உருவாக்கிக் கொடுத்திருக்கின்றோம். மொத்தமே 4 ரூபாய் 96 பைசாதான் கணக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** அடுத்ததாக இன்றைக்கு மத்திய அரசு கொண்டு வந்துள்ள உதய் திட்டத்தில் நாம் இணைந்திருக்கின்றோம். முன்னாள் முதலமைச்சர் அவர்கள், அவர் இருக்கின்ற வரையில் அந்தத் திட்டத்தில் இணைய மாட்டோம் என்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எனக்கு நேரமில்லை. இல்லை, எனக்கு நேரம் போதாது. (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 40 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன.

**திரு. எஸ். ஆஸ்டின்:** உதய் திட்டம் தொடர்பாக, ஒரு வெள்ளை அறிக்கை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதய் திட்டம் தொடர்பாக நிதிநிலை அறிக்கையில் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், கடனில் 75% மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். 25% மின்சார பகிர்மானக் கழகம் ஏற்க வேண்டும். அதை நீங்கள் bond–ஆகப் போடுகிறீர்கள்; bond–ஆகப் போட்டு யாரிடம் கொடுக்கிறீர்கள், பொது மக்களிடம் கொடுக்கிறீர்கள். ஏற்கெனவே நீங்கள் 81,312 கோடி ரூபாய் கடன் இருப்பதாக உதய் மின் திட்டத்தில்

கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், நிதிநிலை அறிக்கையில் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்றால், 30,420 கோடி ரூபாய் கடனில் 75% அதாவது 22,815 கோடி ரூபாய் மாநில அரசு ஏற்றுக்கொண்டு, bond–ஆகக் கொடுக்கிறீர்கள். அப்படி bond–ஐக் கொடுத்தீர்கள் என்றால், அந்த bond mature ஆகும்போது அந்தப் பணத்தை யார் கொடுப்பது? இன்றைக்கு bond–ஐ கொடுத்து, வங்கியிலுள்ள கடனைத் தீர்க்கிறோம். நாளைக்கு அந்த bond மற்றும் வட்டியையும் சேர்த்து அந்தக் கடனை அந்தப் பயனாளிக்கு நாம் கொடுக்க வேண்டும். அந்தக் கடனை கொடுக்கும்போது, அந்தச் சுமை இந்த மாநில அரசின்மீது வருமா, வராதா? 75% கடனை மத்திய அரசு ஏற்றுக்கொண்டால், அதில் நாம் கையொப்பம் இட்டது தவறில்லை. மாநில அரசு என்றால், அது யாருடைய பணம், மக்களுடைய வரிப் பணம். இந்தப் பணம்தான், தனியார்களிடத்தில் வாங்கும் bond. இன்றைக்கு அந்தப் பாதிப்பு இருக்காது, பத்து வருடங்களுக்குப் பிறகு, அந்த bond mature ஆகும்போது, பத்து இலட்சம் ரூபாய்க்கு bond என்றால், அதற்குரிய வட்டியும் சேர்த்து, மாநில அரசு அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா? ஆக, சுமை குறைகிறது என்றால், அது வாரியத்திற்குக் குறைகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–15

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதன் முழு விவரம் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார். உதய் திட்டம் என்பது மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்த்து, நாங்கள் அதில் கையெழுத்து போட்டோம் என்று முதலிலே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்கள் எப்போதுமே அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. அதிலே சில ஷரத்துகளை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதாவது விவசாயத்திற்கு மின் மீட்டர் வைக்க வேண்டும் மற்றும் 3 மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணத்தை ஏற்ற வேண்டுமென்று சொன்னார்கள். இந்த ஷரத்துகளை எடுத்தால் நாங்கள் அதில் சேருகிறோம் என்று சொன்னோம். ஓராண்டுக்காலம் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அதை எடுத்ததற்குப் பின்னால்தான் அதிலே சேர்ந்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 22,815 கோடி ரூபாய் கடனை மாநில

அரசு ஏற்றிருக்கிறது. ஐந்தாண்டுக்காலத்திற்குப் பின்னால் அதை திருப்பிக் கொடுக்கின்றபோது வட்டியோடு சேர்த்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது மாநில அரசு ஏற்ற கடனால் 2,882 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு வட்டி மிச்சம். தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்திற்குக் கொடுக்க வேண்டிய subsidy 3,000 கோடி ரூபாயை குறைத்துக் கொடுத்திருக்கிறது. அதனால், மாநில அரசுக்கு எந்தவிதமான நிதி பளுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு நேரம் நீங்கள் பேசியதற்கு பதிலுரையில் சொல்லலாம் என்று இருந்தேன். ஏதோ, அதானி குழுமத்துடன் அதைப் போட்டார்கள், இதைப் போட்டார்கள், ரேட் போட்டார்கள் என்று சொல்கிறீர்கள். நீங்கள் என்ன விலைக்கு வாங்கினீர்கள் என்று தெரியுமா? ஒரு யூனிட் 15 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது எப்படி? இதற்கு என்ன காரணம்? எங்களைச் சொல்கிறீர்களே, நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் ஒரு யூனிட் 15 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறீர்களா, இல்லையா? அதுவும் 25 வருடம் ஒப்பந்தம் போட்டிருக்கிறீர்கள். ஆனால், நாங்கள் 7 ரூபாய் 1 பைசாவிற்கு ஒரு யூனிட் என ஒப்பந்தம் போட்டதற்கு இப்படிப் பேசுகிறீர்கள். 15 ரூபாய் என்று 25 வருடங்கள் போட்டிருக்கிறீர்கள். இன்னொன்று 30 வருடங்கள் போட்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு என்ன பதில்? சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உதய் திட்டத்தை முடித்துவிட்டு, அதற்கு வருகிறேன். உதய் திட்டத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் 81,312 கோடி ரூபாய் கடன் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் நிதிநிலை அறிக்கையில் 30,420 கோடி ரூபாய் கடனில் 22,815 கோடி ரூபாயை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறீர்கள். மீதமுள்ள 50,000 கோடி ரூபாய் கடனை யார் ஏற்றுக்கொள்வது? அதனால்தான் நான் வெள்ளை அறிக்கையைக் கேட்டேன். 'நாங்கள் சில ஷரத்துகளை எடுக்கச் சொன்னோம். அதை எடுத்து விட்டார்கள்'. நான் தெரியாமல் பேசிவிட்டேன் என்றுகூட சொன்னீர்கள். 'சில ஷரத்துகளை எடுத்து விட்டார்கள். எனவே ஒத்துக்கொண்டு நாங்கள் கையெழுத்து போட்டோம்' என்று சொன்னீர்கள். என்ன ஷரத்துகளை எடுக்கச் சொன்னீர்கள்?

எதையெல்லாம் எடுத்திருக்கிறார்கள்? மின் கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என்ற உத்தரவாதத்தை அதன்மூலம் நீங்கள் கொடுக்க முடியுமா? உதய் திட்டத்தில் சேர்ந்து இன்றைக்கு ஓராண்டுக்காலம் ஆகிவிட்டது. உதய் மின் திட்டத்தில் சேர்ந்த மற்ற அரசுகள் எல்லாம் அதற்கு கட்டுப்பட்டு மின் கட்டணத்தை இன்றைக்கு உயர்த்தியிருக்கின்றன. நீங்கள் தற்காலிகமாக 2 ஆண்டுக்காலத்திற்கு மின் கட்டணத்தை உயர்த்த மாட்டோம், 3 ஆண்டுக்காலத்திற்கு மின் கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்களா? அதனால் வெள்ளை அறிக்கை ஒன்றைக் கொடுத்தீர்களென்று சொன்னால், எல்லோருக்கும் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். அந்தத் திட்டத்தில் சேர்ந்ததால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், உட்காருங்கள். இத்துடன் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். எனக்கு நேரம் இல்லை; 40 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன.

**திரு. எஸ். ஆஸ்டின்:** நான் இன்னும் மதுவிலக்குக் குறித்து பேசவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு என்ன செய்வது? பேசுவது நீங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** எனக்கு இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், சரியாக இரண்டு நிமிடங்களில் உரையை முடியுங்கள். அதற்குமேல் உங்களுக்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடு) நேரமில்லை.

**திரு. எஸ். ஆஸ்டின்:** நான் உரையை வேகமாக குறுக்கீடு இல்லாமல் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** நான் major subject–க்குப் போகவில்லை. மாவட்டத்திற்கு வந்து விடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மயிலாடி, குமாரகோவில் ஆகிய இரண்டு

இடங்களில் 110/11 KVA துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக 6 ஆண்டுகளுக்கு முன்னால் proposal போயிருக்கிறது. ஆனால், இதுவரையிலும் அவர்களால் நிலத்தைக் கையகப்படுத்த முடியவில்லை. அதேமாதிரி, இரவிபுதூர்கடையில் 230 KVA துணை மின் நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்த முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இடத்தைக் கையகப்படுத்தும்போது guideline value–ல் இருந்து ஒன்றரை சதவீதம் கொடுப்பதற்குத்தான் Chief Engineer–க்கு power இருக்கிறது. அதற்கு மேல் கொடுக்க முடியாததால், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய்விடுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், guideline value–க்கும் market value–க்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஆகையால் market value–ல் வாங்குவதற்கான ஓர் உத்தரவை மின் வாரியம் கொடுக்குமென்று சொன்னால்தான் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். பொதுமக்கள் நீதிமன்றத்திற்குப் போகாமல் இருப்பார்கள்.

மின் கம்பத்தை shifting செய்கிறோம். அப்படி shifting செய்யும்போது அந்தத் தொகையை யார் கட்ட வேண்டும்? யார் கட்ட வேண்டுமென்றால், ஒன்று பஞ்சாயத்து கட்ட வேண்டும். இல்லையென்றால் நகராட்சி அல்லது ஊராட்சி கட்ட வேண்டும். நலிந்த ஊராட்சிகள் நிறைய இருக்கின்றன. மின் வாரியம் கட்ட முடியவில்லையென்றால்கூட, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பதற்கு exemption கொடுங்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 56 டவுன் பஞ்சாயத்துகள் இருக்கின்றன. Traffic காரணமாக எங்கே பார்த்தாலும் சாலைகளை விரிவுபடுத்துகிறோம். விரிவுபடுத்தக்கூடிய இடங்களில் மின் கம்பங்கள் நிற்கின்றன. சாலைகளை விரிவுபடுத்தியும் பயன் இல்லை. அந்தக் கம்பத்தை மாற்ற வேண்டுமென்று மின் வாரியத்திற்குக் கொடுத்தால் அதற்கான expense–ஐ யார் கட்டுவது? அந்த உள்ளாட்சி மன்றம்தான் கட்ட வேண்டியிருக்கிறது. அவர்களிடம் பணமில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுத்தோமென்று சொன்னால், guideline–ல் இல்லை என்று அவர்கள் அதைத் திருப்பி அனுப்பி விடுகிறார்கள்; செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். மின் வாரியமே அதை மாற்றி விட்டால் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இல்லையென்றால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** ஒரு நிமிடம். நான் மதுவிலக்கு உடன் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை இல்லை, இதற்குமேல் முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நாளாவது நான் உரையை முடியுங்கள் என்று சொல்லும்போது, உங்கள் உறுப்பினர்கள் உரையை முடித்திருக்கிறார்களா? எனக்கு ஒத்துழைப்புக் கொடுக்காமல் இருந்தால், நான் எப்படிச் சபையை நடத்துவது? அவர்களும் இதேமாதிரி செய்தால் நான் சபையை எப்போது முடிப்பது? (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது. உட்காருங்கள். நீங்கள் அதை பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 1–20

***திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதல்வராகவும், இந்திய அளவில் மிக உயரிய ஆளுமைத் திறன் கொண்டவரும், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்கிற உயரிய கோட்பாட்டோடு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. லெட்சுமணன் அவர்கள் பேசவிருக்கிறார், அவரிடம் கொடுத்து பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.வி. இராமலிங்கம்:** தமிழகத்தை முதல் மாநிலமாக மட்டுமல்ல, முன்னோடி மாநிலமாக மாற்ற வேண்டும் என்று கண்துஞ்சாமல் பணியாற்றி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினர் திரு. லெட்சுமணன் அவர்கள் உரையாற்றவிருக்கிறார். அவரிடம் கொடுத்துப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, உங்களை அவர் திட்டுவார் என்று

என்னிடம் கேட்கிறீர்கள். நியாயமில்லாமல் கேட்காதீர்கள். (குறுக்கீடு) இன்னோர் உறுப்பினர் திரு. லெட்சுமணன் அவர்கள் பேசவிருக்கிறார். அவரிடம் கொடுத்துப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. கே.வி. இராமலிங்கம்:** தமிழகத்தை முதல் மாநிலமாக மட்டுமல்ல, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் என்று கேட்பார். ஆனால், ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்வார். (குறுக்கீடு)

**திரு. கே.வி. இராமலிங்கம்:** முன்னோடி மாநிலமாக மாற்றிட வேண்டும் என்று கண்துஞ்சாமல் பணியாற்றி, மாற்றிக்காட்டி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமலிங்கம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.வி. இராமலிங்கம்:** நம்மைவிட்டு மறைந்தாலும், தமிழக மக்களின் நெஞ்சங்களிலே நீக்கமற நிறைந்திருக்கின்ற எங்கள் அன்னை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது உரையைத் துவங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏழைக் குடிசைகளைக் கோபுரமாக்கி, பாட்டாளிகளின் வியர்வைத் துளிகளைப் பலனுள்ளதாக்கி, தொழிலாளர்களின் குமுறல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, நலிந்தோரின் வேதனையை நலியச் செய்து, தாழ்த்தப்பட்டவர்களின் அவதிகளைப் போக்கி, நல்ல திட்டங்களால் ஆக்கப்பூர்வ காரியங்களை நிறைவேற்றி, அமெரிக்க நாட்டின் புரூக்ளின் மருத்துமனையிலிருந்தவாறே அன்னைத் தமிழ்நாட்டின் அரியணையில் ஏற்றப்பட்டு, அமர வைத்து அழகு பார்த்த, தமிழக மக்களின் நெஞ்சங்கள் நிறைந்த பெருமைக்குரியவரும், இலக்கியத்தில் இடம் பெறாத எட்டாவது வள்ளலும், ஏழைப் பங்காளனுமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, மனித குணக்குன்றாலேயே கொள்கை பரப்புச் செயலாளராகி, காலத்தால் அழிக்க முடியாத கருத்துப் பெட்டகமாய், கழனிவாழ் விவசாயிகளின் கற்பூர கற்கண்டாய், காவேரியை மீட்டெடுத்த கலைச்செல்வியாய், காலமெல்லாம் கிடைக்காத காவியப்

பெட்டகமாய், சிந்தனை சிறகடிக்கும் சித்திரச் சோலையாய், நல்ல பல திட்டங்களாலும், நலத் திட்டங்களாலும் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்து, பன்மொழிப் புலமையால் தலைவர்களைப் பணிய வைத்து, பெண் குலத்திற்கே பெருமை சேர்த்து, திரைத் துறையினரும் திகைத்து நிற்க, திண்மையும், வன்மையும், மென்மையும் என பகைவருக்கும், பழகுவோர்க்கும், பங்காளர்களுக்கும், பழுத்த மரமாய் பரினமளித்து, பாரதத்தின் தலைவர்களும் திகைத்து நிற்க, தமிழகமே, தென்னகமே, பாரதமே வாரியணைத்து, வெண்தாடி வேந்தன் தந்தை பெரியாரின் பெண்ணுரிமைப் போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, 'ஆணுக்கு பெண் நிகர்' என்கின்ற நிலைக்கு உயர்த்திய பெண்ணினக் காவலர், பொன்மனச் செல்வி, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அடியொற்றி, அவரின் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து, அழகுத் தமிழகத்தின் நலனுக்கு வலுசேர்க்க, மாற்றுக் கருத்தாளரையும், மட்டம் தட்டுவோரையும், அலங்கோலங்களையும் அழகுக் கோலங்களாக்கி, அவதூறு பேசுவோரையும் நட்சத்திர அந்தஸ்து ஏதுமின்றி, நற்சான்று பெறுகின்றவகையில், அம்மாவின் கனவுகளை நனவாக்கிட, அம்மாவின் அனைத்துத் திட்டங்களையும் மக்களிடம் சேர, அவர்களின் நலன் சார், வரும் கோப்புகளை உடனுக்குடன் கவனித்து, அம்மாவை இழந்த அ.தி.மு.க.–வை, மூத்த தனையனாய், முகிழ்ந்தெடுத்த முதல்வனாய், முகவரியற்றவர்களின் முகவரியாய், கண்ணியத்தோடு அரவணைத்து, அன்பாய் அணுகி, பண்பாய் பழகி, சாமானியனாய், சம்சாரியாய், அம்மா ஏற்றி வைத்த 'மக்கள் நலன்' என்னும் இலட்சிய தீபத்தை எடுத்தோடும் தொடர் ஓட்ட வீரராய், எளிய முதல்வராய் வீற்றிருக்கும் எங்கள் பாசமிகு அண்ணன் தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களையும், கழகத்தின் பொதுச் செயலாளர் அம்மா அவர்களையும் வணங்கி, எனது உரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து குற்றச்சாட்டுகளைக் கூறிக் கொண்டேயிருந்தார்கள். ஒரு மின் திட்டம் உற்பத்தியை தொடக்க வேண்டுமெனில், 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் ஆகின்றன என்று கூறினார்கள். 2006 முதல் 2011 வரை நீங்கள் ஆட்சியில் இருந்தீர்களே! அந்த 5 ஆண்டுக்காலத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்? அப்போதைய மின்சாரத்தின் நிலை என்ன? நான் 2010 ஆம் ஆண்டு எனது 2 பண்ணை வீடுகளுக்கு மின்னிணைப்புக் கேட்டு விண்ணப்பம் செய்தேன். மின்னிணைப்பு கொடுத்தார்கள், ஆனால்,

மின்சாரம் இல்லை. ஏனென்று விசாரித்தபோது, “வரும்போது எடுத்துக் கொள்ளுங்கள்” என்று சொன்னார்கள். என்னுடைய ஒவ்வொரு வீட்டிலும் 15 மின் விளக்குகள் இருந்தன. அந்த 15 விளக்குகளையும் on செய்துதான் வைத்திருந்தேன். எதற்காக என்றால், current வந்தால் தோட்ட வேலைக்கான மோட்டாரை on செய்வதற்காக. 15 விளக்குகளும் உள்ள என்னுடைய இரண்டு பண்ணை வீடுகளுக்கும் எவ்வளவு மாத மின் கட்டணம் வந்தது என்றால், குறைந்தபட்ச மின் கட்டணமான ரூ.40/–தான் வந்தது. ஏனென்றால், அவர்களுடைய ஆட்சியில் மின்சாரம் விநியோகம் செய்யப்படவேயில்லை. அன்றைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலமே கொடுத்தார்கள். நீங்கள், தொலைநோக்குத் திட்டம், தொலைநோக்குத் திட்டம் என்று தவறான தகவலைச் சொல்கிறீர்கள். 2006 ஆம் ஆண்டு அம்மா அவர்களின் ஆட்சியின்போது, தமிழகம் மின்மிகை மாநிலமாக இருந்தது. ஆனால், 2006 ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் என்ன செய்தீர்கள்? நீங்கள் மானாட, மயிலாட பார்த்துக் கொண்டிருந்தீர்களேதவிர, மின்சாரத்தைப் பற்றியோ, தமிழக மக்களைப் பற்றியோ கவலைப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உண்மையான நிகழ்வு. அதையெல்லாம்விடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள், மனம்போன போக்கில் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார். 2006 ஆம் ஆண்டு திரு. ஆஸ்டின் அவர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்திருப்பார் என்று நினைக்கிறேன். அதனால்தான், அந்தநேரத்தில் நடந்தது தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார். அதாவது, எதை வேண்டுமானாலும் பேசக் கூடாது; ஒரு குற்றச்சாட்டைக் கூற வேண்டுமானால், அதில் உண்மை இருக்க வேண்டும். இவ்வளவுதூரம் கடுமையாக முயற்சி செய்து, மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கமணி அவர்கள் 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் கடுமையாகப் பணியாற்றி இந்த மாதிரியான உயர்நிலைக்கு, அம்மாவுடன் இருந்து இப்படிப்பட்ட உயர்ந்த நிலையை ஏற்படுத்தியதற்கு நீங்களெல்லாம் பாராட்டைத் தெரிவிக்க வேண்டும். அதைவிடுத்து குற்றச்சாட்டைச் சொல்வது சரியல்ல. நீங்களெல்லாம் செய்த அலட்சியமே இதற்குக் காரணம் என்பதைத் தவிர வேறு அல்ல என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2008 ஆம் ஆண்டிலே உயரழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு மாலை உச்ச நேரம் தவிர மற்ற நேரங்களில் 40 விழுக்காடு மின் கட்டுப்பாடும் மற்றும் மாலை உச்ச நேரங்களில் 90 விழுக்காடு மின் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டிருந்தன. இதுதவிர, மாநிலம் முழுவதும் அறிவிக்கப்பட்ட மின் தடையும் அமலில் இருந்தது. ஆகையால் பொதுமக்களும், குறு மற்றும் சிறு தொழில் செய்வோர்களும் பெரிதும் பாதிப்பிற்குள்ளானார்கள்.

2001 முதல் 2006 வரையிலான காலக்கட்டங்களில் மின்மிகை மாநிலமாக இருந்த நமது மாநிலம் சரியான பராமரிப்பு மற்றும் நிருவாகத் திறமையின்மைக் காரணமாக 2006–2011–ல் மின் பற்றாக்குறை மாநிலமாக உருமாறியது. ஆனால், மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் கிடப்பில் போடப்பட்ட மின் திட்டங்களின் பணிகளை முடுக்கிவிட்டு, மாநில மற்றும் மத்திய தொகுப்புகளில் புதிய மின் திட்டங்களை இயக்கத்திற்கு கொண்டுவந்ததன் மூலமும், நடுத்தர மற்றும் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்ததன் மூலமும் மற்றும் சூரிய மின்சக்தி மூலமும் கூடுதலாக இதுவரை 10,496 மெகா வாட் மின் நிறுவுதிறன் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றபோது, 2011 ஆம் ஆண்டிலே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே '6 மாத காலத்திலே மின்சாரத் தட்டுப்பாட்டை, மின்வெட்டை நீக்குவேன்' என்று உறுதிமொழி கூறினார்களே என்று பல நேரங்களிலே இந்தச் சட்டமன்றத்திலேயே நீங்களெல்லாம் பேசினீர்கள். உங்கள் உறுப்பினர்களே பேசினார்கள். மின் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்றால் 3 ஆண்டுக்காலம், 4 ஆண்டுக்காலம் ஆகும் என்று இப்போது உங்கள் உறுப்பினர் பேசுகின்றார். எப்படி 6 மாத காலத்திலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகளால் கடந்த ஆட்சிக்காலத்தில்

அமலில் இருந்த மின் கட்டுப்பாடு முறைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு 5–6–2015 முதல் மின் கட்டுப்பாட்டு முறைகள் முழுவதும் நீக்கப்பட்டன. தற்போது 24 மணி நேரமும் அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு தமிழகம் மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அயராத முயற்சியினால் தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது மட்டுமல்லாமல் மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுகாறும் இல்லாத அளவிற்கு 29–4–2016 அன்று உச்சபட்ச மின் தேவையான 15,343 மெகா வாட் அளவையும் மற்றும் உச்சபட்ச மின் பயனீட்டளவான 345.617 மில்லியன் யூனிட்டுகளையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் பூர்த்தி செய்துள்ளது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்தின் தற்போதைய சராசரி மின் தேவை ஏறக்குறைய 13,750 மெகா வாட் முதல் 14,250 மெகாவாட்டாக உள்ளது. எப்பொழுதும் இல்லாத அளவாக சென்னையின் உச்சபட்ச மின் தேவையான 3,332 மெகாவாட் அளவை 30–5–2017 அன்றும் மற்றும் உச்ச மின் பயனீட்டளவான 64.830 மில்லியன் யூனிட்டை 2–6–2017 அன்றும் பூர்த்தி செய்துள்ளது.

மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள மின் தேவை – மின் உற்பத்தி சமன்பாட்டு அறிக்கையில் 2017–2018 ஆம் ஆண்டில் 8,663 மில்லியன் யூனிட் மின்சாரமும் மற்றும் உச்சபட்ச மின் தேவையில் 2,227 மெகா வாட் அளவிற்கும் கூடுதலாக உற்பத்தி செய்து கடந்த ஆண்டைப் போலவே தமிழகம் மின் மிகை மாநிலமாகத் தொடர்ந்து திகழும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 2016–2017 ஆம் நிதியாண்டில் மின் உற்பத்தியில் உச்சபட்ச உபரி நிலை அடைந்துள்ளது. மேலும், எதிர்வரும் வருடங்களிலும் மின் உற்பத்தியில் உபரி நிலை தொடர போதுமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மின் நிலையங்களில் கூடுதலாக உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காகவும், மின் பயனீட்டாளர்களுக்குத் தரமான, சீரான மின்சாரத்தை வழங்குவதற்காகவும், மின்தொடர் கட்டமைப்பு குறிப்பிடத்தக்க வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 343 துணை மின் நிலையங்களும், 9,763.27 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் பாதைகளும் மற்றும் 20,742.58 கிலோ மீட்டர் உயரழுத்த மின் பாதைகளும் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும், 55.84 இலட்சம் புதிய மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தைச் சார்ந்த சேவைகளை மேலும் மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக புதிய மின் இணைப்பு விண்ணப்பிப்பதில் உள்ள இடர்பாடுகளைக் களைய, விண்ணப்பங்களை இணையம்மூலம் பதிவு செய்யும் முறை மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 5–8–2016 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தற்போது, விண்ணப்பதாரர்கள், புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

மேற்கூறிய நடவடிக்கைகளால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கணிசமான சேமிப்பு கிடைத்துள்ளது. 2013–2014 இல் ரூபாய் 13,985 கோடியாக இருந்த இழப்பு 2016–2017 இல் ரூபாய் 3,789 கோடியாகக் குறைந்துள்ளது.

பிற்பகல் 1–30

மேலும், 2010–2011 ஆம் ஆண்டில் சராசரி மின் விற்பனை விலைக்கும் மற்றும் சராசரி மின் வழங்கல் விலைக்கும் இடையே ரூ.2.16 ஆக இருந்த இடைவெளி 2016–2017 ஆம் ஆண்டில் 44 பைசாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுக்காலம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இந்த ஆண்டு இழப்பே இல்லாத நிலையை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2010–2011 ஆம் ஆண்டில் 20.24 சதவீதமாக இருந்த ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீடுகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கட்டமைப்பு வலுப்படுத்தும்

பணிகள் காரணமாக 2015–2016 ஆம் ஆண்டில் 14.58 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. மேலும், மின் கட்டமைப்பை வலுப்படுத்துதல், நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் மூலமாக இந்த இழப்பீட்டை 2018–2019 ஆம் ஆண்டில் 13.5 சதவிகிதமாகக் குறைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின் நிறுவுதிறனை பொறுத்தவரையிலே, மரபுசார் எரிசக்தி ஆதாரங்கள் அடிப்படையிலான மின் நிறுவுதிறன் 18,732.78 மெகா வாட் மற்றும் மரபு சாரா எரிசக்தி அடிப்படையிலான மின் நிறுவுதிறன் 10,479.61 மெகா வாட் ஆக தமிழகத்தின் மொத்த மின் நிறுவுதிறன் இன்றைய தேதியில் 29,212.39 மெகா வாட் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டில் சராசரியாக ஒரு நாளைய மின்சார பயனீடு 200 மில்லியன் யூனிட் அளவாக இருந்தது. ஆனால், தற்போது 2017 ஆம் ஆண்டில் 320 மில்லியன் யூனிட் அளவாக உயர்ந்துள்ள நிலையிலும்கூட, மறைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் நிருவாகத் திறமையின் காரணமாக இதனைப் பூர்த்தி செய்து இன்று தமிழகம் மின்மிகை மாநிலமாக உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையினால் வருகின்ற 5 ஆண்டுக்காலத்தில் கூடுதலாக மேலும் 20,500 மெகா வாட் மின்சாரம் 2021 ஆம் ஆண்டிற்குள் உற்பத்தி செய்வதற்குண்டான எல்லாவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது, தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்தவில்லை என்ற ஒரு உண்மைக்கு மாறான குற்றச்சாட்டைக் கூறினார்கள். 2021 ஆம் ஆண்டிற்குள்ளே 20,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்குண்டான நடவடிக்கைகளை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நிருவாகத் திறமைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு என்று கூறவேண்டுமானால், கூடங்குளம் அணுமின் நிலையத்திலே மின் உற்பத்தியைக் கொண்டு வந்தது ஆகும். இப்போது கூடங்குளத்திலிருந்து இரண்டாவது

கட்டமாக 562 மெகா வாட் மின்சாரமும் தமிழகத்திற்குக் கிடைத்துள்ளது என்பதை இந்த நேரத்திலே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 15—10—2016 அன்று கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3—வது மற்றும் 4—வது அலகுகளுக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது.

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே காற்றாலை மின் உற்பத்தியிலே தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. 31—5—2017 அன்று நிலவரப்படி தமிழ்நாட்டின் காற்றலை மின் நிறுவுதிறன் 7854.81 மெகா வாட் ஆகும். இதன்மூலம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் காற்றாலை மின் நிறுவுதிறனில் 28.43 விழுக்காடு பங்களிப்பைத் தமிழகம் பெற்று முதல் மாநிலமாகத் திகழ்கிறது. காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 5—6—2017 அன்று மிக அதிக உற்பத்தியான 4957 மெகா வாட்டும் மற்றும் 30—5—2017 அன்று மிக அதிக மின் சக்தியான 99.46 மில்லியன் யூனிட்டும் பெறப்பட்டுள்ளது. மறைந்த மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் காரணமாக வரும் காலங்களில் 4500 மெகா வாட் காற்றாலை மின்சாரம் கூடுதலாகப் பெறப்படவுள்ளது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, 700 மெகா வாட் அளவிற்குக் காற்றாலை மின் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு அதிக அளவு காற்றாலை மின் நிறுவுதிறன் பெற்றுள்ளதால் கட்டாய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் விகிதாச்சாரத்தைப் பூர்த்தி செய்வதுடன், இதர மாநிலங்களின் கட்டாய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் விகிதாச்சாரத்தைப் பூர்த்தி செய்ய தேவைப்படும் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் நிலையில் உள்ளது.

கடந்த ஆண்டு காற்று பருவத்தில் 120 மெகா வாட் காற்றாலை மின்சாரம், தினந்தோறும் ஒடிசா மாநிலத்திற்கு பசுமை மின் சக்தியாக விற்பனை செய்யப்பட்டது. அதேபோல இந்த ஆண்டும் சுமார் 500 மெகா வாட் அளவிற்கு பசுமை மின் சக்தியை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் விகிதாச்சாரத்தைப் பூர்த்தி செய்ய தேவைப்படும் இதர மாநிலங்களுக்குத் தினந்தோறும் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசால் கூடுதலாக விதிக்கப்பட்ட தூய்மை ஆற்றல் வரி மற்றும் இரயில்வே சரக்கு சுமை கட்டண ஏற்றம் ஆகியவற்றால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு இந்த நிதியாண்டில் ரூ.615.00 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டபோதிலும்கூட, சீரிய நிலக்கரி கையிருப்பு, மேலாண்மைக் கொள்முதல், போக்குவரத்து மற்றும் இறக்குமதி நிலக்கரியின் பயன்பாட்டைக் குறைத்தது ஆகியவற்றின் மூலமாக 2016–2017 ஆம் ஆண்டிலே மின் நிலையங்கள் வரை கொண்டுவரப்பட்ட நிலக்கரியின் சராசரி செலவு முந்தைய நிதியாண்டைக் காட்டிலும் குறைக்கப்பட்டது. இதனால் நிலக்கரிக்கான மொத்த செலவில், சுமார் ரூ.400 கோடி நிகர சேமிப்பு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும், மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொடர் முயற்சியின் காரணமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு, ஒடிசா மாநிலத்தில் உள்ள 550 மில்லியன் டன் இருப்பு திறன் கொண்ட சந்திரபில்லா நிலக்கரித் தொகுதியை நிலக்கரி அமைச்சகம் 24–2–2016 அன்று ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரிய மின்சாரத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் 31–5–2017 அன்றுள்ளபடி, 1,702.40 மெகா வாட் சூரிய மின் சக்தி நிறுவுதிறன் உள்ளது. மேலும், கூடுதலாக 5,000 மெகா வாட் எதிர்வரும் ஆண்டுகளில் படிப்படியாக நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில், தலைகீழ் ஏலமுறை வாயிலாக 1,500 மெகா வாட் மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி மட்டுமல்லாமல், சீரான மற்றும் தரமான மின்சாரம் வழங்குவதற்கு மின்கட்டமைப்பு மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மின்கட்டமைப்பை மேம்படுத்தும்விதமாக 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 343 துணை மின் நிலையங்கள், 9,763.27 சுற்று கிலோ மீட்டர் மிக உயரழுத்த மின் பாதைகளும் மற்றும் 20,742.58 கிலோ மீட்டர் உயரழுத்த மின் பாதைகளும் இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள மாநில மின் தொடரமைப்புக் கழகங்களில் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்தான் முதன்முதலில் 765 கி.வோ. மின் கட்டமைப்பை அமைத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, அமையவிருக்கும் புதிய அனல், புனல் மற்றும் மரபுசாரா மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை தடங்கலின்றி வெளியேற்றுவதற்கும் மற்றும் மின்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் நடப்பாண்டில் 765/400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் வட சென்னை, கோயம்புத்தூர் மற்றும் அரியலூரில் அமைக்கப்படும். தேர்வாய்க்கண்டிகையில் 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும் மற்றும் வளையப்பட்டி, ஐம்புநாதபுரம், சவசபுரம், காஞ்சிபுரம், மொண்டிபட்டி, சமயநல்லூர், போரூர் மற்றும் நெய்வேலி ஆகிய இடங்களில் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துணை மின் நிலையங்கள் மார்ச் 2018–ல் இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும்.

மேலும், மூன்று 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் மற்றும் ஆறு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இத்துணை மின் நிலையங்களை 2018–2019 ஆம் ஆண்டில் இயக்கத்திற்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி பகுதியில் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தை வெளிக்கொணர கானார்பட்டியில் 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ரூபாய் 247.60 கோடியில் இயக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், 400 கிலோ வோல்ட் புதிய துணை மின் நிலையங்கள் தப்பக்குண்டு, ஆணைக்கடவு மற்றும் ராசிபாளையம் ஆகிய இடங்களில் அவற்றோடு சார்ந்த 830 கிலோ மீட்டர் உயரழுத்த மின்வழிபாதைகளுடன் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் செப்டம்பர் 2017–ல் முடியும் தருவாயில் உள்ளன.

மேலும், ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவன நிதியுதவியுடன் ஐந்து 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள், பன்னிரண்டு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் மற்றும் இந்தத் துணை மின் நிலையங்களுக்கான மின் பாதைகள் ஆகியவற்றை ரூ.5,014 கோடி முதலீட்டில்

அமைப்பதற்காகக் திட்டமிடப்பட்டு, ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து ரூ.3,572.93 கோடி நிதியுதவி பெறப்பட்டு துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுமட்டுமல்லாமல், புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் பெறக்கூடிய அதிக அளவு மின்சாரத்தை வெளிக்கொணர்வதற்காக KfW நிறுவன நிதியுதவி மற்றும் இந்திய அரசின் தேசிய மாசற்ற எரிசக்தி நிதியுதவியுடனும், தென்னம்பட்டியில் 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், 400 கிலோ வோல்ட் இரட்டை சுற்று மின்வழி பாதைகளும் மற்றும் மின்மாற்றிகளின் மின் திறனை அதிகப்படுத்துவதற்கான பணிகள் ரூ.1,593 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன.

12—12—2016 அன்று வர்தா புயல் காரணமாக, சென்னையில் 130 முதல் 140 கி.மீ. வேகத்திற்கு காற்று வீசியதுடன், பலத்த மழையும் பெய்தது. இதனால் மின்கட்டமைப்பு பாதிக்கப்பட்டது. சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இம்மாவட்டங்களில் மிக உயரழுத்த மின் கோபுரங்கள், மின் பாதைகள் மற்றும் துணை மின் நிலைய உபகரணங்கள் பெரிதும் சேதமடைந்தன. மேலும், பலத்த காற்றினால் மரங்கள் முறிந்து மின் பகிர்மானக் கட்டமைப்பின் மின் கம்பிகள், மின் கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகள்மீது விழுந்ததனால் மின் கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டன. 59 எண்ணிக்கை மிக உயரழுத்த மின் கோபுரங்கள், 800 மின்மாற்றிகள், சுமார் 49,100 மின் கம்பங்கள், 4,500 மின்தூண் பெட்டிகள் மற்றும் 15,000 கி.மீ. அளவிற்கு மின்பாதை கம்பிகள் சேதமடைந்தன.

பிற்பகல் 1—40

சீரமைப்புப் பணிகளை உடனடியாக போர்க்கால அடிப்படையிலே முடுக்கிவிட்டு, முதற்கட்டமாக அவசர அத்தியாவசியப் பிரிவுகளான அரசு பொது மருத்துவமனை, தலைமைச் செயலகம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஆகியவற்றுக்கு 3 மணி நேரத்திற்குள் மின் விநியோகம் செய்யப்பட்டு, சாதனையை ஏற்படுத்தியது மின்சார வாரியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கோயம்பேடு மத்திய பேருந்து நிலையத்திற்கும் அன்று இரவிலேயே மின் விநியோகம் வழங்கப்பட்டது. சென்னை

விமான நிலைய சேவைகளும் 13–12–2016 அதிகாலை முதல் துவங்கப்பட்டன. மின் சீரமைப்புப் பணிகளுக்காக தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்ட முயற்சிகளைப் பொதுமக்கள் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அனைவரும், எதிர்க்கட்சிகளும்கூட பாராட்டுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தியது தமிழ்நாடு மின்சார வாரியம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

மேலும், புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் ஏற்படும் பேரிழப்பைத் தவிர்க்கும்பொருட்டு மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படி மிக அதிக அளவில் புயலால் பாதிக்கப்படக்கூடிய கடலோர நகரங்களான கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கண்ணி ஆகிய பகுதிகளில் மேலே செல்லும் உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் பாதைகளை பூமிக்கடியில் செல்லும் புதைவடங்களாக மாற்ற ரூபாய் 360 கோடி செலவில் உலக வங்கி நிதி உதவியுடன் அமைக்க திட்டமிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்விசை மதிப்பு சங்கிலித் தொடரில் மிகவும் வலுவிழந்த இணைப்பான மின் பகிர்மானத்தை மேம்படுத்தும் மற்றும் நவீனமயமாக்கும்பொருட்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, திருத்தியமைக்கப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட மின் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தீனதயாள் உபாத்யாய கிராம மின்னொளி திட்டம் ஆகிய திட்டங்களின்மூலம் ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீடுகளைக் குறைத்தல், மின் உபதொடரமைப்பு மற்றும் மின்பகிர்மானம் தொடர்பான மேம்பாடு மற்றும் புனரமைப்பு, மின் காந்த மின் அளவிகளை மின்னணு மின் அளவிகளாக மாற்றுதல், தானியங்கி திறன் கூறு கட்டுப்பாட்டு அலகு, வலைய சுற்றுத்தர அமைப்பு, மின் தேக்கி வங்கி மற்றும் SCADA ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி செயல்திறனைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட வருவாய்ப் பெருக்கம் மற்றும் செலவுக் குறைப்பு நடவடிக்கைகள்மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் இருந்த இழப்பு ரூ.13,985 கோடியிலிருந்து 2016–2017 ஆம் ஆண்டில் ரூ.3,783 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, 2010–2011 ஆண்டில் சராசரி மின் விற்பனை விலைக்கும் மற்றும் சராசரி மின் வழங்கல் விலைக்கும் இடையே ரூ.2.16 ஆக இருந்த இடைவெளி 2016–2017 ஆம் ஆண்டில் 44 பைசாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. பதினைந்து ஆண்டுக்கால நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இந்த ஆண்டு இழப்பே இல்லாத நிலையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மத்திய அரசின் மின் அமைச்சகம் வெளியிட்டுள்ள மாநில மின் பகிர்மான நிறுவனங்களின் வருடாந்திர ஒருங்கிணைந்த தரவரிசைப் பட்டியலில் 2014–2015 ஆம் ஆண்டில் 'C+' தரவரிசையிலிருந்த தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், 2015–2016 ஆம் ஆண்டில் 'B' தரவரிசைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதிநிலை முன்னேற்றம் காரணமாக இந்த நிதியாண்டில் 'A' தரவரிசைக்கு முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதி நிலைமையை மேம்படுத்தும்பொருட்டு தமிழக அரசு பங்கு மூலதனம், மின் கட்டண மானியம், நிதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உள்ள மானியம், கடனுதவி போன்ற பல்வேறு வகைகளில் தொடர்ந்து நிதியுதவி அளித்து வருகிறது.

சென்ற நிதியாண்டு 2016–2017 ஆம் ஆண்டில் தமிழக அரசு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூபாய் 13,856 கோடியை பல்வேறு நிதி உதவிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. மொத்த ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து தமிழக அரசின் மின் கட்டண மானியமாக ரூபாய் 8,132.47 கோடியை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கியுள்ளது. இதர நிதி உதவிகளாக பங்கு மூலதனம், நிதிச் சீரமைப்புத் திட்டத்தின்படி கடன் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுதல், அதன் வட்டியைச் செலுத்துதல், மின்பாதை தொடர்பான JICA கடன்கள் போன்ற வகைகளில் ரூ.7,258.02 கோடியை தமிழக அரசு வழங்கியுள்ளது.

மேற்கண்ட நிதியுதவிகளைத் தவிர, ரூ.350 கோடியை வர்தா புயல் நிவாரண நிதியாகவும், வர்தா புயல் சேதம் தொடர்பான செலவினங்களை ஈடு செய்துகொள்ள ரூ.400 கோடியை வழிவகைக் கடனாகவும் தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியுள்ளது.

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 'உதய்' திட்டத்தின்கீழ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டண மாற்றங்கள் செய்யக் கோரும் நிபந்தனையை நீக்கக் கோரினார்கள். இதனை மத்திய அரசு ஏற்றுக்கொண்ட பின்புதான் உதய் திட்டத்திற்கான முத்தரப்பு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். 'உதய்' திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ரூ.22,815 கோடி கடனை தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்மூலம் மின் வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.2,882 கோடி வட்டி சேமிப்பும் மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதலைத் தவிர்ப்பதன்மூலம் ரூ.2,282 கோடி பணப்புழக்கத்தில் சேமிப்பும் ஏற்படும்.

பிற்பகல் 1–45

உதய் திட்டத்தின்கீழ் மின் வாரியம் கடன் பத்திரங்கள்மூலம் நிதி திரட்டி திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, தமிழக அரசு ரூ.7605 கோடிக்கான காப்புறுதியை அரசு ஆணை வாயிலாக வழங்கியுள்ளது. இதன்மூலம் மின் வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.200 கோடி வட்டி சேமிப்பு ஏற்படும். 'உதய்' திட்டம் தவிர, ரூ.4,523.19 கோடிக்கான பங்கு மூலதனத்தை வழங்க தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது தமிழக அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய கடன், மின்சார வரி மற்றும் அதற்குண்டான வட்டித் தொகைகளை மாற்றித் தரப்பட்டதன்மூலம் அளித்துள்ளது.

2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிதி உதவியாக ரூ.16,998 கோடியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அடுத்த 5 முதல் 8 ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய மூலதனத் திட்டங்களுக்காக மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றும் மின் தொடர் அமைப்புகள் அமைத்தல், புதிய மின் நிலையங்கள் அமைத்தல். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் உரையை முடிக்க இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?

**திரு. கே.வி. இராமலிங்கம்:** இன்னும் 5 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மீதமுள்ள உரையை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அது அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படும்.

**திரு. கே.வி. இராமலிங்கம்:** உப மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், இதர பிற பணிகளுக்குத் தேவையான சுமார் ரூ.95,000 கோடி நிதி உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மத்திய பிரதான நிதி நிறுவனங்களான ஊரக மின்மயமாக்கல் நிதி நிறுவனம் மற்றும் மின் விசை நிதி நிறுவனம் ஆகியவற்றுடன் மேற்கொண்டுள்ளது.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை இருந்த இருண்ட காலம் நீங்கி, மாநிலம் முழுவதும் தடையில்லா மின்சாரம் தொடர்ந்து வழங்கி, ஒளிமயமான எதிர்காலத்தை இந்த மாநிலத்து மின் நுகர்வோர்களுக்கு அளித்த, அம்மா அவர்களின் அடியொற்றிப் பணியாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. தங்கமணி அவர்களின் பணிகள் சிறக்க வாழ்த்தி, எங்களுக்கு உற்ற துணையாக, தோளோடு தோள் கொடுத்து நிற்கும் கழகத்தின் அவைத் தலைவர் மாண்புமிகு செங்கோட்டையன் அவர்களையும் வணங்குகிறேன்.

இம்மாமன்றத்தில் அம்மா அவர்கள் எடுத்த சபதமான, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனக்குப் பின்னாலும் 100 ஆண்டுக் காலம் தமிழகத்தை ஆளும், ஆளும்; (மேசையைத் தட்டும் ஒலி) அதன் திட்டங்கள் தமிழக மக்களைச் சேரும், சேரும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் இருக்கும் ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். சிக்கையநாயக்கன் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றியமைத்துத் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.

***திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழரை கோடி தமிழர்களின் 15 கோடி கரங்கள் வணங்கும்; தமிழக மக்கள் அனைவரின் நாவெல்லாம் வாழ்த்தும்;

வணங்காத கரமில்லை; வாழ்த்தாத நாவில்லை; போற்றாத வரலாறு இல்லை; இந்த புகழ்ச்சிக்கெல்லாம் உரியவராம் அன்னையே! அன்பே! அற்புதமே! இதையெல்லாம் காணத் தாயே, இப்போது இவ்வுலகில் நீங்கள் இல்லை. ஆனால், உங்களை நினைக்காதார் இங்கு யாருமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த சுகங்களை நாடி இவ்வுலக மாந்தர்கள் அன்றாடம் அலைபாய்ந்து கொண்டிருக்கிறார்களோ, அந்த சுகங்களைத் துச்சமெனத் தள்ளி, அனல்போல் தன்னை அழித்துக்கொண்டு, போயஸ் தோட்டத்துப் புத்தரைப்போல் வாழ்ந்த அன்னை, நமக்காக தியாக வடிவமேற்று, சபதமேற்று, சூளுரைத்து, விழிச்சுடர் விரிகின்ற திசையெல்லாம் கழகச் செயல்வீரரின் திருமுகம் கண்டு, அகமும், முகமும் மலர வாழ்வையே அர்ப்பணித்து, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து, தமிழக மக்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் போட்டு வீற்றிருந்த தங்கத் தலைவியை இழந்துவிட்டோம் நாம்.

நமக்காக, நம் இயக்கத்திற்காக, இந்த நாட்டுக்காக ஆலமுண்ட நீலகண்டனைப்போல், அரசியல் உலகில் எழுகின்ற விஷத்தையெல்லாம் தான் விழுங்கி, தன்னை மக்களுக்கு அர்ப்பணித்த வீரத் தாயை நாம் இழந்துவிட்டோம். 'ஆண்டவன் எல்லா இடத்திலும் இருக்க முடிவதில்லை; அதனால்தான் அன்னையைப் படைத்தான்'-இது இஸ்ரேல் நாட்டுப் பழமொழி. ஆனால், தமிழ்நாட்டில் ஆண்டவனே அம்மாவாகப் பிறந்து தமிழகத்தை ஆட்சி செய்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய தெய்வம் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். தாயில்லா குழந்தைகளாகத் தவித்த எங்களை, தாயின் தமையனாக, அம்மாவின் வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தும் நம் முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். நான் சார்ந்திருக்கும் கழகத்தையும், அம்மா ஆட்சியையும் பொதுமக்கள் ஏற்று, போற்றும் வண்ணம் வழிநடத்தும் எங்கள் வழிகாட்டுக் குழுவையும் பாராட்டி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாநில பட்ஜெட் கூட்டத் தொடர் என்பது இந்த மாமன்றத்தில் எப்படி இருக்க வேண்டுமென்பது குறித்த என்னுடைய கருத்து என்னவென்றால், ஓர் இல்லத்தில் குடும்ப வரவு, செலவை முடிவெடுக்கும் கணவன், மனைவி விவாதம்போல் ஒரு

மாநிலத்தின் பட்ஜெட் கூட்டத்தொடரின் விவாதம் என்பது அமைய வேண்டும். அதை விடுத்து, பக்கத்து வீட்டுப் பெண்கள் குழாயடி சண்டையைப்போல் இருக்கக்கூடாது என்பது எனது தாழ்மையான கருத்து. மாநில பட்ஜெட் என்பது நம்மை இந்த அவைக்கு அனுப்பி வைத்த மக்களின் நலன் கருதிய கருத்துப் பரிமாற்றமாக இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் அவையில் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–50*

நான் கூறியபடி 20–3–2017 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் ஆற்றிய உரையும், 21–3–2017 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி ஆற்றிய உரையும், மாநில வளர்ச்சிமீது அக்கறையோடு கருத்து கூறும் உரையாக இருந்தன என்பதை இன்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையில் நாங்கள் எதிர்க்கட்சியாக செயல்படுவோமே தவிர, எதிரிக் கட்சியாக செயல்பட மாட்டோம் என்று உரையாற்றிவிட்டு இந்தச் சபையிலும், இந்தச் சபை ஊடகப் பேட்டியிலும் இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்று கூறி வருவது எதிர்க்கட்சி செயல்பாடா அல்லது எதிரிக்கட்சி செயல்பாடா என்பதை சிந்திக்க வைக்கிறது.

இந்த வசனங்களை எல்லாம் எண்ணிப் பார்க்கும்பொழுது மூதாதையர்கள் சொல்வார்கள், இந்தச் செயல் 'அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும்' என்ற எண்ணத்தைப் போன்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் இப்பொழுது இதை அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்கிறேன். இந்த எண்ணம் என்றும் பலிக்காது என்பதை இங்கு ஆணித்தரமாகக் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்தில் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும், தமது பிள்ளைகள், மற்ற பிள்ளைகளைப்போல் சமுதாயத்தில் சமமாக வாழ வேண்டும் என்பதற்காக குடும்பக் கஷ்டத்தை சுமந்து, குழந்தைகளை முன்னேற்ற பாடுபடக்கூடிய பெற்றோரைப்போல், இந்த அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்தாலும், மக்களைப் பாதிக்காதவண்ணம் இருக்க வேண்டும் என்பதை எண்ணியே வரியில்லா, விலை உயர்வில்லா பட்ஜெட்டை இந்த அரசு கொடுத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு என்பது மக்களை உழைக்கத் தூண்டி, உழைக்க வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். அதன்மூலம் அவர்கள் தேவைகளை அவர்களே பெற்றுக்கொள்ளும் அளவிற்கு அவர்களைத் தயார்படுத்த வேண்டும். அப்படியிருந்தால் நம் மாநிலம் வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிக்கும். ஆனால், நமது புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, தமிழக மக்கள்மேல் அதிக அக்கறையும், அன்பும் வைத்து அவர்களின் அன்றாடத் தேவை முதல் அத்தியாவசியத் தேவை வரை அரசே தந்து, தான் பெற்ற குழந்தையை பெற்றோர் எப்படிப் பார்த்துக்கொள்வார்களோ அப்படி இந்த அரசு பொது மக்களைக் காத்து வருகிறது. அதன் விளைவு, மக்கள் சோம்பலாகி தங்களுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் அரசிடம் எதிர்பார்க்கிறார்கள் என்பதை எனது சொந்தக் கருத்தாக நான் பதிவு செய்கிறேன். இடம் கொடுத்தால் வீடு கட்ட முன்வர வேண்டும். வீடு கொடுத்தால் அதைப் பழுது செய்துகொள்ள முன்வர வேண்டும். அந்த இடத்திற்கு மக்களை நாம் தயார் செய்ய வேண்டும். அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். நிதிநிலை அறிக்கை பக்கங்கள் 10 மற்றும் 11–ல் வேலைவாய்ப்பு பற்றிய விவரம் அதிகப்படியாக இருந்ததைப் படித்துப் பார்த்து மிகவும் சந்தோஷத்தில் உள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு யார் நிறைய செய்தார்கள் என்பதைவிட, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் யார் அழைத்துச் சென்றார்கள் என்பதே முக்கியம்.

மாநிலத்தில் மக்கள் நன்றாக இருந்து, மாநில அரசு கஷ்டத்தில் இருந்தால் ஆட்சியை அந்த மக்களும் சேர்ந்து குறை கூறுவார்கள். நிதி பற்றாக்குறை, கடன் சுமையில் தமிழகம் என்றெல்லாம் குறையும், கேலியும் பேசும் எதிர்க்கட்சியினருக்கும், நம் மாநில ஊடக மற்றும் செய்தியாளர்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறேன். நாம் குறையும், கேலியும் பேசும் மாநிலம், அண்டை மாநிலம் அல்ல. நாம் அனைவரும் குடியிருக்கும் நம் வீடு, நம் தாய் வீடு தமிழகம். அதைக் கருத்தில்கொண்டு விமர்சனங்கள் ஆலோசனைகளாக இருத்தல் வேண்டும் என உங்களை இருகரம் கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி தமிழக அரசின் வருவாயைப் பெருக்கக்கூடிய விஷயமாக அமையும் பஸ் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, செல்வந்தர்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு சிறிய வரி விதிப்பு போன்ற நியாயமான, மக்களைப் பெரியளவில் பாதிக்காமல் அரசு வருவாயைக் கூட்ட எதிர்க்கட்சியும் ஆதரவு தர வேண்டுமென்ற கருத்தை எனது சொந்த விருப்பமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், உறுப்பினர் நல்ல கருத்து சொல்கிறார். அதைக் கேளுங்கள்.

**திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970 வாக்கில் அமெரிக்கர் ஒருவர் பெரியாரைப் பேட்டி கண்டார். இந்தியாவில் வெகுமக்கள் மூட நம்பிக்கைக்காரர்களாக இருப்பது பற்றி பெரியார் தனது ஆதங்கத்தைப் பேசிக் கொண்டிருந்தார். பேட்டி காண வந்தவர் அவருடைய நாட்டிலும் இப்படி மக்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டவுடன், முட்டாள்தனம் எங்கள் நாட்டுக்கு மட்டும் சொந்தமல்ல. உங்கள் நாட்டுக்கும்தான் சொந்தம் என்று அழுத்தமாக அவரிடம் கூறினார். இந்தியர் மட்டுமே மூடத்தனமாக இருக்கிறார்கள் என்று பெரியார் கூறுவார் என்று நம்பி வந்த பேட்டியாளர் ஏமாற்றம் அடைந்தார். தமிழக நிதிநிலை பற்றாக்குறை ஏதோ அ.தி.மு.க. ஆட்சியில் மட்டுமல்ல, தி.மு.க. ஆட்சியிலும்தான் இருந்தது. நிதிப் பற்றாக்குறை அ.தி.மு.க.வுக்கு மட்டும் சொந்தமல்ல என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 1–55

காஞ்சிபுரத்தில் ஒரு மாமன்றத்தில் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ந்தது. அங்கே தமிழ்ப் புலவர் ஒருவர் பேசும்போது, 'சிவம்' என்ற சொல் தமிழ் அல்ல, வட மொழி என்றார். மற்றொரு புலவர் அது வட மொழி அல்ல, தமிழ்ச் சொல்தான், மறைமலையடிகள் அவ்வாறே கூறுகிறார் என்றார். ஆயிரம் மறைமலையடிகள் கூறினாலும் நான் ஏற்கமாட்டேன் என்றார் முதல் புலவர். மீண்டும் விவாதம் கடுமையாகியது. அடுத்து அண்ணா பேசுகையில், இவர்களுடைய விவாதத்தைக் கேட்டதும், 'இரண்டு தமிழ்ப் புலவர்கள் கூடிய இடத்தில் காவல் நிலையம் வேண்டும் என பெரியார் கூறியது இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது' என்று குறிப்பிட்டாராம். அதுபோல் மாநிலத்தில் எங்கு காவல் நிலையம்

அமைக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் இடத்தில் முதலில் காவல் நிலையம் இருக்க வேண்டுமென்ற அளவிற்கு சட்டசபை நிகழ்வுகள் உள்ளன என்பதை எனது நடவடிக்கையையும் சேர்த்து இதற்கு என் வருத்தத்தை இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யூகோஸ்லேவியாவில் இரண்டாம் உலகப் போர் முடியும் தருவாயில் ஒருவன் ஒரு பெயரைச் சொல்லி 'ஒழிக' என உரக்கக் கத்தினான். அதற்காக அவனுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது. ஏனெனில் டிட்டோவிற்கு அந்த பெயர் கொண்டவர் நெருங்கிய நண்பர். தண்டனை முடிந்து அவன் வெளியே வந்தான். மகிழ்ச்சியுடன் அதே பெயரை மீண்டும் சொல்லி 'வாழ்க' என்று கத்தினான். திரும்பவும் அவனுக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது. ஏனெனில், டிட்டோவிற்கு அந்தப் பெயர் கொண்டவர் அப்போது கடுமையான எதிரி. நண்பராய் இருந்தவர் எதிரியாய் மாறிவிட்டார் என்பதைக் குறிப்பதற்காக யூகோஸ்லேவியாவில் மக்கள் சொல்லும் கதை இது. அதுபோல, தமிழக பட்ஜெட் பற்றிய கருத்து இந்த சபையிலே இரண்டு ஆட்சியிலும் இடம் பெற்று விவாதம் நடந்துள்ளது என்பதை நினைவூட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹிட்லரின் ஆட்சியில் அதுதான் இறுதி நாட்கள். ஜெர்மனியில் உணவுப் பஞ்சம் கடுமையாக இருந்தது. உண்மை நிலை இவ்வாறு இருக்க பஞ்ச நிலை பற்றி தெரிந்துகொள்ள ஹிட்லர் கோயரிங்கை அழைத்து, 'நம் உணவு நிலைமை எப்படி இருக்கிறது' என்று விசாரித்தார். 'கவலைப்படாதீர்கள், நம் கைவசம் இருக்கும் உணவுப் பொருட்கள் இன்னும் பத்தாண்டுகளுக்கு போதும்; பஞ்சமில்லை' என்று கூறினார் கோயரிங். அப்படியா! என்று மகிழ்ச்சியான ஹிட்லர், உடனே இதை ஜெர்மன் மக்களுக்கு நான் அறிவிக்க வேண்டும் என்று பரபரப்போடு எழுந்தார். 'ஜெர்மன் மக்களைப் பற்றி யார் பேசினார்கள். நம் இருவருக்கு மட்டுமே பத்து ஆண்டுகளுக்குப் போதும் என்றல்லவா நான் சொன்னேன்' என்று நிதானமாகச் சொன்னார் கோயரிங். இப்படிப்பட்ட நிலையில் மின்சாரம், தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் இருந்ததை நான் நினைவூட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சி உறுப்பினர் பேசும்பொழுது, 2001 முதல் 2006 வரை தொலைநோக்குப் பார்வையோடு மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டங்களை உருவாக்கியிருந்தால் 2007–2008 ஆம் ஆண்டில் மின்வெட்டு வந்திருக்காது என்றும், மின்சாரம் தயாரிப்பை இட்லி சுடுவதற்கு ஒப்பிட்டும் கூறினார். நான் அதையே இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். 2006 ஆம் ஆண்டுவரை மின் மிகை மாநிலமாக இருந்த தமிழகத்தில் அதிக தொழிற்சாலைகளை அவர்களது ஆட்சியில் கொண்டு வந்ததால்தான் மின் பற்றாக்குறை வந்ததாகவும் இங்கு பதிவு செய்தார். நான் அதேமுறையில், உணவுப் பழக்கத்தை வைத்து ஓர் உதாரணம் கூற விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பது ஒரு விருந்தினரை தனது மாநிலத்திற்கு அழைப்பார்களேயானால், தனது உணவு நிலை எப்படி இருக்கிறது? அந்த விருந்தினர்களுக்கு சமைத்து அவர்களுக்குப் பரிமாறும் அளவிற்கு நம்மிடம் உணவுப் பண்டங்கள் இருக்கிறதா என்பதையெல்லாம் ஆராய்ந்துவிட்டுத்தான் அவர்களை விருந்துக்கு அழைப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் நல்ல நிருவாகம் என்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தெரிந்து வைத்திருக்கிறது. ஆனால், தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு அனுமதி கொடுத்துவிட்டு மின்சாரத்தின் நிலையை பின்னால் யோசித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிருவாகம் எப்படிப்பட்டது என்பதை இந்த மாமன்றமே முடிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் அதன் முடிவிற்கே விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ், தொலைநோக்குப் பார்வை கொண்ட அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழ்நாடு மின் சுயசார்பு நிலையை எட்டிய மாநிலமாக மாறியுள்ளது. மேலும் அம்மா அவர்களின் அரசின் மின் துறை செயல்பாடுகள் குறித்து, 2017–2018 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புத்தகத்தில் 36, 37, 38 மற்றும் 39 ஆகிய பக்கங்களில் நீண்ட தெளிவுரையாக உள்ளது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்னும் விளக்கமாக இந்த மாமன்றத்தில் எடுத்துரைக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கொள்கையானது படிப்படியாக பூரண மதுவிலக்கை எய்துவதுதான். அதன் அடிப்படையில் 24—5—2016 முதல் தமிழ்நாடு வாணிபக் கழக சில்லரை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்கள் காலை 10—00 மணி முதல் இரவு 10—00 மணிவரை இயங்கியதை தற்போது நண்பகல் 12—00 மணி முதல் இரவு 10—00 மணி வரை என நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 2—00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:** மேலும், 19—6—2016 முதல் மாண்புமிகு அம்மா அவர்களின் கையெழுத்தில் 500 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. பிறகு, 24—2—2017 முதல் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கையெழுத்தின்மூலம் மேலும் 500 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. இப்படி, படிப்படியாக மாண்புமிகு அம்மா வழியில் நடக்கும் இந்த ஆட்சிக் காலத்திலேயே தமிழகம், பூரண மதுவிலக்கை அடையும் என நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘மேய்ப்பனை விரட்டினால் ஆடுகள் சிதறி ஓடும்’ என்பதுபோல, அம்மா இல்லை என்பதால் தொண்டர்கள் சிதறிவிடுவார்கள் என்பது பலரின் எண்ணம். அந்த எண்ணம் வெற்றியடைய நாங்கள் ஒருநாளும் விடமாட்டோம். நரிகளின் சலசலப்புக்கு அஞ்ச நாங்கள் ஆட்டு மந்தைகள் அல்ல. சிங்க நிகர் தலைவியின் வழி செல்லும் சிங்கக் கூட்டங்கள் என்பதை நினைவுபடுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) நிலையான நல்லாட்சியைத் தொடர்ந்து நடத்த மறைந்த நமது புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் நம்பிக்கையோடு ஆட்சிப் பொறுப்பை மீண்டும் அளித்த தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளைத் தொடர்ந்து நிறைவேற்றிட, எதிர்வரும் தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து இரட்டை இலைச் சின்னத்தில் வெற்றி பெற்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து வழிகாட்டுக் குழுவின் தலைமையில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 4 ஆண்டுக்காலம் மக்கள் பணி செய்வோம் என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரசு சர்க்கரை ஆலை மிகவும் நலிவடைந்து வருகிறது. அதிலுள்ள இயந்திரங்கள் ஆலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பொருத்தப்பட்டவை. அவற்றைப் புனரமைத்து, எங்கள் மாவட்ட கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் நிதியினை ஒதுக்கித் தருமாறு இந்த அரசுக்குக் கோரிக்கையாக வைக்கின்றேன்.

அதேபோல, மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் அறிவித்த அரியலூர் மாவட்டம், எனது குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், கோட்டைக்காடு வெள்ளாற்றின் குறுக்கே மேம்பாலம் ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு ஒரு முக்கிய வேண்டுகோளாக நான் விடுப்பது என்னவென்றால், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என தமிழக மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து, மறைந்த மக்கள் சொத்தான அம்மா அவர்கள் வாழ்ந்த இல்லத்தை யார் கெடுத்தாலும், யார் தடுத்தாலும் சட்ட ரீதியாகக் கையாண்டு, அரசுடைமையாக்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பயன்படுத்திய கார் உட்பட அனைத்துப் பொருட்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் புகைப்படங்களையும் பொதுமக்கள் பார்வைக்குக் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தின் இளம் தலைவராய், நாளைய இந்தியாவை ஆளத் தயாராக இருக்கின்ற எங்கள் இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் பிறந்த நாள் இன்று. அந்தப் பிறந்த நாளில் எனக்குப் பேச வாய்ப்பைக் கொடுத்த எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரம், மது—இரண்டும் எங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கைவசம் இருந்து—அதைப் பற்றிய விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மின் இணைப்பு, மக்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்த உங்கள் அறிவிப்பைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் விவசாயிகளுக்கும் நீங்கள் எவ்வளவு கால அளவில் மின் இணைப்பைக் கொடுப்பீர்கள் என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். தமிழகத்தில், மின்சாரம், தன்னிறைவு என்பதை நாங்கள் உணர்கிறோம்; பாராட்டுகிறோம். 'ஆனால் ஒப்பந்தம் போட்டதனால் நாங்கள் மின்சாரத்தை வாங்காமலும் அதற்குரிய பணத்தைக் கட்ட வேண்டியிருக்கிறது' என்ற அந்த நிலையை மாற்றுவதற்கு நமது அரசாங்கம் என்ன முடிவு எடுக்கப் போகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். ஒரு பொருளைப் பயன்படுத்தாமல் அதற்குரிய கட்டணத்தைக் கட்டுவது என்பது நியாயமாகத் தெரியவில்லை. MoU என்கிற Memorandum of Understanding பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை மாற்றுகின்ற நிலையை நமது அரசு உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டுள்ளார்கள். எடுக்கவில்லையென்று சொன்னால், fixed cost தர வேண்டும். முழுமையாக இல்லை. இன்றையதினம் மின்சாரம் அதிகமாக இருக்கிறது. காற்றாலைகளினுடைய மின்சாரம் அதிகமாக இருக்கிறது. அப்போது thermal unit-களினுடைய மின்சாரத்தை எடுக்கவில்லை என்று சொன்னால் fixed cost தரவேண்டுமென்றுதான் சொன்னேனேயொழிய, முழுமையாகத் தரவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

ஏனென்றால் தேவை இருக்கின்றது. அந்த மின்சாரத்தை நாம் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். எடுக்காத காலக்கட்டங்களில்தான் அதேபோன்று இருக்கின்றது.

*பிற்பகல் 2–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடுக்காத காலக்கட்டங்களில் நாம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். தவறுதலாக நான் சொல்லியிருந்தால் மன்னிக்கவும்.*

*மின்சாரத் தன்னிறைவு பெற்ற மாநிலமாக நீங்கள் செய்திருக்கின்றீர்கள். அதை நான் பாராட்டுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உறுப்பினர் நன்றாக பாராட்டுங்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *ஆளுங்கட்சி சார்பிலும், எதிர்க்கட்சி சார்பிலும் தொடர்ந்து குற்றச்சாட்டுகளும், பதிலும் இருந்தன. ஆனால், கடந்த 50 ஆண்டுகளாக இரண்டு ஆட்சிகள்தான் இருந்து கொண்டிருக்கின்றன. 1967–லே நாங்கள் விட்டுவிட்டோம். பிடிப்பதற்கு நாங்கள் இன்னும் முயற்சி செய்துகொண்டே இருக்கிறோம். இவற்றையெல்லாம் கவனித்து நிச்சயமாக காமராஜர் ஆட்சியைக் கொண்டு வருவோம் என்பதையும் இந்த சபையில் பதிவு செய்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் ஆட்சி வரவேண்டுமென்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அவர்களுடைய கூட்டணியிலிருந்து விலகி, அடுத்த முறை தனியாகப் போட்டி போடப் போகின்றீர்களா?*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *அதற்குக் காலம் பதில் சொல்லும். நேரு பெருமான், இராஜகோபாலாச்சாரியார் அவர்களைப் பார்த்து* ‘Father of Prohibition’ *என்று சொன்னார்கள். முதன்முதலாக*

மதுவிலக்கை சேலத்தில் கொண்டு வந்தவர் இராஜாஜி அவர்கள். ஓமந்தூரரார் ராமசாமி ரெட்டியார் காலம்வரை, 1967 வரை, மது இந்த நாட்டில் தலையெடுக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில், ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவேன் என்று சொன்னார்கள். நிதி அமைச்சகத்தோடு தொடர்புகொள்கின்ற நேரத்தில், பணம் பற்றாக்குறையாக இருந்தது. அப்போது சிலர் மதுக் கடைகளைத் திறந்துவிடலாமா என்று சொன்னார்கள். அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்தப் படி அரிசியைப் போடுவதற்காக மதுக் கடைகளைத் திறக்க வேண்டுமென்று சொன்னால், எனக்கு ஆட்சியே தேவையில்லை என்று சொன்னார்கள். அதை மனதில் நிறுத்திக்கொள்ளுங்கள் என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் பேரறிஞர் அண்ணாவைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) அண்ணா இரண்டு பேருக்கும் சொந்தம். 'மதுவால் வருகின்ற காசு பாவக் காசு' என்று காந்திஜி அவர்களும், 'குடிப்பதைத் தடுப்பதே கோடி கோடி புண்ணியம்' என்று நாமக்கல் கவிஞர் அவர்களும் சொல்லியிருக்கின்றார்கள். ஆக, நான் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இருந்து கொண்டுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். பக்கத்து மாநிலத்திலிருந்து நான் பேசவில்லை என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் மதுவைப் பற்றி பேசினார்கள். பாண்டிச்சேரியில் இப்போது மது விற்பனை எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும், எப்படி மதுபானங்கள் விற்கப்படுகின்றன என்பதையும் மற்ற மாநிலங்களில், காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களில் மது விற்பனை எப்படியிருக்கின்றது என்பதையும் அவர் உணர்ந்து பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தில்தான் இப்போது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மணிலாவில் என்ன

நடக்கின்றது? கோவாவில் என்ன நடக்கின்றது? கர்நாடகாவில் என்ன நடக்கிறது? என்பதைப் பற்றியெல்லாம் நமக்குக் கவலையில்லை. தமிழ்நாட்டு மக்களின் சார்பாகத்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கின்றீர்கள். நாங்களும் அந்த மக்களால்தான் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டிருக்கின்றோம். நான் உண்மையை எடுத்துச் சொல்கிறேன். அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியில் மது விற்பனை நடந்தாலும்கூட தமிழ்நாட்டு மக்கள்தான் அங்கே மது அருந்துவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள். இதே சப்ஜெக்ட் குறித்து நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முழுவதும் போய்விடும். அதனால், வேறு சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலிக்குத் தங்கம் திட்டம். நான்கூட அமைச்சர் பெருமக்களுடன் சேர்ந்து கொடுத்தேன். அந்தப் பெண்களெல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அரசு தாலிக்கு 8 கிராம் தங்கம் கொடுக்கிறது. ஆனால், எங்களுடைய வீட்டுக்காரர்கள் அதை மது அருந்துவதற்காக பறித்துக் கொண்டு போய்விடுகின்றார்கள் என்று வெளியிலே வரும்போது அந்தத் தாய்க் குலங்கள் சொல்கின்றார்கள். எனவே, மதுக் கடைகளை இந்த ஆண்டு இறுதிக்குள், இந்த ஆட்சிக் காலத்தில் மூடுவோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். தயவுசெய்து மதுக் கடைகளை மூடிவிடுங்கள். உங்களுக்கு நல்ல ஆசீர்வாதம் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மதுக் கடைகளை கண்டிப்பாக. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதற்கெடுத்தாலும் வெளிநடப்புச் செய்கின்றபோது, எங்களுக்கு எப்படி நீங்கள் ஆசீர்வாதம் செய்வீர்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

பிற்பகல் 2—10

**திரு. எச். வசந்தகுமார்:** நாட்டில் மதுவால் 4 நிமிடங்களுக்கு ஒருவரும், ஒரு மணி நேரத்திற்கு 15 பேரும், ஆக, ஒரு வருடத்தில் 1 இலட்சத்து 31 ஆயிரத்து 400 பேர் இறக்கின்றார்கள். அவர்கள் ஆவி இங்கு நம்மை சுற்றிக்கொண்டேயிருக்கிறது. இந்த மதுவால் நான் செத்துவிட்டேன், என் குழந்தை குட்டிகளை நான் காப்பாற்ற முடியவில்லையென்று, அந்த ஆவிகள் எல்லாம் சட்டமன்றத்திற்குள் வரவில்லையே தவிர, வெளியே சுற்றிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை ஆவி சுற்றிச்சுற்றி வரும்போல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், வேறு subject-க்குப் போங்கள். நேரம் குறைவாக இருக்கிறது. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் மின்சாரத்தை முடித்தாகிவிட்டது. மது குறித்து இன்னும் பேச வேண்டும். அதன்பிறகு என் தொகுதி குறித்துப் பேச வேண்டும். எவ்வளவு நேரம் இருக்கிறது இன்னும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை; அவ்வளவுதான் நேரம் முடிந்தது.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் தேசிய நெடுஞ்சாலைகளில் மதுக் கடைகளைத் திறக்கக் கூடாது என தடை விதித்துள்ளது. 500 மீட்டருக்குத் தள்ளிதான் திறக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதைத் தமிழக அரசு நிச்சயமாகக் கடைபிடிக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியவில்லை என்று நினைக்கின்றேன். 31–3–2016 அன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தது. 1–4–2016 அன்றே அந்த தீர்ப்புக்குட்பட்டு 500 மீட்டருக்குள் இருந்த 3,321 கடைகள் மூடப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்திற்குட்பட்டு என்றுதான் சொன்னேன். நான் சொன்னதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. (குறுக்கீடு) நான் சொன்னது கடை திறந்திருக்கிறது என்றுதான். இல்லையென்று சொல்லவில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. மு. திராவிடமணி மற்றும் திரு. எஸ். ஆஸ்டின் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நினைவூட்டத்தான் செய்தேன்.

*நீங்கள் செய்யவில்லை என்று சொல்லவில்லை. அதன்பிறகு என் தொகுதி குறித்துப் பேசுகிறேன். நான் ஏற்கெனவே பல முறை இந்தச் சட்டமன்றத்தில் போக்குவரத்துத் துறை சம்பந்தமாகப் பேசியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா நாட்களிலும் சிரிக்கிறார். நான் 41 ஊர்களுக்குப் பேருந்துகளை விடுங்கள், சில இடங்களில் நிறுத்துங்கள், கொஞ்சம் தள்ளி நிறுத்துங்கள், பள்ளி அருகில் நிறுத்துங்கள் என்று கோரிக்கை வைத்தால், ஒரு காரியம்கூட இதுவரை நடைபெறவில்லை என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள் பேசும்போது போக்குவரத்துத் துறை குறித்து நினைக்காமலிருக்கிறாரே என்று நினைத்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். அவர் பேசும்பொழுதெல்லாம் போக்குவரத்துத் துறை பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கிறார். நானும் அவரது தொகுதியிலே இயக்கப்படக்கூடிய பேருந்துகளின் விவரங்களையெல்லாம் எடுத்துப் பார்த்தேன். அவர் தொகுதியில் இயங்கக்கூடிய பேருந்துகளில்* occupancy ratio *அதாவது பயணிகளின் அடர்வு 40 சதவிகிதத்திற்கு மேல் இல்லை. இருந்தபோதிலும் அவர் கேட்கின்ற அந்த ஊர்களுக்கு அருகாமையிலே பேருந்து வசதிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை சென்ற கூட்டத் தொடரிலே அவர்களிடத்தில் புள்ளிவிவரமாக எடுத்துக் கூறியிருக்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த ஊர்களுக்கு என்று எழுத்துபூர்வமாகக் கொடுத்தால் நாளைக்கு அதுசம்பந்தமான முழு விவரத்தையும் இந்த அவையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்*

நேரடியாகக் கொடுத்திருக்கிறேன். முன்னாள் முதலமைச்சர் அவர்களிடமும் கொடுத்திருக்கிறேன். இந்நாள் முதலமைச்சர் அவர்களிடமும் கொடுத்திருக்கிறேன். ஒரு முறைக்கு நான்கு முறை கொடுத்திருக்கிறேன். தயவுசெய்து நீங்கள் அதை எடுத்துப் பாருங்கள். இல்லையென்று சொன்னால் இன்று மாலைக்குள்ளேயே நான் கொடுக்கிறேன். அதைப் பார்த்தாவது பேருந்து வசதி செய்து கொடுத்தால் போதும். நான் சென்ற கூட்டத் தொடரிலே சொன்னேன் நாச்சாங்குளம், பத்மநாபபுரம் ஊர் மக்கள் பேருந்தையே பார்க்கவில்லை என்று. சபை உறுப்பினர்களெல்லாம் சிரித்தார்கள். சிலர் ஆச்சரியப்பட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் குற்றமாகச் சொல்லவில்லை. எங்களுக்கு வாக்களித்துள்ளார்கள். 8 உறுப்பினர்களுக்கு காங்கிரஸ் சார்பாக வாக்களித்துள்ளார்கள். நாங்கள் மரியாதையாக தொகுதிக்குள்ளே போகவேண்டும்.

தமிழக அரசிற்கு மேலும் ஒரு வேண்டுகோள். நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த நிருவாகம் சரியாக நடைபெறவில்லை. அதன் கணக்கு–வழக்குகள் சரியில்லை. அவர்கள் தமிழக அரசையும் சேர்த்து ஏமாற்றுகிறார்கள். கடந்த முறைகூட நான் வலியுறுத்தினேன். தயவுசெய்து தமிழக அரசு அதற்கு விசாரணை கமிஷன் போட வேண்டும். பக்கத்துத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் இன்பதுரை இருக்கிறார்கள். இளைஞர்களுக்கெல்லாம் வேலை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதைக் கொண்டு வந்தோம். அங்கே தவறுகள் நடக்கின்றன. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து விசாரணை நடத்தி உண்மையை வெளியே கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள் நாங்குநேரி SEZ பற்றி கேள்வி கேட்டார். அது AMRL கம்பெனியிலிருந்து SREI கம்பெனிக்கு மாறியிருக்கிறது. எல்லா விவரங்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதில் கொஞ்சம் flats promote

செய்து, Multi mixed Commercial Complex கட்டியிருக்கிறார்கள். அந்த விவரமும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை, அரசின் சார்பாக ஏற்று, சிறப்புக் கவனம் மேற்கொண்டு, ஆய்வு செய்து அதற்குண்டான வழிவகைகளை ஆராய்ந்து, examine செய்து, அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

பிற்பகல் 2–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்த இலாபமும் கிடையாது. எந்த நோக்கத்தோடு இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஆரம்பித்தோமோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான். நான் நேரடியாக அந்த அலுவலகத்திற்கு இரண்டு முறை சென்றேன். உங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 10 தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்ன நோக்கம் இருக்கிறதோ தனிப்பட்ட கடிதம்மூலம் தெரிவித்தால், அதற்குண்டான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அரசின் சார்பாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில்

இரண்டு, மூன்று நிறுவனங்கள் தொழில் துவங்க வந்து, அங்கு கூரை போடப்பட்டதோடு பணிகள் நிற்கின்றன. H.C.L. கம்பெனி வந்திருக்கிறது. அந்த ஒரு கம்பெனி மட்டும்தான் உருப்படியான கம்பெனியாக இருக்கிறது. அந்த நிறுவனமும் இன்னும் தொழிலைத் தொடங்கவில்லை. அவர்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி, பாதை வசதி மற்றும் இதர வேலைகள் செய்து தரவேண்டும். நான் எனக்காகச் சொல்லவில்லை. குற்றம் சொல்வதாகத் தயவு செய்து நினைக்காதீர்கள். அந்தப் பகுதியில் உள்ள எழையெளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதற்காகத்தான் அந்த SEZ ஆரம்பிக்கப்பட்டது. தயவுசெய்து அரசு இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாமிரபரணி, கருமேனியாறு – மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 2006–ல் அந்தத் திட்டம் உயிர் பெற்றது. அந்தத் திட்டத்திற்காக அவர்கள் 369 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அதன்பிறகு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் பலமுறை கேட்டேன். அவர்கள் இன்முகத்துடன் 300 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் நில மதிப்பு அதிகமாகிவிட்டது. எங்கள் காங்கிரஸ் ஆட்சியில் 1 ரூபாய் ஒரு நிலம் என்று சொன்னால் 4 ரூபாய் சேர்த்து கொடுக்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தை விவசாயிகளுக்காக மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்தது. நாம் நிலம் எடுத்தநேரத்தில் விலையை அதிகமாகக் கொடுக்காமல், கொஞ்சம் சமாளித்து வாங்கினோம். இப்போது அவர்கள் கேட்கிறார்கள். அந்தப் பணத்தை நீங்கள் தயவுசெய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். இப்போது தண்ணீர் பஞ்சம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் யாராவது ஒருவர் தயவுசெய்து என்னுடன் வாருங்கள். அந்தப் பகுதி மக்கள் கண்ணீர் விடுகிறார்கள். நாங்கள் குளிக்கவில்லை என்கிறார்கள். ஒரு தாய் சொல்கிறார், ‘நான் குளிக்காவிட்டாலும் பரவாயில்லை, என்னுடைய குழந்தையைக் குளிப்பாட்ட முடியவில்லை’ என்று கண்ணீர் விடுகிறார்கள். இந்த மாதிரியான ஒரு நிலை தமிழகத்தில் இருக்கக் கூடாது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வாழ்ந்த இந்தத் தமிழகத்தில் அப்படி இருக்கக் கூடாது. நீங்கள் சொல்வது போல ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று சொன்ன புரட்சித் தலைவி அவர்கள் ஆண்ட இந்த நாட்டில், எம்.ஜி.ஆர். அவர்கள் ஆண்ட இந்த நாட்டில், கலைஞர் அவர்கள் ஆண்ட

இந்த நாட்டில், இப்படி பெண்கள் கண்ணீர்விடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். தயவுசெய்து இதில் சிறப்பு கவனம் செலுத்தி, எங்களையும், எங்கள் மக்களையும், நீங்கள் நிச்சயமாகக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** நான் பேசவேண்டியது நிறைய இருக்கிறது. கடந்த முறையும் நீங்கள் இப்படித்தான் இடையில் பேசவிடாமல் விட்டுவிட்டீர்கள். எங்கள் பாசமிகு சகோதரர்கள் ஒரு மணி நேரம் பேசினார்கள். ஆளுங்கட்சி சகோதரர்கள் சொன்ன கருத்தையே இரண்டு பேரும் மாற்றி, மாற்றி படித்தார்கள். காங்கிரஸ்காரர்கள் எப்படிப் பேசுவது? தயவு செய்து எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, இரண்டு நிமிடங்களில் முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. ஆளுகின்ற வாய்ப்பும் எங்களுக்குக் கொடுக்கவில்லை, பேசுகின்ற வாய்ப்பும் கொடுக்கவில்லை என்றால், நாங்கள் எப்படி வாழ்வது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி, கீழநத்தம் பஞ்சாயத்தில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்மூலம் Village Sports Centre ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்மூலம் அது ஏற்பட இருக்கிறது. தயவுசெய்து அதற்குரிய நிதியை நீங்கள் நிச்சயமாக ஒதுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏராளமான பாலங்கள் மற்றும் சாலைகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரின் உதவியால், களக்காடில் 80 இலட்சம் ரூபாய் செலவில் பாலம் கட்டித் தருவதற்கு தமிழக அரசு

ஒப்புதல் தந்திருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சிலை நிற்கின்ற அந்த இடத்தில், 100 ஆண்டுகளுக்கு முன்னால் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டிய அந்தக் கற்பாலத்தை மாற்ற 80 இலட்சம் ரூபாய் அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதேபோல, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், சீக்கிரம் உரையை முடியுங்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) அவர் 18 நிமிடங்கள் பேசியிருக்கிறார்.

பிற்பகல் 2–20

**திரு. எச். வசந்தகுமார்:** ஒரு மணி நேரம் கொடுக்க வேண்டும் அல்லவா? சாதாரணமாக பனை மரங்கள் ஏராளமாக வளர்கின்றன. சில அழிந்துவிட்டன. 6 கோடி பனை மரங்களில் இப்போது ஏறத்தாழ 4½கோடி பனைமரங்கள்தான் இருக்கின்றன. அதிலிருந்து எல்லாவிதமான உணவுப் பொருட்களும், பயன்படுத்துகின்ற பொருட்களும் கிடைக்கின்றன. ஆனால், இப்போது பனை மரம் ஏறுவதற்கு ஆள் இல்லை. எனவே, பனை வாரியத்தின்மூலம் இளைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து, இயந்திரங்களையும் இலவசமாகக் கொடுத்தால் தமிழ்நாட்டிற்கு இன்னும் அதிகமாக கோடிக்கணக்கில் பணம் வரும். எனவே, தமிழக அரசு அதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் மருதங்குளத்திலுள்ள பள்ளிக்கூடத்திற்கு இரண்டு ஆசிரியர்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றி ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் நான் சொல்லியிருக்கின்றேன். மருதங்குளத்தில் 2 ஆசிரியர்களும் மற்றும் ஏர்வாடியில் ஓர் ஆசிரியரும் பணியமர்த்தப்பட வேண்டும். அதாவது, வணிகவியல், பொருளியில் மற்றும் கணக்கியல் பாடங்களில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து இயல்களுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *நன்றி. இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை. நாங்கள் காங்கிரஸ் எம்.எல்.ஏ.–க்களாக இருப்பதனால், சில* local police station*–ல் கிள்ளுக்கீரையாக நினைக்கின்றார்கள். இன்று எங்கள் இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்குப் பிறந்த நாள். காங்கிரஸ் தொண்டன் இரவு பகலாகக் கஷ்டப்பட்டு இன்றைக்கு ஒரு நாள் அந்தப் பிறந்த நாளைக் கொண்டாடுகிறான். வருடம் முழுவதும் கொண்டாடுவதற்கு அவனிடம் பணம் இல்லை. எங்களுடைய இளம் தலைவர் என்று சொல்லி, திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு கட்அவுட்டை வைத்தால், இரவு 12 மணிக்கு களக்காடு பகுதியில் அதை காவல் துறையினர் அகற்றிவிட்டு போய்விட்டார்கள். இந்த நாட்டில் இது என்ன நியாயம்? ஒவ்வொரு தலைவருக்கும் 10 நாட்கள், 20 நாட்கள் என்று கட்அவுட் வைக்கின்றார்கள். எங்கள் ராகுல் காந்தி அவர்களுக்கு ஒரு நாள் இரவுகூட கட்அவுட் வைக்க அனுமதிக்காமல் களக்காடு காவல் துறையினர் எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். இது நியாயமா?*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதிலும் அரசு தலையிடுவது கிடையாது. சட்டப்படி நீங்கள் அனுமதி பெற்றிருந்தால், அதுபோன்ற கட்அவுட்டுகளை அகற்றி இருக்க மாட்டார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், அடுத்த சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நாள் கட்அவுட் வைக்க அனுமதி வாங்க வேண்டும் என்பதற்காக எஸ்.பி. அவர்களிடம் செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். எஸ்.பி. அவர்களிடம் சென்று அனுமதி வாங்கி வருவதற்குள் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு இன்னும் ஒரு வயது வந்துவிடும். எப்படி அய்யா நாங்கள் அனுமதி வாங்க முடியும்? நாங்கள் அதிக நாட்கள் கேட்கவில்லை. ஒரே ஒரு நாள்தான் கேட்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு அனுமதி வாங்குவதற்குள் அடுத்த பிறந்த நாள் வந்துவிடும் என்று சொல்கின்ற காரணத்தினாலேயே, இனிமேல் தமிழகத்தில் அவர்களுக்கு எதிர்காலமே இல்லை என்ற நிலையை உருவாக்கியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அப்படி அல்ல. நிருவாகம் அப்படி இருக்கின்றது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்று சொன்னால், ** இந்த ஜனநாயக நாட்டில் என்ன செய்யச் சொல்கின்றீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஏதேதோ பேசிக்கொண்டு இருக்காதீர்கள், வேறு சப்ஜெக்ட் பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது G.S.T. சம்பந்தமானது. விவசாயிகளுக்குத் தேவையான உரத்திற்கு 6 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகித வரி போட வேண்டும் என்று சொல்கின்றார்கள். விவசாயிகள் பயன்படுத்துகின்ற உரங்களுக்கு வரியே வேண்டாம் என்று

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் விலக்கு வாங்க வேண்டும். தமிழக அரசு மத்திய அரசை நிர்பந்தப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே 41 ஊர்களுக்கு பேருந்துகள் இயக்கம் குறித்து சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ** என்ற ஒரு குறிப்பைச் சொல்லியிருக்கின்றார்கள். ஏதாவது ஒரு நிகழ்வை குறிப்பிட்டுச் சொன்னால், ஏதாவது ஓர் இடத்தில் அப்படி நடைபெற்றது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியும். பொத்தாம் பொதுவாக இதுபோன்ற கருத்துகள் கூறப்படுவது ஏற்கத்தக்கதல்ல. எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவருடைய கோரிக்கை ஏற்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ** என்கிறார்கள். அதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், இப்படியே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரி நீக்கிக்கொள்ளுங்கள், தவறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, நாங்குநேரி தொகுதியில் விவசாயம் செய்து, **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இதற்கான ஆதாரங்களைக் கொடுத்துவிட்டு பேச வேண்டும். நீங்கள் வேறு சப்ஜெக்ட் பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா ஆதாரங்களையும் கலெக்டர் அவர்களிடம் கொடுத்துவிட்டோம், பணம் ஒன்றும் வரவில்லை. துணை சபாநாயகர் அவர்களே, அவன் அங்கே பட்டினியாகக் கிடக்கின்றான். இந்த அரசு என்ன செய்துகொண்டிருக்கின்றது என்று கேட்கின்றான். எம்.எல்.ஏ. நீ என்ன செய்கின்றாய் என்று என்னைக் கேட்கின்றான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் ஆதாரமின்றி பேசிய அந்தப் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசிடம் தானே நாங்கள் கேட்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் அடுத்த சப்ஜெக்ட் பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே சப்ஜெக்ட்தான். அதாவது **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் ஆதாரங்களைக் கொடுத்துவிட்டு, அனுமதி பெற்று பின்னர் பேசுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** ஆதாரம் ஏற்கெனவே மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்தாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரம் கொடுத்து, அனுமதி பெற்று பேசுங்கள். வேறு சப்ஜெக்ட் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 2–25

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது தொகுதியில் தண்ணீர் பஞ்சம் பெரியதாக இருக்கின்றது. 49 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கேட்கின்றார்கள். அவற்றில் 8 தொட்டிகளை அரசாங்கம் அளித்திருக்கிறது. அதனைப் பாராட்டுகிறேன். மேலும் 41 தொட்டிகள் தேவை. அந்த 41 தொட்டிகள் இருந்தால்தான் நான் தொகுதிக்குள்ளே நுழைய முடியும். தயவு செய்து அவற்றையெல்லாம் கொஞ்சம் கவனித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அடிக்கடி தொகுதியின் பக்கம் போகாதீர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தொகுதியின் பக்கம் சென்றுதான் சொந்தமாக ஒரு JCB இயந்திரத்தை வாங்கி, இலவசமாக டீசல் போட்டு, இலவசமாக driver–ஐ போட்டு, அரசு செய்ய வேண்டிய அதாவது, அங்கிருக்கின்ற குளங்களைத் தூர்வாரும் பணியை உங்கள் வசந்தகுமார் செய்துகொண்டிருக்கிறேன்.

(உறுப்பினர்கள் சிலர் கரவொலி எழுப்பினர்.)

நீங்கள் குளங்கள் மராமத்து என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) அய்யா ஒரு ஐந்து நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய பொதுவான கவனத்திற்கு, அவைக்குள் யாரும் கைதட்டக் கூடாது. அது ஒரு விதிமுறை. அதைப் பின்பற்ற வேண்டும். மேசையைத் தட்டலாம். கை தட்டக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, குளங்களை மராமத்து செய்வதற்காக நிதி ஒதுக்குகிறோம். நான் சென்றேன். இட்டமொழி அருகில் உள்ள குளத்திற்கு ரூ.7 இலட்சம் sanction செய்திருக்கிறார்கள். ஒரே ஒரு JCB இயந்திரம்; முதல் நாள் 10 மணி நேரம், இரண்டாவது நாள் 10 மணி நேரம், இன்னும் ஒருநாள் 10 மணி நேரம், 50,000/– ரூபாய்கூட செலவாகவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ.50,000/–

ரூபாய்கூடச் செலவாகவில்லை. அங்கு ரூ.7 இலட்சத்திற்கு பில் சென்றுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கின்றார். அங்கு பொதுப் பணித் துறை அதிகாரிகள், அதற்குண்டான estimate–ஐப் போட்டு, அதன்படிதான் அந்த நிதி ஒதுக்கப்படுகின்றது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியில் ஏதாவது முறைகேடுகள் இருந்தால், அதனைக் கொடுத்தால் அது குறித்து விசாரிக்கப்படும். அதற்காக பொத்தாம்பொதுவாக இவ்வாறு 50,000/- ரூபாய்தான் செலவாகியிருக்கும், 7 இலட்சம் ரூபாய் பில் வந்திருக்கிறதென்று சொல்லக் கூடாது. அரசு அதிகாரிகள் போட்ட estimate படிதான் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரே நிமிடம்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் வரிப் பணம் வீணாகிறது என்பதற்காகச் சொல்கிறேன். மக்கள் வரிப் பணத்தில் செய்கிறோம். நன்றாகச் செய்தால் சந்தோஷம். அங்கு மோசம் நடக்கிறதென்பதை உங்களிடம் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கப்பல் போக்குவரத்துத் திட்டம் ஆரம்பித்து,

மக்களை ஏற்றிச் செல்லலாம் என்ற திட்டம் இருந்தது. சென்னை–கன்னியாகுமரி, கன்னியாகுமரி–திருவனந்தபுரம் கடல் மார்க்கமாகச் செல்வதற்கான அந்தத் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. அதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பாளையங்கோட்டையில் நாங்கள் ஒரு விளையாட்டு உள் அரங்கம் கட்டினோம். நான், திரு. மைதீன்கான் போன்ற அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு விளையாட்டு உள் அரங்கம் கட்டினோம். ஆறு வருடங்களாக அந்த அரங்கம் திறக்கப்படாமல் இருக்கிறது. 1 வருடம், 2 வருடங்கள் அல்ல, 6 வருடங்கள் ஆகியும் இன்னும் திறக்கப்படவில்லை. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எங்களையும் அழைத்து அதனைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, அவ்வாறு இருக்குமேயானால், அதனை உங்கள் திருக்கரங்களால் நீங்கள் திறந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நல்ல பதில். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. ஒரே ஒரு நிமிடம். ஒரே ஒரு பாயின்ட்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 26 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேசி, அமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்ல வேண்டும். மணியைப் பாருங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாங்குநேரி தொகுதியைப் பொறுத்தவரையில் குளங்களை ஆழப்படுத்த நீங்கள் திட்டத்தைக் கொடுக்கிறீர்கள். முன்பிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டேன், அவர்கள் 7 என்று சொன்னார்கள். ஆனால் அந்த papers என்னிடம் வருவதற்குள் அவர்கள்

பணியை முடித்துவிட்டார்கள். தயவு செய்து என் தொகுதியில் பணிகள் நடைபெற்றால், குடிமராமத்துத் திட்டத்தில் இத்தனை குளத்திற்கு, இவ்வளவு தொகை sanction செய்திருக்கிறோம், சட்டமன்ற உறுப்பினர் மேற்பார்வையிடுங்கள் என்று சொல்லுங்கள். நான் 4 குளத்திற்குக் கொடுத்த பணத்தை 8 குளங்களாக மாற்றிக் காட்டுகிறேன். தயவுசெய்து எங்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுங்கள். சட்டமன்ற உறுப்பினர் அங்கு வந்து மேற்பார்வையிடுவார் என்று சொல்லுங்கள், நிச்சயமாக இந்த அரசிற்கு நான் நன்மையைத்தான் செய்வேன். ஒரு ரூபாய்கூட நாங்கள் எடுக்க மாட்டோம். நாங்கள் இலஞ்சம் வாங்காத கட்சி. கமிஷன் வாங்காத கட்சி. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *நன்றி சொல்கிறீர்களா? நீங்கள் நன்றி சொல்லி முடிக்கிறீர்களா? நான் முடிக்கவா? (குறுக்கீடுகள்)*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே, அனுமதி கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், தாமிரபரணி ஆற்றுக்கு 300 கோடி ரூபாய் கொடுத்த எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இன்னும் பாலங்கள் கொடுத்த அமைச்சர்களுக்கும், 8 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் கொடுத்த அமைச்சர்களுக்கும், பேருந்து தராத அமைச்சர்களுக்கும், நன்றி சொல்லி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. சந்திரசேகர் அவர்கள்.*

*பிற்பகல் 2–30*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் நீங்காத இடம்கொண்டு, நமக்கெல்லாம் முகவரி அளித்து, இருண்டு கிடந்த தமிழகத்திற்கு ஒளிவிளக்கேற்றி, தன்னையே தியாக தீபமாய் உருவாக்கி, தமிழக மக்களின் நலனே தன்னலம் என்ற ஒரே கொள்கையோடு, தன் நலனில் அக்கறை செலுத்தாமல் தன்னையே இழந்து ஒளிரும் விளக்காக, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் தன்னிகரில்லா தங்கத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற அளப்பரிய பணிகளைத் தொய்வின்றி, அம்மா அவர்கள் எண்ணிய எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், அம்மா அவர்களின் ஆன்மா வழிகாட்டும் வகையில், அம்மா அவர்களின் ஆட்சியை வழி நடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எரிசக்தி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மீதான மானியக் கோரிக்கைகளின்மீது எனது உரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறைக்கு இந்த நிதியாண்டில் 16,998 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதில் விவசாயம் மற்றும் இதர பயன்பாடுகளுக்கு மின்சார மானியமாக 8,538 கோடி ரூபாயை உள்ளீடு செய்திருப்பதற்கு மிகுந்த பெருமைகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டில் தமிழகத்தின் தனி நபர் மின் பயனீட்டு அளவு 1,040 யூனிட்டாக இருந்தது. 2015–2016 ஆம் ஆண்டில் இந்தியாவின் சராசரி தனி நபர் மின் பயனீட்டு அளவு 1,075 யூனிட்டாக இருந்தது. தமிழகத்தில் ஒரு தனி நபர், இந்தியாவின் சராசரி தனி நபரைவிட 205 யூனிட் மின்சாரத்தைக் கூடுதலாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையிலும் கூடுதல் நுகர்விற்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திறம்பட செயலாற்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆலோசனைக்கேற்ப மின்வெட்டு இன்றி திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

2011 ஆம் ஆண்டின் இறுதியில் இருளில் மூழ்கிக் கிடந்த தமிழகத்தை மீட்டெடுத்து, ஐந்தாண்டுகளில் 8,432.5 மெகா வாட் மின்சாரத்தை மாநில மின் கட்டமைப்புடன் இணைத்து, மின் உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்து, மின்மிகை மாநிலமாக மாற்றிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கண்ணுக்கு எட்டாத குக்கிராமங்கள் அனைத்தும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துடன் இணைக்கப்பட்டு இன்றையதினம் 100 சதவிகிதம் தமிழகத்தில் மக்கள் வசிக்கும்

பகுதிகள் மின்னொளி பெற்றுத் திகழ்வது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனையாகும்.

தமிழகத்தின் உச்சபட்ச மின் தேவையான 15,343 மெகா வாட் அளவையும், 345.617 மில்லியன் யூனிட் உச்சபட்ச மின் பயனீட்டு அளவையும் பூர்த்தி செய்து இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைத் தமிழகம் பெற்றிருப்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே பிற மாநில மக்கள் பொறாமைகொள்ளும் வகையில், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு வீட்டிற்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசம்; கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் மின்சாரம் இலவசம்; விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரம் இலவசம் என வாரி, வாரி வழங்கியது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆட்சித் திறனால் 2,307.90 மெகா வாட் உற்பத்தி செய்யும் நீர் மின் நிலையங்கள், 4,320 மெகா வாட் உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையங்கள் உட்பட சுமார் 18,732.78 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் மரபு சார்ந்த எரிசக்தி நிலையங்களும், காற்றாலை, சூரிய ஒளி, தாவரக் கழிவு உள்ளிட்டவைமூலம் உற்பத்தி செய்யும் மரபு சாரா எரிசக்தி நிலையங்கள் 10,479.61 மெகா வாட் மின்சாரமும், ஆக மொத்தம் 29,212.39 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் அமைந்துள்ளன.

இயற்கையின் ஏமாற்றம் காரணமாக பருவமழை பொய்த்து; நீர்வீழ்ச்சிகள் வறண்டு போய், நீர் மின் நிலையங்கள் மின்சாரம் உற்பத்தி செய்யாத நிலையில், இன்று தமிழக மக்கள் மின்வெட்டு இன்றி மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை உருவாவதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு ஏற்படுத்தித் தந்த திட்டங்கள். அம்மா அவர்கள் விட்டுச் சென்ற திட்டங்களையும், விவரித்து சென்ற வழிமுறைகளையும் அப்படியே பின்பற்றி, அம்மா அவர்களின் ஆன்மாவை தினம், தினம் துதித்து தமிழக அரசை செயல்படுத்திக் கொண்டிருக்கும் பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையே சாரும்.

பிற்பகல் 2–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். அவை நடவடிக்கைகளைக் கவனியுங்கள்.

**திரு. இரா. சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரயில்வே சரக்குக் கட்டணம் அதிகரிப்பு மற்றும் மத்திய அரசால் விதிக்கப்பட்டுள்ள வரிகள் அதிகரிப்பு என மின் பகிர்மானக் கழகத்திற்கு நிலக்கரி கொள்முதல் செய்வதில் செலவினங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கைகள்மூலம், 2015–2016 ஆம் ஆண்டில் 1,332 கோடி ரூபாயும், 2016–2017 ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாயும் சேமிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி பெருமைக்குரியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மின் துறையின் செயலாக்கத்தை மேம்படுத்தும் வகையில் 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 6 எண்ணிக்கையிலும்; 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 90 எண்ணிக்கையிலும்; 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 813 எண்ணிக்கையிலும்; 66 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் 6 எண்ணிக்கையிலும்; ஆக மொத்தம் 915 துணை மின் நிலையங்கள் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள 30,387.916 சுற்று கிலோ மீட்டர் நீளம் கொண்ட மிக உயர் அழுத்த மின் பாதைகள்மூலம் தமிழகத்தின் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் இணைக்கப்பட்டு செயல்பட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் திறம்பட நிருவகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கடலூர், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களை கனமழை தாக்கியபோது சுமார் 800 Transformer–கள், 49,100 மின் கம்பங்கள், 15,000 கிலோ மீட்டர் அளவிற்கு மின் கம்பிகள் சேதமடைந்து, அந்தப் பகுதிகளில் மின் தடை ஏற்பட்டு, அப்பகுதிகள் இருளில் மூழ்கின. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 15,000 பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுடன் மேற்கொண்ட போர்க்கால நடவடிக்கைகளால் ஒரே வாரத்திற்குள் சீரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு மின் விநியோகம் சீரமைக்கப்பட்டதால்

அப்பகுதி பொது மக்கள் மிகவும் பாராட்டினார்கள் என்பதைப் பெருமையோடு இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மிகுந்த திறமையோடு செயல்பட்டு பொது மக்களுக்கு மின்சாரம் விநியோகித்து வரும் நிலையில் ஒரு சில சமூக விரோத சக்திகள் மின் திருட்டைத் தொழிலாகக் கொண்டு இடையூறு செய்து வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்ட 40 குழுக்கள், 17 அமலாக்கக் குழுக்கள் மற்றும் ஒரு பறக்கும் படை எனக் குழுக்களை அமைத்து, மின் இணைப்புகளை ஆய்வு செய்து, மின் திருட்டுகளைக் கண்டுபிடித்து, நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதன்மூலம், கடந்த 2 ஆண்டுகளில் முறையே 50 கோடிக்குமேல் அபராத தொகை வசூலிக்கப்பட்டுள்ளது என்பதனை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் செலுத்துவதில் மின் நுகர்வோருக்கு வசதிகளை ஏற்படுத்தும் வகையில், இணையதளம் மூலமும், வங்கிகளில் பண அட்டைகள் மூலமும், 2,500 தபால் நிலையங்கள் மூலமும், மின் கட்டணம் செலுத்தும் வசதியை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்பாடு செய்துள்ளது. மேலும், புதிய மின் இணைப்புகள் மற்றும் கூடுதல் மின் இணைப்புகள் வேண்டி விண்ணப்பிப்பதற்கு நேரில் செல்லாமல் இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும் வசதிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. கணினி மின் தடை நீக்கும் மையங்கள் நிறுவப்பட்டு நுகர்வோரின் குறைகளைத் தீர்த்து வைக்கவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழக நிறுவனர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1985 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைமூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, தமிழகத்தில் காற்று சக்தி, கரும்புச் சக்கை, தாவர எரிசக்தி மற்றும் சூரியசக்திமூலம் சுமார் 10,806 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்து வருகிறது. இதனால், தமிழகம் தற்போது இந்தியாவிலேயே அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்வதில் முதல் மாநிலமாகத் திகழ்கிறது (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் பசுமை வீடுகள் திட்டம், அரசு கட்டடங்களில் சூரிய மேற்கூரை அமைத்தல், சிறைச்சாலைகளில் சூரிய மேற்கூரை அமைத்தல் ஆகியவற்றின்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஊக்கப்படுத்தி வருவது பெருமைக்குரியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய எரிசக்தி அமைச்சகத்தால் 2016 ஆம் ஆண்டு சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவியதற்கு தேசிய விருதும், 2015–2016 ஆம் ஆண்டில் சிறிய காற்று சக்தி கலப்பின அமைப்புகள் நிறுவியதற்காக பெறப்பட்ட தேசிய விருதும் பெருமைக்குரியதாகும்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் பெறப்படும் வைப்பீடுகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைவிட மூத்த குடிமக்களுக்கு அதிக வட்டி வழங்குவது பாராட்டுதலுக்குரியது. அவ்வாறு பெறப்படும் வைப்புத் தொகை மின் துறை மேம்பாட்டுக்குத் திறமையாகப் பயன்படுத்தப்படுவது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி உரைத்த சூளுரையின் ஒரு பகுதியை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அம்மா அவர்கள் “என்னுடைய ஆட்சியில் ஆடுகளை ஏமாற்றி ஓநாய்கள் இரத்தம் குடிக்க முடியாது. மிரட்டி சத்தமும் போட முடியாது. ஏனென்றால் நான் ஓநாய்களைச் சந்தித்துவிட்டு, வெறிநாய்களை வீழ்த்திவிட்டுத்தான் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளேன்” என்று தெரிவித்தார்கள். இன்று அம்மா அவர்கள் நம்மோடு இல்லை என்ற எண்ணத்தில் ** என்று முயற்சிக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களை ஏதும் சொல்லியிருக்கிறாரா? (குறுக்கீடுகள்) அவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. இரா. சந்திரசேகர்:** *மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த ** எப்படிச் சந்திக்க வேண்டும், ** எப்படி வீழ்த்த வேண்டும். இந்த ஆட்சிக் கட்டிலை எப்படி மக்களுக்கு நலன் பயக்கும் வகையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற விதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உட்பட எங்கள் அனைவருக்கும் சொல்லித்தான் சென்றிருக்கிறார்கள். அன்னை சோறு ஊட்டும்போது எப்படி அறிவையும் சேர்த்து ஊட்டுகிறாளோ அதுபோல எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ** இருந்து எப்படித் தப்பிக்க வேண்டும் என்ற வித்தையையும் சொல்லிக் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடுகள்)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்மீதுதான் பேசுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தேவையில்லாதவற்றைப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய உரையைத்தான் சொன்னேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆற்றிய ஒரு சூளுரையைத்தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர், மானியக் கோரிக்கைகளின்மீது பேசுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இப்பொழுதுதான் வந்தேன். நான் என்னவென்று பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மருங்காபுரி தாலுகாவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள்.*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வையம்பட்டி ஒன்றியத்திற்குப் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) இப்பொழுதுதான் வந்தேன். பார்க்கிறேன்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கை நோக்கி வந்தனர்.)*

*உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மணப்பாறை சட்டமன்றத் தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, பன்னாங்கொம்பில் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர், இந்தக் கதையெல்லாம் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கைகள்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மானியக் கோரிக்கை மீதுதான் பேசுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.*

**திரு. இரா. சந்திரசேகர்:** தொகுதி பிரச்சினைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வையம்பட்டி ஒன்றியம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. இரா. சந்திரசேகர்:** என்.பூலாம்பட்டி மற்றும் தவளவீரண்பட்டி, எளமனம் ஆகிய மூன்று ஊராட்சிகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகர் தேவையில்லாதவற்றை நீங்கள் பேசாதீர்கள். மானியக் கோரிக்கைகளில் மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதை நீக்கியாகிவிட்டது. உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. விடுங்கள். நீங்கள் போய் உட்காருங்கள்.

**திரு. இரா. சந்திரசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மருங்காபுரி ஒன்றியம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியக் கட்டடம் சுமார் 51 வருடங்களுக்கு முன் கட்டிய பழமையான கட்டடமாகும். தற்போது மிகவும் சேதமடைந்துள்ளது. எனவே,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*மருங்காபுரி ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய அலுவலகம் கட்டித் தர வேண்டுமென்று அம்மா அவர்களுடைய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. சந்திரசேகர் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். நேரம் ஆகிவிட்டது.*

**திரு. இரா. சந்திரசேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். ஒன்றே ஒன்றுதான். மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணப்பாறை நகராட்சிப் பகுதிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணப்பாறை நகராட்சிப் பகுதிக்கு அம்மா பூங்கா அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மருங்காபுரி ஒன்றியம் மேட்டுப்பட்டியில் 33/11 KV ஆள் இல்லா துணை மின் நிலையம் சுமார் 24 வருடங்களாகச் செயல்பட்டு வருகின்றது. இதனை 110 KV துணை மின் நிலையமாக மாற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 2—45*

*மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பண்ணப்பட்டி ஊராட்சி, பன்னாங்கொம்பில் 33/11 KV துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன். மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணப்பாறை நகராட்சி, விடத்திலாம்பட்டியில் 33/11 KV துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.*

*மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணப்பாறையிலிருந்து சென்னை சென்றுவர குளிர்சாதன வசதி கொண்ட பேருந்து இயக்கித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.*

*மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மருங்காபுரி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமப் பகுதியில் விவசாயிகளின் விளை நிலங்களை அனுதினமும் காட்டு எருமைகளும், காட்டு விலங்குகளும் சேதப்படுத்தி வருகின்றன. எனவே, விளை நிலங்களைக் காத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்வேலி அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தான் வாழ்ந்த காலத்தில் விடியும் ஒவ்வொரு பொழுதிலும் தமிழர் தம் வாழ்வு சிறக்கும் திட்டங்களை அறிவித்து நிறைந்த தாய் குன்றின்மேல் இட்ட விளக்காய், கோபுரக் கலசமாய், கோடி தமிழர்களின் குலசாமியாய், எத்திசையும் புகழ் மணக்க நம்மோடு வாழ்ந்த தமிழ், வாடிய பயிருக்கு நிவாரணம் வழங்கி விவசாயிகளின் துயர் நீக்கிய ரட்சகி, இமை துஞ்சாமல் பணி செய்த தமிழகத்தின் இலக்கணம். அன்று, நம்மை காத்த மனித உருவம் இன்று நம்மை காக்கும் விண்ணுலக வால் நட்சத்திரம் அம்மா. அம்மா இன்று நீங்கள் இங்கு இல்லை, ஆனால், என்றும் எங்கள் நெஞ்சத்தில் குடி கொண்டிருக்கும் உங்களை வணங்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள். சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) என்ன இது? விரைவாக முடிக்கச் சொன்னேன்.

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பதின்மூன்றாவது முறையாக வெற்றிபெற்று, இந்திய வரலாற்றில் தேர்தலில் தோல்வியே கண்டறியாத வைர விழா நாயகர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். வைர விழா கொண்டாடும் இந்த வேளையில் திருநெல்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான் பணியாற்றுவதை என் வாழ்நாளில் மிகப் பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பினைத் தந்த மக்கள் நாயகன், மக்கள் நலனே முதல் நலனாக போராடிக் கொண்டிருக்கும் எங்கள் செயல் தலைவர் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், தமிழகத்தின் எதிர்காலத்தை இரு கரம் கூப்பி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாணவ பருவத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, 1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின்கீழ் சட்டமன்ற உறுப்பினராகவும், 1989, 1996–ல் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் சட்டமன்ற உறுப்பினராகவும், 2006–ல் தளபதி அவர்களின் அமைச்சகத்தின்கீழ் நெல்லை மாநகரத் தந்தையாகவும் மூன்று தலைமுறை தலைவர்களின் அன்பைப் பெற்ற எனது தந்தை தெய்வத்திரு ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களை இந்த வேளையில் நினைவுக்கூருகிறேன். நெல்லை சட்டமன்றத் தொகுதியில் என்னை வெற்றி பெறச் செய்த திருநெல்வேலி மக்களுக்கும்,

அதற்கு உறுதுணையாக இருந்த கழக உடன்பிறப்புகளுக்கும், கூட்டணி கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு கண்ணியத்துடன் எனது கன்னி உரையை ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பேசுவதற்கு ஒரு வருடம் கழித்து இந்த முறைதான் எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நீங்கள் சீக்கிரமாக முடியுங்கள் என்று சொல்கிறீர்கள். குறுக்கீடு இல்லையென்றால் கண்டிப்பாக 20 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். ஒன்றும் பிரச்சினைக் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி பேசுங்கள். குறுக்கீடு இல்லாமல் பேச வேண்டியது உங்கள் பொறுப்பு.

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** கன்னிப் பேச்சு என்பதால் குறுக்கீடு இல்லாமல் வாய்ப்புத் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் எனது தொகுதி சம்பந்தமான பிரச்சினைகளை, சில கோரிக்கைகளை வைக்க விரும்புகின்றேன். நெல்லை என்றால் உடனே ஞாபகத்திற்கு வருவது தாமிரபரணி ஆறுதான். (குறுக்கீடு) அல்வா இருந்தாலும் தாமிரபரணி ஆறுதான் முக்கியம். அல்வா இரண்டாவதுதான். தாமிரபரணி ஆறு தமிழகத்திலேயே உருவாகி, தமிழகத்திலேயே கலக்கக்கூடிய ஒரு case-ம் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிற ஆறு. திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம் மற்றும் சிவகாசி பகுதிகளின் குடிநீர் தேவைகளுக்கு இந்த ஆற்றிலிருந்துதான் தண்ணீர் செல்கிறது. இன்று இந்த ஆற்றின் நிலை என்னவென்றால் கழிவுநீர் கால்வாய்ப்போல் காட்சியளிக்கிறது. இந்த ஆற்றின் கரையோரத்தில் 9 நவ கைலாயம் மற்றும் நவ திருப்பதி என்று மொத்தம் 18 கோயில்கள் இருக்கின்றன. மத்திய அரசின் உதவியுடன் கங்கை நதியினை சுத்தம் செய்வதுபோல் இந்த புண்ணிய நதியாம் தாமிரபரணியை இந்த அரசு சுத்தம் செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–50

நெல்லை பெயர் வந்த காரணம் நெல்லையப்பர் கோயில். அந்தக் கோயிலுக்கு 15 ஆண்டுகளுக்கு முன் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. எனவே, 15 வருடங்கள் முடிவுற்ற நிலையில், இந்தக் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யும்படி நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தென் கோடி மாவட்டமான திருநெல்வேலி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தினால், இளைஞர்களிடம் சாதி மோதல்கள் உருவாகின்றன என்று உச்ச நீதிமன்ற நீதியரசர் திரு. ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. கலைஞர் அவர்களது ஆட்சிக் காலத்தில் நாங்குநேரி, கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் துவக்கப்பட்ட தொழில்நுட்பப் பூங்காக்கள், முழுமையாகச் செயல்பட வேண்டும். இன்று முக்கியமான நிறுவனங்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வர வாய்ப்பில்லை. மேலும், இந்த ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த Syntel நிறுவனம் அனுமதி பெற்று, கட்டட வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டு, இன்று முழுமையாக முடிவுறும் வேளையில், கட்டட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனம் செயல்படாமல் உள்ளது. இதற்குக் காரணம் என்னவென்பதை மக்கள் அறிய விரும்புகிறார்கள். இதன்மூலம் கிட்டத்தட்ட 1,000, 2,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பிருக்கிறது. அந்த நிறுவனத்தின் வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

பேட்டை நூற்பாலையைப் பற்றி நான் ஏற்கெனவே கேள்வி நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். பேட்டை நூற்பாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து, அதன்மூலம் 2,000, 3,000 நபர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

நெல்லை, மானூர் ஒன்றியத்தில் ஆற்றுப் பாசனம் மற்றும் கால்வாய் பாசனம் இல்லாத நிலையில் மழை நீரை மட்டுமே

*நம்பி குளங்கள் உள்ளன. அதாவது, குறிப்பாக மானூர் குளம், பள்ளமடை குளம் போன்ற பெரிய குளங்களைத் தூர்வாரி, அதில் மழை நீரைச் சேகரித்து வைத்தால் விவசாயிகளும், மக்களும் பயன்பெறுவார்கள். மேலும், இந்தக் குளங்களைத் தூர் வாருவதற்கு அரசு 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. பெரிய அளவிலான குளங்களைத் தூர் வார முடியாது. எனது வேண்டுகோள் என்னவென்றால், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு JCB–ஐ நீங்கள் வழங்கினால், ஒரு வருடத்திற்குள், மிஞ்சி போனால், மூன்று வருடத்திற்குள், எல்லா தொகுதிகளிலுமுள்ள அனைத்துக் குளங்களும் சரி செய்யப்படும். அதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

*நெல்லை மாவட்டத்தில் சுற்றுச்சாலை அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக 304 கோடி ரூபாய் மதிப்பில் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதனை முழுமையாக நிறைவேற்றினால், நெல்லைப் பகுதியில் உள்ள போக்குவரத்து சீர் செய்யப்பட்டு, மக்கள் பயன்பெறுவார்கள். அதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

*மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கடந்த ஆண்டில் 2016 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க வேண்டியது. தற்போதும் முடிக்கப்படவில்லை. மழைக் காலத்திற்கு முன்னால், இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனே முடித்துக் கொடுத்து, அந்தப் பகுதியில் இருக்கும் மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*நெல்லையில் உள்ள கண்டியப்பேரி நகராட்சி மருத்துவமனை கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகின்றது. இந்த மருத்துவமனையின்மூலம் சுமார் 5 இலட்சம் மக்கள் பயன்பெறுகிறார்கள். அதிநவீன சிகிச்சைகளுக்குத் தேவையான எக்ஸ்–ரே, ஸ்கேன் போன்ற வசதிகளை அங்கு உடனே செய்து கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் மேலும் பயன்பெறுவார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*நெல்லை பகுதியில் பொழுதுபோக்கு அம்சங்கள் ஒன்றுமே கிடையாது. ஏற்கெனவே நைனார்குளம் பகுதியில் மக்கள்*

பயன்பெறும் வகையில் சுற்றுலாத் துறை மூலமாகப் படகு சவாரிக்கான வசதி அமைக்க, கடந்த ஆண்டிலே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனை இந்த அரசு தொடர்ந்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை. 2003 ஆம் ஆண்டு, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மதுபானக் கடைகளை அரசே ஏற்று நடத்தும் என்று அறிவித்த பிறகுதான், டாஸ்மாக் உருவாக்கப்பட்டது. தனியார் மதுபானக் கடைகள் நடத்தியபோது, கிராமப் பகுதிகளுக்குக் கடைகள் வழங்கப்படவில்லை. நகரப் பகுதிகளில் சில இடங்களிலும், பேரூராட்சிப் பகுதிகளில் சில இடங்களிலும்தான் கடைகள் செயல்பட்டு வந்தன. டாஸ்மாக்மூலம் கடைகள் நடத்த ஆரம்பித்த பிறகுதான் குறைந்த அளவு மக்கள்தொகை உள்ள குக்கிராமங்களிலும் கடைகள் திறக்கப்பட்டு, பொது மக்கள் நேரிடையாகப் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டது. படிப்படியாக மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என முன்னாள் முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் ஆயிரம் கடைகள் மூடப்பட்டன.

பிற்பகல் 2–55

நீதிமன்ற உத்தரவின்படி தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் உள்ள 3,321 கடைகள் மூடப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவின்படி மூடப்பட்ட கடைகளுக்கு மாற்றுக் கடைகளை அரசு திறந்து வருகிறது. இதனால் பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. மேலும், இந்த அரசு நெடுஞ் சாலைகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளை மாநகராட்சிச் சாலைகளாக மாற்றி அதன்மூலம் கடைகளை உருவாக்குவதற்கு முயற்சி செய்வதாக அறிகிறேன். இதனால் மக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். குடியிருப்புகள் இல்லாத நெடுஞ்சாலைகளின் அருகில் இருந்த கடைகள் மூடப்பட்டு தற்போது மக்கள் குடியிருக்கும் இடங்களின் அருகில் கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன. இதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து, போராட்டம் நடத்துகிறார்கள். குறிப்பாக, எனது தொகுதி, ஏ.பி. மாடத் தெரு பகுதியில் முன்பு அதிகக் கடைகள் இருந்தபோது அங்கு அதிக கூட்டம் கிடையாது. அது மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி. இன்று அந்தக் கடைகள்

மூடப்பட்டு, ஒரு கடைதான் கார்ப்பரேஷன் டவுன் பகுதியில் இருக்கிறது. மக்கள் அந்தக் கடைக்கு அதிகமாக வருவதால் அந்த இடத்தில் புழங்க முடியாத அளவுக்குக் கூட்டம், நெருக்கடி இருக்கிறது. நான் இதை ஏற்கெனவே ஜமாபந்தியில் மனு கொடுத்து இந்த ஒன்றாம் தேதியுடன் அந்தக் கடை மூடப்படும் என்று தாசில்தார் அவர்கள் தெரிவித்தார்கள். இன்றுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து அந்தக் கடையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஏற்கெனவே மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்துவோம் எனக் கூறியிருக்கிறது. எனவே, நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மூடப்பட வேண்டிய கடைகளுக்குப் பதிலாக மாற்றுக் கடைகளைத் திறப்பதற்கு முயற்சிப்பதை அரசு நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதுதானேயொழிய, மதுக்கடைகளை திறந்து வியாபாரம் செய்வதற்காக அல்ல. அப்படி நீங்கள் வியாபாரம்தான் செய்வோமென்றால், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு கடையைத் திறந்து விடுங்கள். எந்த மக்களுக்கும் பிரச்சினைக் கிடையாது. ஏனெனில், போராட்டமும் வரப் போவதில்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது என்னுடைய கன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாமென்று சொன்னார். அதனால் அவர் பேசிய பிறகு பதில் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால், அவர் குற்றச்சாட்டை, கடுமையான குற்றச்சாட்டை காவல் நிலையத்தில் போய் கடையைத் திறங்கள் என்று சொல்கின்றார். (குறுக்கீடு) ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர்கள், ஒரு நிமிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் வந்தது. 1971 ஆம் ஆண்டு முதன்முதலில் மதுவிலக்கை இரத்து செய்தது உங்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 20–7–1990 ஆம் ஆண்டு மலிவு விலை மதுவைக் கொண்டு வந்தது, அதாவது பாக்கெட் சாராயத்தைக் கொண்டு வந்தது உங்களுடைய ஆட்சி. மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரை இந்த மதுவிலக்குக் கொள்கையில் தெளிவாக இருந்தார்கள் என்பதற்கு உதாரணமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் 16–7–1991 அன்று மலிவு விலை சரக்கு விற்பனையை நான் இரத்து செய்கிறேன் என்று சொன்னார்கள். அதனால் 391 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும்கூட, முதல் நடவடிக்கையாக, முதல் கையெழுத்தாக இட்டார்களேயொழிய, நீங்கள் சொல்வதைப்போல ஏதோ வியாபாரத்திற்காக இதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்குக் கிடையாது என்பதை முதலிலே புரிந்துகொள்ள வேண்டும். உங்களுடைய தலைவரேகூட சொல்லியிருக்கின்றார். சுற்றியும் நெருப்பு எரிகின்றது. நடுவிலே நாம் சூடமாக இருந்துகொண்டு, எப்படி இதைக் காப்பாற்ற முடியும் என்ற ஒரு வார்த்தையை சொல்லியிருக்கின்றார். அதேபோல, இந்தியா முழுவதும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் தமிழ்நாடும் இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கின்றார். இன்னும் பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. அதனால், மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரை மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவான முடிவை எடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே, இப்போது நடைபெறுகின்ற இந்த அரசும் அந்த முடிவிலேதான் இருக்கின்றது.*

*உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி, 500 மீட்டருக்குத் தள்ளி கடைகள் இருக்க வேண்டும், 500 மீட்டருக்குள்ளே இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கின்றது. அதேபோல, 20,000 மக்கள் தொகை இருந்தால் 220 மீட்டர் உள்ளே தள்ளி வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் கடைகளை வைக்கின்றோம். புதிய கடையை ஏன் திறந்து கொண்டிருக்கின்றோம் என்று சொன்னால், சுற்றிலும் எல்லா மாநிலங்களிலும் கடைகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1–4–2017 அன்று 3,321 கடைகளை அடைத்திருக்கின்றோம்.*

ஆனால், அதற்குப் பின்னால் பாண்டிச்சேரியில் அதனுடைய growth rate 30 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், எங்கேயிருந்து சென்றிருக்கின்றார்கள். ஆக, மக்களை அந்தக் குடிப் பழக்கத்திலிருந்து திருத்த வேண்டும். அதற்காக நிதியை அதிகமாக ஒதுக்கி, மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தும் சொல்கின்றேன். 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் குடிப்பவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக 10 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கினார்கள். இடையிலே 2006 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால் அந்த நிதியையே கொடுக்கவில்லை. விழிப்புணர்வு பிரச்சாரமே இல்லாமல் நிறுத்தியது உங்களுடைய ஆட்சி. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அந்தத் தொகையை ரூ.1 கோடியாகவும், 2015–2016 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாயாகவும் உயர்த்திக் கொடுத்தார்கள். மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை. இதுகுறித்து நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கின்றது.

பிற்பகல் 3–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புவது, அ.தி.மு.க. தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிகளில், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்துவோம்" என்று தெரிவித்திருந்தது. ஆனால், அதேநேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் நேரத்தில் தந்த தேர்தல் அறிக்கையில், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், முழுமையான மதுவிலக்கை அமல்படுத்துவோம்" என்று தேர்தல் வாக்குறுதியாக உறுதிமொழி தந்திருந்தது. ஆனால், நீங்கள் தந்த வாக்குறுதியின் அடிப்படையில், படிப்படியாக குறைக்கின்ற முயற்சியில் எந்தளவுக்கு ஈடுபட்டிருக்கிறீர்கள். அது ஒரு பக்கம்.

"பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், ஆலயங்கள் போன்ற பொதுவான இடங்களுக்கு அருகிலேயும் மற்றும் குடியிருப்புகளுக்கு பக்கத்திலேயும் டாஸ்மாக் கடைகள் இருக்கக்கூடாது" என்று நீதிமன்றமே உத்தரவிட்டுள்ளது; விதிமுறைகளும் இருக்கின்றன. ஆனால், அதையும்மீறி, இன்றைக்கு பல இடங்களில் டாஸ்மாக் கடைகள் அமைந்துள்ளன, பல இடங்களில் புதிதாகவும் திறக்கப்படுகின்றன. அதை எதிர்த்து அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் இன்றைக்கு மிகப் பெரிய போராட்டத்தை நடத்த வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு, நாடு முழுவதும் நடந்துகொண்டிருக்கின்றன. அதனடிப்படையில், திருப்பூரில் தாய்மார்களெல்லாம் போராடிய நேரத்தில், ஒரு பெண்ணை ஒரு காவல் துறை அதிகாரியே சென்று அடித்த காட்சி, தொடர்ந்து, தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த அதிகாரிக்கு promotion கொடுத்து தற்போது பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தியும் இரண்டு நாட்களாகப் பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்றது. அது ஒரு பக்கம். போராடியதன் காரணமாகப் பல வழக்குகளில் பொதுமக்களே இன்றைக்கு சிக்கியிருக்கிறார்கள். ஆகவே, எதிர்த்து போராடிய பொதுமக்கள்மீது, குறிப்பாக தாய்மார்கள்மீது போடப்பட்ட வழக்குகளை இந்த அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வைக்க விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில், "படிப்படியாக மதுவிலக்கு அமல்படுத்தப்படும்" என்று சொல்லியிருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி ஏற்றவுடன், "23–5–2016 அன்று, 500 டாஸ்மாக் கடைகள் மூடப்படும், டாஸ்மாக் கடைகளின் பணி நேரம் 2 மணி நேரம் குறைக்கப்படும்" என்ற கோப்பில் முதல் கையெழுத்தை இட்டார்கள். அவர்கள் தேர்தல் அறிக்கையில், "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், முழுமையாக மதுவிலக்கை உடனடியாக அமல்படுத்துவோம்" என்று சொன்னார்கள். ஆனால், தேர்தல் நேரத்தின், இறுதிகட்ட பிரச்சாரத்தின்போது, உங்களுடைய தலைவர் திருவாரூரில் பிரச்சாரம் செய்தபோது, "நாங்கள்*

மதுவிலக்கைக் கொண்டு வருவதற்கு முன்பு ஒரு சட்டத்தைக் கொண்டுவருவோம், பிறகு அந்த சட்டத்தின் அடிப்படையில் மதுவிலக்கை அமல்படுத்துவோம்'' என்று சொல்லியிருந்தார்கள். இதுகுறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் விளக்கம் கேட்க விரும்புகின்றேன்.

மேலும், மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவான முடிவை எடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற ஆட்சியும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. "உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதற்குப் பிறகும், அந்த உத்தரவை மீறி, பள்ளிக்கூடங்களுக்கு அருகில், ஆலயங்களுக்கு அருகில் கடைகளை வைத்திருக்கின்றார்கள்'' என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதுபோன்று சட்டத்தை மீறி எங்கேயும் ஒரு கடைகூட வைக்கப்படவில்லை. 2003 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும் கடைகளையெல்லாம் தற்போது எடுக்க வேண்டுமென்று சொல்கின்றார்கள். அந்தக் கடைகளை எடுப்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. முதலில், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மக்கள் விழிப்புணர்வை அடைந்ததற்குப் பிறகு, படிப்படியாகக் கடைகளைக் குறைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. ஏனென்றால், உங்களுடைய ஆட்சிக் காலத்திலும்சரி, எங்களுடைய ஆட்சிக் காலத்திலும்சரி, 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு கள்ளச்சாராய சாவே இல்லாமல் தமிழகம் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. தற்போது புதுச்சேரியில் 30 சதவிகித வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றால், இது தமிழ்நாட்டினுடைய அளவுதானா, இல்லையா என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், இந்த இரண்டு மாதக் காலத்தில், கிட்டத்தட்ட 1½ இலட்சம் பாட்டில்களை மதுவிலக்குக் காவல் துறையினர் பிடித்திருக்கின்றார்கள். எனவே, உடனடியாக மதுக்கடைகளை மூடும்போது, மக்கள் கள்ளச்சாராயத்தையோ அல்லது வேறுமாதிரியான பிராந்திகளையோ வாங்கி அருந்தும்போது, ஏதாவது உயிரிழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்றபோது, அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. மதுவிலக்கு படிப்படியாகக் கொண்டுவரப்படும்.

பிற்பகல் 3–05

போராளிகளைப் பற்றி, குறிப்பாக திருப்பூரிலுள்ள சாமளாபுரத்தில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள். அப்போது நடந்ததைப் பற்றி நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த நிகழ்வைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்த கடையை மாற்றுகின்றோம்; கடையை மாற்றும்போது, அந்தக் கடை எந்த இடத்தில் இருக்கிறது என்றால், மயானத்தினுடைய ஒரு சுவரும், புதிதாக வைக்கப்படும் கடையும் அருகாமையில் இருக்கின்றன. அதற்குப் பக்கத்திலே 500 மீட்டர் வரை ஒரு வீடுகூட கிடையாது. பக்கத்தில் 300 மீட்டர் வரை வேறு எந்தக் கட்டடமும் கிடையாது. வேண்டுமென்றே ஒரு போராட்டத்தை நடத்துகிறார்கள். அதை பின்னால் இருந்து தூண்டிவிட்டார்கள். உங்களைச் சொல்லவில்லை. அந்தப் போராட்டம் நடைபெறுகின்றபோது நமது சட்டமன்ற உறுப்பினர் அந்த வழியாகச் செல்கின்றார். சட்டமன்ற உறுப்பினர் செல்கின்றபோது என்ன கூட்டமாக இருக்கிறது என்று பார்த்துவிட்டு, அவரும் அந்த உண்ணாவிரதத்திலே உட்காருகின்றார். மாவட்ட ஆட்சியர் மற்றும் D.R.O. எல்லாம் வந்து பேச்சுவார்த்தை நடத்தி அந்தக் கடையைப் பூட்டிவிடுகிறோம் என்று சொன்னார்கள். சொன்னதற்குப் பின்னால் அந்தக் கூட்டத்தை முடித்துவிட வேண்டும். ஆனால், நமது சட்டமன்ற உறுப்பினரை கேரோ செய்துகொண்டு கடையைப் பூட்டியதற்குப் பின்னாலும் அவரை விடமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர் வெளியே வருவதற்கு மக்களோடு போராடிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவரை விடமாட்டோம் என்று அந்த மக்கள் சொல்கின்றனர். கடையையும் பூட்டியாகிவிட்டது, வேறு என்ன கோரிக்கை என்று அவர் கேட்கின்றார். எந்தக் கோரிக்கையையும் அவர்கள் சொல்லவில்லை. இதற்கு நடுவில் 108 ஆம்புலன்ஸ் ஒன்று அந்த வழியாகச் செல்கிறது. அதையும் தடுக்கின்றனர். அதற்கு வழிவிட வேண்டுமென்ற சூழ்நிலையிலேதான் அந்த இடத்திலே காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தனர். ஆனால் அதற்கு முழு விசாரணை நடைபெற்றது. அந்த விசாரணையில் அப்படிப்பட்ட சம்பவம் நடக்கவில்லை என்று வந்திருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள்மீது ஏதாவது charge இருந்தால் மட்டுமே அவர்களுடைய promotion–ஐ நிறுத்த முடியுமேயொழிய, ஏதோ ஒரு சம்பவம் நடந்தது என்பதற்காக அவர்களுடைய பதவி

உயர்வினை நிறுத்த முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேசும்போது, திருநெல்வேலியில் உள்ள கங்கைகொண்டானில் உள்ள ELCOSEZ-க்கு அனுமதி வழங்கவில்லை என்று சொன்னார்கள். அதில் உள்ள Syntel International Private Limited, Sutherland Gobal Services Limited, A&D Cosmic Private Limited, Deccan I Services Private Limited போன்ற 4 கம்பெனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, Syntel கம்பெனி 2,08,283 சதுர அடி பரப்பளவிலே கட்டடத்தைக் கட்ட கடந்த 15-5-2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு ஆணை வழங்கி அனுமதி கொடுத்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் கடந்த 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை 8,843 திருக்கோயில்களுக்கு ரூபாய் 391 கோடியில் திருப்பணி செய்து குடமுழக்கு நடத்தப்பட்டுள்ளது. தற்போது 2016-2017 ஆம் ஆண்டில் 958 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. மேலும், இந்தி நிதியாண்டில் 31-5-2017 வரை 125 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடைபெற்றது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய நெல்லையப்பர் திருக்கோயில் வரலாற்றுப் புகழ்மிக்க சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயிலாகும். இந்தத் திருக்கோயிலில் தற்போது திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணிகள் முழுமையாக நடைபெற்று முடிந்தவுடன் குடமுழுக்குச் செய்யப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடந்த ஆட்சியில் 2007 ஆம் ஆண்டு வரை மகாராஷ்டிரா, பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்கு உபரி மின்சாரம் விற்பனை செய்யப்பட்டது. அப்போது தமிழகம் மின் மிகை மாநிலமாக இருந்தது. தற்போது தனியார் நிறுவனத்திலிருந்து அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கிவிட்டு எப்படி மின் மிகை மாநிலம் என்று கூறுகிறீர்கள் என்று புரியவில்லை. தென் தமிழகத்தில் காற்றாலைமூலம் மின்சாரம் உற்பத்தியாகிறது. அதாவது காற்று வீசும் காலமான மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான 4 மாதங்களில் சுமார் 5,000, 6,000 மெகா வாட் வரை மின்சாரம் கிடைக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த கால வரலாறு தெரியாமல் சொல்கின்றார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் சிவகங்கை மாவட்டத்தில்* Sapphire Industrial Infrastructure Private Limited *என்ற நிறுவனத்திடமிருந்து சூரிய ஒளி மின்சாரம் வாங்குவதற்கு என்ன விலை என்று சொன்னால் 15 ரூபாய்க்கு நீங்கள் வாங்கியிருக்கிறீர்கள். நாங்கள் வாங்கியது குறைவா? நீங்கள் வாங்கியது குறைவா என்பதை சிந்தியுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், நீங்கள் பேசுங்கள்.*

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலைமூலம் 4 மாதங்களில் 5,000, 6,000 மெகா வாட் மின்சாரம் கிடைக்கிறது. மின்சார வாரியம் அதை முழுமையாகப் பயன்படுத்தவில்லை. காரணம், அதை எடுத்துச் செல்வதற்குரிய மின் பாதை தனியாகத் தொடங்கப்படவில்லை. அந்த மின்சாரம் ஒரு யூனிட் 3 ரூபாய் 12 பைசா, 3 ரூபாய் 15*

பைசா என்ற கட்டணத்தில் கிடைக்கிறது. இவ்வளவு விலை குறைந்த மின்சாரத்தைக் கிடைக்கச் செய்ய ஏன் மின் பாதை அமைக்கவில்லை என்று தெரியவில்லை. தனியார் நிறுவனத்திடம் அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கி தமிழக மக்கள்மீது கடன் சுமையை சுமத்துவது எந்த விதத்தில் நியாயம் என்று புரியவில்லை.

பிற்பகல் 3–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** இல்லை, கன்னிப்பேச்சு என்றுதான் நானும் விட்டேன். ஆனால் குற்றச்சாட்டு சொல்லும்போது பதில் சொல்லியே ஆகவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்கின்றீர்கள். காற்றாலை மின்சாரத்தை இதுகாறும் இல்லாத அளவிற்கு கடந்த ஆண்டு மட்டுமல்ல, இப்போது 5–6–2017 அன்று அதிகபட்சமாக 4957 மெகா வாட் எடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, 2006 முதல் 2011 வரையிலான காலத்தில் நீங்கள் எடுத்ததைவிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதிகமாக எடுத்திருக்கிறது என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் பேசுங்கள்.

**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த சப்ஜெக்ட்டிற்கு போகிறேன். முக்கியமாக திருநெல்வேலி மாவட்டத்தில் 4500 காற்றாலைகள் உள்ளன. அதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் முழுவதும் உள்ள சுமார் 9,000 உயர் மின்னழுத்த நுகர்வோர்களுக்கு adjustment செய்யப்படுகிறது. இந்த மின்சாரம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. காற்றாலையிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை உயர் மின்னழுத்த மின் கட்டணப் பட்டியலில் சரிசெய்வதற்கான முறையான மென்பொருள், software, தமிழக மின்சார வாரியத்தில் இல்லாததால் பல கோடி ரூபாய் இழப்பு

ஏற்படுகிறது. சமீபத்தில் இதைப் பற்றிய குறைபாடுகள், மோசடிகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. எனவே, HT மற்றும் wind ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த மென்பொருள் தயாரித்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வருவாய் இழப்பைத் தவிர்க்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர், கலைஞர் ஆட்சிக் காலத்தில் 1999 ஆம் ஆண்டு 11,029 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 2007 ஆம் ஆண்டில் 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது ஒப்பந்த அடிப்படையில் உள்ள பணியாளர்களை நிரந்தரம் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அண்ணன் திரு. ஆஸ்டின் அவர்கள் பேசும்போது கிராமங்களில் உள்ள கம்பங்களை மாற்றுவதற்கு பணம் அதிகமாகச் செலவாகிறது. அனைத்து சட்டமன்றத் தொகுதியிலும் அந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தக் கம்பங்களை மாற்றும்போது, உள்ளாட்சிகளால் பணம் கட்ட முடியவில்லை. ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் என கம்பங்கள் மாற்றும்போது, அந்தக் கிராமப் பஞ்சாயத்துகள் கஷ்டப்படுகின்றன. சொந்தச் செலவில் அந்தக் கம்பங்களை மாற்றுவதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் குறுக்கீடுகள் இல்லாமல் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லெட்சுமணன். உங்களுக்கு ரொம்ப நன்றி. பதிலுரை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களையும், ஏழரைக் கோடி தமிழக மக்களையும் பாதுகாத்து, ஏன் கடல் தாண்டி பிரச்சினை என்றாலும்கூட, முதல் குரல் கொடுத்து பாதுகாத்த தாய் நமது தாய். (மேசையைத் தட்டும் ஒலி)

அச்சம் என்ற சொல்லையே அகராதியிலிருந்து அகற்றி, கழகத் தொண்டர்களுக்கு தைரியத்தையும், கட்டுப்பாட்டையும் கற்றுக் கொடுத்த தாய் நமது தாய். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமத்தில்

பிறந்து, வளர்ந்த என்னை அடையாளம் காட்டி, அரசியலில் எதிர்பாராத பல பதவிகளைத் தந்து, எனக்கு வழிகாட்டிய தாய் எங்கள் குடும்ப தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தமிழகத்தில், அம்மாவின் திட்டங்கள் சென்றடையாத குடும்பங்களே இல்லை என்ற அளவிற்கு சிறப்பான ஆட்சியை நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான் மக்களுக்காகவே நான்' என்று தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தவர் நம் தாய். இரக்கமற்ற இறைவன் நமது தாயை பறித்துக்கொண்டு சென்றுவிட்டான். அம்மா ஒரு கடவுள் என்று நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கின்றேன். அந்தச் சக்தியை நாங்கள் என்றென்றும், பயபக்தியோடு எங்கள் நினைவில் வைத்து, ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அம்மா அவர்களுடைய சக்திக்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வர்தா புயலால் சென்னை மாநகரத்தில் இலட்சக்கணக்கான மரங்களும், மின் கட்டமைப்புகளும் அடியோடு சேதம் அடைந்தபோது, 100 மீட்டர் தொலைவிலே இருக்கின்ற அம்மா அவர்களின் நினைவிடம் நான்கு தூண்களால் நிறுவப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நான்கு தூண்களில் ஒரு சிறு பாதிப்புக்கூட இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய சக்தி இருந்தது. அதை தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள், இதுகாறும் கோடிக்கணக்கான மக்கள் சென்று தரிசனம் செய்து கொண்டிருக்கின்ற ஓர் ஆலயமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது.

பிற்பகல் 3–15

அம்மா ! நீங்கள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கொண்டுவந்து இலட்சக்கணக்கானவர்களைக் காப்பாற்றினீர்கள் தாயே ! ஆனால், எங்களுடைய இதயம் எல்லாம் வெடித்து போகின்ற அளவிற்கு, அந்த ஆண்டவன்கூட கண் திறந்து பார்க்காமல் உங்களை அழைத்துக் கொண்டான் என்பதை நினைத்து, நினைத்து, நாங்கள் கண்ணீர்விட்ட காரணத்தினால், கடலின் நீர் மட்டம்தான் உயர்ந்திருக்கின்றது தாயே ! நீங்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ உயர்வைக் கொடுத்திருக்கின்றீர்கள். அதில், ஒவ்வொருவரும் தனித்தனியாக அவர்களுடைய உயர்வைச் சொல்ல வேண்டுமென்று

சொன்னால், எனக்கு இரண்டு சம்பவங்களை நான் நினைவுக் கூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2015 செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகின்றபோது, அதற்கு முன்னதாக ஒரு கூட்டம் நடைபெறுகின்றது; அரசுத் துறைச் செயலாளர்களையெல்லாம் வைத்து கூட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அப்போது அரசுத் துறைச் செயலாளர்கள் சொல்கின்றார்கள், முதன்முதலாக இந்த மாநாடு நடைபெறுகின்றது; ஆதலால் ஒவ்வோர் உயர் அதிகாரியையும் ஒரு பணிக்கு in–charge போட்டு அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சொல்கின்றார்கள். அம்மா அவர்கள், தெய்வம் என்பதை நான் இன்றளவும் நினைத்துப் பார்க்கிறேன், 'நீங்கள் உங்கள் பணியைப் பாருங்கள்; தங்கமணி அந்த வேலையைப் பார்த்துக்கொள்வார்' என்று சொல்கின்றபோது, இனிமேல் அதுபோன்று சொல்வதற்கு தாய் இல்லையே என்ற நிலைமையை நினைத்துப் பார்க்கிறேன்.

மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, மின்சார வாரியத்தினுடைய தலைவர், தலைமைச் செயலாளர் மற்றும் அம்மா அவர்களுடைய செயலாளர்களையெல்லாம் அழைத்துப் பேசி கொண்டிருந்திருந்த கூட்டத்தை முடித்துவிட்ட பின்னர், எல்லோரும் அமருங்கள் என்று சொன்னார்கள். நான் அமர்ந்திருந்தேன். அப்போது, அம்மா அவர்கள் எதற்காக இதனைச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அதிகாரிகளைப் பார்த்து, hard worker and trustworthy என்று என்னைப் பற்றி சொன்ன அந்த வார்த்தைகள் என்னுடைய வாழ்க்கையில் அழிக்க முடியாத, என் இதயத் துடிப்பு இருக்கின்றவரை நினைக்கின்ற வார்த்தைகளாக அம்மா அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தெய்வத்தை நான் மறந்தேன் என்று சொன்னால், என் குடும்பம்கூட தழைக்காது என்று நான் பல முறை சொல்லியிருக்கின்றேன். மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கின்ற எங்கள் தாயை நான் இந்த நேரத்தில் நினைவுக் கூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தாயே, நீங்கள் இல்லாமல் நாங்கள் இல்லை. எங்களுக்கு என்று சுயமாக எந்த முகவரியும் கிடையாது. எங்களுக்கு முகவரி தந்த அன்னையே, எங்கள் முக விலாசமே அம்மாதான் என்பதை நாங்கள் என்றும் மறவோம். ஆண்டாண்டுக் காலம் அழுது புரண்டாலும், மாண்டோர் வருவாரா என்ற முதுமொழி உண்டு. மாண்டவர்கள்தான் வரமாட்டார்கள். நீங்கள் ஆண்டவர், நீங்கள் அடக்கமான இடத்திலிருந்து ஆயிரம், ஆயிரம் விதைகள் முளைத்து எழும். அந்த விதைகள், ஆலவிருக்ஷமாகி எங்களைக் காக்கும் என்ற நம்பிக்கையில், எங்கள் வாழ்நாளை கழிக்கின்றோம் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கெல்லாம் இந்தப் பதவி என்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத பதவி. ஒரு சாதாரண கிராமத்தில் இருப்பவர்கள் இந்தப் பதவிக்கு வருகிறோம் என்று சொன்னால் அது எங்கள் தாயினால் மட்டும்தான் முடியும் என்பதை இங்கே இருக்கின்ற அத்தனைபேருக்கும் நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள். அந்தத் தாயை இந்த நேரத்தில் நான் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசுவாசம் என்று சொன்னால் அது மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய அரசியல் வாழ்வில் நான் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். எத்தனை சோதனைகள் வந்தாலும் அதைத் தாங்கி கொண்டு, அம்மா மட்டும்தான் தலைவர் என்ற அவருடைய விசுவாசம்தான் இன்றைக்கு அவருக்கு உயர்ந்த பதவியை, முதலமைச்சர் பதவியைக் கொடுத்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) சரியானவரைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கு அடையாளம் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவரையும் வணங்கி, என்னுடைய பதிலுரையைத் துவங்குகின்றேன்.

எரிசக்தித் துறை என்பது நாட்டிலே மிக முக்கியமான துறையாகும். ஒரு தொழில் வளர வேண்டுமென்று சொன்னாலும், மனிதவளம் வளர வேண்டுமென்று சொன்னாலும் முழுமையாக மின்சாரம் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்மட்டுமே அது தொழிலாக இருந்தாலும் சரி, நாட்டினுடைய வளர்ச்சியாக இருந்தாலும் சரி அது சிறப்பாக இருக்கும். அதை மாண்புமிகு அம்மா அவர்கள் 24 x 7 என்று சொல்கின்ற அளவிற்கு, 24

மணி நேரமும் தடையில்லாத மின்சாரம் கொடுத்த தாய்தான் எங்கள் தாய் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுக் கூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மின்சாரத்தால் ஆட்சியை இழக்கின்றோம் என்று சொன்னவர்கள் மத்தியில், மின் மிகை மாநிலமாக இருக்கின்றது; அதை வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்; அதற்கான தடத்தை ஏற்படுத்தித் தாருங்கள் என்று சொல்லி, பாரத பிரதமருக்குக் கடிதம் எழுதிய தாய் எங்கள் தாய் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் வேண்டுமென்று சாலைக்கு வந்து போராடியவர்கள் இலட்சக்கணக்கான பேர். ஆனால், தெய்வம் எங்கே சென்றாலும் இலட்சக்கணக்கான பேர் வந்து வணங்குவார்கள். தமிழகத்தை மின்வெட்டு இல்லா மாநிலமாக உருவாக்கிய காரணத்தினால், அந்த தெய்வமே வருகிறது என்று *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்கள் நினைத்து, நினைத்து வணங்கினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதற்கு புரட்சி செய்தவர் எங்கள் அம்மா அவர்கள் என்பதையும் இந்த நேரத்தில் நினைவுக் கூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 3—20

தேர்தல் நேரத்திலே வாக்குறுதிகளைக் கொடுப்பது என்பது, வாக்குகளைப் பெறுவதற்கு மட்டுமல்ல; அந்தத் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்பது எங்கள் தாயினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலேதான் தேர்தல் நேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் நான் ஆட்சிக்கு வந்தவுடன் 100 யூனிட் மின்சாரத்தை அனைத்துக் குடும்பங்களுக்கும் இலவசமாகக் கொடுப்பேன் என்று சொன்னார்கள். அதற்காக முதல் கையெழுத்திட்டு, கடந்த ஆண்டு 1 கோடியே 91 இலட்சமாக இருந்த எண்ணிக்கை இந்த ஆண்டு 1 கோடியே 97 இலட்சமாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றிக் கொடுத்த தாய், எங்கள் தாய் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நான் சார்ந்திருக்கின்ற தொழில், விசைத்தறித் தொழில், கைத்தறித் தொழில். கைத்தறிக்கு 100 யூனிட் இலவசமாக இருப்பதை 200 யூனிட்டாக உயர்த்தித் தருவேன் என்று சொன்னார்கள், அதைக் கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல, விசைத்தறிக்கு 500 யூனிட்டிலிருந்து 750 யூனிட் இலவசமாகக் கொடுப்பேன் என்று சொல்லி, வந்தவுடன் கையெழுத்திட்டு அதற்கும் 750 யூனிட் ஆகக் கொடுத்து, இன்று விசைத்தறித் தொழிலைக் காப்பாற்றிய தாய் எங்கள் தாய். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டு தமிழகத்தில் உச்சபட்ச நேரத்தில் 90 சதவிகித மின்வெட்டையும், மற்ற நேரங்களில் 40 சதவிகித மின்வெட்டையும் மின்சாரப் பற்றாக்குறையினால் அன்று அந்த அரசு அறிவித்தது. அன்றையதினம் மின்சாரம் இல்லாத காரணத்தினால் வேறு வழியில்லை. பாதையும் இல்லாத காரணத்தினால் மின்சாரம் வாங்க முடியவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள், நான் ஆட்சிக்கு வந்தால் இரண்டாண்டுக் காலம் பொறுத்துக்கொள்ளுங்கள், முழுமையான மின்சாரத்தை நான் உங்களுக்குத் தருவேன் என்று சொன்னார்கள். அதேபோல ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுக் காலத்திற்குள்ளாகவே வீடுகளுக்கு மின்வெட்டு இல்லாத நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்கள் 2012 ஆம் ஆண்டே உருவாக்கிக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 5–6–2015 முதல் தமிழகத்தில் மின்வெட்டே இல்லை என்ற நிலைமையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். எதிர்காலத்தில் எவ்வளவு மின்சாரம் தேவை என்பதை அறிந்து நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலேதான் 2011 முதல் 2016 வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில் கூடுதலாக இணைக்கப்பட்ட மின் நிறுவு திறன் எவ்வளவு என்று சொன்னால் 10,496 மெகா வாட் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாண்டுக் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் மின்கட்டமைப்போடு இணைத்திருக்கின்றார்கள் என்ற செய்தியை உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே அவருக்குப் பதில் சொல்கின்றபோதுகூட சொன்னேன். மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் அது தவறா, சரியா என்று எனக்குத் தெரியாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் சட்டமன்றத்தில் நான் தெரிந்து தவறாகச் சொல்வதில்லை. தவறாக இருந்தாலும்கூட நான் அந்த நேரத்தில் திருத்திக்கொள்வேன், அதுதான் என்னுடைய சுய பழக்கம். அந்த அடிப்படையிலேதான் இப்பொழுது 10,496 மெகா வாட் என்று நான் சொல்லியிருக்கின்றேன். மணி 3–30 ஆகிவிட்ட காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது தவறாகத் தெரிந்தால், நாளைய தினம்கூட என்னிடத்தில் கேள்வியைக் கேளுங்கள், நான் அதற்கு விளக்கமாகப் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கின்றேன். கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் இதற்கான விவரங்கள் இருக்கின்றன பார்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். அதன் பின்னர் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மதிவாணன், சொல்லுங்கள். 2008–ல் சொல்லுங்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–ல் உச்சபட்ச நேரத்தில், அதாவது மாலை 6–00 மணியிலிருந்து 10–00 மணி வரை 90 சதவிகிதம் மின்வெட்டைக் கொடுத்த அரசு, உங்கள் அரசு என்றுதான் நான் சொன்னேன். நான் அதை முதலில் சொல்லவில்லை, நீங்கள் கேட்டதனால் நான் இப்போது உங்கள் அரசு என்று சொல்ல வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

கூடங்குளம் மின் திட்டம். நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள், அப்போது கடுமையான மின் பற்றாக்குறை இருந்தது. அவர்களை அழைத்துப் பேசி, அந்த கூடங்குளம் மின்சாரத்தை எடுத்திருந்தீர்கள் என்று சொன்னால், முதல் கட்டத்தில் 563 மெகாவாட்டும், இரண்டாவது கட்டத்தில் 562 மெகா வாட் மின்சாரமும் கிடைத்திருக்கும். ஆனால் அந்த முயற்சியையும் செய்யவில்லை. மின் பாதையையும் கொண்டு வரவில்லை. மின்வெட்டு, மின்வெட்டு என்று சொன்னால், மின்வெட்டைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தோம் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்தப் போராட்டக்காரர்களை அழைத்து,

அவர்களுக்குண்டான நிவாரணத் தொகையையும் கொடுத்து, அந்த கூடங்குளம் மின் நிலையத்தைத் திறந்து வைத்தார்கள். 563 மெகா வாட் மின்சாரத்தை முதல் கட்டமாகவும், இரண்டாவது கட்டமாக 562 மெகா வாட் மின்சாரத்தையும் எடுத்தார்கள். கிட்டத்தட்ட 1,200 மெகா வாட் மின்சாரம் கிடைக்கிறது. இவையெல்லாம் சேர்ந்துதான் இன்று தமிழகம் மின் மிகை மாநிலமாக இருக்கிறது. இந்த முயற்சியை எங்கள் தாய்தான் செய்தார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாநிலத்தினுடைய சராசரி மின் தேவை 13,750 மெகா வாட்டிலிருந்து, 14,250 மெகா வாட்டாக உயர்ந்திருக்கின்றது. ஆனால், 18,000 மெகா வாட் நிறுவுதிறன் இருக்கின்ற காரணத்தினால், இனிமேல் தமிழகத்தில் மின்வெட்டே இல்லை என்ற நிலைமைக்கு ஓர் உதாரணத்தைச் சொல்கின்றேன். கடந்த ஆண்டு 29—4—2016 அன்று உச்சபட்ச தேவை அளவாக 15,343 மெகா வாட் இருந்தது. அதை முழுமையாகப் பூர்த்தி செய்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இனி வருங்காலத்தில் எவ்வளவு மின்சாரம் தேவைப்பட்டாலும் பூர்த்தி செய்யப்படும். இனி மின்சாரப் பற்றாக்குறையே இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, இன்றையதினம் 14,000 மெகா வாட் மின்சாரம் தேவையாக இருக்கிறது என்று சொன்னால், சென்னை பெரு நகரத்தில் மட்டும் 3,342 மெகா வாட் மின்சாரம் தேவைப்படுகிறது. அதை முழுமையாகக் கொடுத்து, மின்வெட்டே இல்லாத மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்திருக்கின்றார்கள். என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3—25

2011 ஆம் ஆண்டில் ஒரு நாளின் சராசரி மின் தேவை 200 மில்லியன் யூனிட்டாக இருந்தது, இப்போது 320 மில்லியன் யூனிட்டாக உயர்ந்திருக்கின்றது. அதுகூட, 29—4—2016 அன்று 345 மில்லியன் யூனிட்டாக உயர்ந்தபோதிலும், அந்த மின் தேவையைப் பூர்த்தி செய்திருக்கின்ற காரணத்தினால், இனி வருங்காலத்தில் இன்னும் எவ்வளவு தேவை இருந்தாலும் மின்வெட்டே இருக்காது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் கோரியபோது நான் ஏற்கெனவே பதில் சொன்னதைப்போல, மத்திய மின்சார ஆணையம்கூட சமன்பாட்டு அறிக்கையை இந்த ஆண்டு வெளியிட்டிருக்கின்றது. கடந்த ஆண்டும் வெளியிட்டிருந்தது. தமிழகத்தில் peak hours–ல் 8,663 மில்லியன் யூனிட் மின்சாரத்தையும், உச்சபட்ச மின் தேவையில் 2,227 மெகா வாட் அளவிற்கு உற்பத்தி செய்தும், மின் மிகை மாநிலமாக உள்ள மாநிலம் தமிழகம்தான் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது என்று சொன்னால் தமிழகம் மின் உற்பத்தியில் எந்த இடத்தில் இருக்கிறது என்று நீங்களே சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மின் பயனீட்டாளர்களுக்கு தரமான, சீரான மின்சாரத்தை வழங்குவதற்காக மின் கட்டமைப்பைச் சரி செய்ய வேண்டும்; மின் பாதையைச் சரி செய்ய வேண்டும்; தேவையான அளவிற்குத் துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டும். துணை மின் நிலையங்களை அதிகமாக அமைக்கும்போதுதான் சீரான மின்சாரம் வழங்க முடியும். அம்மா அவர்களுடைய கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியிலும், தற்போதைய ஓராண்டுக் கால ஆட்சியிலும் மொத்தம் 343 துணை மின் நிலையங்களும், 9,673.27 சுற்று கி.மீ. அளவிற்கு மின் பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. எந்த அளவிற்குத் தேவை இருக்கிறதோ அந்த அளவிற்குத் தேவையான துணை மின் நிலையங்களையும், EHT, HT மற்றும், LT மின் பாதைகளையும் உருவாக்கித் தந்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 55.84 இலட்சம் புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மின் நுகர்வோர்களுக்கு சேவைகளை விரிவுபடுத்தும் வகையில் புதிய மின் இணைப்பு பெறுவதற்கு ஏதுவாக புதிய திட்டம். புதிதாக மின் இணைப்பு வேண்டுமென்று சொன்னால் அவர்கள் நேரடியாக மின் வாரிய அலுவலகத்திற்கு வராமல், இணையதளத்தின் மூலமாகப் பதிவுசெய்து மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் 5–8–2016 அன்று தொடங்கி வைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் ஒரு நாள் மின் இணைப்புத் திட்டத்தைக் கொண்டு வர முடியுமா என்று கேட்டார்கள். அதை நாங்கள் உடனடியாகச் செய்கிறோம் என்று சொல்லி, 12–6–2017 அன்று அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அத்திட்டம் என்னவென்று சொன்னால், மின் கம்பங்களிலிருந்து 100 அடிக்குள் (30 மீட்டருக்குள்) இருக்கும் வீடுகளுக்கு மின் இணைப்பு கேட்கப்படும்போது, 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்ற அந்தத் திட்டத்தை 12–6–2017 அன்று அறிவித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி மின் இணைப்பு உடனடியாகக் கொடுக்கப்படும்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், புதைவழித் தடமாக இருப்பதால், மின் இணைப்புக் கோருபவர், அருகாமையில் இருக்கின்ற மின் பகிர்மானப் பெட்டியிலிருந்து 30 மீட்டருக்குள் இருந்தால் அவருக்கும் உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும். அதற்கும் தொலைவில் இருந்தால் 48 மணி நேரத்திற்குள் சென்னை நகரத்திலும் மின் இணைப்பு வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏதாவது ஒரு பகுதியில் பராமரிப்புப் பணிகளுக்காக மின்சாரம் வழங்குவது நிறுத்தப்படும்பொழுது, 'உடனே மின்வெட்டு, மின்வெட்டு' என்று சொல்லிவிடுவார்கள். அதற்காக 'மின்சார நண்பன்' என்ற ஒரு திட்டத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறோம். எந்தெந்தப் பகுதிகளில் பராமரிப்புப் பணிகளுக்காக மின்சாரம் நிறுத்தப்படுகின்றதோ, அந்தப் பகுதியில் வசிப்பவர்களுக்கு SMS மூலமாக, குறுஞ்செய்தியின் மூலமாக அந்தத் தகவலைத் தெரிவிக்க வேண்டும் என்ற ஒரு திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்பேரில் 12–6–2017 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. இதுவரை, கிட்டத்தட்ட ஒரு கோடியே 60 இலட்சம் பேர் Mobile App மூலம் இத்திட்டத்தில் இணைந்திருக்கிறார்கள். 12–6–2017 முதல் இன்று வரை கிட்டத்தட்ட 4 இலட்சம் பேருக்கு செய்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஒரு பகுதியில் மின்சாரம் தடைபட்டால், எதனால் தடைபட்டது, எப்பொழுது மீண்டும் மின்சாரம் வழங்கப்படும் என்ற தகவலை அவர்களுக்குத் தெரியப்படுத்தும் வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்

என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உற்பத்தி செய்கின்ற மின்சாரமாக இருந்தாலும் சரி, கொள்முதல் செய்யப்படுகின்ற மின்சாரமாக இருந்தாலும் சரி, மின்சாரத்தைக் கொண்டு செல்கின்ற பாதை தேவை என்பதைத்தான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் பேசும்போது நான் குறிப்பிட்டேன். மத்திய அரசில் நீங்கள் அங்கம் வகித்தபோது, பாதையை உருவாக்கித் தந்திருந்தால், வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இந்த அளவிற்கு மின் வெட்டு இல்லாத மாநிலமாக தமிழகத்தை வைத்திருந்திருக்கலாம் என்ற கருத்தைத்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். ஆகவே, இன்னும் எங்கெங்கு மின் பாதைகள் தேவை என்பது குறித்து இப்பொழுது கலந்தாலோசிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், காற்றாலை மின்சாரம் அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றது. பசுமை வழித்தடத்தை அதிகமாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று ஏற்கெனவே, நமது மாண்புமிகு அம்மா அவர்களும் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் சொல்லியிருக்கின்றார்கள் இங்கே உற்பத்தியாகின்ற மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு வழித்தடத்தை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டிருக்கின்றோம். அதற்கு நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கின்றார்.

பிற்பகல் 3—30

மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் 2016 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன், மின்சாரத் துறை அமைச்சராக எனக்கு பதவியைக் கொடுத்துவிட்டு, ‘இனிமேல் நிலக்கரியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை நிறுத்தி விடுங்கள். நாம் உள்நாட்டிலேயே வாங்கிக்கொள்ளலாம் என்று என்னிடம் சொன்னார்கள்.’ அம்மா அவர்கள் இந்தக் கொள்கை முடிவு எடுத்ததன் காரணமாக இந்த ஓர் ஆண்டுக் காலத்திற்குள் பசுமை வரி, இரயில் கட்டணம் என எல்லாம் உயர்ந்து கிட்டத்தட்ட 615 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்பட்டாலும்கூட இறக்குமதி செய்வதைக்காட்டிலும் 400 கோடி ரூபாய் இன்று மின்சார வாரியத்திற்கு மிச்சமாகியிருக்கிறது என்று சொன்னால், அதற்கு அம்மா அவர்கள் வகுத்த கொள்கைதான் காரணம் என்பதைச் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளம் மற்றும் புயல் போன்ற கடுமையான சூழ்நிலைகளிலும்கூட மின்சார வாரியம் திறமையாகப் பணியாற்றி இருக்கின்றது என்பதையும், பொதுமக்கள் சிரமத்தைப் போக்கியிருக்கிறது என்பதையும் சில உதாரணங்களோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு ஓர் உதாரணம் வர்தா புயல்.

12—12—2016 அன்று 12 மணிக்கு வர்தா புயல் ஆரம்பிக்கின்றது. வர்தா புயல் வரும் என்று மக்களுக்கு எச்சரிக்கை விடுத்த காரணத்தினால், மக்கள் பாதுகாப்பாக இருந்தார்கள். பகல் 12 மணிக்கு ஆரம்பித்த அந்த புயல் காற்றினுடைய வேகம் மாலை 6 மணி அளவிலேதான் குறைகின்றது. கிட்டத்தட்ட 130 கிலோ மீட்டர் முதல் 140 கிலோ மீட்டர் அளவிற்கு காற்று வேகமாக வீசியது. மாலை 6 மணிக்குப் பிறகு மின்சார வாரியத்திலிருந்து எங்கே பழுதாகியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் சென்றால் எங்கே பார்த்தாலும் மரங்கள் மற்றும் மின் கட்டமைப்புகள் எல்லாம் விழுந்திருக்கின்றன. சாலைகளில் இலட்சக்கணக்கான மரங்கள் விழுந்திருந்த காரணத்தால் நாங்கள் செல்வதற்கு, போக்குவரத்துக்குகூட வழியில்லாமல் இருந்தது. ஆனால், தேவையை அறிந்து மின்சார வாரியம் துரிதமாகச் செயல்பட்டது. 6 மணிக்கு பிறகு ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பணியின்மூலம் முக்கியப் பகுதிகளான அரசு பொது மருத்துவமனை, தலைமைச் செயலகம் ஆகியவற்றிற்கு 3 மணி நேரத்திலும், உயர் நீதிமன்றத்திற்கு இரவு 9 மணிக்குள்ளும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மின்சாரம் கொடுக்கப்பட்டது, புயலை விட வேகமாகச் செயல்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் கிட்டத்தட்ட 49,000 மின் கம்பங்கள் விழுந்திருக்கின்றன. சாதாரண சேதம் இல்லை. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இங்கிருந்து அடித்த காற்று காஞ்சிபுரத்தைத் தாண்டி திருவண்ணாமலை, வேலூரிலேகூட சேதாரம் ஏற்படுத்தி இருக்கின்றது. காற்றினுடைய வேகம் அந்த அளவிற்கு இருந்தபோதிலும் அம்மாவின் நினைவிடம் சிறிதளவும் சேதம் அடையவில்லை என்று சொன்னால் அம்மாவின் சக்தி எந்த அளவிற்கு இருந்தது என்பதைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நான் மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வர்தா புயலினால் மின் பாதை கொண்டு வருகின்ற 59 உயர் மின் கோபுரங்கள் விழுந்துவிட்டன. அதைச் சரிசெய்தால்தான் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூருக்கு மின்சாரம் கொண்டு வர முடியும். ஆனால் அதை உடனடியாகச் செய்வதற்கு, முதலில் எங்கே விழுந்திருக்கிறது என்பதை கண்டுபிடிப்பதற்கு செல்வதற்குக்கூட வழியில்லாமல் இருந்தது.

மேலும், 800 மின்மாற்றிகள், 49,100 மின் கம்பங்கள், 4,500 பில்லர் பெட்டிகள், 15,000 கிலோ மீட்டர் அளவிற்கு மின் கம்பிகள் சேதம் அடைந்தன. இதையெல்லாம் நாங்கள் கண்டுபிடித்து சரி செய்வதற்கு முன்பாக, 3 மணி நேரத்திற்குள் அரசு பொது மருத்துவமனை, தலைமைச் செயலகம் மற்றும் உயர் நீதிமன்றத்திற்கு மின்சாரம் கொடுத்தோம். நள்ளிரவிற்குள் கோயம்பேடு பஸ் நிலையத்திற்கும், இரவு 2 மணிக்குள் விமான நிலையத்திற்கும் மின்சாரம் கொடுத்து போக்குவரத்தைச் சரி செய்த ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வர்தா புயல் அடித்த வேகத்தைக்காட்டிலும் போர்க்கால அடிப்படையில் நாங்கள் பணியை மேற்கொண்டோம். நீங்களே நினைத்துப் பாருங்கள். 59 மின் கோபுரங்கள் விழுந்தன. அந்த மின் கோபுரங்களை அமைக்கின்ற பணி என்பது சாதாரண பணி அல்ல. மத்திய அரசினுடைய BGCL கூட அந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். ஒரு கம்பத்திற்கு ஒரு லைன் கொடுத்தால், அதாவது மணலியிலிருந்து மயிலாப்பூர் வருகின்ற அந்த ஒரு லைன் கொடுத்துவிட்டால், சென்னை மாநகரத்திற்குக் கிட்டத்தட்ட 50 சதவிகித பகுதிகளுக்கு உடனடியாக கொடுத்துவிடலாம் என்று அவர்களை அணுகி நாங்கள் கேட்டோம். அவர்களும் உடனடியாக அந்த பாதையை அமைக்க இயலாது. செல்வதற்குக்கூட வழியில்லாமல் இருக்கின்றது. ஆகையால் நாங்கள் temporary ஆக மின் கோபுரத்தை அமைத்துத் தருவதற்கு மூன்று நாட்கள் ஆகும் என்று சொன்னார்கள். நான்கூட அந்த இடத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே செல்வதற்குக்கூட வழி கிடையாது. மின் பணியாளர்களெல்லாம் அந்த மின் கோபுரத்தைத் தலையிலே சுமந்துதான் செல்ல வேண்டும். மத்திய அரசால் 3 நாட்கள் ஆகும் என்று சொன்ன அந்தப் பணியை இரண்டே நாட்களில் நமது தமிழ்நாடு மின்சார வாரியம் முடித்து அந்த புதிய மின் கோபுரத்தை நிறுவியது. (மேசையைத் தட்டும்

ஒலி) 12 ஆம் தேதி ஏற்பட்ட அந்த புயலின் பாதிப்பைச் சரிசெய்து 15 ஆம் தேதி மாலைக்குள் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு 100 சதவிகிதம் மின்சாரம் கொடுத்தோம் என்று சொன்னால் இதைவிட வேகமாக எந்த அரசும் செயல்பட முடியாது. யாராலும் செயல்பட முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 3–35

அதேபோல, புறநகர்ப் பகுதிகள். திருவள்ளூர் பகுதிகளை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், வயலிலே மின் கம்பங்கள் விழுந்து கிடந்தன. வயலிலே விழுந்து கிடந்ததால், அங்கு வெள்ளாமை செய்யும் விவசாயிகள் நாங்கள் வெள்ளாமையை முடித்துக்கொண்டபிறகு அந்த மின் கம்பத்தை போடுங்கள் என்று சொன்னார்கள். காஞ்சிபுரத்திலும் இதே நிலைமைதான் இருந்தது. இருந்தாலும்கூட, விவசாயம் பாதிக்காத வகையில், 12 ஆம் தேதி ஏற்பட்ட புயலின் தாக்கத்தைச் சரிசெய்ய ஆந்திரா மற்றும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கிட்டத்தட்ட 15,000 மின் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு, விவசாயப் பகுதிகளைத் தவிர அனைத்துப் பகுதிகளுக்கும் 18 ஆம் தேதி மின்சாரத்தை வழங்கிய ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 'வர்தா' புயல் வந்த வேகம் தெரியாமல், எட்டே நாட்களில் அதாவது 20 ஆம் தேதியே அனைத்துப் பகுதிகளுக்கும் முழுமையாக மின்சாரத்தைக் கொடுத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றையதினம் அதைப் பார்த்த மக்கள் என்னுடைய செல்போனுக்கு பாராட்டுகளை அனுப்பியிருக்கிறார்கள். சந்தேகம் இருந்தால் என்னுடைய செல்போனைக் காண்பிக்கின்றேன். அத்தனை பாராட்டுகளும் எனக்கல்ல, மின்சார வாரியம் இவ்வளவு வேகமாகப் பணியாற்றியதற்கும், இவ்வளவு சீக்கிரமாக மின்சாரத்தைக் கொடுத்ததற்கும் நன்றி என்று எங்களுடைய அலுவலகத்திற்கும், எங்களுடைய செல்போனுக்கும் பாராட்டுகளை அனுப்பியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது எதிர்பாராத விதமாக, பருவ மழையையும் தாண்டி, ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஏற்பட்ட காற்றின் வேகத்தால் கிட்டத்தட்ட 18 மாவட்டங்களில் பாதிப்புகள் ஏற்பட்டன. வேலூரில் ஆரம்பித்து கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், திண்டுக்கல்,

மதுரை, தேனி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி வரை எதிர்பாராத வகையில் காற்றடித்த காரணத்தினால், கிட்டத்தட்ட 40 நாட்களில் 6,000 மின் கம்பங்கள் விழுந்துவிட்டன. இதிலே கிருஷ்ணகிரி பகுதியில் உள்ள போச்சம்பள்ளியில் மட்டும் ஒரே நாளில் கிட்டத்தட்ட 300 மின் கம்பங்களும், ஆயிரக்கணக்கான தென்னை மரங்களும் விழுந்துவிட்டன என்பதையெல்லாம் நீங்கள் செய்திகளிலே பார்த்திருப்பீர்கள். விழுந்த அந்த 300 மின் கம்பங்களுக்கும் 24 மணி நேரத்தில் மாற்று ஏற்பாடு செய்து அந்தப் பகுதிகளுக்கு தடையில்லாமல் உடனடியாக மின்சாரம் கொடுத்த ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, அந்தப் பணிகள் நடைபெற்றன என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வருங்காலத்தில் கிட்டத்தட்ட 13,750 மெகா வாட்டிலிருந்து 14,500 மெகா வாட் வரை மின்சாரம் தேவை இருக்கிறது. இன்னும் ஓராண்டுக் காலத்திற்குள் அது 15,000 மெகா வாட் அல்லது 16,000 மெகா வாட்டாக உயரும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்கள் எதிர்காலத்தை மனதிலே வைத்து, ஐந்தாண்டுக் காலத்தில் 20,500 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான திட்டங்களைப் போட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 40 சதவிகிதப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடம் தேர்வு செய்கின்ற பணிகள் போன்ற அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், Hydro Power–புனல் மின் திட்டம்மூலம் 2,500 மெகா வாட்; அனல் மின் நிலையம்மூலம் 13,000 மெகா வாட்; சூரிய ஒளி மின்சாரம்மூலம் 5,000 மெகா வாட் மின்சாரம். இந்த 5,000 மெகா வாட் மின்சார உற்பத்திக்கும் இப்போது டெண்டர் போட்டுவிட்டோம். அநேகமாக இன்னும் 1 மாதக் காலத்திற்குள் அதற்குண்டான பணிகள் நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். ஆக, இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் 20,500 மெகா வாட் மின்சாரம் தமிழகத்தில் உற்பத்தியாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய கேள்விகளுக்கெல்லாம் இடமில்லாமல், நீங்கள் நினைத்ததையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள்

இருக்கின்றபோதே திட்டங்களைப் போட்டு, எதிர்கால மக்களுக்கு, இனிமேல் தமிழகத்தில் மின்வெட்டே இருக்கக் கூடாது என்ற நிலைமையை உருவாக்கித் தந்த தாய், எங்களுடைய தாய் என்பதை இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

காற்றாலை மின்சாரத்தைப்பற்றி உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். காற்றாலை மின்சாரம்மூலம் எவ்வளவு மின்சாரம் உற்பத்தி ஆகின்றதோ, அவ்வளவு மின்சாரத்தையும் எடுத்துக்கொள்கிறோம். மின்சார வாரியத்திற்குக்கூட, 3 ரூபாய்க்கு மின்சாரம் கிடைக்கின்றது, அதை நீங்கள் எடுக்க மறுக்கின்றீர்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வெளிப்படையாக பார்க்கின்றபோது, அது 3 ரூபாய்க்கு என்றுதான் உங்களுக்குத் தெரியும். ஆனால், முழுமையாக மின்சாரத்தை எடுக்கின்றபோது மின்சார வாரியத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகின்றது என்பதற்கு ஓர் உதாரணத்தை நான் சொல்கின்றேன். ஏற்கெனவே ஓர் ஒப்பந்தம் இருக்கிறது. அவர்கள் எவ்வளவு மின்சாரத்தை பயன்படுத்துகின்றார்களோ அது போக, மீதியை banking என்ற system–ல் வைத்துவிடுவார்கள். 1 இலட்சம் யூனிட் மின்சாரம் என்று சொன்னால், 75 ஆயிரம் யூனிட் மின்சாரத்தை பயன்படுத்திவிட்டு, மீதமுள்ள 25 ஆயிரம் யூனிட் மின்சாரத்தை banking–ல் வைத்துவிடுவார்கள். எப்பொழுது அதை எடுத்துக்கொள்வார்கள் என்று சொன்னால், மின் பற்றாக்குறை ஏற்படுகின்ற, வெயில் அதிகமாக இருக்கின்ற ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களில்தான் அதை எடுப்பார்கள். அவர்கள் 3 ரூபாய்க்கு கொடுத்ததைத் அவர்கள் 3 ரூபாய்க்கு எடுத்துக்கொள்வார்கள். நாம் 4 ரூபாய், 5 ரூபாய்க்கு வாங்கினாலும் சரி, அவர்களுக்கு 3 ரூபாய்க்குக் கொடுக்க வேண்டும். அந்த வித்தியாசமான தொகையினால் மின்சார வாரியத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த முறை காற்றாலை மின்சாரத்தை முழுமையாக எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். காற்றாலை மின்சாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற காரணத்திற்காக இதுகாறும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்ற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய ஆட்சியைக்காட்டிலும் இப்போது நாங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 3–40

இன்றையதினம் மத்திய அரசு ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கின்றது. மரபுசாரா எரிசக்தி ஒவ்வொரு மாநிலத்திலும் இந்த வருடம் இவ்வளவு இருக்க வேண்டுமென்று தெரிவித்து நம்முடைய மாநிலத்தில் 9 சதவிகிதம் இருக்க வேண்டுமென்றும் நிர்ணயித்திருக்கின்றது. அதேபோல சூரிய ஒளி மின்சக்தியில் 5 சதவிகிதம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இதை முழுமையாகப் பூர்த்தி செய்த அரசு எந்த அரசு என்று சொன்னால், அது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தமிழ்நாடு அரசுதான் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் நாங்கள் பசுமை வழித்தடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மற்ற மாநிலங்கள் இந்த RPO என்று சொல்லக்கூடிய Renewable Purchase Obligation–ஐ fulfill பண்ணுவதற்கான norms–ஐப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால் அவர்களிடத்திலே அதற்கான மின்சாரம் இல்லை. தமிழகத்திலே உற்பத்தியாகக்கூடிய மின்சாரத்தை நாங்கள் தருகின்றோம், அதற்கு தடவசதி ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டு கடந்த முறை 120 மெகா வாட் மின்சாரம் ஒடிசா மாநிலத்திற்குக் கொடுத்தோம். இப்பொழுது 500 மெகாவாட் மின்சாரம் கேட்டிருக்கிறார்கள். மின்சாரம் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாடு மின்சாரத் துறையில் தனி முத்திரை பதித்து இந்திய நாட்டில் பிற மாநிலங்களுக்கெல்லாம் role model என்று சொன்னால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் இதற்குக் காரணம் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய மின் திட்டங்கள். ஏற்கெனவே நீங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் பார்த்திருப்பீர்கள். மரியாதைக்குரிய உறுப்பினர் அண்ணன் வேலு அவர்கள் இல்லை. அவர்களுக்காகத்தான் சொல்கிறேன். கடந்த ஆண்டு பேசும்போது கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை மேற்கோள்காட்டி 'எண்ணூர் விரிவாக்கத் திட்டத்தில் ஒரு பணியும் நடைபெறவில்லை', நான் அந்த வழியாகச் செல்கிறேன் என்று சொன்னார்கள். அதற்காகத்தான் இந்த ஆண்டு எந்தெந்தப் பணிகள் நடைபெறுகின்றன, எவ்வளவு பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே படமாகப் போட்டிருக்கிறோம். அதைப்

பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். கிட்டத்தட்ட 40 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அந்தப் பணிகள் முடிவடைந்து மின் கட்டமைப்போடு இணைக்கப்படும். அனைத்துத் திட்டங்களும் சொல்லியிருப்பதைப்போல் அந்தந்த ஆண்டிற்குள் நிறைவேற்றுவதற்குண்டான முழு முயற்சியை மாண்புமிகு மரியாதைக்குரிய அண்ணன் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

டிஜிட்டல் துணை மின் நிலையம். புதிய டிஜிட்டல் துணை மின் நிலையம் கொண்டு வருகிறபோது அந்தத் துணை மின் நிலையத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டதென்றால் அதை உடனடியாக நீக்க முடியும். பரீட்சார்த்தமாக முதன்முதலாக கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் நகரத்தில் டிஜிட்டல் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். எவ்வளவு மின்சாரம் என்றாலும் இந்த மின் பாதையில் கொண்டுவரலாம். ஆனால் தமிழகத்திற்கு வந்ததற்குப் பின்னால் மற்ற பகுதிகளுக்கு முழுமையாகக் கொண்டு செல்லவேண்டுமென்றால், மின் பாதையின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எனவேதான், 765 கிலோ வோல்ட் திறன் கொண்ட 4 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்திருந்தார்கள். முதன்முதலாக மரியாதைக்குரிய உறுப்பினர் முனைவர் பொன்முடி அவர்கள் மாவட்டத்தில், அரியலூர் பகுதியில்தான் 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தியாவிலே தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் போடப்படவில்லை. முதன்முதலாக மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* மத்திய அரசு ஏற்கெனவே அமைத்திருக்கிறது. ஆனால், மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ளது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

நாகப்பட்டினம், கடலூர் போன்ற மாவட்டங்கள் புயல் காலங்களில் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன. கடலோரப் பகுதிகள்

அதிகமாகப் பாதிக்கப்படுவதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டால் அதனைச் சரிசெய்வதற்கு ஒரு வார காலம் ஆகிவிடுகிறது. எனவே, அந்தப் பகுதிகளில் புதைவடக் கம்பி அமைக்க வேண்டுமென்று உலக வங்கியில் 360 கோடி ரூபாய் நிதியுதவி கேட்கப்பட்டு, நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் அந்தப் பகுதிகள் புதைவடத் தடமாக மாற்றித் தரப்படும். சென்னையும் புயலால் பாதிக்கப்படுகின்றது. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், வட சென்னையிலிருந்து மைலாப்பூர் வருகின்ற அந்தப் பாதைதான் சென்னைக்கு முழுமையாக மின்சாரம் கொடுக்கின்ற பாதை. அது உயர்மட்டமாக இருக்கின்ற காரணத்தினால் அதையும் புதைவடத் தடமாக மாற்றுவதற்குக் கேட்டிருக்கின்றோம். அதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியும் இப்பொழுது நடைபெறும் நிலையில் இருக்கிறது.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் புதைவடத் தடம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள புறநகர்ப் பகுதிகளில், மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட அவர்கள் தொகுதியில் கேட்டிருந்தார்கள், படிப்படியாக நிதிநிலைக்கேற்ப அந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். மின்சாரம் கொண்டு வருகின்றபோது ஏற்படக்கூடிய line loss–ஐக் குறைக்க வேண்டும். Line loss–ஐக் குறைத்தால்தான் மின்சார வாரியம் இலாபத்தில் இயங்கும். 2015 ஆம் ஆண்டு 24.95 சதவிகிதமாக இருந்த மின் இழப்பு இப்பொழுது கிட்டத்தட்ட 18.15 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. வருங்காலத்தில் அதை மேலும் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதை மேற்கொள்வோம்.

மின்சாரத்தின் சிக்கனம் குறித்து பலமுறை சொல்லியிருக்கின்றோம். அந்த வகையில் LED விளக்குகள் கொடுக்கும் திட்டத்தை மத்திய அரசு துவக்கியிருக்கிறது. அந்தத் திட்டத்தின் வாயிலாக நான்கரை மடங்கு அளவுக்கு மின் சேமிப்பு இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். அதற்கு இந்த அரசு முழுமையான ஒத்துழைப்புத் தரும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–45

கணினி மின்தடை நீக்கும் திட்டம் – மின்தடை வந்தால் கணினியின் வாயிலாகவும் மின்சார வாரியத்திற்குப் புகார் செய்யும் 1912 எண்ணிற்கு போன் செய்கின்றபோதும், இந்தத் திட்டத்தின் வாயிலாக அந்தப் போனை எடுத்து, உடனடியாக அந்த மின் தடையை நீக்கும் பணியைச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். 2017–க்குள் அந்தப் பணிகள் முடிவடையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் புதிதாகப் பணியாட்களை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அந்தப் பணிகள் படிப்படியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த காலத்திலே, கிட்டத்தட்ட 1,800 தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமனத்திற்கான தேர்வுகள் நடைபெற்று, இப்போது 900 தொழில்நுட்பப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், சபையின் வெளியே இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அவர்களும்கூட அந்த நியமனங்கள் குறித்து குறையாகச் சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது என்னவென்று சொன்னால், மின்சார வாரியத்தில் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற தொழில்நுட்பப் பணியாளர்களானாலும்சரி, A.E. ஆக இருந்தாலும்சரி, அந்த நியமனங்கள் எல்லாம் transparent ஆக, எந்தத் தவறும் நடைபெறாமல் நேர்மையாக நடைபெற்றிருக்கின்றன. பணியாளர்கள் நியமனம் வருங்காலங்களிலும் இதுபோன்றே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஏதேனும் தவறு நடந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், வருகின்ற காலங்களில், தேவையான அளவில் பணியாளர்கள் பணியில் இருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இன்றையதினம் எந்த . . . (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** நான் இன்னும் நிறைய பேசவேண்டியிருக்கிறது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கைமீது என்னுடைய பதிலுரை இருக்கிறது, பதில் வேண்டாமா?

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரை, இப்போது நடைபெறுகின்ற பணிகளைப் பற்றிச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பேசும்போது, மின்சார வாரியத்தின் நிதி நிலைமை எந்த அளவிற்கு இருக்கிறது; 81,000 கோடி ரூபாய் கடனில் இருக்கிறது; இனிமேல் இந்த நிருவாகம் எப்படி நடைபெறும் என்றெல்லாம் கேட்டீர்கள். வருங்காலத்தில் எப்படி நிருவாகம் இருக்கப்போகிறது என்பதை நான் உங்களுக்கு தெளிவுபடத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 2013–2014 ஆம் ஆண்டில் இருந்த இழப்பு 13,985 கோடி ரூபாய். ஆனால், 2016–2017 ஆம் ஆண்டு, 3,783 கோடி ரூபாயாக இழப்பு குறைந்திருக்கிறது. வர இருக்கின்ற நிதியாண்டில், மின்சார வாரியம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முதலாக 2,150 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்ட இருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின்சாரம் வாங்குகின்ற விலைக்கும், விற்கின்ற விலைக்கும் 2011–2012–ல் 2 ரூபாய் 16 பைசா வித்தியாசம் இருந்தது. இப்போது அது 44 பைசாவாகக் குறைந்துள்ளது. இந்த நஷ்டத்தைக் குறைக்கின்றபோது, வருங்காலத்தில் அந்த இடைவெளியும் குறையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் தமிழக மின்சார வாரியம் இலாபத்தில் இயங்கும். நான் சொல்வதை யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏற்கெனவே மின்சார வாரியத்திற்கு 81,000 கோடி ரூபாய் கடன் இருந்தது. அதைக் கட்டி முடித்த பிறகு, தற்போது மின் வாரியத்தில் இலாபம் ஏற்பட்டிருக்கிறது என்று யாரும் நினைக்கக் கூடாது. வருடா வருடம் வரும் நஷ்டத்தில் இருந்து மீண்டு, நிகழும் ஆண்டில் நஷ்டத்தை மீட்டு இலாபத்திற்குக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே இருந்த 81,000 கோடி ரூபாய் கடனை ஓராண்டுக் காலத்தில் எப்படிக் கட்டினீர்கள் என்று கேட்கலாம். அதனால்தான் நான் விளக்கமாகச் சொல்லிவிடுகின்றேன். தற்போது இருக்கின்ற கடன் இல்லாமல்,

நடப்புக் கணக்கில் 2,150 கோடி ரூபாய் இலாபம் வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உதய் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். இதுகுறித்து ஏற்கெனவே பலமுறை இந்த அவையில் விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. மின் பகிர்மானக் கழகத்தின் கடனான ரூ.22,815 கோடியை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மேலும், 7,605 கோடி ரூபாய்க்கான கடன் பத்திரங்களை மின்சார வாரியம் வெளியிட இருக்கின்றது. இந்த வட்டி விகிதம், பணப் புழக்கம் குறைகின்ற காரணத்தினால் தமிழ்நாட்டின் நிதி நிலைமை எந்தளவுக்கு இப்போது இருக்கின்றதோ, அதற்கு மின்சார வாரியத்தினால் எந்த விதத்திலும் பாதிப்பு வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதி நிலைமைகளையெல்லாம் சரி செய்த காரணத்தினால், மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தர வரிசையைக் கொடுக்கிறது. கடன் மற்றும் நஷ்டம் அதிகமாக இருந்தால், அதற்கென்று ஒரு தர வரிசை நிர்ணயிப்பார்கள். 2014–2015 ஆம் ஆண்டில் மின் வாரியத்தின் கடன் அளவு அதிகமாக இருந்ததால், ‘C+’ என்று நமக்கு மார்க் கொடுக்கப்பட்டது. 2015–2016 ஆம் ஆண்டில் மின் வாரியத்தின் கடனை ரூ.3,783 கோடியாகக் குறைத்த காரணத்தினால் ‘B’ தர வரிசைக்கு உயர்த்தப்பட்டது. வருங்காலத்தில் அந்தத் தரவரிசை ‘A’ ஆக மாறும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதைக் கொண்டுவரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய மின் திட்டங்களினால் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியே எடுத்துச் செல்வதற்கு, Sub–transmission என்று சொல்லக்கூடிய அந்த மின் பாதை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசினார்கள். மத்திய அரசோடு இணக்கமாக இருக்கிறீர்கள்; அதனால் மத்திய அரசிடம் இதற்கு நிதி கேட்கலாம் என்று தெரிவித்தார்கள். மத்திய அரசோடு இணக்கமாக இருக்கின்ற காரணத்தினால்தான் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மின் தொடர் பாதைகள் அமைக்கும் திட்டமாக இருந்தாலும்சரி, எந்தத் திட்டங்களானாலும் சரி, நாங்கள் கடன் தருகிறோம் என்று சொல்லி, இந்தத் திட்டங்களுக்காக 95,000 கோடி ரூபாய் கடன் தருவதற்கு மத்திய அரசு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. மின்சார வாரியத்தின் நிதிநிலைமை சரியாக இருக்கும்; மின்சார வாரியம்

சரியாகச் செயல்படும் என்கிற காரணத்தினால்தான், வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாமல், தமிழகத்திற்கு 95,000 கோடி ரூபாய் கடன் தருவதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது capital investment. அதுகுறித்து யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

TEDA – தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை. இதன் பணியானது, தொகுப்பு வீடுகள் மற்றும் பசுமை வீடுகளுக்கு சூரிய மேற்கூரை திட்டம்மூலம் மின்சாரம் தயாரிப்பதாகும். 3 இலட்சம் வீடுகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கிட்டத்தட்ட 2,36,207 வீடுகளில் சூரிய சக்தியால் இயங்கும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளெல்லாம் கூடிய விரைவில் முடிக்கப்படும். அதேபோல், கைத்தறி நெசவாளர்களுக்கு 10,000 வீடுகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 9,606 வீடுகளில் பணிகள் முடிக்கப்பட்டு, சூரிய சக்தி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–50

மின் ஆய்வுத் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பகுதிக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அவர்கள் அந்த certificate–ஐக் கொடுத்தால்தான் கொடுக்க முடியும். இத்துறை அந்தப் பணியை இப்போது சரியாகச் செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கின்றேன். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிதி உதவி வழங்குகின்ற PFC தொடர்ந்து இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 முதல் 2016 வரை மொத்தம் 108 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்துள்ள 30 அறிவிப்புகளில் 11 அறிவிப்புகள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதி 19 அறிவிப்புகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகள், ஆளுநர் உரை விவாதத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் மற்றும் நிதிநிலை அறிக்கை விவாதத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மொத்தம் 78. அதில் 44 அறிவிப்புகள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன. மீதியுள்ள

34 அறிவிப்புகளின் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். என்னென்ன அறிவிப்புகள், அதற்குண்டான பணிகளின் விவரங்கள் என அனைத்தும் என்னிடத்தில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி, அவற்றைத் தெரிவித்திட முடியவில்லை. அந்த விவரங்களை எப்போது வேண்டுமானாலும் உங்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன் என்று கூறிக்கொள்கிறேன். 2006 முதல் 2011 வரையிலான இருண்ட காலம் நீங்கி, மாநிலம் முழுவதும் தடை இல்லாத மின்சாரம் தொடர்ந்து வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை மாநிலத்தில் மின் நுகர்வோர்களுக்கு அளித்த ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்ததாக மதுவிலக்குத் துறை. மதுவிலக்கைப் பொறுத்தவரையில் இங்கே பேசியவர்கள், சட்டத்திற்கு அப்பாற்பட்டு செய்துகொண்டிருக்கின்றார்கள், அந்த மதுக் கடைகளை எப்போது மூடப் போகின்றீர்கள் என்று எல்லாம் கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கின்றபோதுகூட நான் விளக்கமாகச் சொன்னேன். 1937 ஆம் ஆண்டு இருந்த மதுவிலக்கை இரத்து செய்து 1971 ஆம் ஆண்டுதான் முதன்முதலாக அறிமுகப்படுத்துகின்றார்கள். கடந்த முறை, சட்டமன்றத்தில்கூட நான் சொல்லியிருக்கின்றேன். அதற்காக அன்றையதினம் திருமதி அனந்தநாயகி அம்மா அவர்கள், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், திரு. லத்தீப் போன்றவர்கள் எல்லாம் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனாலும் அதையெல்லாம் மீறி அன்றையதினம் அதைக் கொண்டுவந்தார்கள். 1971 ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வந்த காரணத்தினால்தான் அது இந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு மீண்டும் ஒரு முறை கூறக் கடமைப்பட்டுள்ளேன். பூரண மதுவிலக்கு என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, (மேசையைத் தட்டும் ஒலி) அதில் மாற்றுக் கருத்து கிடையாது. மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தாமல் அந்தக் கடைகளை உடனடியாக நாம் மூடிவிட்டோம் என்று சொன்னால், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் பாண்டிச்சேரியில் 30 சதவிகிதம் வளர்ச்சி

அடைந்திருக்கின்றது. பாண்டிச்சேரி மக்கள் அதிகமாக அங்கே செல்வதற்கு வாய்ப்பு இல்லை. கடலூர் மற்றும் விழுப்புரத்தைச் சேர்ந்த மக்கள் அங்கு அதிகமாகச் சென்ற காரணத்தினால், கடைகள் நம் பகுதியில் இல்லாத காரணத்தினால், நான் குறையாகச் சொல்லவில்லை, 30 சதவிகிதம் உயர்ந்திருக்கின்றது என்று சொன்னால் அது தமிழ்நாட்டினுடைய பங்காகத்தான் இருக்க முடியும். இதை நாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னால், முதலில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் 3 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினார்கள். பள்ளிக்கூடம், கல்லூரி என ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் கூடுகின்ற இடங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி மதுப் பழக்கத்தின் தீமைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஆணையிட்டு அந்தத் திட்டங்களையும் செய்துகொண்டிருக்கிறோம்.

கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களெல்லாம் மனம் திருந்தி வாழவேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே 5 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினார்கள். அவர்களுக்கு மாற்றுத் தொழிலை ஏற்பாடு செய்து தர வேண்டும் என்பதற்காக. கடந்த 5 ஆண்டுக் காலமாக அந்தப் பணி நடைபெற்று வருகிறது. இப்போதும் அந்தப் பணிக்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் திருந்துவதற்குண்டான வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அது தொடர்ந்து நடைபெறும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன், மது விலக்கிற்குத்தான் முதல் கையெழுத்திட்டார்கள். ஆக, இதன் அடிப்படையில் இப்போது 1,000 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி 3,321 கடைகள் மூடப்பட்டிருந்தன. ஆனால் இப்போது 1,000 கடைகளைத் திறந்திருக்கின்றோம், அதை நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட திருப்பூர் நிகழ்வை எடுத்துச் சொன்னார்கள். அதற்கு விளக்கமான பதிலை நான் சொன்னேன். இந்த நிகழ்வைப் பொறுத்தவரையில் நான் ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும். கடை எங்கே இருப்பது என்பதைவிட அந்தப் பகுதியில் இருக்கின்ற சில அரசியல் கட்சிகள், அந்தப் பகுதியில் இருக்கின்ற சில சமூக விரோதிகள்

அதைத் தூண்டிவிட்டு அவர்களுக்குப் பணம் வேண்டுமென்று கேட்கின்றார்கள். அந்தப் பகுதியில் இருப்பவர்கள் பணம் கொடுக்கவில்லையென்று சொன்னால், உடனடியாக மக்களைத் தூண்டிவிட்டு ஒரு போராட்டத்தை ஏற்படுத்துகின்றார்கள். அந்த அரசியல் கட்சியின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அந்த அரசியல் கட்சியானது மதுவிலக்கு என்று மிகுந்த போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது. அவர்கள் என்னை அறையில் வந்து பார்த்து, இந்தத் தொழிலாளர்களுக்கு வேறு ஏதாவது செய்ய வேண்டும். நீங்கள் கடையை வேறு எங்கு வைத்தாலும் பரவாயில்லை, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நாகரிகம் கருதி நான் அவர்களுடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆக உள்ளே ஒன்று, வெளியே ஒன்று. கொள்கைக்காக அரசியல் இருக்கவேண்டுமேயொழிய அரசியலுக்காக கொள்கையை மாற்றக் கூடாது என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட கருத்தாக நான் அரசியல் கட்சிகளுக்கெல்லாம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 3—55*

வழக்கு போடப்பட்டிருப்பதைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். காவல் துறை இருக்கின்றது. காவல் துறைக்கென்று உரிய அதிகாரம் இருக்கின்றது. மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கடமை காவல் துறைக்கு இருக்கின்றது. ஆனால், பொது மக்கள் என்ற போர்வையில், சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, அந்தக் கடையை அடித்து நொறுக்குவது, அங்கிருக்கின்ற பணியாளர்களை அடிப்பது, இது எந்தவிதத்தில் நியாயம்? இதை எப்படி நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்பதை மட்டும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கொடியைப் பிடித்துக்கொண்டே ஒரு கடையில் தீ வைக்கின்றார்கள். இது எந்த விதத்தில் நியாயம்? கடை வேண்டாம் என்று பொது மக்கள் போராடினால் பொது மக்கள் சொல்கின்ற இடத்தில் நாங்கள் கடையை விட்டுவிடுகின்றோம். எங்கேயும் பொது மக்களுக்கு எதிர்ப்பாக நாங்கள் கடையை வைப்பது கிடையாது. ஆனால் கொடியைப் பிடித்துக்கொண்டே, ஒரு கடைக்கு தீ வைப்பது, கடையை அடித்து நொறுக்குவது என்பது எந்தவிதத்தில் நியாயம் என்பதை அரசியல் கட்சியான நீங்களும் புரிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பல பின்னணிகள்

இருக்கின்றன. வெளியே ஒன்று சொல்கின்றார்கள், உள்ளே ஒன்று சொல்கின்றார்கள். ஆனால், கொடியைப் பிடித்துக்கொண்டு நாங்கள்தான் மதுவிலக்குக்கு எதிராக போராட்டம் நடத்துகிறோம் என்று சொல்கிறார்கள். கடைகளை அடித்து நொறுக்குகிறார்கள், தீ வைக்கிறார்கள். இதனால் சட்டம்–ஒழுங்கு கெட்டுவிடாதா? இதையெல்லாம் பக்கத்திலிருப்பவர் பார்த்து தடுக்கின்றபோது, சூழ்நிலை மாறிவிடும். சூழ்நிலை மாறிவிடும்போது, சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற நிலைமையை உருவாக்குவதற்காகத்தான் இதுபோன்ற கலாட்டாக்களை செய்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் குறையாகச் சொல்கிறேன் என்று நினைத்துவிடாதீர்கள். அன்றையதினம் மலிவு விலை சாராயத்தைக் கொண்டு வந்தபோது, சட்டமன்றத்தில் விவாதம் நடைபெற்றபோது பல மூத்த உறுப்பினர்கள் இது குறித்துப் பேசியிருக்கின்றார்கள். தி.மு.க. தலைவர் அவரது பதிலுரையில் அந்த மலிவு விலை சாராயத்தைக் கொண்டு வந்ததற்கு என்ன காரணம் சொல்லியிருக்கிறார் என்றால், கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை, அதற்காக நான் பாக்கெட் சாராயத்தைக் கொண்டு வருகிறேன் என்றார். இது காலத்தின் கட்டாயம். அன்றையதினம் அப்படிச் சொல்லிவிட்டு, இன்றையதினம் இப்படிச் சொல்கிறீர்களே, இது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அரசாங்கம் நடத்துவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். முழுமையாக பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** கடந்த 2006–2011–ல் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட உங்களுடன் கூட்டணியாக இருந்த நம்முடன் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. போளூர் வரதன் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், 'நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை என்று முதலமைச்சர் பெயரைச் சொல்லி, கள்ளச்சாராயக்காரார்கள் எல்லாம் இன்று கோடீஸ்வரர்கள் ஆகிவிட்டார்கள். நாட்டில் சமூக விரோதிகள் அதிகமாவதற்கு இவர்கள்தான் காரணம்' என்று அன்றையதினம் உங்களுடன் இருந்தவர் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கின்றார். அந்தக் குற்றச்சாட்டை, கடுமையான

குற்றச்சாட்டை, இப்போதுபோல் இருந்தால், அப்போதே அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருப்பீர்கள். ஆனால், இன்றளவும் அது அவைக் குறிப்பில் இருக்கிறது என்றால், (குறுக்கீடு) இதை நாங்கள் சொல்லவில்லை. உங்களுடன் கூட்டணியாக இருந்த காங்கிரஸ் கட்சி சொல்லியிருக்கின்றது. ஜனநாயகம் என்று சொல்லவில்லை. உண்மையைச் சொல்லியிருக்கின்றார் அவர். (குறுக்கீடுகள்) நாங்கள் அதைச் சொல்லவேயில்லை. நீங்கள் அதைச் சொன்னதனால் நாங்கள் இதைச் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) ஆக, இப்பொழுதுகூட மதுவிலக்கைப் பற்றி நாம் இவ்வளவு பேசுகின்றோம். உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் புதிதாக 5 மது தயாரிப்பாளர்களுக்கு license கொடுத்தீர்கள். அது எந்த விதத்தில் நியாயம்? சொல்லுங்கள். பூரண மதுவிலக்கு, பூரண மதுவிலக்கு என்று சொல்லிவிட்டு (குறுக்கீடுகள்) 5 கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

ஒரு கட்சித் தலைவர் சொல்கிறார். மதுக்கடைகளை மூட வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக மேலெழுந்திருக்கிறது. மக்களின் இந்த மனநிலையைப் பயன்படுத்திக்கொண்டு, அரசியல் இலாபம் அடையலாம் என்று எண்ணும் சிலர், மதுவிலக்கு மாவீரர்களாக வேடம் போடுகிறார்கள். உண்மையிலேயே அவர்கள் மக்கள்மீது அக்கறை கொண்டவர்கள்தானா என்ற ஐயம் நமக்கு எழுகிறது என்றும் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்டால் தற்போது இருக்கும் அரசியல் தொடர்புகளைப் பயன்படுத்தி, முன்பு செய்ததைவிட, இன்னும் தீவிரமாகக் கள்ளச் சாராயத் தொழில் செய்யலாம் என்றும் ஓர் அரசியல் கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், இவற்றையெல்லாம் உங்களுடைய கருத்திற்கே விட்டுவிடுகின்றேன். இதை நான் குறையாகச் சொல்லவில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்றால், முழுமையாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, இந்தத் தீமையை எடுத்துச் சொல்லவேண்டும். இப்பொழுது தாய்மார்கள் இவ்வளவு போராடுகின்றரர்கள். அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அவர்களும், அவர்கள் வீட்டிலிருப்பவர்களை இந்த விஷயத்தில் திருத்துவார்களேயானால், அனைவருக்கும் வாய்ப்பாக இருக்கும். நீங்களும் போராடுகின்றீர்கள், நாங்களும் போராடுகின்றோம். மதுவிலக்குக் கொள்கை என்பது தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஒரே கொள்கையாகத்தான் இருக்கின்றது. இதில் மாற்றுக் கொள்கையே கிடையாது. ஆகையால் அனைவரும் போராடுவோம், பூரண

மதுவிலக்கைக் கொண்டு வருவோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், பூரண மதுவிலக்கு என்பதுதான் நிலையான கொள்கை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு தெளிவான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இந்த ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று பலர் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இந்த அவையில் அம்மா அவர்கள் உரையாற்றியபோது, 'எனக்குப் பின்னரும் 100 ஆண்டுகளுக்குமேல் இந்த இயக்கம் வாழும்; இதை யாராலும் வெல்ல முடியாது' என்று சங்க நாதமிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, தங்களால் வளர்த்து எடுக்கப்பட்ட இந்த இயக்கத்தையும், நீங்கள் வழி நடத்திச் சென்ற அரசையும் மென்மேலும் சிறப்பிக்கும் வகையில், நாங்கள் எல்லாம் மாண்புமிகு மதிப்பிற்குரிய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் ஒருங்கிணைந்து பணியாற்றி, இந்த ஆட்சியை முழுமையாக நிறைவேற்றுவோம்; மீண்டும் ஆட்சிக்கு வருவாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கும் மேலாக, ஒரு சாதாரண தொண்டனாக இருந்தாலும்கூட, இன்றையதினம் இந்த அவையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை இந்த நேரத்திலே மீண்டும், மீண்டும் நான் வணங்குகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிப்புகள் முடியட்டும், வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது துறைகள் தொடர்பான அறிவிப்புகளை அறிவிக்கின்றேன்.

## எரிசக்தித் துறை

### 1. விவசாயப் பயன்பாட்டிற்கான சூரிய மின் சக்தி நீர்பம்பு மாதிரித் திட்டம்

*மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மாநிலம் முழுவதும் 5, 7.5 மற்றும் 10 குதிரைத் திறன் (hp) கொண்ட மின் கட்டமைப்புடன் இணைக்கப்படாத (off grid) 1,000 எண்ணிக்கை சூரிய மின் சக்தி நீர்பம்புகள், தமிழக அரசின் 40 சதவிகித மானியம், மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் 20 சதவிகித மானியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 30 சதவிகித மானியம் மற்றும் விவசாயிகளின் பங்காக 10 சதவிகிதம் என்ற அடிப்படையில், இலவச விவசாய மின் இணைப்புப் பெற விண்ணபப்பித்து, பதிவு மூப்பு பட்டியல் வரிசையில் காத்திருந்து, மூப்புப் பட்டியலில் இருந்து தங்களது விண்ணப்பத்தை நீக்கிக்கொள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்களுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் வேளாண்மைத் துறையுடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும்.*

### 2. விரைவு (Tatkal) விவசாய மின்னிணைப்பு வழங்கல் திட்டம்

*மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி விவசாய மின் இணைப்புப் பெற காத்திருப்புப் பட்டியலிலுள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் விரைந்து விவசாய மின்னிணைப்பைப் பெறும்வகையில், விரைவு (தட்கல்) மின்னிணைப்பு வழங்கல் திட்டத்தின்மூலம் 5 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூ.2,50,000/—மும், 7.5 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூ.2,75,000/—மும் மற்றும் 10 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூ.3 இலட்சம் வீதம் ஒரு முறை கட்டணம் செலுத்தும் 10,000 விண்ணப்பதாரர்களுக்கு 6 மாத காலத்திற்குள் இலவச விவசாய மின்னிணைப்பு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

### 3. சூரிய சக்தி மின்னழுத்த பூங்கா

*மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் மாநிலத்திலேயே முதல்*

வகையான 500 மெகா வாட் திறன் கொண்ட சூரிய பூங்கா ஒன்று தனியார் நிறுவனம்மூலம் நிறுவ உதவி செய்யப்படும்.

## 4. நேரடி பணி நியமனம்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் 2017–2018 ஆம் ஆண்டில் 300 உதவி பொறியாளர்/மின்னியல், 25 உதவி பொறியாளர்/சிவில், 300 தொழில்நுட்ப உதவியாளர்/மின்னியல், 400 கள உதவியாளர், 250 இளநிலை உதவியாளர் (கணக்கு) மற்றும் 300 கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை பதவிகளுக்கான தகுதியான நபர்கள், –நன்றாக கவனிக்க வேண்டும் – வெளிப்படையான (Transparent) முறையில் எழுத்துத் தேர்வு மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு, நேர்காணல் இல்லாமல் எழுத்துத் தேர்வில் யார் அதிக மதிப்பெண்கள் பெறுகின்றார்களோ அவர்கள் இன இடஒதுக்கீடு அடிப்படையில் நேரடி பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

## 5. மின் பகிர்மான அமைப்பை மேம்படுத்துதல்

(அ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி திருவள்ளூர் மற்றும் பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய மின் பகிர்மான வட்டங்கள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

(ஆ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி திருமழிசை, திட்டக்குடி மற்றும் ஆலங்குடியை தலைமையிடமாகக் கொண்டு ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் புதிய மின் பகிர்மானக் கோட்டங்கள் உருவாக்கப்படும்.

(இ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அந்தியூர் வட்டம், பர்கூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மின் பகிர்மானப் பிரிவு அலுவலகம் உருவாக்கப்படும்.

(ஈ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி கிண்டியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அலுவலர் குடியிருப்பு அமைக்கப்படும்.

(உ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கொரட்டூரில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் பணியாளர்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படும்.

பிற்பகல் 4–05

**6. மின் பகிர்மான சேவைகளை மேம்படுத்துதல்**

(அ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கைபேசி செயலி (Mobile App) வழியாக மின் கட்டணம் செலுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்படும்.

(ஆ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் தற்போது இயக்கத்திலுள்ள 1912 தொலைபேசி வாயிலான மின்தடை பழுது நீக்கும் சேவை ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டணமில்லா தொலைபேசி வசதியாக மாற்றப்படும்.

(இ) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் ஆணையின்படி தமிழகத்தில் குறு, சிறு தொழில் முனைவோர் மற்றும் தொழில் துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, 112 கிலோ வாட் மின் தேவை வரையிலான புதிய மின்மாற்றி நிறுவத் தேவைப்படாத புதிய தொழிற்சாலை மின் இணைப்புகளுக்கு 15 தினங்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

**7. புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கும் பணிகள்**

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகா வாட் திறன் கொண்ட ஒரு அலகில் வெளிப்பரப்பு உறைவி (surface condenser) புதுப்பித்தல், அலகு 5–ல் தற்போதுள்ள காலாவதியான கட்டுப்பாட்டு அமைப்புக்கு (pro–control systems and scanner system) பதிலாக புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய கட்டுப்பாட்டு அமைப்பை

நிறுவுதல், அலகு 4–ல் தற்போதுள்ள மறு சூடாக்கி (Hot re–heater) அமைப்பை முழுவதுமாக நீக்கி புது மறு சூடாக்கி அமைத்தல் மற்றும் நிலக்கரி கையாளும் பணியை மேம்படுத்த 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய ஒரு இணைப்பு நிலக்கரி கொணரும் அமைப்பு (Link Coal Conveyor) நிறுவுதல் ஆகிய பணிகள் ரூபாய் 52 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**8. அம்மா பசுமை கிராமம்**

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை வருடாந்திர அடிப்படையில் ஒரு கிராமத்திற்குத் தேவையான அனைத்து மின் சக்தியை பூர்த்தி செய்யும் விதமாக கிராமத்திலேயே கிடைக்கும் நிலையான பசுமை எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு ‘அம்மா பசுமை கிராமம்’ ஒன்று நிறுவப்படும்.

**9. நிலையான எரிசக்தி பயிற்சி முன்முயற்சி**

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் அதன் உள் மற்றும் வெளி பங்குதாரர்களை இலக்காகக் கொண்ட நிலையான ஆற்றல் அமைப்புகளின் சமூக பொருளாதார, நிதி, நிருவாக, தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டு பகுதிகளுடன் தொடர்புடைய பாடங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி திட்டமான ‘நிலையான எரிசக்தி பயிற்சி முன்முயற்சி’ அறிமுகப்படுத்தப்படும்.

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**

**1. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல் (Pay increase for TASMAC Retail Vending Personnel)**

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 26,679 சில்லறை விற்பனைப் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். இந்தப் பணியாளர்களுக்கு தொகுப்பூதியமானது 2011, 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆறு ஆண்டுகளிலும் உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு மாத தொகுப்பூதியம் முறையே ரூ.500/–, ரூ.400/– மற்றும் ரூ.300/– என உயர்த்தி வழங்கப்படும். இந்த ஊதிய உயர்வுகள், செப்டம்பர் 2017 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதனால் டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் 7,203 மேற்பார்வையாளர்களும், 15,744 விற்பனையார்களும் மற்றும் 3,732 உதவி விற்பனையாளர்களும் பயன்பெறுவர். இதற்காக ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 13.22 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல் (Conducting Awareness Campaigns against Consumption of Liquor)**

குடிப்பழக்கத்திற்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அப்பழக்கத்தைக் கைவிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடனும், மதுப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ள, மாவட்டந்தோறும் மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி, விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் முகாம்கள் நடத்த, 2015–2016 மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுகளில், 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபானத் தொழிலில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல் (Providing Assistance for Rehabilitating persons who have been weaned away from illicit distillation and illicit liquor trade)**

தமிழ்நாட்டில் கள்ளச்சாரயம் காய்ச்சுதல் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலும் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம்

காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி, திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தொழிலைத் தொடராமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், 2011–2012 ஆம் ஆண்டு முதல் 5 கோடி ரூபாய் மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டிலும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 5 கோடி ரூபாய் மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.

**4. தென்னை மரத்திலிருந்து நீராவை பிரித்தெடுத்தல் மற்றும் பதப்படுத்துதல், நீரா மற்றும் நீராவிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்ய உரிமம் வழங்குதல் (Extraction and Processing of Neera from Coconut Trees and to issue licences for Marketing and Export of Neera and products manufactured from Neera)**

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தென்னை மரத்திலிருந்து நீராவை பிரித்தெடுத்து மற்றும் பதப்படுத்துவதனை எளிதாக்கிடவும், நீரா மற்றும் அதிலிருந்து வெல்லம், தேன், பிஸ்கெட்டுகள், சர்க்கரை போன்ற பிற பொருட்களைத் தயாரித்து விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்ய உரிமம் வழங்குவதற்கு ஏதுவாக, 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் உரிய விதிகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதன் மூலமாக தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் பொருளாதார ரீதியாக மேம்படும். மேலும், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்திருக்கின்றேன். பல உறுப்பினர்கள் மின்சார வாரியத்தின் மூலமாகத் துணை மின் நிலையம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். துணை மின் நிலையங்கள் அதிக அளவிலே அமைக்கப்படவிருக்கின்றன. அதனை மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் விதி 110–ல் அறிவிக்க இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்றாலும், முடிந்தவரை அந்தப் பணிகளை நிறைவேற்றித்தருகின்ற அளவிற்கு நாங்கள் முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றோம்.

மதுவிலக்கினைப் பொறுத்தவரை கடைகளை மாற்றித்தர வேண்டும் என்றுதான் பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. கடைகள் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருந்தால், பொதுமக்கள் எங்களுக்கு பாதகமாக இருக்கிறது என்று எங்களிடத்தில் புகார் தந்தால் அதுவும் மாற்றித் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் மற்றும் அவர்களுடைய கேள்விகளுக்கு நான் அளித்த பதில் போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டு, வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தினை தன்னுடைய பதிலுரையில் தந்திருக்கிறார்கள். இருந்தாலும் ஒரு கோரிக்கையை நான் தங்களுடைய அனுமதியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 10–9–2015 அன்று உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நிறைவு செய்து அன்றைக்கு இருந்த மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மையார் அவர்கள் அதில் ஆற்றிய உரையை நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஏனென்றால் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தப்போகிறோம் என்று ஓர் அறிவிப்பு வந்திருக்கின்றது. இந்த நிலையில் அதை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அந்த உரையிலே மின் திட்டங்களுக்காக போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மதிப்பு ரூ.1,07,136 கோடி என்று

அன்றைக்கு அறிவித்திருந்தார்கள். முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்று 20 மாதங்களுக்குமேல் ஆகிவிட்ட நிலையில், அறிவிக்கப்பட்ட 1 இலட்சம் கோடி ரூபாய்க்குமேல் போடப்பட்ட மின் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தற்போது எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நான் அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன். ஏனென்றால் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்ட கம்பெனிகளுக்கு 30 நாட்களுக்குள் அனுமதி கொடுக்கப்படும் என்று அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அம்மையார் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். முதலமைச்சர் அம்மையார் வார்த்தையிலே இங்கே நான் பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால், "For each of the investments finalized here today I assure the investors that the necessary statutory clearances would be accorded within a period of 30 days from the date of application with all supporting documentation to the Guidance Bureau's Single Window Clearance facility". என்று உறுதி அளித்திருக்கிறார்கள். எனவே, புதிய மின் திட்டங்கள் குறித்து ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அவையிலே மின் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து வைக்க வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டது, மின்சார வாரியத்தின் மூலமாக ரூ.1 இலட்சத்து 7 ஆயிரம் கோடி ஒப்பந்தம் போட்டது உண்மை. ஆனால், அன்றையதினம் அவர்கள் போடுகின்றபோது எங்களிடத்திலே, மின்சார வாரியத்தில் P.P.A. வேண்டும் என்று கேட்கவில்லை. இப்போது அவர்கள் bank guarantee–க்காக அந்த முழு மின்சாரத்தினை எடுத்துக்கொள்வதாக இருந்தால்தான் அதைத் தொடங்க முடியும் என்று பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தற்போது தமிழகம் மின் மிகை மாநிலமாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் சொல்கின்ற அளவிற்கு மின்சாரத்தினை எடுக்க வேண்டிய தேவையில்லை. ஆகையால், நீங்கள் தொழிலை அமையுங்கள், மின்சாரம் வேறு எந்த மாநிலத்திற்குத் தேவையோ அதை மத்திய அரசோடு கலந்து பேசி அதற்குண்டான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கின்றோம். அதற்கு அவர்கள் எங்களுக்கு வங்கியிலே loan கிடைக்காது, ஆகையால் நீங்கள் P.P.A. கொடுக்க

வேண்டும் என்றனர். அதைத்தான் மரியாதைக்குரிய திரு. ஆஸ்டின் அவர்கள் பேசுகின்றபோதுகூட நீங்கள் ஏன் இதைச் செய்கிறீர்கள் என்று சொன்னார். மின்சாரம் வேண்டும் என்று சொன்னால் அவர்கள் நம்மிடத்திலே கையெழுத்து வாங்கிதான் மின்சாரத்தினை எடுக்க வேண்டும். அதை நம்பிதான் வங்கியில் கடன் கொடுக்கிறார்கள். புதிய மின் திட்டத்திற்கெல்லாம் வங்கியில் கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்று சொல்லி அவர்கள் தொழில் தொடங்க மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசோடு பேசி, வேறு எந்த மாநிலத்திற்காவது தேவை என்று சொன்னால், அவர்களுக்குக் கொடுப்பதற்குண்டான நடவடிக்கைளை மேற்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 4—15

30 நாட்களிலே அனைத்து அனுமதியும் தரப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அதிலே எந்த மாற்றமும் கிடையாது. எந்தத் தொழில் தொடங்க வந்தாலும் முழுமையாக single window system அடிப்படையில் 30 நாட்களுக்குள் முழுமையாக அனுமதி பெற்றுத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று கேள்விகள் மட்டும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின் கட்டமைப்புடன் புதிய இணைப்பாக 10,495 மெகா வாட் இணைக்கப்பட்டுள்ளதாக கூறினார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கின்றீர்கள். 10,495 மெகா வாட்டிலே 2011—ல் நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தொடங்கப்பட்ட மின் திட்டத்திலிருந்து எத்தனை மெகா வாட் இதில் இணைக்கப்பட்டிருக்கின்றது? அதற்கு முன்பு தொடங்கப்பட்ட மின் திட்டத்திலிருந்து எத்தனை மெகா வாட் இணைக்கப்பட்டிருக்கின்றது? அதேபோல் கொள்முதல் செய்யக்கூடிய மின்சாரத்தையும் நிறுவுதிறனாக இதில் இணைத்திருக்கின்றீர்கள். 10,495 மெகா வாட்டும்

2011–ல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தொடங்கப்பட்ட திட்டத்திலிருந்து வந்ததா என்பதை நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஒரு புதிய அறிவிப்பை அறிவித்தீர்கள். 24 மணி நேரத்திற்குள் மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்தீர்கள். இந்த அறிவிப்பு ஏற்கெனவே தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே 5–8–2000–ல் திரு. பூர்ணலிங்கம், I.A.S. அவர்கள் மின்சார வாரிய சேர்மேனாக இருக்கக்கூடிய காலத்திலேயே same day service scheme என்ற scheme அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு நிறுத்திவிட்டீர்கள். இப்பொழுது புதியதாக அதை அறிவித்திருக்கிறீர்கள். அப்படி அறிவித்தாலும்கூட single phase metre இன்றைக்கு தட்டுப்பாடு. 24 மணி நேரத்தில் மின் இணைப்பு வழங்கப்படுமா என்றால், வழங்க முடியாது. பல பேர் norms படி விண்ணப்பித்திருந்தாலும்கூட மின்சார மீட்டர் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினால் ஒரே நாளில் supply வழங்க முடியாது. நீங்கள் கொடுக்கக்கூடிய மின்சார மீட்டர் guarantee–ஆக இல்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 5 வருட guarantee இருந்தது. இப்பொழுது ஒரு வருட guarantee–தான் இருக்கிறது. மீட்டர் வைத்து 10 நாளிலே repair ஆகி விடுகிறது. மற்றொன்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், நீங்கள் ஏற்கெனவே பேசி முடித்துவிட்டீர்கள். இப்பொழுது விளக்கம் மட்டும் கேளுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்சார கடவுப் பாதை உங்கள் ஆட்சியிலே அமைக்கப்பட்டதா என்று கேட்டார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகுதான் மின் பாதை உருவாக்கினோம் என்று சொன்னீர்கள். ஆனால் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் 2009–லேயே மகாராஷ்டிரா ரெய்ச்சூரிலிருந்து ஆந்திரா வரைக்கும் 800 கி.மீ. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் பேசியதில் விளக்கம் கேட்பதாக இருந்தால், வாய்ப்புத் தருகிறேன்.

நீங்கள் புதியதாக திரும்பவும் ஓர் உரை (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். திரு. ஆஸ்டின், உங்களுக்கு கோபம் வருகிறது. கோபமெல்லாம் வேண்டாம். மாண்புமிகு அமைச்சரிடம் கேள்வி கேளுங்கள். புதியதாக உரையாற்றுவதற்கு வாய்ப்பு இல்லை. கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–ல் நிறைவு பெற்றிருக்கிறது. தொடங்கப்பட்டது 2009–லே தலைவர் கலைஞர் அவர்கள் திரு. மன்மோகன் சிங் அவர்களையும், திருமதி சோனியா காந்தி அவர்களையும் சந்தித்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து 2009–ல் திட்டம் தொடங்கப்பட்டு, 2014–ல் நிறைவு பெற்றிருக்கின்றது. திட்டத்தைக் கொண்டு வந்தது நாங்கள்தான், நிறைவு பெற்றது உங்களுடைய ஆட்சியில். அதுபோல நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) உட்காருங்கள். இல்லை, ஓர் உரையை 1/2 மணி நேரம் பேசினால் எப்படி? உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நான் தயாராக இல்லை. அவர் தயாராக இருப்பார். நான் தாயாராக இல்லை. உரையை முடிக்கட்டும். உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,495 மெகா வாட்டிற்கு கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது. வேண்டுமென்றால் நான் தெளிவாகச் சொல்ல இருக்கின்றேன், நேரமாகி விட்டது. நீங்கள் பேசுகின்றபொழுதே சொன்னீர்கள், வல்லூர் நாங்கள் போட்டோம், மேட்டூர் நாங்கள் போட்டோம் என்று. திட்டம் போட்டீர்கள், ஆனால், திட்டத்தை நிறைவேற்றவில்லையே? நிறைவேற்றியது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அதேபோல் ஏன் 2009–ல் ரெய்ச்சூரிலிருந்து 765 மெகா வாட் கொண்டு வரவில்லை? 2006–ல் நீங்கள்தானே மத்தியில் ஆட்சியில் இருந்தீர்கள். அதைக் கொண்டு வந்திருக்கலாமே? தமிழகத்தில் இந்த அளவிற்கு மின்வெட்டே வந்திருக்காதே? ஏன் அதை அப்பொழுதே செய்யவில்லை? மூன்று ஆண்டுகளுக்கு பிறகு ஏன் 2009–ல் கையெழுத்து போட்டீர்கள்? 2006–லே கொண்டு வந்திருக்கலாமே? அதைக் கொண்டு வராமல் 2009–ல் நாங்கள்

கொண்டு வந்தோம், நீங்கள் முடித்தீர்கள் என்று சொன்னால் எப்படி? எல்லாத் திட்டமும் இப்படித்தான். நாங்கள் கொண்டு வந்தோம் நீங்கள் முடித்தீர்கள் என்பதெல்லாம் இல்லை. அதை யார் விரைந்து முடித்து, மக்களுக்குச் சேவை செய்கின்றார்களோ அவர்களைத்தான் மக்கள் வரவேற்பார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4—20

ஒரு நாளில் மின் இணைப்பைப் பெறுவது பற்றிச் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) கேள்வியைக் கேட்டீர்கள், பதிலைக் கேளுங்கள். ஒரு நாளில் மின் இணைப்பு பெறுகின்ற திட்டம் உங்கள் ஆட்சியில் கொண்டு வந்ததுதான். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அதற்கு பின்னால் நடந்த சம்பவத்தை நீங்கள் சொல்லவில்லை. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் அதை இரத்து செய்துவிட்டது. அவர்களுடைய ஆணைப்படித்தான் தர முடியும். 2006 இல் நீங்கள் ஆட்சியில் இருந்தபோது, அந்த ஒரு நாள் இணைப்புத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கலாமே! அதனை நடைமுறைப்படுத்தியிருக்கலாமே! ஏன் நடைமுறைப்படுத்தவில்லை? அன்றைக்கு ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி கொடுக்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதற்கு பின்னால், நாங்கள் இப்போது அனுமதியைப் பெற்று, மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதுகூட சாத்தியம் இல்லை என்று சொல்லியிருக்கின்றீர்கள். சாத்தியம் இருக்கிறது. எப்படி என்றால், 100 அடிக்குள் இருக்கின்ற கம்பத்திலிருந்து ஒரு வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால், 24 மணி நேரத்திற்குள் கொடுத்துவிடலாம். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் புதைவடத் தடமாக இருக்கின்றது. Pillar box அருகாமையில் இருந்தால் ஒரே நாளில் கொடுத்துவிடுவோம். Pillar box தூரமாக இருந்தது என்றால், 48 மணி நேரம் என்று சொல்லியிருக்கின்றோம். புதிதாகக் கம்பம் போட வேண்டும், புதிதாக transformer போடவேண்டும் என்றால், அதற்கு சிறிது காலதாமதம் ஆகும். எங்குகெங்கு முடியுமோ, அங்கெல்லாம் ஒரே நாளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக மின் இணைப்பு கொடுத்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான், உட்காருங்கள் திரு. ஆஸ்டின்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, மின்சாரக் கட்டணத்தை ஒரு பைசா குறைக்க வேண்டும் என்று திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். (குறுக்கீடுகள்) அந்த நேரத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியது உங்கள் ஆட்சி என்று அவர் சொன்னார். (குறுக்கீடுகள்) இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) கூட்டுப் பொறுப்புதான். அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** அன்றைக்கு 1972–ல் (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் போராட்டம் நடத்தியபோது, துப்பாக்கிச் சூடு நடத்தியபோது 1972 ஜூன் மாதம் 3 ஆம் தேதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற கட்சியே துவங்கப்படவில்லை. அன்றைக்கிருந்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான். (குறுக்கீடுகள்) துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், உங்கள் தலைவர் முதலமைச்சராக இருந்தபோதுதான். (குறுக்கீடுகள்) எனவே, திரு. ஆஸ்டின் அவர்கள் உங்கள் ஆட்சியில் துப்பாக்கிச் சூடு நடந்தது எனக் கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் இருக்கட்டும். நீங்கள் பேசியதும், அவர் பேசியதும் இருக்கட்டும். விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. இராமலிங்கம்.

**திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்த 17 விவசாயிகளுக்கு நிதியுதவியை வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், தேவையில்லாமல் ஒரு பிரச்சினையை கிளப்பியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள், இங்கே பேசுகிறபோது, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் விவசாய அமைப்பைச் சார்ந்தவர்கள் ஒரு மிகப் பெரிய போராட்டத்தை நடத்தி, திருச்சிராப்பள்ளியில் தடியடி பிரயோகம் நடந்து, அதற்குப் பிறகு அவர் கைது செய்யப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது உண்மை. அப்போது அவர் வைத்த கோரிக்கை, மின்சாரக் கட்டணத்தை விவசாயிகளுக்குக் குறைக்க வேண்டும் என்று சொல்லி போராட்டம் நடத்தினார். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, மின்சாரக் கட்டணத்தை ஒரு பைசா அல்ல, ஒரு பைசாக்கூட தர வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி இலவச மின்சாரத்தைத் தந்தது தி.மு.க. ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் அவர் இங்கே பதிவுசெய்தார். எனவே, தேவையில்லாமல் சொன்னதைத்தான், தேவையற்றவைகளை இங்கே பேசுகிறார் என்று சொன்னேனே தவிர வேறு அல்ல. எனவே, அவர் சொன்னது தவறான தகவல். தவறான தகவலாக அமைந்திருக்கிற காரணத்தால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். விடுங்கள். (குறுக்கீடுகள்)

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

*வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.*

*"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,216,60,66,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,275,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,474,20,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.*

## (ஆ) கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

*வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.107,25,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

பிற்பகல் 4–25

## 8. அறிவிப்பு

### தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2017) பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2017), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சட்டமுன்வடிவு குறித்து கருத்து கூற விரும்புகிற உறுப்பினர்கள் சுருக்கமாகத் தங்களது கருத்துகளைக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக்கி, மக்கள் பணியும், இயக்கப் பணியும் ஆற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கிய எங்களுடைய தலைவர், தளபதி. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். இதுவெல்லாம் எதற்கு?*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *எங்களுடைய மாவட்டத்தினுடைய தெற்கு மாவட்ட அமைப்பாளராக, பொறுப்பாளராக பணியாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கி, மக்கள் பணிகளையும், இயக்கப் பணிகளையும் ஆற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கிய எங்கள் தலைவரைப் பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2006 தேர்தலில் பல்வேறு தேர்தல் வாக்குறுதிகள் வழங்கினார்கள். அதிலே ஒன்றை குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கூட்டுறவு வங்கியிலே பெற்றிருக்கின்ற விவசாயக் கடன்கள் அனைத்தையும் இரத்து செய்வேன். ரேஷன் கார்டு வைத்திருக்கின்றவர்கள் அத்தனை பேருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிகள் வழங்குவேன், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்குவேன் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்தார். . .*

---

*@ 14–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், மசோதாமீது பேசுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *ஆனால், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி கொடுப்பேன் என்று சொன்னவுடன், அது எப்படிக் கொடுக்க முடியும், கொடுக்க முடியும் என்று பல்வேறு வரிசையிலே, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள் கூக்குரலிட்டார்கள். ஆனால், எங்களுடைய தலைவர் ஆட்சிக்கு வந்தவுடன் 2 ரூபாய் அரிசி வழங்கினார். கேட்காமலே 1 ரூபாய் அரிசியும் வழங்கினார். இன்றைக்கு நீங்கள் சொல்கின்றீர்களே, விலையில்லாத அரிசியை வழங்குவதற்கு வழிவிட்டவரும் எங்களுடைய தலைவர். அந்தத் தலைவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், G.S.T. மசோதாமீது பேசுங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *கறைபடாத கரத்திற்குச் சொந்தக்காரரான மரியாதைக்குரிய எங்கள் அண்ணன் தளபதியார் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சட்டமன்றத்திலே பல்வேறு கருத்துகளை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள், வணிகர்களுடைய அச்சத்தைப் போக்குகின்ற வகையிலே, உரிய கால அவகாசங்கள் வழங்கி, யாருக்கும் பாதிப்பில்லாத வகையில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை அமல்படுத்த வேண்டுமென்ற தன்னுடைய கருத்துகளை எங்கள் கழகத்தினுடைய செயல் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் தளபதியார் அவர்கள் பல்வேறு ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் வாயிலாக தெரிவித்துள்ளார்கள். அந்தவகையிலே, மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை ஜூலை 1 ஆம் தேதி முதல் அமல்படுத்த உள்ளதாக மத்திய அரசு*

அறிவித்துள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது நாடு முழுவதும் கோடிக்கணக்கான வணிகர்கள் இருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசோ, மாநில அரசோ சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் குறித்து, வணிகப் பிரதிநிதிகளுடைய கூட்டத்தைக் கூட்டி, இதுவரை எவ்வித ஆலோசனையும் பெறவில்லை என்பதை நான் இந்தச் சட்டமன்றத்திலே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 4–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்தில், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில், மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தை அமல்படுத்தினார்கள். மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தை அமல்படுத்தியபோது, முதலமைச்சர், நிதியமைச்சர், சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர்கள், சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அதிகாரிகள், வணிகர் சங்கப் பிரதிநிதிகள், வணிகர்கள், தொழில் நடத்துபவர்கள் என அத்தனை பேரையும் கலந்து, மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தைக் கொண்டுவந்து, அவர்களுக்கென தனியே ஒரு குழுவை அமைத்து, அதன்மூலம் பல்வேறு கருத்துகளைக் கேட்டு, அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியவர் எங்களுடைய தலைவர் கலைஞர் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களும், எங்களுடைய செயல் தலைவர் அவர்களும் கருத்து சொல்லியபோது, "வணிகர் என்பவர் ஒரு பூ. அந்தப் பூவிலிருந்து வரிகளைப் பெறும்போது, தேனீ எப்படி பூவிலே தேனை எடுக்கின்றதோ, அதைப்போன்றுதான் எடுக்க வேண்டுமேதவிர, பூவை அப்படியே பறிக்கின்ற நிலைகளை ஏற்படுத்தினால், வணிகர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்" என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி கவுன்சில் கூட்டத்தில், நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வரி விகிதங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே 589 பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற உணவு தானியங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. தற்போது, சரக்குகள் மற்றும்

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2017 ஜூன் 19

சேவைகள் வரிச் சட்டத்தில், வரிவிலக்கு அளிக்கப்பட்ட 500–க்கும் மேற்பட்ட பொருட்களுக்கு 5%, 12%, 18%, 28% என வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. சாப்பிடுகின்ற உணவுப் பொருட்களுக்கு வரி, ஓட்டல்களில் சாப்பிடுகின்றவர்களுக்கு வரி, குடிக்கின்ற தண்ணீர் கேனுக்கு 18% வரி, கடலை மிட்டாய், பிஸ்கட் போன்ற மிட்டாய் வகைகளுக்கு 18% வரி, மசாலாக்களுக்கு 28% வரி, ஊறுகாய்க்கு 18% வரி என வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இதுவரை ஏழைகள் பயன்படுத்துகின்ற துணி வகைகளுக்கு வரியே இல்லாமல் இருந்தது. ஆனால், இன்றைக்கு துணி வகைகளுக்கு 5% வரி, ரெடிமேட் துணி வகைகளுக்கு 12% வரி என மக்கள் பயன்படுத்துகின்ற பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி விகிதங்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. மேலும், ஆடம்பரப் பொருட்களுக்கு மட்டும்தான் 28% வரி விதிக்கப்படும் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால், மக்கள் பயன்படுத்துகின்ற பல பொருட்களுக்கு 28% வரி விதிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கு வரி இல்லை என்று சொன்னார்கள். கல்விக்கு வரி இல்லை என்று சொன்னாலும், அதற்காகப் பயன்படுத்தப்படும் பேனா, பென்சில், இரப்பர் போன்ற பொருட்களுக்கெல்லாம் 12% வரியை இந்த GST வரியிலே போட்டிருக்கின்றார்கள். அதுபோன்று, மணலினால் செய்யப்படும் செங்கலுக்கு 5% வரி விதிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலைக் கெடுக்கின்றது என்று சொல்லி, ash–லே செங்கல் செய்ய வேண்டுமென்று, அன்றைய அரசு வலியுறுத்தியது. Ash–லே செய்யப்படும் செங்கலுக்கு எவ்வளவு சதவிகிதம் வரி விதிக்கப்பட்டுள்ளது தெரியுமா? அதற்கும் 12% வரி விதிக்கப்பட்டுள்ளது. ஒரு செங்கலுக்கு 5% என்றும், இன்னொரு செங்கலுக்கு 12% எனவும் வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. இதுபோன்று, ஒரு பொருளுக்கு, தனித் தனியாக வரி விதிக்கப்பட்டுள்ள நிலைகளையெல்லாம் மாற்றி, ஒரே நிலையை உருவாக்க வேண்டும்.

அதுபோன்று, முன்பு 1½ கோடி ரூபாய் அளவிற்கு வணிகம் இருந்தால், Excise duty கிடையாது. குறு மற்றும் சிறு தொழில்களுக்கு அந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்கும் தற்போது 18% வரி விதிக்கப்பட்டுள்ளது. சாதாரண சிறிய வியாபாரிகளுக்கும் 18%, 28% என வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால், பிஸ்கட் மற்றும் ஊறுகாய் தயாரித்தல், கிரைண்டர் மற்றும் furniture போன்ற சிறு தொழில்கள் அனைத்தும் கடுமையாக பாதிக்கப்படும்.

*2017 ஜூன் 19]* [*திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்*]

*பிற்பகல் 4–35*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய, நடுத்தர வணிகர்கள் பயன்பெறும் வகையிலே 50 இலட்சம் ரூபாய் வரை விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் வியாபாரப் பெருமக்களின் கோரிக்கை. ஆனால் இன்றைக்கு 20 இலட்சம் ரூபாய் வரைதான் விலக்கு வழங்கப்படும் என்ற வகையிலே அறிவித்திருக்கின்றார்கள். ஒன்றரைக் கோடி ரூபாய் வரை மொத்த விற்பனை தொகையுள்ள சில்லரை விற்பனையாளர்கள் ஒருமுனை வரியாக* Compounding Tax *செலுத்த வேண்டுமென்ற நிலையைக் கொண்டுவரவேண்டும். அதை மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. அதையும் கொண்டு வரவேண்டுமென்ற நிலை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், வரியை அமல்படுத்த வேண்டுமென்று சொன்னால், சிறிய வியாபாரிகளாக இருக்கின்றவர்களுக்கு கம்ப்யூட்டர் மற்றும் உதவியாளர் இல்லாத நிலையில் சேவை வரிச் சட்டத்தின்படி கணக்குகள் தாக்கல் செய்ய முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. குறிப்பாக கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களில் உள்ள இலட்சக்கணக்கான வணிகர்கள் கணிசமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். தற்போது ஒழுங்குமுறை விதிமுறைகள் முழுமையாக அரசாணையாக வெளியிடப்படவில்லை. வணிகர்கள் வைத்துள்ள ஸ்டாக் பொருட்களை எந்த விதத்தில் விற்பனை செய்வது? எந்த நடைமுறையை பின்பற்றுவது என்ற குழப்பங்கள் இன்னும் தீரவில்லை.*

*ஜூலை ஒன்றாம் தேதி முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தை அமல்படுத்தினால் வணிகத்தில் பல குழப்பநிலை ஏற்படும். மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் ஒரு பொருள்மீது 50,000 ரூபாய்க்கும்மேல் பில் போடும்போது அதனோடு சேர்ந்து ஆன்லைனில் அரசினுடைய அடையாளச் சீட்டை பெற்றுத்தான் அதை வெளியே அனுப்ப வேண்டுமென்ற நடைமுறையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சிறு வியாபாரிகள் எல்லாம் ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு அதை உயர்த்த வேண்டுமென்ற நிலையைச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் உள்ள பல்வேறு குளறுபடிகளை நீக்குகின்ற வகையில் தமிழகத்தில் மத்திய அரசு, மாநில அரசு அதிகாரிகள் மற்றும் வணிகர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்ற வகையிலே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி கவுன்சில் கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.*

[திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்] [2017 ஜூன் 19

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை ஜூலை 1 ஆம் தேதி முதல் அமல்படுத்தாமல், வணிகர்கள், வியாபாரிகள் புரிந்துகொள்ளும் வகையில், நடைமுறைப்படுத்துகின்ற இந்த ஆண்டினை பயிற்சி ஆண்டாக மத்திய அரசாங்கம் அறிவிக்க வேண்டும். சிறு, சிறு குளறுபடிகள் இருந்தாலும், கடுமையான நடவடிக்கை இல்லாத நிலையை இந்த ஒரு வருடத்திற்கு ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இன்றைக்கு வியாபார பெருமக்கள் மத்தியிலே இருக்கிறது.

மேலும் மத்திய அரசின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் உண்மையிலேயே முழுமையாக வெற்றி பெறவேண்டுமெனில், வணிகர்கள், வியாபாரிகள், தொழில் முனைவோர் மற்றும் பொதுமக்கள் மனப்பூர்வமாக ஏற்றிடும் வகையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் சட்ட விதிகளை மாற்றம் செய்திட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்துகிறேன். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் புரிந்து, தெளிந்து வலியுறுத்தி மத்திய அரசாங்கத்திடம் பெற்றுத் தந்து வியாபார பெருமக்கள், சாதாரண மக்கள் என அத்தனை பேர்களையும் காப்பதற்கு இந்த அரசை நாங்கள் வலிமையாக வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அவர்கள் அறிவித்த திட்டங்கள் எல்லாம் நிறைவேற்ற முடியுமா என்று கேட்டார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி. (குறுக்கீடுகள்) என்ன சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கும்போது எனக்கும் சந்தேகம் இருந்தது. ஆனால் எல்லாவற்றையும் நிறைவேற்றியபோது இந்தத் தலைவரைப் போல உலகத்திலே எந்தத் தலைவரும்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2017 ஜூன் 19] [திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்]*

*இல்லை. தலைவர் கலைஞர் மாதிரி யாரும் இல்லை என்கின்ற நிலையில்தான் இங்கே வந்தேன். போதுமா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி. (குறுக்கீடுகள்) போதும் விடுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. அதெல்லாம் இல்லை. (குறுக்கீடுகள்) அதில் விவாதம் வேண்டாம். உட்காருங்கள்.*

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *ஆனாலும் ஒன்றுமில்லை. இருக்கின்ற பக்கம் உறுதியாக இருப்போம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

*பிற்பகல் 4–40*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.எஸ்.டி. பில்லை நிறைவேற்றுகிற நேரத்தில் எங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்கிறோம். தேவையற்ற வகையிலே, மின் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் சில பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். ஆக சில கேள்விகளைக் கேட்கிறார்கள். நான் கேட்கிறேன். ** (குறுக்கீடுகள்) இதையெல்லாம் சொன்னால், அதையெல்லாம் சொல்லவேண்டி இருக்கும். சொல்லட்டுமா? ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, வேண்டாம் விடுங்கள். இந்த விவாதத்தை இத்தோடு முடித்துவிடுவோம். (குறுக்கீடு)*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** அப்படியென்றால், அவர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் இரண்டு பேரும் பேசியது இருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, ** அவர் பேசுகிறார். அது தனிப்பட்ட முறையில் பேசவேண்டிய பேச்சுகள். அவைக்குத் தேவையில்லாத பேச்சுகள். அதாவது பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியதால்தான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமாக மின் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியது உட்பட நீக்கப்படுகிறது. ஜி.எஸ்.டி. Bill பற்றி மட்டும் இப்போது பேசட்டும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்க. தமிழ்ச்செல்வன், என்ன? காலையிலிருந்தே உங்களுக்கு என்ன பிரச்சினை? என்ன பிரச்சினை என்று சொல்லுங்கள்.

***திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிறது. ஆண்டிப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சபையில் ஏதாவது கருத்து சொல்லவேண்டுமென்றால், பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2017 ஜுன் 19*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வாய்ப்புத் தருகிறேன். உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இனியும் கொடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அதெல்லாம் ஒரு பிரச்சினை இல்லை. (குறுக்கீடு) இல்லை,

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஜி.எஸ்.டி. பில்லைத் தவிர, வேறு எதுவும் வேண்டாம் என்றுதான். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. தங்க. தமிழ்ச்செல்வன். பேரவைத் தலைவருடைய தீர்ப்பையெல்லாம் நீங்கள் விமர்சனம் செய்யக் கூடாது. இது தேவையில்லாதது. நீங்கள் பேசிய கருத்துகள் இந்த அவைக்குத் தேவையில்லாத கருத்துகளாக இருக்கின்றன. அதை நீக்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது. பின்னர் மத்தியில் ஆட்சி மாற்றத்தினால், பல்வேறு மக்கள் விரோத திருத்தங்களை தற்போதைய பா.ஜ.க. அரசு கொண்டுவந்தபோது, அதைக் கடுமையாக எதிர்த்து, காங்கிரஸ் கட்சியின் பரிந்துரைகள் ஏற்கப்பட்ட பிறகுதான் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. அதன் ஒரு கூறாக 18 சதவிகிதம் மேலாக எந்த வரிவிதிப்பும் இருக்கக் கூடாது என்று கூறப்பட்டிருந்தாலும், தற்போது 28 சதவிகிதம் வரை வரி விதிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எல்லா வரிகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு வரிதான் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி. ஆனால், பல்வேறு பொருட்கள் குறிப்பாக பெட்ரோலியப் பொருட்களுக்கு இதிலிருந்து விலக்கு கொடுத்திருப்பதன்மூலம் cascading effect என்று கூறக்கூடிய ஓர் ஆபத்து, தொடர் பொருட்களின் விலை அதிகரிக்கும் நிலை, மக்களுக்குக் கூடுதல் நிதிச்சுமை மறைமுகமாக ஏற்படும். இது மக்களை ஏமாற்றும் ஒரு போக்கு. மாநிலங்களிடையே சரக்குப் போக்குவரத்து ஒரு சதவிகிதம் கூடுதல் வரி விதிப்பு என்று தொடர்வதால், ஒருங்கிணைந்த வரிக்குண்டான பார்வை நீர்த்துப்போகிறது. மக்கள்மீது இந்த நிதிச்சுமை திணிக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி எஸ். விஜயதரணி] [2017 ஜூன் 19

இங்கேயும் ஒரு cascading of taxes என்று சொல்லக்கூடிய தொடர் செலவினம், நிதிச்சுமை மக்கள்மீது திணிக்கப்படுகிறது. இதை ஜி.எஸ்.டி கவுன்சிலில் உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வைக்க வேண்டும். வரும் காலங்களில் நடக்கக்கூடிய கூட்டங்களில் முன்வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது மத்திய அரசு தந்திருக்கும் வரி விகிதங்களினால் தொலைபேசிக் கட்டணங்கள், காப்பீடு, வங்கிச் சேவை, வியாபாரம், பயணங்கள் போன்ற மக்கள் செலவினங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இதையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வருங்காலங்களில் முன்வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–45

G.S.T. வரி வருவாய் இந்தியாவிலேயே அதிகம் ஈட்டும் மாநிலம் தமிழகம். இதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை. எனவே அதிக நிதிகளை ஈட்டக்கூடிய, வரி வருவாயை ஈட்டக்கூடிய நம்முடைய மாநிலத்தின் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுகின்றவா என்று கேட்டால், இல்லை என்ற பதில்தான் வருகிறது. தேவையான நிதிகளை அதிக சதவிகிதம் நாம் நமக்கு திரும்பப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் NITI Aayog–லும், G.S.T. Council–லில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் முன்வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐந்தாண்டுக் காலம் நமக்கு compensation தருவதாகக் கூறுகிறார்கள். அந்த compensation போதாது என்று நான் கருதுகிறேன். நிதிகள் பெறும் சதவிகிதம் அதிகரித்தால்தான் நம்மால் ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகும் இதைச் சமாளிக்க முடியும்; இல்லையென்றால் எப்பொழுதுமே தட்டுப்பாட்டில் இயங்கிக்கொண்டிருக்க வேண்டிய நெருக்கடியில் தமிழகம் இருந்துகொண்டே இருக்கும்.

வியாபார சங்கத் தலைவராகவும் இருக்கக்கூடிய, எங்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. வசந்தகுமார் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். கிரைண்டர், பெண்கள் பயன்படுத்தும் பொருளாகும். அதன் வரி 5 சதவிகிதத்திலிருந்து 28 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது; யூரியாவின் வரி 18 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. உரங்கள், குறிப்பாக விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய ஒன்று. அதற்கு முழுமையான வரி விலக்கு அளிக்கப் பெற வேண்டும். ஃபர்னிச்சரின் வரி 12 சதவிகிதத்திலிருந்து 28 சதவிகிதமாக

2017 ஜூன் 19] [திருமதி எஸ். விஜயதரணி]

உயர்ந்திருக்கிறது. அதையும் குறைக்க வேண்டும். சாமானிய மக்கள் பயன்படுத்துகிற பொருள், கிரைண்டர் போன்றவை பெண்கள் பயன்படுத்தக்கூடியது. கைத்தறி, கதர் துணிகள் போன்றவற்றிற்கு வரிகள் போட்டிருக்கிறார்கள். இதுவரை, எப்போதுமே கைத்தறி மற்றும் கதர் துணிகளுக்கு வரி விலக்குத்தான் தந்திருக்கிறோம். சுதந்திரம் பெற்ற இந்தியாவில், கதரை முக்கியத்துவம்படுத்திய காலம் போய்—நீங்கள் அனைவரும் கதர் துணியைத்தான் அணிந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) கதர்தான் என்று நினைக்கிறேன்—கதருக்கு முழுமையான வரி விலக்கு அளிக்கப்பெற வேண்டும். அதற்கு முயற்சிகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும்.

அதேபோல மெழுகுவர்த்தி, paraffin wax போன்றவற்றிற்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது. மெழுகுவர்த்தி, குறிப்பாக இறைவனைத் தொழுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருள். அதற்கும் முழுமையான வரி விலக்குக் கிடைக்கப் பெற வேண்டும். கணக்கு சமர்ப்பித்தலில் குழப்பமான ஒரு சூழ்நிலை இந்த விதிமுறைகளில் இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, CGST, IGST, SGST என்று மூன்று கணக்கு முறைகள் இதில் தெரிவிக்கிறார்கள். இதில் ஒரு குழப்பம் இருக்கிறது. இதில், ஏதாவது தவறு நடந்துவிட்டால், சிறைத் தண்டனை என்ற அளவிற்கு, prosecution வரை உண்டு. ஆகையால், தெளிவான நடைமுறை வரும் வரை முதல் இரண்டு ஆண்டுகளுக்கு வியாபாரிகளுக்கு இதை ஒரு pilot scheme ஆகத்தான், பயிற்சி scheme ஆகத்தான் கொண்டுவர வேண்டும். இல்லையென்றால், இந்தக் குழப்பத்தின் காரணமாகத் தவறுகள் நேருமேயானால் சிறைத் தண்டனை பெற வேண்டிய கட்டாயத்தில் வணிகர்கள் தள்ளப்படுவார்கள். இதிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வருடத்திற்கு முன்பு வாங்கிய பொருட்களுக்கும் input tax credit, உள்ளீட்டு வரி வரவு வைக்க G.S.T. Council–ல் பரிந்துரை செய்தால்தான் வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசியது போதும், சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** கடைசி வரி. உரையை முடித்துவிடுகிறேன். ஓராண்டுவரை உள்ளதை credit வைத்துக்கொள்ள வாய்ப்பு இருந்தாலும், ஓராண்டிற்கு மேலுள்ள உள்ளீட்டு வரி வரவு வைக்க Council இல் முன்வைக்க வேண்டும்.

குறு, சிறு தொழில் செய்பவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய் உச்சவரம்பு விலக்கு இருப்பதை, ஒரு கோடி ரூபாயாக தமிழக அரசின் சார்பாக கோர வேண்டும்; G.S.T. Council–ல் பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். E-waybill, Anti-profiteering bill - இவையெல்லாம் சிறு வியாபாரிகளிடையே ஒரு குழப்பத்தை ஆரம்பக் காலத்தில் ஏற்படுத்தும். ஆகையால், முதல் இரண்டு ஆண்டுகள், ஒரு பயிற்சியாக, அவர்கள் கற்றுக்கொள்ளும்வரை, online–ல் அவர்கள் பயிற்சி பெறும்வரை கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கக் கூடாது; மத்திய அரசின் சார்பிலும் இதை முன்வைக்க வேண்டும். பயிற்சி scheme ஆக முதல் இரண்டு ஆண்டுகள் இருக்க வேண்டும். Return file செய்வது போன்ற அனைத்து நடைமுறைகளும் பயிற்சியாகத்தான் இரண்டு ஆண்டுகள் இருக்க வேண்டுமென்ற விஷயத்தை G.S.T. Council–ல் முன்வைத்து அதிக நிதிகளை தமிழகத்திற்குப் பெறுவதற்கு NITI Aayog–ல் அரசாங்கம் போராட வேண்டும். எங்கள் தரப்பில் உங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறித்து இங்கே பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலும் கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 4–50

ஒட்டுமொத்தத்தில் இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே பல்வேறு ஐயப்பாடுகள் நிலவி வருகின்றன. ஏற்கெனவே தமிழகத்தில் விவசாய மக்களும், மற்றவர்களும் பணப் புழக்கம் இல்லாமல் பல்வேறு நிலைகளிலே பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக சாதாரண ஊறுகாய்க்குக்கூட விலையேற்றம் ஏற்படும். பள்ளிக்கூடத்திற்குச் செல்லக்கூடிய மாணவர்கள்கூட நோட்டுப் புத்தகங்கள், பேனா போன்றவையின் விலையேற்றத்தால் பாதிக்கப்படுவர். ஒட்டுமொத்தமாக 20 சதவிகிதம் கூடுதலாக நாம் செலவினங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்ற ஓர் ஐயப்பாட்டைத் தெரிவித்திருக்கின்றார்கள். இதிலே

*2017 ஜூன் 19]* [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

*முக்கியமாக வியாபாரப் பெருமக்களையும், மற்றவர்களையும் இந்த அரசாங்கம் அழைத்துப் பேசி, ஒரு பரந்த ஆலோசனைக்குப் பின்பு இதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதை ஆலோசித்து முடிவெடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். எனவே, இதை அமல்படுத்தியபின் அதிலே ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நாம் சந்திப்பதற்குப் பதிலாக முன்பே இதுசம்பந்தமாக ஒரு பரந்த நிலையிலே வியாபார பெருமக்களை அழைத்து, வியாபார சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து கலந்தாலோசனையைப் பெற்று, எந்தெந்த வகையிலே தமிழகத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலே முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ, அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை 6 மாதம் அல்லது ஒரு வருடத்திற்கு உள்ளாக எப்படி நாம் பயிற்சியாக எடுத்துக்கொள்ள முடியுமோ அதையும் செயல்படுத்த வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே, இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தபோதுகூட சில திருத்தங்களோடுதான் எங்களுடைய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக ஆதரித்திருக்கின்றோம். அதே நிலைப்பாட்டிலேயே இதில் உரிய கவனத்தை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவை* Select Committee*–க்கு அனுப்பி, இதை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுவரையில் இதை நீங்கள் ஒத்திவைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நாடு, ஒரே வரி என்ற அடிப்படையின்கீழ், இந்தியா முழுவதற்கும் ஒரு சீரான வரி இருக்க வேண்டும் என்ற வகையில் மத்திய அரசு இந்த மசோதாவைக் கொண்டு*

வருகின்றபோது நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இது மாநிலத்தினுடைய சுயாட்சியையும் பாதிக்கக் கூடாது. அதேநேரத்திலே நிதி தன்னாட்சியும் பேணி காக்கப்பட வேண்டும் என்ற இந்த இரண்டு விஷயங்களும், கொண்டு வரப்படுகின்ற மசோதாவில் இருந்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே மத்திய அரசு மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லிய மாநிலங்களுடைய நலன் கருதி சுயாட்சி மற்றும் நிதி தன்னாட்சி குறித்த அந்தக் கருத்துகளை ஏற்றுக்கொண்டபின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்கு ஆதரவு தந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் வைத்த கோரிக்கை, நம்முடைய மாநிலத்தினுடைய முக்கிய வரி வருவாயாக இருக்கக்கூடிய பெட்ரோலியப் பொருட்கள் மீதான வரியை மாநில அரசு நிர்ணயிக்க வேண்டும் என்பதாகும். அதேபோன்று மனிதர்கள் உபயோகிக்கின்ற மதுபானங்கள், அது மாநில வரி வருவாயினுடைய பிரதானமாக இருக்கின்ற காரணத்தினால், எக்காரணத்தைக்கொண்டும் மத்திய அரசு அதை GST–யில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அது மாநிலத்தினுடைய நிதி தன்னாட்சியைப் பேணிக் காப்பதாக இருக்கும். எனவே, அவற்றிக்கு வரி விதிக்கின்ற அதிகாரம் மாநிலத்திற்கு இருக்க வேண்டும் என்ற அந்தக் கருத்தும் சொல்லப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதோடு, கடல் வர்த்தகத்தில் 12 Nautical mile, அங்கே வர்த்தகம் ஏற்பட்டாலும்கூட அது மாநிலத்தினுடைய வரி விதிக்கும் அதிகாரத்திற்குட்பட்டுத்தான் வர வேண்டும் என்ற அந்தக் கருத்தும் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தவிர, முக்கியமானது GST–யை அமல்படுத்துவதனால் ஏற்படுகின்ற வரி இழப்பு ஒவ்வோர் ஆண்டும் 14 சதவிகிதத்திற்கு அதிகமாக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக அதற்கு ஆதரவளித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருத்தை ஏற்றுத்தான் பாராளுமன்றத்திலும் சரி, மற்ற மாநிலங்களிலும் ஏற்றுக்கொண்டு GST–யைக் கொண்டுவந்தார்கள் என்று சொன்னால் அதற்கு முழு முதற்காரணம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மாநிலத்தினுடைய நிதி தன்னாட்சி, மாநிலத்தினுடைய சுயாட்சியைக் காப்பாற்றியவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

*2017 ஜூன் 19]* [திரு. டி. ஜெயக்குமார்]

*பிற்பகல் 4–55*

*எனவே, ஜி.எஸ்.டி.–ஐ அமல்படுத்தும்போது பொருளாதார வல்லுநர்கள் குறிப்பிடுவது என்னவென்றால், 1 சதவிகிதம் அளவிற்கு* GDP, *அதாவது உற்பத்தியைப் பெருக்குகின்ற நிலையும், விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற நிலையும் எதிர்காலத்தில் உருவாகும் என்று கருத்து பொதுவாகவே கூறப்பட்டுள்ளது. இதை ஒரு நிதர்சனமான உண்மையாகக்கூட எடுத்துக்கொள்ளலாம். காரணம் என்னவென்றால்,* GST*–ல் ஒரு பொருளுக்கு வரி விதிக்க* Fitment Committee *இருக்கிறது. ஒரு பொருளுக்கு வரி விதிக்கும்போது, ஏற்கெனவே மாநில அரசால் விதிக்கப்படுகின்ற* Value Added Tax *தவிர* Central Taxes, *வரி என்று சொன்னால் இரண்டு விதமான வரிகள். ஒன்று நேர்முக வரி–*Direct Tax. Direct Tax *என்று சொன்னால்* Wealth Tax & Income Tax, Indirect Tax *என்று சொல்லும்பொழுது,* Excise duty, Sales Tax, VAT, *நுழைவு வரி, மேல் வரி–*Cess, Luxury Tax *ஆகியவை.* GST *அமல்படுத்துவதற்கு முன்பாக, உதாரணத்திற்கு ஒரு பொருள் பக்கத்து மாநிலத்திலிருந்து பெறப்படுகிறது என்று சொன்னால், அதற்கு மாநில அரசு ஒரு நுழைவு வரி விதிக்கலாம்; நுழைவு வரிக்குப் பிறகு விற்பனை வரி விதிக்கலாம்; விற்பனை வரிக்குப் பிறகு மேல் வரி விதிக்கலாம்; மேல் வரிக்குப் பிறகு மற்ற வரிகளை விதிக்கலாம். எனவே, ஒரு பொருளின்மீது 5 அல்லது 6 வரிகள் விதிக்கும்போது நுகர்வோர்மீது வரிச் சுமை ஏற்பட்டு அந்தப் பொருளின் விலை ஏறுகின்ற நிலைமை ஏற்படும். ஆனால், ஜி.எஸ்.டி.–யை அமல்படுத்துவதனால் பக்கத்து மாநிலங்களிலிருந்து பொருட்கள் வாங்கும்போது, உதாரணத்திற்கு நமது மாநிலத்தில் இரும்பு கம்பி உற்பத்தி செய்பவர் அதற்கான* raw materials*–ஐ* scrap*–ஐ ஆந்திர மாநிலத்திலிருந்து வாங்குகிறார் என்று சொன்னால், அந்த மாநிலத்தில் அந்தப் பொருளுக்கு 5 சதவிகிதம்* Input Tax *விதிக்கிறார்கள் என்றால், அந்த வரியோடு அவர் அந்தப் பொருளை வாங்கி வந்து, கம்பியாக உற்பத்தி செய்து 10 ரூபாய்க்கு விற்றால், 5 ரூபாய்தான் கூடுதலாக அதற்கு வரி விதிக்க முடியும். அதற்குமேல் வரி விதிக்க முடியாது. எனவே, 10 ரூபாய்க்குள்ளாகத்தான் அந்தப் பொருளை விற்கக்கூடிய நிலைமை வரும். ஆனால், ஜி.எஸ்.டி. அமல்படுத்தப்படாத சூழ்நிலையில் அவர் வாங்கும்* scrap*–க்கு* Entry Tax *போடலாம்;* Sales Tax *போடலாம்;* Excise duty *போடலாம். இவ்வாறு, பன்முக வரி விதிப்பதன்மூலம் அந்தப் பொருளை 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்க வேண்டிய நிலைமை உருவாகும்.*

G.S.T. Council என்பது இதோடு முடிவதல்ல. இது தொடர்ச்சியாக நடைபெறக்கூடிய ஒன்றாகும். இது மத்திய அரசு அமைப்பு என்று சொல்லக் கூடாது; மாநில அரசு அமைப்பு என்றும் சொல்லக் கூடாது; அனைத்து மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட ஓர் அமைப்பு ஆகும். இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு ஆகும். எனவே, GST–யை அமல்படுத்தும்போது, வருங்காலங்களில் விவசாயிகளுக்கோ, நெசவாளர்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ, தொழில் முனைவோர்களுக்கோ, சிறுதொழில் முனைவோர்களுக்கோ, வர்த்தகர்களுக்கோ, யாருக்கு எந்தவித பாதிப்பு ஏற்பட்டாலும், அதை GST Council–ல் மீண்டும் எடுத்துச் சொல்லி, நிவர்த்தி செய்கின்ற ஒரு நிலை ஏற்படும்.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில்கூட மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள், இது இறுதி அல்ல; இதுசம்பந்தமாக எந்தவொரு இடர்ப்பாடு வந்தாலும்கூட அதை மறுபடியும் review செய்து, Council–ல் விவாதிக்கப்பட்டு, முடிவெடுக்கப்படும் என்று கருத்து தெரிவித்தார்கள். ஆகவே, இதுகுறித்து வர்த்தகர்களும், வியாபாரிகளும் அச்சப்படத் தேவையில்லை. அதே நேரத்தில், நம்முடைய மாநிலத்திற்குள்ளாகவே தொழில் செய்பவர்கள், வர்த்தகர்களாக இருந்தாலும் சரி; வியாபாரிகளாக இருந்தாலும் சரி; உற்பத்தியாளர்களாக இருந்தாலும் சரி; விநியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி; அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Compounding Tax Rate–ஐ ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாகக் கொண்டு வர வேண்டும் என்று சொன்னார்கள். இதற்கு அதிகபட்சமாக 3 சதவிகிதம்தான் வரி விதிக்கப்படும். உதாரணமாக, ‘A’ என்பவர் மாநிலத்திற்குள்ளேயே luxurious item விற்பனை செய்கிறார் என்று சொன்னால், அதற்கு 28% வரி விதிக்கப்படும். அவர் ரூ.75 இலட்சத்திற்குள் வர்த்தகம் செய்தால் 28% வரி கட்டத் தேவையில்லை. கிட்டத்தட்ட 3%தான் அவர் வரியாகக் கட்ட வேண்டியிருக்கும். ரூ.20 இலட்சத்திற்குள் வர்த்தகம் செய்தால் அவர் GST purview–ல் வரவேமாட்டார். ஆகவே, GST–ஐப் பொறுத்தவரையில், முழுமையான அளவிற்கு எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையைப் பெற்று, நமது மாநிலத்தில் அனைவரின் நலன்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற வகையில்

அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் நிச்சயமாக மாநிலத்தின் நலன் காக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தினை வழங்கியிருக்கின்றார்கள். அதன் தொடர்ச்சியாக ஒரு சில கருத்துகளை மட்டும் நான் இங்கே தெளிவுபடுத்தலாம் என்று நினைக்கின்றேன். என்னிடத்திலே நீண்ட தெளிவான உரை இருந்தாலும், நேரத்தின் அருமையைக் கருதி சுருக்கமாக ஒரு சில கருத்துகளை மட்டும் இப்பொழுது சொல்லி, என்னுடைய மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விளக்கமான உரையை நிகழ்த்துகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 5–00

GST–ஐப் பொறுத்தவரையில், இதுவரை கிட்டத்தட்ட 25 மாநிலங்கள் இதற்கு அங்கீகாரம் அளித்திருக்கின்றன. அங்கீகாரம் வழங்கிய மாநிலங்களில் முதலிலே எதிர்ப்புத் தெரிவித்த மாநிலங்களும் உள்ளன. அதாவது, காங்கிரஸ் முதலிலே இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, கடுமையாக எதிர்த்த குஜராத் மாநிலத்திலே முதலமைச்சராக இருந்தவர் இன்றைய பாரதப் பிரதமர். அவர்தான் இன்றைக்கு GST–ஐ அமல்படுத்துவதிலே மும்முரம் காட்டி, இன்றைக்கு GST-ஐ அமல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் உறுப்பினர்கள். உங்களுக்குத் தெரிந்த செய்திதான். இன்றைக்கு தொடர்ந்து அம்மா அவர்களுடைய அரசு GST council கூட்டம் நடக்கின்ற காலங்களிலே எல்லா நேரத்திலும் நம்முடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றோம். தொடர்ந்து தமிழகம் GST-க்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கின்றது என்ற செய்தியானது பத்திரிகைகளிலும் செய்திகளாகத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும் நம் அனைவருக்கும் தெரிந்த உண்மை. அந்த அளவிலே இந்த மசோதா மக்களவையிலும், மாநிலங்களவையிலும் நிறைவேற்றும்பொழுது நாம் இதற்கு

எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்புச் செய்திருக்கின்றோம். அந்த அளவிற்குத் தொடர்ந்து மக்கள் நலனை அதாவது வியாபாரிகளுடைய நலனில் அக்கறைக் கொண்ட அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. பல்வேறு கருத்துகளை, பல்வேறு கோரிக்கைகளை எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இதற்கு அடித்தளமிட்ட காங்கிரஸ் கட்சியினர்கூட வைத்திருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்களில் இந்த மசோதா நிறைவேறுவதற்கு முன்பாக அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து இந்த கோரிக்கைகளையெல்லாம் GST council கூட்டத்திலே மீண்டும் வலியுறுத்தப்படும் என்று சொல்லி, இந்த GST சட்டமுன்வடிவை நிறைவேற்றிக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்து வைத்த கோரிக்கை Select Committee–க்கு அனுப்ப வேண்டும் என்பது. எனவே, இங்கே இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கின்றபொழுது Select Committee–க்கு அனுப்புவதாகத் தெரியவில்லை. குரல் வாக்கெடுப்பின் மூலமாக நீங்கள் நிறைவேற்ற இருக்கக்கூடிய காரணத்தால், இதை நாங்கள் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2017 ஜூன் 19] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 174 மற்றும் இணைப்புப் பட்டியல்கள், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 174 மற்றும் இணைப்புப் பட்டியல்கள் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20–6–2017) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5–03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

4. மதுரை பால் வளாகத்தில், ஒரு சுழற்சிக்கு 10,000 லிட்டர் வீதம் புதிய பனிக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை ஒட்டுமொத்த அடிப்படையில் நிறுவுவதற்கான பணியை குஜராத்திலுள்ள ஆனந்த், திருவாளர்கள் தேசிய பால் வளர்ச்சி குழுவிடம் ஒப்படைப்பதற்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)–ன்கீழ், அனுமதி வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 17–3–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 69–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. தமிழ்நாட்டில் செயல்படுத்திடக் கருதியுள்ள அத்திக்கடவு–அவினாசி பாசனம், நிலத்தடிநீர் மறுசெறிவூட்டல் மற்றும் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான விரிவான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த மதிப்பீட்டு ஆய்வை மேற்கொள்வதற்கான ஆலோசனைப் பணிகளை சென்னை, திருவாளர்கள் வாட்டர் அண்டு பவர் கன்சல்டன்சி சர்வீஸஸ் நிறுவனத்திடம், 1998 ஆம் ஆண்டு

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)—ன்கீழ், நியமன அடிப்படையில் ஒப்படைப்பது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 20—3—2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 70—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தால் தேசிய ஊரக வாழ்வாதார மேம்பாட்டின்கீழ், மகளிர் வங்கி ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஆலோசனைப் பணிகள் நிறுவனத்திடம், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)—ன்கீழ், ஒப்படைத்தது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 20—3—2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 71—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. கால்நடைத் தீவன உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களை தேசிய பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் மின்அங்காடிமூலம் வாங்குவதற்கு ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)—ன்கீழ், அனுமதி வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 24—4—2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 101—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 29—12—2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 130—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 2015—2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் ஐம்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச்

சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

10. 2015—2016 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

11. 2015—2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

12. 2015—2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

13. 2015—2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

14. 2015—2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

15. 2015—2016 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

16. 2015—2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்—ஆங்கிலம்)

*2017 ஜூன் 19*]

*17. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ்–ஆங்கிலம்)*

*18. 2015–2016 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ்–ஆங்கிலம்)*

*19. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (திருநெல்வேலி) ஆறாவது ஆண்டறிக்கை.* [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ்–ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*20. மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*21. மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

*22. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)*

*23. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு உணவு மற்றும் ள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)*

———

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு I

**(505 *ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)***

## மானியக் கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2017—2018

### முன்னுரை

*எரிசக்தித் துறை நாட்டிலுள்ள கட்டமைப்பு துறைகளில் மிகவும் முக்கியமான துறையாகும். நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு போதுமான மின் கட்டமைப்பு வளர்ச்சி மேம்பாடு மிகவும் முக்கியமானதாகும். நம்பகத்தகுந்த மற்றும் மலிவான விலை மின்சக்தி நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது. தமிழ்நாட்டின் மின்னாற்றல் கொள்கை மாநிலத்தின் மக்களுக்கு நிலையான மின்சக்தி பாதுகாப்பை நியாயமான விலையில் வழங்குவதாகும்.*

*மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய தலைமையில் கடந்த 6 வருடங்களில் விரிவான திட்டத்தை தமிழக அரசு நடைமுறைப்படுத்தி தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையை உருவாக்கி மின்பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழகம் தற்போது மின்மிகை மாநிலமாக திகழ்கின்றது. அமலில் இருந்த மின்கட்டுப்பாட்டு முறைகள் ஜூன் 2015 முதல் முழுவதுமாக நீக்கப்பட்டு அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் தற்போது 24X7 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.*

*2011 முதல் மாநில மற்றும் மத்திய தொகுப்புகளில் புதிய மின் திட்டங்களை இயக்கத்திற்கு கொண்டு வந்ததன் மூலமும், நடுத்தர மற்றும் நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் மின்சாரத்தை கொள்முதல் செய்வதன் மூலமும் மற்றும் சூரிய மின் சக்தி மூலமும் கூடுதலாக 10,496 மெகாவாட் மின்சாரம் மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. கூடங்குளம் அணுமின் நிலையமானது சுமூகமாக மின் உற்பத்தியை தொடங்க மாநில அரசு எடுத்த தீவிர முயற்சிகளின் காரணமாக அலகு I மாண்புமிகு பாரத பிரதமர் மற்றும் இரஷ்ய அதிபர் ஆகியவர்களால் மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் முன்னிலையில்*

[2017 ஜூன் 19

10-08-2016 அன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. மேலும், கூடங்குளம் அணு மின் நிலையம் அலகு-2 (1000 மெகாவாட் திறனில் தமிழ்நாட்டின் பங்கு 562.5 மெகாவாட்) வணிக ரீதியிலான மின் உற்பத்தியை 31-03-2017 அன்று தொடங்கியது. இவைதவிர, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் 15-10-2016 அன்று 3-வது மற்றும் 4-வது அலகிற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது.

நாட்டிலேயே தமிழகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றது. தற்போது தமிழ்நாட்டின் காற்றாலை மற்றும் சூரிய மின் சக்தியையும் சேர்த்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிறுவுத்திறன் 10,480 மெகாவாட் ஆகும். கடந்த காற்றுப் பருவத்தில், தமிழகத்தில் ஏறத்தாழ 13,000 மில்லியன் யூனிட் அளவிற்கு காற்றாலை மின்சக்தி பெறப்பட்டது என்பது இதுவரை எப்போதும் இல்லாத பதிவாகும். 2016-2017 ஆம் ஆண்டில் தமிழகம் ஏறத்தாழ 1,644 மில்லியன் யூனிட் மின்சாரத்தை சூரிய ஒளி மின் உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுள்ளது. மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் இந்த முக்கிய இடத்தை தொடர அனைத்து முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் தற்போதைய சராசரி மின்தேவை ஏறக்குறைய 13,750 மெகாவாட் முதல் 14,250 மெகாவாட்டாக உள்ளது. 29-04-2016 அன்று தமிழ்நாடு உச்சகட்ட மின் தேவையான 15,343 மெகாவாட் அளவை பூர்த்தி செய்தது. எப்பொழுதும் இல்லாத அளவாக 30-05-2017 அன்று சென்னையின் உச்சகட்ட மின் தேவையான 3,332 மெகாவாட் அளவையும் மற்றும் உச்ச மின் பயனீட்டளவான 64.830 மில்லியன் யூனிட்டை 2-6-2017 அன்றும் பூர்த்தி செய்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் 200 மில்லியன் யூனிட் அளவாக இருந்த ஒரு நாளைய சராசரி மின் பயனீடு தற்போது 2017 ஆம் ஆண்டில் 320 மில்லியன் யூனிட் அளவாக உயர்ந்துள்ளது. 29-4-2016 அன்று தமிழ்நாடு ஒரு நாளைய உச்ச மின் பயனீட்டளவான 345.617 மில்லியன் யூனிட் அளவை பூர்த்தி செய்துள்ளது.

மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள மின் தேவை-மின் உற்பத்தி சமன்பாட்டு அறிக்கையில் (LGBR) தமிழகம் 2017-18 ஆம் ஆண்டில் 8,663 மில்லியன் யூனிட் மின்சாரமும் மற்றும் உச்சபட்ச மின் தேவையில் 2,227 மெகாவாட் அளவிற்கும் கூடுதலாக உற்பத்தி செய்து கடந்த ஆண்டை போலவே மின்மிகை

2017 ஜுன் 19]

மாநிலமாக தொடர்ந்து திகழும் என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் மின் அமைச்சகம் வெளியிட்டுள்ள மாநில மின்பகிர்மான நிறுவனங்களின் வருடாந்திர ஒருங்கிணைந்த தரவரிசை பட்டியலில் 2014-15 ஆம் ஆண்டில் 'C+' தரவரிசையிலிருந்த தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 2015-16 ஆம் ஆண்டில் 'B' தரவரிசைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதி நிலை முன்னேற்றம் காரணமாக இந்த நிதியாண்டில் 'A' தரவரிசை பெறுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

2010-11 ஆம் ஆண்டில் 20.24% ஆக இருந்த தொழில் நுட்ப மற்றும் வணிக இழப்பீடுகள் (AT & C losses) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கட்டமைப்பை வலுப்படுத்தும் பணிகள் காரணமாக 2015-16 ஆம் ஆண்டில் 14.58% ஆக குறைந்துள்ளது. மேலும், மின் கட்டமைப்பை வலுப்படுத்துதல், நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் மூலமாக இந்த இழப்பீட்டை 2018-19 ஆம் ஆண்டில் 13.5% ஆக குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசினால் தொடங்கப்பட்ட உதய் திட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இணைந்த பிறகு, ரூ.22,815 கோடி கடன் தொகையை மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்மூலம் மின் வாரியத்திற்கு வட்டி செலுத்துவதில் கணிசமான நிவாரணமும் பணபுழக்கத்தில் சேமிப்பும் ஏற்படும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கடன் பத்திரங்கள்மூலம் நிதி திரட்டி உதய் திட்டத்தின்கீழ் மீதமுள்ள கடனை திருப்பி செலுத்துவதற்கு ஏதுவாக தமிழக அரசு ரூ.7,605 கோடிக்கான காப்புறுதியை வழங்கியது.

இவை தவிர, மூலதன திட்டங்களுக்காக, சுமார் ரூபாய் 95,000 கோடி நிதி உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பிரதான மத்திய நிதி நிறுவனங்களான ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) மற்றும் மின்விசை நிதி நிறுவனம் (PFC) ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உற்பத்தி நிறுவுத்திறனை அதிகப்படுத்துதல் நீண்டகால மற்றும் குறுகிய கால மின் கொள்முதல் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்

போன்ற நடவடிக்கைகளின்மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், நாப்ஃதா மற்றும் குறைந்த சல்பர் கனரக பங்கு (LSHS) போன்ற எரிபொருளால் உற்பத்தி செய்யப்படும் அதிக விலையுள்ள மின்சாரத்தை கொள்முதல் செய்வதை கைவிட ஏதுவானது. மேலும் தென்மண்டல மின் கட்டமைப்பு, மற்ற மண்டல மின் கட்டமைப்புகளுடன், (வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு) இணைக்கப்பட்டதால் மின் வர்த்தக சந்தையில் குறைவான விலையில் மின் கொள்முதல் செய்ய முடிகிறது.

இதுதவிர, சீரிய நிலக்கரி மேலாண்மை மற்றும் இறக்குமதி நிலக்கரியின் பயன்பாட்டைக் குறைத்தது ஆகியவற்றின்மூலம் தோராயமாக ரூபாய் 400 கோடி நிகர சேமிப்பை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அடைந்துள்ளது. 2016-17 ஆம் ஆண்டில் மத்திய அரசால் கூடுதலாக விதிக்கப்பட்ட துலீய்மை ஆற்றல் வரி மற்றும் இரயில்வே சரக்கு சுமை கட்டண ஏற்றம் ஆகியவற்றால் ரூபாய் 615 கோடி கூடுதலாக சுமை ஏற்பட்ட சூழ்நிலையிலும் மேற்கூறிய நிகர சேமிப்பை அடைய முடிந்துள்ளது.

மேற்கூறிய நடவடிக்கைகளால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கணிசமான சேமிப்பு கிடைத்துள்ளது. 2013-14-ல் ரூபாய் 13,985 கோடியாக இருந்த இழப்பு 2016-17-ல் ரூபாய் 3,783 கோடியாக குறைந்துள்ளது. மேலும், 2010-11 ஆண்டில், சராசரி மின் விற்பனை விலைக்கும் மற்றும் சராசரி மின் வழங்கல் விலைக்கும் இடையே ரூ.2.16 ஆக இருந்த இடைவெளி, 2016-17 ஆம் ஆண்டில் ரூ.0.44 (44 பைசா) ஆக குறைக்கப்பட்டுள்ளது. பதினைந்து ஆண்டுகால நீண்ட இடைவெளிக்கு பிறகு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இந்த ஆண்டு (2017-18) இழப்பே இல்லாத நிலையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எரிசக்தித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட அமைப்புகள் செயல்படுகின்றன:

I. முன்னாள் தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது கீழ்க்கண்டவாறு மறுசீரமைக்கப்பட்டுள்ளது;

i) தநாமிவா நிறுவனம் (TNEB Ltd)

ii) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO)

iii) தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் (TANTRANSCO)

*2017 ஜூன் 19*]

II. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA)

III. அரசு மின் ஆய்வுத் துறை (CEIG)

IV. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TNPFC)

**தநாமிவா நிறுவனம்**

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்**

**தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்**

தமிழ்நாடு மின்சார வாரியம், 1.11.2010 அன்று தநாமிவா நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் என மறு சீரமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானப் பணிகளை மேற்கொண்டுவருகிறது. தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மின் தொடரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் நிறுவப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கும் மின் கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டு, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களும் 100 சதவீதம் மின்மயமாக்கப்பட்டுள்ளது.

**1.1 தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முன்னேற்றம் – ஒருபார்வை**

தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டு முதல் 10,496 மெகாவாட் மின்சாரம் மாநில மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு, தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது மட்டும் அல்லாமல் மின்மிகை மாநிலமாகவும் திகழ்கின்றது. 2008 ஆம் ஆண்டு அமலில் இருந்த மின்கட்டுப்பாட்டு முறைகள் மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அயராத முயற்சியினால் 5-6-2015 முதல் முழுவதுமாக நீக்கப்பட்டு அனைத்து மின் நுகர்வோர்களுக்கும் தற்போது 24x7 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழக அரசு 9-1-2017 அன்று “அனைவருக்கும் 24x7 மின்சாரம்” ஆவணத்தில் கையெழுத்திட்டு அனைத்து வகை மின் நுகர்வோர்களுக்கும் தரமான, தடையில்லாத மின்சாரத்தை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்துள்ளது.

மாநிலத்தின் தற்போதைய சராசரி மின் தேவை ஏறக்குறைய 13,750 மெகாவாட் முதல் 14,250 மெகாவாட்டாக உள்ளது. 29-4-2016 அன்று தமிழ்நாடு உச்சகட்ட மின் தேவையான 15,343 மெகாவாட் அளவை பூர்த்தி செய்தது. எப்பொழுதும் இல்லாத அளவாக சென்னையின் உச்சகட்ட மின் தேவையான 3,332 மெகாவாட் அளவை 30-5-2017 அன்றும் மற்றும் உச்ச மின் பயனீட்டளவான 64.830 மில்லியன் யூனிட்டை 2-6-2017 அன்றும் பூர்த்தி செய்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் 200 மில்லியன் யூனிட் அளவாக இருந்த ஒரு நாளைய சராசரி மின் பயனீடு தற்போது 2017 ஆம் ஆண்டில் 320 மில்லியன் யூனிட் அளவாக உயர்ந்துள்ளது. 29-4-2016 அன்று தமிழ்நாடு ஒரு நாளைய உச்ச மின் பயனீட்டளவான 345.617 மில்லியன் யூனிட் அளவை பூர்த்தி செய்துள்ளது.

மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள மின் தேவை-மின் உற்பத்தி சமன்பாட்டு அறிக்கையில் தமிழகம் 2017-18 ஆம் ஆண்டில் 8,663 மில்லியன் யூனிட் மின்சாரத்தையும் மற்றும் உச்சபட்ச மின் தேவையில் 2,227 மெகாவாட் அளவிற்கும் கூடுதலாக உற்பத்தி செய்து கடந்த ஆண்டை போலவே மின்மிகை மாநிலமாக தொடர்ந்து திகழும் என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 2016-17 ஆம் நிதியாண்டில் மின் உற்பத்தியில் உச்ச உபரி நிலை (peak surplus) அடைந்துள்ளது. மேலும், எதிர்வரும் வருடங்களிலும் மின் உற்பத்தியில் உபரி நிலை தொடர போதுமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மின் நிலையங்களில் கூடுதலாக உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காகவும் மின் பயனீட்டாளர்களுக்கு தரமான சீரான மின்சாரத்தை வழங்குவதற்காகவும் மின்தொடர் கட்டமைப்பு குறிப்பிடத்தக்க வகையில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 343 துணை மின் நிலையங்கள், 9,673.27 சுற்று கி.மீ மிக உயரழுத்த மின் பாதைகளும் (EHT) மற்றும் 20746.48 கி.மீ உயரழுத்த மின் பாதைகளும் (HT) இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் 55.84 இலட்சம் புதிய மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மின் நுகர்வோர் சார்ந்த சேவைகளை மேலும் மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. இந்த வகையில் புதிய மின்

2017 ஜூன் 19]


இணைப்புகளுக்கு விண்ணப்பிப்பதில் உள்ள இடர்பாடுகளை களைய விண்ணப்பங்களை இணையம்மூலம் பதிவு செய்யும் முறையை மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 5-8-2016 அன்று துவக்கி வைத்தார். தற்போது, மின் நுகர்வோர், புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

மேலும், தமிழகத்தில் தாழ்வழுத்த வீடு மற்றும் வணிக உபயோகத்திற்கான 'ஒருநாள் மின் இணைப்பு' திட்டத்தையும் மற்றும் மின் நுகர்வோரின் உற்ற நண்பனாக செயல்படகூடிய மின்சார நண்பன் என்ற புதிய திட்டத்தையும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 12-6-2017 அன்று துவக்கி வைத்துள்ளார். மின்சார நண்பன் திட்டத்தின்மூலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மின் நுகர்வோருக்கு அவர்கள் பகுதியில் ஏற்பட உள்ள/ஏற்பட்டுள்ள மின் பராமரிப்பு பணிகள் குறித்த தகவல் குறுஞ் செய்திமூலம் தெரிவிக்க இயலும்.

மேற்கூறிய நடவடிக்கைகளால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கணிசமான சேமிப்பு கிடைத்துள்ளது. 2013-14-ல் ரூபாய் 13,985 கோடியாக இருந்த இழப்பு 2016-17-ல் ரூபாய் 3,783 கோடியாக குறைந்துள்ளது. மேலும், 2010-11 ஆண்டில், சராசரி மின் விற்பனை விலைக்கும் மற்றும் சராசரி மின் வழங்கல் விலைக்கும் இடையே ரூபாய் 2.16 ஆக இருந்த இடைவெளி, 2016-17 ஆம் ஆண்டில் ரூபாய் 0.44 (44 பைசா) ஆக குறைக்கப்பட்டுள்ளது. பதினைந்து ஆண்டுகால நீண்ட இடைவெளிக்கு பிறகு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இந்த ஆண்டு (2017-18) இழப்பே இல்லாத நிலையை எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

உற்பத்தி நிறுவுத்திறனை அதிகப்படுத்துதல் நீண்டகால மற்றும் குறுகிய கால மின் கொள்முதல் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளின்மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், நாப்ஃதா மற்றும் குறைந்த சல்பர் கனரக பங்கு (LSHS) போன்ற எரிபொருளால் உற்பத்தி செய்யப்படும் அதிக விலையுள்ள மின்சாரத்தை கொள்முதல் செய்வதை கைவிட ஏதுவானது. மேலும் தென்மண்டல மின் கட்டமைப்பு, மற்ற மண்டல மின் கட்டமைப்புகளுடன், (வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு) இணைக்கப்பட்டதால் மின் வர்த்தக சந்தையில் குறைவான விலையில் மின் கொள்முதல் செய்ய முடிகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
– ஒரு பார்வை




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*2017 ஜூன் 19]*

*இதுதவிர, சீரிய நிலக்கரி மேலாண்மை மற்றும் இறக்குமதி நிலக்கரியின் பயன்பாட்டைக் குறைத்தது ஆகியவற்றின்மூலம் தோராயமாக ரூபாய் 400 கோடி நிகர சேமிப்பை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அடைந்துள்ளது. 2016-17 ஆம் ஆண்டில் மத்திய அரசால் கூடுதலாக விதிக்கப்பட்ட தூய்மை ஆற்றல் வரி மற்றும் இரயில்வே சரக்கு சுமை கட்டண ஏற்றம் ஆகியவற்றால் ரூபாய் 615 கோடி கூடுதலாக சுமை ஏற்பட்ட சூழ்நிலையிலும் மேற்கூறிய நிகர சேமிப்பை அடைய முடிந்துள்ளது.*

## 1.2 வெள்ளம் மற்றும் வர்தா புயல் நேரங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மேற்கொண்ட முயற்சிகள்

### 1.2.1 வர்தா

*1) 12-12-2016 அன்று வர்தா புயலின் காரணமாக, சென்னை கடற்கரையில் 130 முதல் 140 கி.மீ. வேகத்திற்கு காற்று வீசியதுடன், பலத்த மழையும் பெய்தது. இதனால் மின்கட்டமைப்பு பாதிக்கப்பட்டது.*

*2) சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இம்மாவட்டங்களில் மிக உயரழுத்த மின்கோபுரங்கள், மின் பாதைகள் மற்றும் துணை மின் நிலைய உபகரணங்கள் அனைத்தும் சேதமடைந்தன. மேலும் பலத்த காற்றினால் மரங்கள் முறிந்து மின் பகிர்மான கட்டமைப்பின் மின் கம்பிகள், மின் கம்பங்கள் மற்றும் மின் மாற்றிகள்மீது விழுந்ததால் மின் கட்டமைப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.*

*3) இதேபோன்று திருவண்ணாமலை மற்றும் வேலூர் போன்ற பிற மாவட்டங்களிலும் சேதங்கள் ஏற்பட்டன.*

*4) 59 எண்ணிக்கை மிக உயரழுத்த மின்கோபுரங்கள், 800 மின்மாற்றிகள், சுமார் 49,100 மின் கம்பங்கள், 4,500 பில்லர் பெட்டிகள் மற்றும் 15,000 கி.மீ. அளவிற்கு மின்பாதை கம்பிகள் சேதமடைந்தன.*

*5) 12-12-2016 அன்று சென்னைக்கு மின் விநியோகம் செய்யும் மிக உயரழுத்த மின்கோபுரங்கள் சேதமடைந்ததால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் அனைத்திலும் நண்பகல் 12.00 மணி அளவில் மின் விநியோகம் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது.*

[2017 ஜூன் 19

*6) சீரமைப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக, அவசர அத்தியாவசிய பிரிவுகளான அரசு பொது மருத்துவமனை, தலைமைச் செயலகம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஆகியவற்றுக்கு 3 மணி நேரத்திற்குள் மின் விநியோகம் வழங்கப்பட்டது. மேலும், கோயம்பேடு மத்திய பேருந்து நிலையத்திற்கும், சென்னை விமான நிலையத்திற்கும் அன்றிரவே மின் விநியோகம் வழங்கப்பட்டது.*

*7) வர்தா புயலால் ஏற்பட்ட சேதங்களை சரிசெய்ய சென்னையிலிருந்தும், பிற மண்டலங்களிலிருந்தும் மற்றும் ஆந்திர மாநிலத்திலிருந்தும் (சுமார் 15000) பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள், சீரமைப்பு பணியை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள 12-12-2016 முதல் ஈடுபடுத்தப்பட்டனர்.*

*8) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மண்டலங்களிலிருந்தும் தளவாடப்பொருட்கள் கொண்டுவரப்பட்டன மற்றும் ஆந்திர மாநிலத்திலிருந்து 10,000 கம்பங்கள் மற்றும் 100 மின் மாற்றிகள் வரவழைக்கப்பட்டு சீரமைப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டன.*

*9) தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்ட துரித சீரமைப்பு பணிகளின் காரணமாக சென்னை மாநகரத்தின் அனைத்து பகுதிகளுக்கும் 15-12-2016-க்குள் மின் விநியோகம் முழுவதுமாக வழங்கப்பட்டது. சென்னை புறநகர் பகுதிகளில் 18-12-2016-க்குள் மின் விநியோகம் வழங்கப்பட்டது. நகராட்சிகள், நகர பஞ்சாயத்துகள், கிராம பஞ்சாயத்துகளுக்கு 20-12-2016-க்குள் மின் விநியோகம் வழங்கப்பட்டது.*

*10) மின் சீரமைப்பு பணிகளுக்காக தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்ட முயற்சிகளை பொதுமக்கள் பெரிதும் பாராட்டினர்.*

### 1.2.2 பருவ மழை காலத்திற்கு முன் ஏற்பட்ட சேதங்கள் (ஏப்ரல் மற்றும் மே 2017)

i. *2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் உண்டான பலத்த காற்று மற்றும் மழையினால் வேலூர் மண்டலத்திற்குட்பட்ட தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் வேலூரிலும், ஈரோடு மண்டலத்திற்குட்பட்ட ஈரோடு, கோபி, சேலம், நாமக்கல்லிலும், மதுரை மண்டலத்திற்குட்பட்ட திண்டுக்கல், மதுரை, தேனி,*

ராமநாதபுரம், சிவகங்கையிலும், திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டங்களிலும் மின் விநியோக கட்டமைப்பிற்கு அதிக அளவில் சேதங்கள் ஏற்பட்டது.

ii. மேற்குறிப்பிட்ட மின்பகிர்மான பணியாளர்களுடன் அருகிலுள்ள மின் பகிர்மான வட்டத்திலிருந்து 200-க்கும் மேற்பட்ட பணியாளர்கள், தளவாடப்பொருட்கள், ஜேசிபி மற்றும் லாரிகள் வரவழைக்கப்பட்டு சீரமைப்புப் பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

iii. 6000 கம்பங்கள் மற்றும் 167 மின்மாற்றிகள் சேதமடைந்தன. இதன் மதிப்பு சுமார் ரூபாய் 4.20 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

iv. மேற்குறிப்பிட்ட சேதங்களை சீரமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு மின் கட்டமைப்பு முற்றிலும் உடனடியாக சரி செய்யப்பட்டது.

## 1.3 செயல் திட்டங்கள்

இந்த அரசு வருங்கால மின் தேவையை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. இந்த வகையில் தொடர்ச்சியாக புனல் மின் திட்டங்களில் இருந்து 2500 மெகாவாட் மின்சாரமும், அனல் மின் திட்டங்களில் இருந்து 13,000 மெகாவாட் மின்சாரமும் எதிர்வரும் காலங்களில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்த கூடுதலான மின் உற்பத்தியை வெளியேற்ற தேவையான மின் கட்டமைப்பை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.3.1 சூரிய மின் சக்தி

தமிழ்நாட்டில் 31-5-2017 அன்றுள்ளபடி, 1702.40 மெகாவாட் சூரிய மின் சக்தி நிறுவுத் திறன் உள்ளது. சூரிய ஒளி மின்சாரம், பகல் பொழுதில் 800 முதல் 1200 மெகாவாட் அளவிற்கு கிடைக்கப் பெறுகிறது.

தமிழ்நாடு எப்பொழுதும் இல்லாத அளவாக 2016-17 ஆம் ஆண்டில் சுமார் 1,644 மில்லியன் யூனிட் அளவு சூரியஒளி மின்சாரத்தை கொள்முதல் செய்தது. மேலும், சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்களிலிருந்து மிக அதிக உற்பத்தியான 1498

மெகாவாட்டும் மற்றும் மிக அதிக மின்சக்தியான 9.40 மில்லியன் யூனிட்டும் 27-03-2017 அன்று பெறப்பட்டுள்ளது.

மேலும் கூடுதலாக 5000 மெகாவாட் சூரியசக்தி மின்சாரம் எதிர்வரும் ஆண்டுகளில் படிப்படியாக மின் கட்டமைப்புடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில், தலைகீழ் ஏலமுறை (Reverse bidding) வாயிலாக 1500 மெகாவாட் மின்சாரத்தை பெற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**1.3.2 காற்றாலை மின்சாரம்**

நாட்டிலேயே புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. 31-05-2017 அன்று நிலவரப்படி தமிழ்நாட்டின் காற்றாலை மின் நிறுவுத்திறன் 7854.81 மெகாவாட் ஆகும். இதன்மூலம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் காற்றாலை மின் நிறுவுத்திறனில் 28.43 விழுக்காடு பங்களிப்பு பெற்று நாட்டிலேயே மிக அதிகமான காற்றாலை மின்சக்தியுடன் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

மேலும், 2016-17 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எப்பொழுதும் இல்லாத அளவாக சுமார் 13,000 மில்லியன் யூனிட் அளவு காற்றாலை மின்சாரம் பெறப்பட்டுள்ளது. இதுதவிர, காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 05-06-2017 அன்று மிக அதிக உற்பத்தியான 4957 மெகாவாட்டும் மற்றும் மிக அதிக மின்சக்தியான 99.46 மில்லியன் யூனிட்டும் 30-05-2017 அன்று பெறப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டுகளில் 4,500 மெகாவாட் திறனுள்ள காற்றாலை மின்சாரம் படிப்படியாக கூடுதலாக நிறுவப்படவுள்ளது.

தமிழ்நாடு அதிக அளவு காற்றாலை மின் நிறுவுத்திறன் பெற்றுள்ளதால் கட்டாய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் விகிதாச்சாரத்தை (Renewable Purchase Obligation) பூர்த்தி செய்வதுடன், இதர மாநிலங்களின் கட்டாய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் விகிதாச்சாரத்தை பூர்த்தி செய்ய தேவைப்படும் இந்த புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கு வழங்கும் நிலையில் உள்ளது.

கடந்த ஆண்டு காற்று பருவத்தில் 120 மெகாவாட் காற்றாலை மின்சாரம், தினந்தோறும் ஒடிசா மாநிலத்திற்கு பசுமை மின் சக்தியாக விற்பனை செய்யப்பட்டது. அதேபோல் இந்த ஆண்டும்

*2017 ஜூன் 19]*

*சுமார் 500 மெகாவாட் அளவிற்கு பசுமை மின் சக்தியை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் விகிதாச்சாரத்தை பூர்த்தி செய்ய தேவைப்படும் இதர மாநிலங்களுக்கு தினந்தோறும் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

### 1.4 மின் உற்பத்தி

### 1.4.1 மின் தேவை மற்றும் மின்வழங்கல்

*தமிழ்நாட்டின் தற்போதைய சராசரி மின் தேவை 13750-14250 மெகாவாட்டாக உள்ளது. 2017-18 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த சராசரி மின்தேவை 15,250 மெகாவாட் வரை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மின் தேவை தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் மின் நிலையங்கள் மற்றும் மின் உற்பத்தியை தொடங்கவிருக்கும் மின் திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படும். தமிழ்நாட்டின் தற்போதைய சராசரி ஒரு நாளைய மின் பயனீட்டளவு 320 மில்லியன் யூனிட் ஆகும்.*

### 1.4.2 31-05-2017 அன்றுள்ளபடி மின் நிறுவு திறன்

| வ. எண் | உற்பத்தி வகை | நிறுவு திறன் (மெகாவாட்டில்) |
|---|---|---|
| | மரபுசார் எரி சக்தி ஆதாரங்கள் | |
| 1. | நீர் மின் நிலையங்கள் | 2307.90 |
| 2. | அனல் மின் நிலையங்கள் | 4320.00 |
| 3. | எரிவாயு மின் நிலையங்கள் | 516.08 |
| 4. | மத்திய தொகுப்பு மின் நிலையங்கள் | 6037.50 |
| 5. | மின் கொள்முதல் தனியார் நிறுவனங்கள் | 746.50 |
| | நீண்டகால மின் கொள்முதல் | 3330.00 |
| | குறுகிய கால மின் கொள்முதல் | 400.00 |
| | மொத்தம் மின் கொள்முதல் | 4476.50 |
| 6. | தன் பயன் மின் திட்டங்கள் | 1074.80* |
| | மொத்தம் மரபுசார் எரி சக்தி ஆதாரங்கள் மற்றும் மின் கொள்முதல் | 18,732.78 |


[2017 ஜூன் 19

| வ. எண் | உற்பத்தி வகை | நிறுவு திறன் (மெகா வாட்டில்) |
| --- | --- | --- |
| | மரபுசாரா எரி சக்தி ஆதாரங்கள் | |
| *1.* | காற்றாலை | *7854.81* |
| *2.* | சூரிய ஒளி | *1702.40* |
| *3.* | தாவரக்கழிவு | *230.00* |
| *4.* | இணை மின் உற்பத்தி நிலையம் | *692.40* |
| | மரபுசாரா எரி சக்தி ஆதாரங்களின் மொத்தம் | *10,479.61* |
| | அனைத்து மொத்தம் | *29,212.39* |
| | * தன்பயன் மின் நிலையங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மின்சாரம் வழங்குவதில்லை. எனினும், இவை திறந்தவெளி நுழைவு அனுமதிமூலம் தனியார் பயனாளிகளுக்கு மின்சாரம் வழங்கி வருகின்றன. | |

TRUTH ALONE TRIUMPHS


2017 ஜூன் 19]

ãWÎ Âwk -kuòrh® vç r¡Â MjhuŠfŸ



[2017 ஜூன் 19

ãWÎ Âw‹ -kuÒrhuh vç r¡Â Mjhu§fŸ



*2017 ஜூன் 19]*

**1.4.3 2011 முதல் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட கூடுதல் திறன்**

| வருடம் | திட்டத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகா வாட்) | செயல் படுத்தப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 2011-12 | | | |
| | பவானி கட்டளை தடுப்பணை புனல் மின் திட்டம் 2 | 30 | 29-11-11 |
| | பெரியார் வைகை சிறு புனல் மின் திட்டம் 2 | 2.5 | 30-1-2012 |
| | சிம்மாத்திரி நிலை-2, அலகு-1 (தமிழ்நாட்டின்பங்கு) | 99.5 | 16-09-11 |
| | பெரியார் புனல் மின் திட்டம், அலகு-1 (35 மெகாவாட்டிலிருந்து 42 மெகாவாட்) | 7 | 14-07-11 |
| 2012-13 | | | |
| | சிம்மாத்திரி நிலை-2, அலகு 2 (தமிழ்நாட்டின்பங்கு) | 99.5 | 30-09-12 |
| | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்-தேசிய அனல் மின் கழகம், வல்லூர் (கூட்டு முயற்சி) அலகு 1 (500 மெகாவாட்) | 359 | 29-11-12 |
| | பெரியார் புனல் மின் திட்டம், அலகு-2 (35 மெகாவாட்டிலிருந்து 42 மெகாவாட்) | 7 | 11-09-12 |
| | பவானி தடுப்பணை புனல் மின்திட்டம்-(2x5 மெகாவாட்) | 10 | 26-10-12 |

[2017 ஜூன் 19

| வருடம் | திட்டத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகா வாட்) | செயல் படுத்தப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 2013-14 | | | |
| | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்-தேசிய அனல் மின் கழகம், வல்லூர் (கூட்டு முயற்சி) அலகு 2 (500 மெகாவாட்) | 359 | 25-08-13 |
| | மேட்டூர் அனல் மின் திட்டம், நிலை-3 | 600 | 12-10-13 |
| | வடசென்னை அனல் மின் திட்டம், நிலை-2, அலகு-1 | 600 | 20-3-14 |
| | பெரியார் புனல் மின் திட்டம், அலகு-3 (35 மெகாவாட்டிலிருந்து 42 மெகாவாட்) | 7 | 08-01-14 |
| | பவானி கட்டளை தடுப்பணை புனல் மின் திட்டம் 3 | 30 | 16-10-13 |
| | பெரியார் - வைகை சிறு புனல் மின் திட்டம் 3 | 4 | 11-9-13 |
| 2014-15 | | | |
| | வடசென்னை அனல் மின் திட்டம், நிலை 2, அலகு 2 | 600 | 08-05-14 |
| | கூடங்குளம் அணு மின் திட்டம் அலகு 1 (1000 மெகாவாட்) (தமிழ்நாட்டின்பங்கு) | 563 | 31-12-14 |
| | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்-தேசிய அனல் மின் கழகம், வல்லூர் (கூட்டு முயற்சி) அலகு 3 (500 மெகாவாட்) | 358 | 26-02-15 |

2017 ஜூன் 19]

| வருடம் | திட்டத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகா வாட்) | செயல் படுத்தப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 2015-16 | | | |
| | நெய்வேலி திட்டம் 2 விரிவாக்கம் (2x250 மெகாவாட்) அலகு 1, அலகு 2 (தமிழ்நாட்டின்பங்கு) | 271 | அலகு 2- 22-04-15 அலகு 1- 05-7-.15 |
| | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்-நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன கூட்டு முயற்சி திட்டம் -தூத்துக்குடி அலகு 1, அலகு (2x500 மெகாவாட்) | 439 | அலகு 1- 18-06-15 அலகு 2- 29-08-15 |
| | பவானி தடுப்பணை புனல் மின் திட்டம்-1 (2x5 மெகாவாட்) | 10 | அலகு 1- 29-5-15 அலகு 2- 2-7-15 |
| | பெரியார் வைகை சிறு புனல் திட்டம்-4 (2x1.25 மெகாவாட்) | 2.5 | |
| | பெரியார் புனல் மின் திட்டம், அலகு-4 (35 மெகா வாட்டிலிருந்து 42 மெகாவாட் | 7 | |
| 2016-17 | | | |
| | ஒதுக்கப்படாத பங்கில் மாற்றம் | 36 | |
| | கூடங்குளம் அணு மின் திட்டம் அலகு 2 (1000 மெகாவாட்) (தமிழ்நாட்டின்பங்கு) | 562.5 | 31-03-2017 |


| வருடம் | திட்டத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகா வாட்) |
|---|---|---|
| | மொத்தம் (2011-12 முதல் 2016-17வரை) | 5063.5 |
| | நீண்ட கால மின் கொள்முதல் முறை (LTOA) | 3330.0 |
| | நடுத்தர கால மின் கொள்முதல் முறை (MTOA) | 400.0 |
| | புதுப்பிக்கதக்க சக்தி - சூரிய மின் சக்தி | 1702.40 |
| | அனைத்து மொத்தம் | 10495.90 |
| | | |

**2011 முதல் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட கூடுதல் திறன்**

| வ. எண் | வருடம் | நிறுவு திறன் (மெகா வாட்) |
|---|---|---|
| 1. | 2011-12 | 139.00 |
| 2. | 2012-13 | 475.50 |
| 3. | 2013-14 | 1600.00 |
| 4. | 2014-15 | 1521.00 |
| 5. | 2015-16 | 729.50 |
| 6. | 2016-17 | 598.50 |
| 7. | நீண்ட கால மின் கொள்முதல் முறை (LTOA) | 3330.00 |
| 8. | நடுத்தர கால மின் கொள்முதல் முறை (MTOA) | 400.00 |
| 9. | புதுப்பிக்கதக்க சக்தி - சூரிய மின் சக்தி | 1702.40 |
| | மொத்தம் | 10495.90 |

2017 ஜூன் 19]

2011 Kjš ä‹ f£lik¥òl‹ ïizj¦g£l TLjš Âw‹




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2017 ஜூன் 19

## 1.4.4 மின் உற்பத்தித் திட்டங்கள்

### 1.4.4.1 நடப்பில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்கள்

| வரிசை எண் | அனல் மின் நிலையத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகா வாட்டில்) | செலவீனம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1 x 660 மெகாவாட்) | 660 | 5,421 |
| 2. | எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2 x 660 மெகாவாட்) | 1320 | 9,800 |
| 3. | வட சென்னை அனல் மின் திட்டம் நிலை-III (1 x 800 மெகாவாட்) | 800 | 6,376 |
| 4. | உப்பூர் அனல் மின் திட்டம் (2 x 800 மெகாவாட்) | 1600 | 12,778 |
| 5. | உடன்குடி அனல் மின் திட்டம்-நிலை-I (2 x 660 மெகாவாட்) | 1320 | 10615 |
| 6 | குந்தா நீரேற்று மின்திட்டம் (4 x 125 மெகாவாட்) | 500 | 1831.29 |
| | மொத்தம் | 6200 | 46,821 |

### 1. எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1 x 660 மெகாவாட்)

இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு கட்டமைப்பு வட்டியுடன் ரூபாய் 5,421 கோடியாகும். பொறியியல்-கொள்முதல்-கட்டுமானம் (EPC) அடிப்படையில் பணி ஆணை வழங்கப்பட்டது. சுழலி மின்னாக்கி அடித்தளம் மற்றும் புகைபோக்கி பணிகள் முடிவு பெற்றுள்ளன. இதர சீரியல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2018-2019-ல் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*2017 ஜூன் 19*]

**2. எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2 x 660 மெகாவாட்)**

*இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 9,800 கோடியாகும். பொறியியல், கொள்முதல், கட்டுமான பணி மற்றும் கடன் நிதியாக்கம் அடிப்படையில்* (EPC cum Debt financing) *ஒப்பந்தத்திற்கான பணி ஆணை வழங்கப்பட்டது. 18-10-2016 அன்றைய உச்சநீதி மன்ற ஆணையின் அடிப்படையில், 19-10-2016 முதல் பணிகள் மீண்டும் துவக்கப்பட்டன. திட்ட சீரியல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2019-2020-ல் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**3. வடசென்னை அனல் மின் திட்டம் நிலை-III (1 x 800 மெகாவாட்)**

*இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 6,376 கோடியாகும். பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் அடிப்படையில்* (EPC) *கொதிகலன், சுழலி, மின்னாக்கி* (BTG) *பகுதி மற்றும் அதன் சார்ந்த பொதுவியல் பணிகளுக்கான பணி ஆணை வழங்கப்பட்டது. பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் அடிப்படையில்* (EPC) *மின் நிலையத்தின் இதர பாகங்களுக்கான பகுதி மற்றும் அதன் சார்ந்த சீரியல் பணிகளுக்கான பணி ஆணை வழங்கப்பட்டது. திட்ட சீரியல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2019-20 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**4. உப்பூர் அனல் மின் திட்டம் (2 x 800 மெகாவாட்)**

*இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 12,778 கோடியாகும். பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் அடிப்படையில்* (EPC) *கொதிகலன், சுழலி, மின்னாக்கி* (BTG) *பகுதி மற்றும் அதன் சார்ந்த சீரியல் பணிகளுக்கான பணி ஆணை வழங்கப்பட்டது. புவி தொழில் நுட்ப ஆய்வு* (Geo Technical) *பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் 2019-20 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**5. உடன்குடி அனல் மின் திட்டம்-நிலை-I (2 x 660 மெகாவாட்)**

*இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 10,615 கோடியாகும். இதற்கான புதிய ஒப்பந்தப்புள்ளிகள் 21-04-2015 அன்று கோரப்பட்டது. இதன்மீது தடைகோரிய மனுவின்*

[2017 ஜூன் 19

மீதான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் ஒப்பந்தப்புள்ளியை பரிசீலனை செய்ய அனுமதித்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 30-10-2015 அன்று இடைக்கால ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கண்ட உத்தரவில் உயர்நீதிமன்றத்திலிருந்து மறு உத்தரவு வரும்வரையில் ஒப்பந்தப் புள்ளிகளை இறுதி செய்யக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கின் இறுதி விசாரணை எதிர்பார்க்கப்படுகிறது. நிலுவையிலுள்ள வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்ட பின் தீர்ப்பின் அடிப்படையில் பொறியியல், கொள்முதல் கட்டுமானம் (EPC) பணி ஆணை வழங்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6. குந்தா நீரேற்று மின்திட்டம் (4 x 125 மெகாவாட்)**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 1831.29 கோடியாகும். இத்திட்டத்தை செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறப்பட்டு விட்டன. இத்திட்டத்தை மூன்று பகுதிகளாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அணுகு சுரங்கம், அணுகு சாலை, கம்பிவடம் மற்றும் காற்றோட்டச் சுரங்கம் அமைத்தல் ஆகியவற்றிற்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 1.4.4.2 புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்

| வரிசை எண் | அனல் மின் நிலையத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகா வாட்டில்) | செலவீனம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | எண்ணூர் மாற்று அனல் மின் திட்டம் (1 x 660 மெகாவாட்) | 660 | 5400 |
| 2. | உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை-II (2 x 660 மெகாவாட்) | 1320 | 8745 |
| 3. | உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை-III (2 x 660 மெகாவாட்) | 1320 | 8745 |

2017 ஜூன் 19]

| வரிசை எண் | அனல் மின் நிலையத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகா வாட்டில்) | செலவீனம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 4. | சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் (4 x 500 மெகாவாட்) | 2000 | 7000 |
| 5. | கடலாடி மிக உய்ய அனல் மின் திட்டம் (5 x 800 மெகாவாட்) | 4000 | 24000 |
| | மொத்தம் | 9,300 | 53,890 |

**1) உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை-II (2 x 660 மெகாவாட்)**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 8,745 கோடியாகும். நிலம் கையகப்படுத்தும் பணிகளும் மற்றும் திட்டம் தொடர்பான பிற பணிகளும் நடைபெற்று வருகின்றன. உடன்குடி நிலை-II மற்றும் III-கான குறிப்பு விதி முறைகளை பெற உடன்குடி நிலை-I-ன் பணி ஆணை வழங்கப்பட்ட பின்னர் அமைச்சகத்தை அணுகுமாறு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் ஆணையிட்டுள்ளது.

**2) உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை-III (2 x 660 மெகாவாட்)**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 8,745 கோடியாகும். நிலம் கையகப்படுத்தும் பணிகளும் மற்றும் திட்டம் தொடர்பான பிற பணிகளும் நடைபெற்று வருகின்றன. உடன்குடி நிலை-II மற்றும் III-கான குறிப்பு விதி முறைகளை பெற உடன்குடி நிலை-I-ன் பணி ஆணை வழங்கப்பட்ட பின்னர் அமைச்சகத்தை அணுகுமாறு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் ஆணையிட்டுள்ளது.

**3) எண்ணூர் மாற்று அனல் மின் திட்டம் (1 X 660 மெகாவாட்)**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 5,400 கோடியாகும். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட ஆய்வு அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகரை நியமிப்பதற்கான

பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பழைய எண்ணூர் அனல் மின் நிலைய அலகுகளின் சொத்து மதிப்பீட்டின் அறிக்கை தயாரிப்பதற்கு ஆலோசகரை நியமிப்பதற்கான விலைப்புள்ளிகள் ஆய்விலுள்ளன. இத்திட்டத்திற்கான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் 30-05-2017 அன்று நடைபெற்றது.

### 4) கடலாடி அனல் மின் திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் (5 x 800 மெகாவாட்)

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூபாய் 24,000 கோடியாகும். சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம்/புதுடெல்லி 30-08-2016 அன்று நடத்திய சிறப்பு மேலாண்மை குழு கூட்டத்தில் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலப்பகுதி மன்னார் வளைகுடாவிற்கு உட்பட்ட ஒதுக்கீடு மண்டலத்தில் இருப்பதால் வேறு புதிய 3 இடங்களை தேர்வு செய்ய வலியுறுத்தி உள்ளது. அதன் அடிப்படையில் மாற்று இடம் மன்னார் வளைகுடா இடைப்பகுதியிலிருந்து தொலைவில் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5) செய்யூர் மிக உய்ய அனல் மின் திட்டம் (5 x 800 மெகாவாட்)

இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டமைப்பு வட்டி உட்பட ரூபாய் 25,970 கோடியாகும். இத்திட்டம் மத்திய அரசால் தனியார் பங்கேற்புடன் மின்னாற்றல் நிதி கழகம்மூலம் செயல்படுத்தப்படவுள்ள மின் திட்டம். இத்திட்டத்தில் இருந்து தமிழ்நாட்டின் பங்காக 1600 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மத்திய அரசு ஒப்பந்தப்புள்ளியில் 100 சதவீதம் உள்நாட்டு நிலக்கரியை உபயோகிக்கும் விதத்தில் மாற்றங்களை செய்ய உள்ளது. ஒப்பந்த ஆவணங்களை மத்திய மின் அமைச்சகம் விரைவில் இணைய தளத்தில் பதிவு ஏற்றம் செய்ய உள்ளது. அதன் பிறகு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

### 6) சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் (2000 மெகாவாட்)

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூபாய் 7,000 கோடியாகும். இத்திட்டத்தின் நிலை-I (4 x 250 மெகாவாட்)-கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், புவி தொழில் நுட்ப ஆய்வு (Geo Technical) மேற்கொள்ளுதல், சுற்றுச்சூழல் அறிக்கை தயாரித்தல், சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகத்திடமிருந்து

(MoEF & CC) மற்றும் மத்திய மின்சார ஆணையத்திடமிருந்தும் தேவையான அனைத்து ஒப்புதல் பெறுதல், ஆகிய பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

ஆரம்பகட்ட பணிகளான ஆழ்துளை போடும் பணிகள், நில ஆய்வுப்பணிகள் (Seismic Refraction Survey) மற்றும் நீர்வழிப்பாதைக்கான நில அளவை பணிகள் நிறைவடைந்துள்ளன.

## 1.5 நிலக்கரி மற்றும் நிலக்கரி சுரங்கங்கள்

### 1.5.1 நிலக்கரி

அ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது, கிழக்கு பிராந்திய நிலக்கரி நிறுவனம் (ECL) மற்றும் மகாநதி நிலக்கரி நிறுவனம் (MCL) ஆகியவற்றோடு 2009, 2012 & 2013 வருடங்களில், ஆண்டொன்றுக்கு மொத்தம் 20.445 மில்லியன் டன்கள் இந்திய நிலக்கரியை அனைத்து அனல்மின் நிலையங்களுக்கும் பெறும் பொருட்டு, எரிபொருள் வழங்கு ஒப்பந்தங்கள் செய்துள்ளது.

ஆ) இந்திய நிலக்கரி நிறுவனம் மற்றும் நிலக்கரி அமைச்சகம் இறக்குமதி நிலக்கரிக்கு மாற்றாக உயர் தர இந்திய நிலக்கரியை உபயோகப்படுத்த முன்மொழிந்தது. அதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கிழக்கு பிராந்திய நிலக்கரி நிறுவனத்துடன் (ECL) 2.50 மில்லியன் டன்கள் நிலக்கரி கொள்முதல் செய்வதற்கு 31-10-2016 அன்று இணை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. மேலும், இந்திய நிலக்கரி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி இறக்குமதி நிலக்கரிக்கு மாற்றாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மத்திய நிலக்கரி நிறுவனத்துடன் (CCL) ஒரு மில்லியன் டன் நிலக்கரி கொள்முதல் செய்வதற்கு 18-11-2016 அன்றும், மேற்கு பிராந்திய நிலக்கரி நிறுவனத்துடன் (WCL) 0.50 மில்லியன் டன் நிலக்கரி கொள்முதல் செய்வதற்கு 24-05-2017 அன்றும், எரிபொருள் வழங்கும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. இந்த 1.50 மில்லியன் டன்கள் நிலக்கரியானது, மகாநதி நிலக்கரி நிறுவனத்துடன் 2009 ஆம் ஆண்டு செய்து கொண்ட எரிபொருள் வழங்கு ஒப்பந்தத்திலிருந்து மாற்றியதாகும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 23-11-2016 அன்று ஒரு மில்லியன் டன் நிலக்கரியை 23-11-2016 முதல் 31-3-2017

[2017 ஜூன் 19

வரை பெறுவதற்காக சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்துடன் (SCCL) பரஸ்பர ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி 23-11-2016 முதல் நிலக்கரி பெறப்பட்டு வருகிறது. மேலும் இந்த பரஸ்பர ஒப்பந்தம் 31-03-2017-க்கு பிறகும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## இ) நிலக்கரி பிரிவின் சேமிப்பு

மத்திய அரசால் கூடுதலாக விதிக்கப்பட்ட தூய்மை ஆற்றல் வரி மற்றும் இரயில்வே சரக்கு சுமை கட்டண ஏற்றம் ஆகியவற்றால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு கடந்த நிதியாண்டில் (2016-17) ரூபாய் 615 கோடி கூடுதல் செலவீனம் ஏற்பட்டது.

சிறந்த நிர்வாகத் திறமை, நிலக்கரி கையிருப்பு மேலாண்மை, கொள்முதல் போக்குவரத்து மற்றும் இறக்குமதி நிலக்கரியின் பயன்பாட்டை குறைத்தல் ஆகியவற்றின் மூலம், 2016-17 ஆண்டில் மின் உற்பத்தி நிலையங்கள் வரை கொண்டுவரப்பட்ட நிலக்கரியின் சராசரி செலவு முந்தைய நிதியாண்டைக்காட்டிலும் குறைக்கப்பட்டது. மேலும் நிலக்கரி இறக்குமதி இந்த ஆண்டு முதல் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இதனால் நிலக்கரிக்கான மொத்த செலவில், சுமார் ரூபாய் 400 கோடி நிகர சேமிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 1.5.2 இந்திய அரசின் மூலம் நிலக்கரி சுரங்கம் ஒதுக்கீடு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு, ஒடிசா மாநிலத்தில் உள்ள 550 மில்லியன் டன் இருப்பு திறன் கொண்ட சந்திரபில்லா நிலக்கரி சுரங்கத்தை நிலக்கரி அமைச்சகம் 24-02-2016 அன்று ஒதுக்கீடு செய்தது.

நிலக்கரி அமைச்சகத்துடன் நிலக்கரி தொகுதி மேம்பாடு மற்றும் உற்பத்தி ஒப்பந்தம் (CBDPA) 30-03-2016 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஒப்பந்தம் செய்துள்ளது. மாவட்ட ஆட்சியர், ஆங்குள் அவர்களிடம் சந்திரபில்லா நிலக்கரி தொகுதியில் நிலக்கரி எடுப்பதற்கு உரிமம் வழங்கிடுமாறு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. நிலக்கரி தொகுதி மேம்பாட்டிற்கான, சுரங்க மேம்பாட்டாளர் மற்றும் இயக்குபவர் (Mine Developer cum Operator [MDO]) நியமிக்க தேவையான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

*2017 ஜூன் 19]*

## 1.6 நீண்டகால அடிப்படையில் மின் கொள்முதல்

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 11 மின் கொள்முதல் ஒப்பந்தங்களை 2014 ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகளுக்கு 3330 மெகாவாட் மின் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது.*

*இதில் 2158 மெகாவாட் மின்சாரம் வெளி மாநிலங்களில் உள்ள மின் உற்பத்தியாளர்களிடமிருந்தும், 1172 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாட்டில் உள்ள மின் உற்பத்தியாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் வெளி மாநிலங்களில் இருந்து பெறப்பட வேண்டிய 2158 மெகாவாட்டில் தற்பொழுது 1658 மெகாவாட்டும், தமிழ்நாட்டில் உள்ள மின் உற்பத்தியாளர்களிடமிருந்து 1172 மெகாவாட்டும் பெறப்படுகிறது.*

## 1.7 இணை மின் உற்பத்தித் திட்டங்கள் (Co-generation projects)

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்துடன், 12 இணை மின் உற்பத்தித் திட்டங்களை 183 மெகாவாட் மொத்த நிறுவுதிறனுடன் ரூபாய் 1,241.15 கோடி முதலீட்டில் நிறுவி வருகிறது. செங்கல்ராயன் சர்க்கரை ஆலையில் அமைக்கப்பட்ட 18 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் உற்பத்தித் திட்டம் மற்றும் வேலூர் சர்க்கரை ஆலையில் அமைக்கப்பட்ட 15 மெகாவாட் திறன் கொண்ட இணைமின் திட்டம் முறையே 17-2-2016 அன்றும் 19-01-2017 அன்றும் இயக்கிவைக்கப்பட்டன.*

*செய்யாறு (15 மெகாவாட்), அறிஞர் அண்ணா (15 மெகாவாட்) மற்றும் பெரம்பலூரில் (18 மெகாவாட்) இணை மின் திட்டங்கள் ஜூலை 2017-ல் இயக்கத்திற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 இணை மின் திட்டங்கள் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இயக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

## 1.8 மின் தொடரமைப்பு

*புதிய மற்றும் இயங்கிக் கொண்டிருக்கும் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை திறம்பட வெளியேற்றுவதற்காக மின் தொடரமைப்பை மேம்படுத்த தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் திட்டமிட்டு வருகிறது. தற்போது உள்ள மின் உள் கட்டமைப்பு திறன், ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வரும் மின் தேவை மற்றும் கூடுதல் மின் உற்பத்தி திறனின் அளவிற்கு ஏற்றவாறு விரிவாக்கப்பட்டு வருகின்றது.*

[2017 ஜூன் 19

மாநிலத்தினுள்(Intra state) உயர் அழுத்த மின் பாதை அமைக்கும் பிரிவில், 1327 கி.மீ. சுற்று மின் பாதையை இயக்கத்திற்குக் கொண்டு வந்ததன்மூலம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் முதலிடம் வகிக்கிறது என்று மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள தாரங் செய்தி மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2875 எம்.வி.ஏ. மின் திறனை கூடுதலாக இயக்கி வைத்ததன்மூலம் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் கூடுதலாக மின்கடத்தும் திறன் பிரிவில், மூன்றாவது இடத்தில் உள்ளது.

**31-05-2017 அன்றுள்ளபடி மின் தொடரமைப்பு கழகத்தில் உள்ள 66 கிலோ வோல்ட் மற்றும் அதற்குமேல் உள்ள துணை மின் நிலையங்கள் மற்றும் மிக உயரழுத்த மின் பாதைகள்**

| வரிசை எண் | பொருள் | துணைமின் நிலையங்கள் (எண்ணிக்கை)/ நிறுவப்பட்ட மிகஉயரழுத்த மின் பாதைகள் |
|---|---|---|
| 1. | 765 கிலோ.வோல்ட் துணை மின் நிலையம் | 4*(பி.ஜி.சி.ஐ.எல் துணை மின் நிலையங்கள்) |
| 2. | 400 கிலோ.வோல்ட் துணை மின் நிலையம் | 20** |
| 3. | 230 கிலோ.வோல்ட் துணைமின் நிலையம் | 96 |
| 4. | 110 கிலோ.வோல்ட் துணை மின் நிலையம் | 839 |
| 5. | 66 கிலோ.வோல்ட் துணை மின் நிலையம் | 6 |
| | மொத்தம் | 965 |
| 6. | நிறுவப்பட்ட மிகஉயரழுத்த மின் பாதைகள் | 31,604.201 (நீளம் சுற்று கிலோ.மீட்டரில்.) |

(குறிப்பு * மூன்று எண்ணிக்கை துணை மின் நிலையங்கள் முதற்கட்டமாக 400 கி.வோ அளவில் மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளது.

** பத்து எண்ணிக்கை பி.ஜி.சி.ஐ.எல் துணை மின் நிலையங்கள்)


2017 ஜுன் 19]

**2011 முதல் நிறுவப்பட்ட துணை மின் நிலையங்கள் மற்றும் மிக உயரழுத்த மின்பாதைகள்.**

| வ. எண் | ஆண்டு | நிறுவப்பட்ட துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை | | | | நிறுவப் பட்ட மிக உயரழுத்த மின் பாதைகள் (நீளம் சுற்று கிலோ. மீட்டரில்) |
|---|---|---|---|---|---|---|
| | | 400 கி.வோ | 230 கி.வோ | 110 கி.வோ | 33 கி.வோ | |
| 1. | 2011-12 | 1 | 0 | 13 | 14 | 691.072 |
| 2. | 2012-13 | 0 | 2 | 18 | 11 | 1268.05 |
| 3. | 2013-14 | 0 | 4 | 43 | 28 | 1436.391 |
| 4. | 2014-15 | 2 | 4 | 40 | 22 | 2634.147 |
| 5. | 2015-16 | 0 | 9 | 35 | 23 | 1987.679 |
| 6. | 2016-17 | 4 | 7 | 36 | 9 | 1487.437 |
| 7. | 2017-18 | -- | 1 | 1 | -- | 168.50 |
| | மொத்தம் | 7 | 27 | 186 | 107 | 9673.276 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2011 Kjš ãWt¥g£l Jiz ä‹ ãiya§fŸ k‰W« äf cauG¤j ä‹ghijfŸ.



*2017 ஜூன் 19]*

## 1.8.1 தமிழகத்தின் முதல் டிஜிட்டல் (Digital) துணை மின் நிலையம்

*கோயம்புத்தூர் மாவட்டத்தில், செல்வபுரத்தில் 230/110 கி.வோ. டிஜிட்டல் துணை மின் நிலையம் ரூபாய் 65 கோடி செலவில் அமைக்க ஒப்பந்தப்புள்ளிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்துணை மின் நிலையத்தில் சமீபத்திய டிஜிட்டல் முறை தொழில் நுட்ப அடிப்படையில், கட்டுப்பாட்டு அறை உபகரணங்களுக்கும் துணை மின் நிலைய உபகரணங்களுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் அனுப்பப்படுவதன்மூலம் குறைந்த கால அவகாசத்தில் துணை மின் நிலையத்தில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து, விரைவில் இயக்கத்திற்கு கொண்டு வர இயலும்.*

## 1.8.2 மாநிலங்களுக்கு இடையிலான மின்தொடரமைப்பு திட்டங்கள்

*தென்மண்டல மின் கட்டமைப்பு, மற்ற மண்டல* (NEW grid-North, East and West) *மின் கட்டமைப்புடன், ரெய்ச்சூர் -சோலாப்பூர் 765 கி.வோ. இருவழி மின் பாதைமூலம் இணைக்கப்பட்டுள்ளது. இது தவிர, மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஒருமுகப்பட்ட மற்றும் தீவிர முயற்சியால் நரேந்திரா-கோலாப்பூர், ரெய்ச்சூர்-கர்னூல் மற்றும் கர்னூல்-திருவலம் இருவழி மின் பாதை நிறுவப்பட்டது. இதன் மூலமாக மற்ற மண்டலங்களிலிருந்து நீண்ட கால முறையில் கொள்முதல் ஒப்பந்தம் செய்யப்பட்ட மின்சாரத்தை பெறுவதற்கான மின் பாதையில் இருந்த இடர்பாடுகள் நீக்கப்பட்டு தமிழ்நாடு தடையின்றி மின்சாரம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.*

*மேலும், ஆங்குள்-ஸ்ரீகாகுளம்-வேமகிரி மற்றும் வார்தா-நிஜாமாபாத் 765 கி.வோ. இருவழி மின் பாதைகள் நிறுவப்பட்டதன்மூலம் மற்ற மண்டல மின் கட்டமைப்புக்கும் தென்மண்டல மின் கட்டமைப்புக்கும் இடையிலான மின்கடத்தும் திறன்* (available transfer capacity) *அதிகரித்துள்ளது.*

## 1.8.3 பணிகள் நடைபெற்று வருகின்ற மாநிலத்திற்குள்ளான மின்தொடரமைப்பு திட்டங்கள்

*(அ) 2016-2017 ஆம் ஆண்டில் காரமடை, கமுதி, கானார்பட்டி மற்றும் தருமபுரி ஆகிய நான்கு இடங்களில் 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் சிங்காபுரம், எச்சூர், கிண்ணிமங்கலம், திருச்சுழி, அம்பத்தூர் மூன்றாவது பிரதான சாலை, பொய்யூர் மற்றும் குருக்கத்தி ஆகிய ஏழு இடங்களில் 230 கி.வோ. துணை மின் நிலையங்களும் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.*

[2017 ஜூன் 19

(ஆ) இந்தியாவில் உள்ள மாநில மின் தொடரமைப்பு கழகங்களில், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்தான் முதன் முதலில் 765 கி.வோ. மின் கட்டமைப்பை அமைத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, வடசென்னை மற்றும் எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளியேற்றுவதற்காகவும் மற்றும் தமிழ்நாட்டின் தென் பகுதிகளுக்கு மின்சாரத்தை கொண்டு செல்வதற்காகவும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் தாலுகாவில் உள்ள அரியலூரில் 765/400 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரியலூரில் இருந்து பி.ஜி.சி.ஐ.எல் 765 கி.வோ. திருவலம் துணை மின் நிலையம் வரையிலான 765 கி.வோ. இருவழி மின் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அரியலூர் 765 கி.வோ. துணை மின் நிலையத்தை 31-3-2019-ல் இயக்கத்திற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், வடசென்னையில் 765/400 கி.வோ. தொகுப்பு மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளது. கோயம்புத்தூரில் 765/400 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(இ) தேர்வாய்கண்டிகையில் 400 கி.வோ. துணை மின் நிலையமும் மற்றும் வளையப்பட்டி, ஜம்புநாதபுரம், சவசபுரம், காஞ்சிபுரம், மொண்டிபட்டி, சமயநல்லூர், போரூர் மற்றும் நெய்வேலி ஆகிய இடங்களில் 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்துணை மின் நிலையங்கள் மார்ச் 2018-ல் இயக்கத்திற்கு கொண்டுவரப்படும்.

(ஈ) வெள்ளாளவிடுதி, புளியந்தோப்பு மற்றும் தரமணி ஆகிய இடங்களில் 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் உத்தனபள்ளி, திருப்பத்தூர், சங்கராபுரம், துவாக்குடி, திருவான்மியூர் மற்றும் நரிமணம் ஆகிய இடங்களில் 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இத்துணை மின் நிலையங்களை 2018-2019 ஆம் ஆண்டில் இயக்கத்திற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

*2017 ஜுன் 19]*

*(உ) இடையார்பாளையத்தில் 400 கி.வோ. துணை மின் நிலையமும் மற்றும் செல்வபுரம், பூலவாடி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**1.8.4 சூரிய மின்சக்திமூலம் பெறப்படும் மின்சாரத்தை வெளிக்கொணரல்**

*தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் உற்பத்தியாகும் சூரிய மின்சக்தியை வெளிக்கொணரும் பொருட்டு கமுதியில் 400 கி.வோ. துணை மின் நிலையமும் மற்றும் முத்துராமலிங்கபுரத்தில் 230 கி.வோ. துணை மின் நிலையமும் முறையே 08-09-2016 மற்றும் 20-02-2017 அன்று இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.*

**1.8.5 மாநிலத்திற்குள்ளான பசுமை எரிசக்தி வழித்தடங்களுக்கான மின் தொடரமைப்பு திட்டங்கள்**

*1. காற்றாலை மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளிக்கொணர தப்பக்குண்டு, அனக்கடவு மற்றும் இராசிப்பாளையம் ஆகிய இடங்களில் மூன்று புதிய 400 கி.வோ. துணை மின்நிலையங்களும் அவற்றோடு சேர்ந்த 830 சுற்று கிலோ மீட்டர் நீளத்திற்கு 400 கி.வோ. உயர் அழுத்த மின்பாதைகளும்* (EHT) *செயல்படுத்தப்பட்டு, இத்துணை மின்நிலையங்கள் தருமபுரி (பாலவாடி)யில் 400 கி.வோ. துணை மின் நிலையத்துடன் இணைக்கப்படவுள்ளன. இந்த திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மின் தொடரமைப்பு திட்டங்கள் செப்டம்பர் 2017-ல் இயக்கத்திற்கு கொண்டுவரப்படும்.*

*2. திருநெல்வேலி பகுதியில் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தை வெளிக்கொணர கானார்பட்டியில் 400 கி.வோ. துணை மின் நிலையம் ரூபாய் 248 கோடி செலவில் 09-01-2017 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்துணைமின் நிலையம் கயத்தாறு 400 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் திருநெல்வேலி (பி.ஜி.சி.எல்) 400 கி.வோ. துணை மின் நிலையத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது.*

**1.8.6 ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவன நிதியுதவி**

*ஐந்து 400 கி.வோ. துணை மின்நிலையங்கள், பன்னிரெண்டு 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் இந்த துணை*

மின்நிலையங்களுக்கான மின்பாதைகள் ஆகியவற்றை ரூபாய் 5,014 கோடி முதலீட்டில் அமைப்பதற்காக திட்டமிடப்பட்டு, ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து ரூபாய் 3,572.93 கோடி அதிகாரப்பூர்வ வளர்ச்சிக்கான நிதியுதவி (Official Development Assistance Loan) பெறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து 400 கி.வோ. துணை மின்நிலையங்களில், காரமடை துணை மின் நிலையம் இயக்கி வைக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர் மற்றும் மணலி 400 கி.வோ. துணை மின் நிலையத்தை விரைவில் இயக்கத்திற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. கிண்டி மற்றும் கொரட்டூர் 400 கி.வோ. துணை மின் நிலைய பணிகள் இந்த ஆண்டில் துவங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பன்னிரெண்டு 230 கி.வோ. துணை மின் நிலையங்களில் ஆலந்தூர், கருவலூர், இச்சூர், கிண்ணிமங்கலம், அம்பத்தூர் மூன்றாவது பிரதான சாலை, பொய்யூர், இராஜா அண்ணாமலைபுரம் ஆகிய ஏழு துணை மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. கும்பகோணம் மற்றும் சென்ட்ரல் (சி.எம்.ஆர்.எல்) 230 கி.வோ துணை மின் நிலையங்கள் டிசம்பர் 2017-ல் இயக்கத்திற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. திருப்பூர், செண்பகபுதூர் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமையகம் ஆகிய இடங்களில் 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1.8.7 KfW நிறுவன நிதியுதவி

புதுப்பிக்கத்தக்க எரிசக்திமூலம் பெறக்கூடிய அதிக அளவு மின்சாரத்தை வெளிக்கொணர்வதற்காக தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் ரூபாய் 6,000 கோடி செலவில் உயர் அழுத்த மின் தொடர் கட்டமைப்பு அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை (MNRE) மேற்கண்ட கட்டமைப்பின் ஒரு பகுதியை அமைக்க தமிழகத்திற்கு ரூபாய் 1,593 கோடி நிதி உதவி செய்வதற்கு பரிந்துரை செய்து உள்ளது. இந்திய அரசால் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவியாக ரூபாய் 637.20 கோடிக்கு (40 விழுக்காடு) தேசிய மாசற்ற எரிசக்தி நிதியின்கீழ் (NCEF) மானியமாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்திய

*2017 ஜூன் 19]*

*அரசிற்கும் ஜெர்மனி அரசின் KfW நிறுவனத்திற்கும் இடையே ரூபாய் 637.20 கோடி (40 விழுக்காடு) நிதி உதவி வழங்குவதற்காக கடன் உடன்படிக்கை 17-12-2014 அன்று கையெழுத்தாகி உள்ளது. மீதமுள்ள ரூபாய் 318.60 கோடி (20 விழுக்காடு) பங்கு மூலதனத் தொகையாக தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகத்தின்மூலம் வழங்கப்படவுள்ளது.*

*இந்த மின் தொடரமைப்பு திட்டங்கள் ஐந்து பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.*

*பகுதி 1. தென்னம்பட்டி 400 கி.வோ. துணை மின் நிலைய பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் 2017-18 ஆம் ஆண்டில் முடிவடையும்.*

*பகுதி 2. தென்னம்பட்டி முதல் கயத்தாறு வரை 48 கிலோ மீட்டர் வரையிலான 400 கி.வோ. இருவழி சுற்று மின்பாதை மற்றும் நான்கு 400 கி.வோ. களம் (Bay) கயத்தாரில் அமைப்பதற்கான பணிகள் 2017-18 ஆம் ஆண்டு துவங்கப்படும்.*

*பகுதி 3. இராசிபாளையம் மற்றும் சிங்காரப்பேட்டை (பாலவாடி) ஆகிய துணை மின் நிலையங்களை இணைக்கும் 195 கி.மீ. 400 கி.வோ. இருவழி சுற்று மின்பாதை மற்றும் பாலவாடியில் இரண்டு 400 கி.வோ. களங்கள் (Bays) அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் டிசம்பர் 2017-ல் முடிவடையும்.*

*பகுதி 4. 284.9 கிலோ மீட்டர், 230 கி.வோ. உயர் அழுத்த மின் பாதைகள் மாநிலத்தின் வெவ்வேறு மண்டலங்களில் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் டிசம்பர் 2017-ல் முடிவடையும்.*

*பகுதி 5. அனுப்பங்குளம், கடலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, திருவண்ணாமலை மற்றும் செம்பட்டி ஆகிய இயக்கத்தில் உள்ள ஆறு 230 கி.வோ துணை மின் நிலையங்களில் 230/110 கி.வோ மின் கடத்தும் திறனை அதிகபடுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் டிசம்பர் 2017-ல் முடிவடையும்.*

**பணிகள் நடைபெற்று வருகின்ற திட்டங்கள் - சுருக்கம்**

| வ. எண் | மின்அழுத்த விகிதம் | துணை மின் நிலையத்தின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு- ரூபாய் கோடியில் |
|---|---|---|---|
| 1. | 765 கி.வோ | 1 | 2131.43 |
| 2. | 400 கி.வோ | 7 | 2973.50 |
| 3. | 230 கி.வே. | 13 | 1260.74 |
| | மொத்தம் | 21 | 6365.67 |

**2017-18 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட திட்டங்கள் - சுருக்கம்**

| வ. எண் | மின்னழுத்த விகிதம் | துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு கோடிகளில் |
|---|---|---|---|
| 1. | 765 கி.வோ. | 3 | 10948.80 |
| 2. | 400 கி.வோ | 7 | 4865.71 |
| 3. | 230 கி.வோ | 16 | 1685.96 |
| 4. | 110 கி.வோ | 41 | 527.57 |
| | மொத்தம் | 67 | 18028.04 |

## 1.9 மின் பகிர்மானம்

### 1.9.1 முக்கிய அம்சங்கள்


2016-17 ஆம் ஆண்டில் 33 கி.வோ. திறன் கொண்ட 9 துணை மின் நிலையங்கள் ரூபாய் 27 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன. 9,244 கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகளும் மற்றும் 3,426 கி.மீ உயரழுத்த மின் பாதைகளும் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும், 2016-17-ல் 7.98 இலட்சம் மின் பயனீட்டாளர்களுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் மற்றும் மே 2017-ல், 2,284 மின் மாற்றிகள், 1120 கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகள் மற்றும் 534 கி.மீ உயரழுத்த மின் பாதைகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 1.25 இலட்சம் மின் நுகர்வோர்களுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாநிலத்தில் இனவாரியான மின் பயனீட்டாளர்களின் விவரம் 31–5–2017 அன்றுள்ளபடி பின்வருமாறு :**

| வ. எண் | இனம் | மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| | உயர் அழுத்த மின் பயனீட்டாளர்கள் | 0.09 |
| | தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள் | |
| 1. | வீடுகள் | 196.57 |
| 2. | வணிகம் | 33.68 |
| 3. | தொழிற்சாலைகள் | 6.64 |
| 4. | விவசாயம் | 20.74 |
| 5. | குடிசைகள் | 11.25 |
| 6. | இதர இனம் | 11.54 |
| | மொத்தம் | 280.51 |

## மாநிலத்தில் இனவாரியான மின் பயனீட்டாளர்களின் விவரம் 31–05–2017 அன்றுள்ளபடி



**2011-12 முதல் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள புதிய மின் இணைப்புகள்**

| வ. எண் | ஆண்டு | எண்ணிக்கை (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | 2011-12 | 7.81 |
| 2. | 2012-13 | 11.95 |
| 3. | 2013-14 | 10.04 |
| 4. | 2014-15 | 8.58 |
| 5. | 2015-16 | 8.23 |
| 6. | 2016-17 | 7.98 |
| 7. | 2017-18 (மே வரை) | 1.25 |
| | மொத்தம் | 55.84 |

### 1.9.2 மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்தும் பணிகள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.9.3 பழுதடைந்த மின் கம்பிகளை மாற்றும் திட்டம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 37 மாவட்டங்களில் பழுதடைந்த 2,64,315 கி.மீ. உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் கம்பிகளையும் மற்றும் 3,38,867 மின் கம்பங்களையும் புதுப்பிக்கும் பொருட்டு ரூபாய் 1054.22 கோடி மதிப்பீட்டில் படிப்படியாக மாற்ற திட்டமிட்டு இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்திற்கு ஊரக மின்மயமாக்கல் கழகம் ரூபாய் .679.37 கோடி மின் அமைப்பு மேம்பாட்டின்கீழ் நிதி உதவி அளிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தப் பணிகள் மார்ச் 2018-ல் முடிவடையும்.

[2017 ஜூன் 19

**1.9.4 உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் பாதைகளை புதை வடங்களாக மாற்றுதல்**

*புயலால் பாதிக்கப்படக்கூடிய வேளாங்கன்னி, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் உள்ள கடலோர நகரங்களில் மேலே செல்லும் உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் பாதைகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்ற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கி ரூபாய் 360 கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.*

*கடலூர் நகரத்தில் 22 கி.வோ. அல்பேட்டை, சுத்துக்குளம் & பென்டேசியா மின்பாதைகளையும் மற்றும் நாகப்பட்டினம் நகரத்தில் 11 கி.வோ. வேளாங்கன்னி நகரம் மின்பாதையையும் புதைவடமாக மாற்ற இணையதளம்மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளன.*

*மேலும் கடலூர் நகரத்தில் 22 கி.வோ. கடலூர் புது நகரம், செல்லங்குப்பம் & மஞ்சக்குப்ப (ஒரு பகுதி) மின்பாதைகளையும் மற்றும் நாகப்பட்டினம் நகரத்தில் 11 கி.வோ. நாகூர், தோணிதுறை & வெளிப்பாளையம் நீரேற்று நிலைய மின்பாதைகளையும் புதைவடமாக மாற்ற உலக வங்கி அனுமதி பெற்றவுடன் இணையதளம்மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது.*

**சென்னை பெருநகரத்தை சூறாவளி பாதிப்புகளிலிருந்து நெகிழ்திறனாக்கலுக்கான (Cyclone resilient) திட்டங்கள்**

*சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மற்றும் சென்னை விரிவாக்க பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலை கம்பிகளை புதைவடங்களாக மாற்ற மத்திய மின்விசை நிதி நிறுவனத்திடமிருந்து ரூபாய் 2,567 கோடி கடனாக பெற்று வேலைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குத் தேவையான தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்திட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.*

*கலிவந்தப்பட்டு 400 கி.வோ. துணை மின் நிலையம் - தரமணி 230 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் ஸ்ரீபெரும்புத்தூர் 400 கி.வோ. துணை மின் நிலையம் - தரமணி 230 கி.வோ. துணை மின் நிலையம் இடையில் ரூ.558 கோடி மதிப்பீட்டில் 230 கி.வோ. இணைப்பு புதைவடப்பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*2017 ஜூன் 19]*

## 1.9.5 திருத்தியமைக்கப்பட்ட விரைவுப்படுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டம்மூலம் மேம்படுத்தும் பணிகள்

*இத்திட்டத்தின் நோக்கம் 30,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் உள்ள மின் நுகர்வோர்களுக்கு தரமான மற்றும் தடங்கலற்ற மின்சாரத்தை வழங்குதலும் ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீடுகளை* (AT&C losses) *15 சதவீதத்திற்குக்கீழ் கொண்டு வருவதுமாகும்.*

### பகுதி-"அ" (தகவல் தொழில்நுட்ப செயலாக்கப் பணிகள்)

*மொத்தம் 110 நகரங்களில், 102 நகரங்களில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 நகரங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 417 கோடி. ஏழு நகரங்களில் (சென்னை, மதுரை, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, திருச்சி மற்றும் கோவை) ஸ்கேடா* (SCADA-Supervisory Control and Data Acquisition)/ *டி.எம். எஸ்.* (DMS – Distribution Management System)*ரூபாய் 182.17 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.*

### பகுதி 'ஆ' மின் பகிர்மான மேம்பாட்டு பணிகள்

*100 நகரங்களில் ரூபாய் 3,595.34 கோடி மதிப்பீட்டில் மின் பகிர்மான மேம்பாட்டு திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 82 நகரங்களில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 18 நகரங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

## 1.9.6 ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் (IPDS)

*ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டமானது மத்திய மின் துறை அமைச்சகத்தின் நிதி உதவியுடன் அனைத்து மாநிலங்களில் உள்ள, நகர்ப்புற பகுதிகளில் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் செயல்படுத்தப்படவுள்ளது:*

1. *அனைவருக்கும் 24x7 அடிப்படையில் தடையற்ற மின்சாரம் வழங்கல்*
2. *ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீடுகளை குறைத்தல்* (Aggregate Technical & Commerial (T &C) losses)
3. *அனைத்து நகர்ப்புற வீடுகளை மின்மயமாக்கல்*

இது தொடர்பாக ரூபாய் 1561.31 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை 31 மாவட்டங்களுக்கு உட்பட்ட 522 நகரங்களை உள்ளடக்கிய 37 மின் பகிர்மான வட்டங்களுக்கும் மத்திய மின் துறையின் ஒருங்கிணைக்கப்பட்ட மின் மேம்பாட்டுத் திட்ட கண்காணிப்பு குழுவினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் கீழ்க்கண்டவாறு நிதி உதவிமூலம் செயல்படுத்தப்படும்.

| வ. எண் | வகை | நிதி ஆதாரங்கள் (மொத்த திட்ட மதிப்பீட்டில் விழுக்காடு) |
|---|---|---|
| 1. | மத்திய அரசின் உதவித்தொகை | 60 விழுக்காடு |
| 2. | நிதி நிறுவனங்களின் கடன் வாயிலாக | 30 விழுக்காடு (இதில் 50% மத்தியஅரசின் கூடுதல் உதவித் தொகையாக, நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவோர்களுக்கு வழங்கப்படும்) |
| 3. | சொந்த நிதி ஆதாரங்கள் | 10 விழுக்காடு |

இத்திட்டத்தினை செயல்படுத்திட வேண்டி மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகியோரிடையே முத்தரப்பு ஒப்பந்தம் 19-07-2016 அன்று கையெழுத்தானது.

இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு உதவ திட்ட மேலாண்மை முகமையாக (Project Management Agency) M/s. வாப்காஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 6-9-2018-க்குள் முடிவடையும். இப்பணிகளுக்குத் தேவையான தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்திட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

2017 ஜூன் 19]

## 1.9.7 தீனதயாள் உபாத்யாய கிராம மின்னொளி திட்டம் (Deendayal Upadhayaya Gram Jyoti Yojana)

இந்திய அரசாங்கம் தீனதயாள் உபாத்யாய கிராம மின்னொளி திட்டம் என்ற திட்டத்தின்மூலம் கிராமிய பகுதிகளில் கீழ்க்கண்டவற்றை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளது.

அ. உபயோகத்திலிருக்கும் மின்னூட்டிகளை விவசாய மற்றும் விவசாயம் அல்லாத மின்னூட்டிகளாக பிரித்தல்

ஆ. மின் உபதொடரமைப்பு மற்றும் மின்பகிர்மானம் தொடர்பான மேம்பாட்டு மற்றும் புனரமைப்பு

இ. ஊரக மின்மயமாக்குதல்

மத்திய மின் துறை அமைச்சகம் இத்திட்டத்திற்கு ரூ.924.12 கோடிக்கு (திட்ட மேலாண்மை முகமைக்கான தொகையும் சேர்த்து) அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்கான முத்தரப்பு ஒப்பந்தம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசு மற்றும் ஊரக மின்மயமாக்கல் கழகம் இவற்றின் இடையே 29.07.2016 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு உதவ திட்ட மேலாண்மை முகமையாக M/s. வாப்காஸ் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குத் தேவையான தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்திட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

## 1.9.8 மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மான இழப்பீடுகள் (T&D losses)

2010-11 ஆம் ஆண்டின் மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மான இழப்பீடுகள் (T&D losses) இழப்பீடுகள் கீழ்க்கண்டவாறு இருந்தன.

- AT & C losses (மின் விநியோக) இழப்பீடு -20.24%
- மின் தொடரமைப்பின் இழப்பீடு - 4.71%
- மொத்த (T&D) இழப்பீடு - 24.95%

[2017 ஜூன் 19

தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்ட பல்வேறு மின் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் விளைவாக 2015-2016 ஆம் ஆண்டு இழப்பீடுகள் கீழ்க்கண்டவாறு குறைந்துள்ளன.

- AT&C losses (மின் விநியோக) இழப்பீடு-14.58%
- மின் தொடரமைப்பின் இழப்பீடு-4.11%
- மொத்த (T &D) இழப்பீடு-18.69%

கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் மூலமாக 2018-19 ஆம் ஆண்டு இழப்பீடுகளை கீழ்க்காணுமாறு குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- AT & C losse (மின் விநியோக) இழப்பீடு-13.50%
- மின் தொடரமைப்பின் இழப்பீடு-3.94%
- மொத்த (T &D) இழப்பீடு-17.43%

### 1.9.9 எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகள்

### 1.9.9.1 மின் திருட்டு தடுப்பு

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்ட 43 குழுக்கள், 17 அமலாக்கக் குழுக்கள், ஒரு புலனாய்வுக் குழு மற்றும் ஒரு பறக்கும் படை அமைத்து மின்பகிர்மான வட்டங்களில் மின் இணைப்புகளை ஆய்வு செய்து மின் திருட்டுக்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் விவரம் பின்வருமாறு.

| வ எண் | பொருள் | 2015-16 | | 2016-17 | |
|---|---|---|---|---|---|
| | | மின் திருட்டு எண்ணிக்கை | அபராத தொகை கோடியில் | மின் திருட்டு எண்ணிக்கை | அபராத தொகை கோடியில் |
| 1. | முன்னாள் இராணுவ வீரர்கள் | 11,652 | 18.53 | 9,542 | 17.61 |
| 2. | அமலாக்கக் குழுக்கள் | 3600 | 29.27 | 3,744 | 28.39 |
| 3. | புலனாய்வுக் குழுக்கள் | 203 | 1.99 | 256 | 3.69 |

*2017 ஜூன் 19]*

### 1.9.9.2 மின் சேமிப்பு வழிமுறைகள் (விழிப்புணர்வு ஏற்படுத்துதல்)

*மின் சிக்கன நாள் மற்றும் மின் சிக்கன வார விழாவானது மாநிலம் முழுவதும் ஆண்டுதோறும் டிசம்பர் 14 முதல் 20 வரை கொண்டாடப்பட்டு வருகிறது. நிரந்தர விழிப்புணர்வு பிரச்சாரமாக, மின்சிக்கனம் குறித்த "மின்சாரத்தை சேமிப்போம்" என்ற வாசகம் சுமார் 2.6 கோடி மின் நுகர்வோர்களுக்கு மின்நுகர்வுக்கான கட்டணத்தை அறிவிக்கும் எச்சரிக்கை குறுஞ்செய்தியுடன் சேர்த்து குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது.*

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் பயிற்சிப் பிரிவு பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறை ஆகிய நிகழ்ச்சிகளின் வாயிலாக மின் சேமிப்பின் முக்கியத்துவம், மின்திறன்மிக்க விளக்குகள் மற்றும் நட்சத்திர குறியீடு பெற்ற மின் சாதனங்களின் பயன்பாடு பற்றி விளக்கப்படுகிறது.*

*மின் பகிர்மான அலுவலர்கள்மூலம், பள்ளி மாணவர்களிடையே மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் திட்டமானது அக்டோபர் 2014 முதல் துவங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 2017 வரை, சுமார் 10.25 இலட்சம் பள்ளி மாணவர்களிடையே மின் சிக்கனம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மின் சேமிப்பு குறித்த சமீபத்திய தொழில்நுட்ப அறிவு சார்ந்த விவரங்களை பரப்புவதற்காக கருத்தரங்கு, பேச்சு மற்றும் விரிவுரைகளை மத்திய அரசு, பொது மற்றும் தனியார் துறை, பன்னாட்டு நிறுவனங்கள், நுண்ணிய/ சிறிய / நடுத்தர நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் நடத்தி வருகிறது.*

### 1.9.9.3 விலை குறைந்த ஒளி உமிழ்வு இருமுனையம் (LED) மின்னொளி திட்டம் (UJALA Scheme)

*தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது 9 வாட் எல்.இ.டி. பல்புகள், 20 வாட் எல்.இ.டி. டியூப்லைட்டுகள் மற்றும் 50 வாட் ஐந்து நட்சத்திர குறியீட்டுடன்கூடிய ஆற்றல் மிக்க மின் விசிறிகள் ஆகியவற்றை குறைந்த விலையில் விரும்பும் வீட்டு மின் நுகர்வோருக்கு மின் கட்டண வசூல் மையங்களில் அமைக்கப்பட்ட தனிப்பட்ட வெளிப்புற கடைகள் (Kiosks) மூலம் விற்பதற்கு எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்திற்கு (EESL) அனுமதி வழங்கியுள்ளது.*

[2017 ஜூன் 19

முதற்கட்டமாக 22-3-2017 அன்று சென்னை மண்டலத்தில் விநியோக முகவர்கள்மூலம் எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது. இந்த விற்பனை, சென்னையில் 67 மின் கட்டண வசூல் மையங்களில் நடைபெற்று வருகிறது. இன்று வரை, 1.36 இலட்சம் எல்.இ.டி. பல்புகளும், 31,637 எல்.இ.டி. டியூப்லைட்டுகளும் மற்றும் 8,565 ஐந்து நட்சத்திர குறியீட்டுடன் கூடிய ஆற்றல்மிக்க மின் விசிறிகளும் விற்கப்பட்டுள்ளன.

## 1.9.10 மின் நுகர்வோருக்கான இணக்கமான நடவடிக்கைகள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நுகர்வோர்களுக்கான சேவையை மேம்படுத்த பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. மின் கட்டணம் செலுத்தும் வங்கிகள், தபால் நிலையங்கள், கைபேசி வங்கியியல் சேவைகள் மற்றும் அரசு இ-சேவை மையங்கள் மூலமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள மின் நுகர்வோர்கள்/ புதிய மின் நுகர்வோர்கள் உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின்வசதி பெறுவதற்கான விண்ணப்பத்தை இணையதளம்மூலம் பதிவு செய்யும் வசதி மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 05-08-2016 அன்று முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் நலன் கருதி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், தாழ்வழுத்த வீடு மற்றும் வணிக உபயோகத்திற்கான ஒருநாள் மின் இணைப்பு திட்டத்தை 1-7-2017 முதல் அமல்படுத்த திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 12-06-2017 அன்று துவக்கி வைத்துள்ளார்.

இத்திட்டத்தில், மின் இணைப்பு கோரும் வீட்டுக் கட்டடங்கள் மற்றும் வணிக கட்டடங்கள் (சிறப்பு மற்றும் அடுக்குமாடி கட்டடங்கள் தவிர்த்து) மின்வாரியத்தின், மின்கம்பம் அல்லது மின்பகிர்மான பெட்டியிலிருந்து 100 அடிக்குள் இருந்தால், விண்ணப்பம் அளித்த அதே நாளில் மின் இணைப்பு கொடுக்கப்படும். மின் இணைப்பு கோரும் வீடு மற்றும் வணிக இடமானது, புதைவடம் இருக்கும் பகுதியில் அமைந்திருந்தால், விண்ணப்பம் அளித்த 48 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

*2017 ஜூன் 19]*

### 1.9.11 மின்சார நண்பன்

*மின்சார நண்பன் என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், மத்திய அரசின் மின் துறை அமைச்சகத்துடன் இணைந்து துவக்கியுள்ளது. மின்நுகர்வோரின் உற்ற நண்பனாக செயல்படகூடிய இத்திட்டத்தினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 12-06-2017 அன்று துவக்கி வைத்துள்ளார். இத்திட்டத்தின்மூலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மின் நுகர்வோருக்கு அவர்கள் பகுதியில் ஏற்பட உள்ள/ஏற்பட்டுள்ள மின் பராமரிப்பு பணிகள் குறித்த தகவல் குறுஞ்செய்திமூலம் தெரிவிக்க இயலும்.*

*இதுவரை, தமிழகத்தை சேர்ந்த ஒரு கோடியே அறுபது இலட்ச மின்நுகர்வோரின் தகவல்கள் இதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. ஊரக மின்மயமாக்கல் கழகத்தின் கணினி சேவையகத்தின்மூலம் திட்டமிட்ட மற்றும் மின்னூட்டி அளவிலான திட்டமிடப்படாத மின் தடை குறித்த தகவல் சம்பந்தப்பட்ட பகுதியில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மின்நுகர்வோரின் கைபேசிக்கு குறுஞ்செய்திமூலம் அனுப்பப்படும்.*

*ஊர்ஜா மித்ரா இணையதளத்தில் அதிகமான நுகர்வோரின் தகவல்களை பதிவேற்றம் செய்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தனித்தன்மை பெற்றுள்ளது.*

### 1.9.12 கணினி மின் தடை நீக்கும் மையங்கள்

*கணினி மின் தடை நீக்கும் மையங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, ஈரோடு, திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம், வேலூர், காஞ்சிபுரம், கரூர் மற்றும் திருப்பூரில் இயங்கி வருகின்றன. மின் பயனீட்டாளர்கள் 1912 என்ற எண்ணை தொடர்பு கொண்டு தங்களின் மின்தடை புகார்களைப் பதிவு செய்யலாம். மேலும் இந்த சேவை தமிழகம் முழுவதும் டிசம்பர் 2017-க்குள் விரிவுபடுத்தப்படும்.*

*மேலும், 24 மணி நேர மின் நுகர்வோர் குறைத்தீர்க்கும் மையம் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சரின் முகாம் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. மக்கள் இந்த மையத்தை தொடர்பு கொள்ள 044-24959525 என்ற தொலைபேசி எண்ணை உபயோகிக்கலாம்.*

[2017 ஜூன் 19

## 1.10 நேரடி பணி நியமனம்

*மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவையில் 1800 தொழிற்நுட்ப பதவிகள் மற்றும் 750 தொழிற்நுட்பமில்லாத பதவிகளுக்கு நேரடி பணி நியமனம் செய்ய அறிவித்ததன்படி தகுதியானவர்கள் வெளிப்படையான (Transparent) முறையில் தேர்வு செய்யப்பட்டனர். அதில், 375 நபர்களுக்கு உதவி பொறியாளர் பதவிக்கான பணி நியமன ஆணை மற்றும் 200 தட்டச்சர், 100 சோதகர் (வேதியியல்), 50 உதவி வரைவாளர், 25 சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் 25 இளநிலை தணிக்கையாளர் ஆகிய பதவிகளுக்கான நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணிநியமன ஆணையும் வழங்கப்பட்டது.*

*மேலும், மீதமுள்ள 1775 பதவிகளான தொழில்நுட்ப உதவியாளர்/ மின்னியல், தொழில்நுட்ப உதவியாளர்/ இயந்திரவியல், கள உதவியாளர், இளநிலை உதவியாளர்/ நிர்வாகம் மற்றும் இளநிலை உதவியாளர்/ கணக்கு ஆகிய பணிகளுக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.*


## 1.11 நிதி

### 1.11.1 நிதி செயல்திறன்

*(அ) தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட வருவாய் பெருக்கம் மற்றும் செலவு குறைப்பு நடவடிக்கைகள்மூலம் 2013-14 ஆம் ஆண்டில் இருந்த இழப்பு ரூபாய் 13,985 கோடியிலிருந்து 2016-17 ஆம் ஆண்டில் ரூபாய் 3,783 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. பதினைந்து ஆண்டுகால நீண்ட இடைவெளிக்கு பிறகு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இந்த ஆண்டு (2017-18) இழப்பே இல்லாத நிலையை எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.*

*(ஆ) இதன் காரணமாக, 2010-11 ஆம் ஆண்டில் சராசரி மின் விற்பனை விலைக்கும் மற்றும் சராசரி மின் வழங்கல் விலைக்கும் இடையே ரூபாய் 2.16 ஆக இருந்த இடைவெளி, 2016-17 ஆம் ஆண்டில் ரூபாய் 0.44 (44 பைசா) ஆக குறைக்கப்பட்டுள்ளது.*

ruhrç ä‹ é‰gid éiy¡F« k‰W« ruhrç
ä‹ tH§fš éiy¡F« Ïilnaahd Ïilbtë
(%ghŒ ôåƒ x‹¿%oF)



[*2017 ஜூன் 19*

*(இ)* தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதி நிலைமையை மேம்படுத்தும் பொருட்டு தமிழக அரசு பங்கு மூலதனம், மின்கட்டண மானியம், நிதி சீரமைப்பு திட்டத்தின்கீழ் உள்ள மானியம், கடனுதவி போன்ற பல்வேறு வகைகளில் தொடர்ந்து நிதியுதவி அளித்து வருகிறது.

*(ஈ)* சென்ற நிதியாண்டு *2016-17* ஆம் ஆண்டில் தமிழக அரசு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூபாய் *13,856* கோடியை பல்வேறு நிதி உதவிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. மொத்த ஒதுக்கீட்டு தொகையிலிருந்து, தமிழக அரசு மின் கட்டண மானியமாக ரூபாய் *8,132.47* கோடி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கியுள்ளது. இதர நிதி உதவிகளாக பங்கு மூலதனம், நிதி சீரமைப்புத் திட்டத்தின்படி கடன்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல், அதன் வட்டியை செலுத்துதல், மின் கடத்தல் தொடர்பான JICA கடன்கள், போன்ற வகைகளில் ரூபாய் *7,258.02* கோடியை தமிழக அரசு வழங்கியுள்ளது.

*(உ)* மேற்கண்ட நிதி உதவிகள் தவிர, வார்தா புயல் நிவாரண நிதியாக ரூ.*350* கோடியையும், ரூ.*400* கோடிக்கான வழிவகை கடன்கள் மூலமாக வார்தா புயல் சேதம் தொடர்பான செலவீனங்களை ஈடுசெய்துகொள்ள தமிழக அரசு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியுள்ளது.

| வ. எண் | நிதி ஆண்டுகள் | நிதி உதவிகள் | |
|---|---|---|---|
| | | மின்கட்டண மானியம் | மானியம் அல்லாதது |
| *1.* | *2006–2007* | *1330.10* | *175.00* |
| *2.* | *2007–2008* | *1457.02* | *490.00* |
| *3..* | *2008–2009* | *1831.61* | *1170.50* |
| *4* | *2009–2010* | *1672.17* | *100.00* |
| *5* | *2010–2011* | *1652.58* | *1335.13* |
| | மொத்தம் | *7943.48* | *3270.63* |
| *6.* | *2011–2012* | *2071.41* | *5841.94* |

2017 ஜூன் 19]

| வ. எண் | நிதி ஆண்டுகள் | நிதி உதவிகள் | |
|---|---|---|---|
| | | மின்கட்டண மானியம் | மானியம் அல்லாதது |
| 7. | 2012–2013 | 4457.23 | 4784.77 |
| 8. | 2013–2014 | 4985.09 | 3394.22 |
| 9. | 2014–2015 | 6953.00 | 6886.50 |
| 10. | 2015–2016 | 6695.10 | 5695.62 |
| | மொத்தம் | 25161.83 | 26603.05 |
| 11. | 2016-2017 | 8132.48 | 8008.02 |

(ஊ) உதய் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ரூபாய் 22,815 கோடி கடனை ஏற்றுக்கொள்ள தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன் மூலம் மின்வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் 2,882 கோடி வட்டி சேமிப்பும் மற்றும் கடன் திருப்பி செலுத்துதலை தவிர்ப்பதன்மூலம் ரூபாய் 2,282 கோடி பணப்புழக்கத்தில் சேமிப்பும் ஏற்படும்.

உதய் திட்டத்தின்கீழ் மின்வாரியம் கடன் பத்திரங்கள்மூலம் நிதி திரட்டி திருப்பி செலுத்துவதற்கு ஏதுவாக, தமிழக அரசு ரூபாய் 7605 கோடிக்கான காப்புறுதியை அரசு ஆணை வாயிலாக வழங்கியுள்ளது. இதன்மூலம் மின் வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் 200 கோடி வட்டி சேமிப்பு ஏற்படும்.

உதய் திட்டம் தவிர ரூபாய் 4523.19 கோடிக்கான பங்கு மூலதனத்தை வழங்க தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது தமிழக அரசுக்கு திருப்பி கொடுக்கப்பட வேண்டிய கடன், மின்சார வரி மற்றும் அதற்குண்டான வட்டித்தொகைகளை மாற்றி தரப்பட்டதன்மூலம் அளித்துள்ளது.

(எ) தமிழக அரசு 2017-18 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு கீழ்க்கண்ட நிதி உதவிகளை ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ. எண் | நிதி உதவி | நிதி நிலை அறிக்கை 2017-18 (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | மின் கட்டண மானியம் | 8538.15 |
| 2. | பங்கு மூலதன உதவித் தொகை | 2080.00 |
| 3. | மின் தொடரமைப்புமேம்பாட்டிற்கான கடன்கள் மற்றும் உதவித்தொகை | 974.20 |
| 4. | கடலோர பேரழிவு ஆபத்து குறைப்பு திட்டத்தின் கீழான நெகிழ்திறன் சூறாவளி மின் வலையமைப்பு மானியங்கள் (CDRRP) | 195.00 |
| 5. | புனல் மின் செயல் இழப்பிற்கான மானியம் | 125.00 |
| 6. | உதய் திட்டத்தின்கீழ் மின்வாரியத்திற்கு வழங்கிய கடனை நிதி உதவியாக மாற்றுதல் | 4563.00 |
| 7. | தமிழக அரசின் வழிவகை கடன்கள் | 500.00 |
| 8. | தமிழ்நாடு மின் மேம்பாட்டு முகமை மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தொடர்பான செலவிற்கான நிதி ஒதுக்கீடு | 22.65 |
| | மொத்தம் | 16998.00 |

(ஏ) மத்திய அரசின் மின் அமைச்சகம் வெளியிட்டுள்ள மாநில மின்பகிர்மான நிறுவனங்களின் வருடாந்திர ஒருங்கிணைந்த தரவரிசை பட்டியலில் 2014-15 ஆம் ஆண்டில் ‘C+’ தரவரிசையிலிருந்த தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 2015-16 ஆம் ஆண்டில் ‘B’ தரவரிசைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் ‘A’ தரவரிசை பெறுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

(ஐ) அடுத்த ஐந்து முதல் எட்டு ஆண்டுகளில் மேற்கொள்ள உள்ள மூலதன திட்டங்களுக்காக, மின் நிலையங்களிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்றும் மின்தொடர் அமைப்புகள் அமைத்தல், உபமின் தொடரமைப்பு (Sub-transmission) மற்றும் மின்பகிர்மான கட்டமைப்புகளை மேம்படுத்துதல், இதர பிற பணிகளுக்கு தேவையான சுமார் ரூ.95,000 கோடி நிதி உதவிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பிரதான மத்திய நிதி நிறுவனங்களான ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) மற்றும் மின்விசை நிதி நிறுவனம் (PFC) ஆகியவற்றுடன் மேற்கொண்டுள்ளது.

## II. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை 1985 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை கண்டறிந்து அதனை மதிப்பீடு செய்தல் மற்றும் பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை ஊக்குவித்தல், ஒட்டு மொத்த எரிசக்தி பயன்பாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கை அதிகரித்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மேம்பாட்டிற்கு தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் இதர உதவிகளை வழங்குவதை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு மாநிலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மேம்பாட்டை ஊக்குவிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செயல்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் நிதி உதவியை பெற்றுதருவதற்கும், புதுப்பிக்கதக்க எரிசக்தி தொடர்பான கொள்கையை வகுப்பதற்கும் வழிவகை செய்கிறது.

2.1 2016-17 ஆம் ஆண்டு தமிழகத்தில் புதுப்பிக்கத்தக்க சக்திக்கு முக்கியமான ஆண்டாகும். இந்த ஆண்டில் 802.62 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் திறன் கூட்டப்பட்டுள்ளது. மேலும் 63,466 பசுமை வீடுகள் சூரிய ஒளி சக்தி மூலம் எரியூட்டப்பட்டுள்ளது.

2.2 இந்தியாவில், தமிழகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் மறுப்பிற்கிடமற்ற முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது, 31-05-2017 வரை புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மொத்த நிறுவுதிறன் 10479.61 மெகாவாட் ஆகும்.

| வ. எண் | புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வகை | நிறுவுதிறன் (மெகாவாட்) |
|---|---|---|
| 1. | காற்று சக்தி | 7854.800 |
| 2. | கரும்பு சக்கை இணை மின்சாரம் | 692.40 |
| 3. | தாவர எரிசக்தி | 230.000 |
| 4. | சூரியசக்தி | 1702.40 |
| | மொத்தம் | 10479.61 |

*2.3 சூரிய எரிசக்தி கொள்கை 2012 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையின் நோக்கமானது, சூரிய சக்தியின் மேம்பாடு மற்றும் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை பொது மக்கள் மற்றும் பங்குதாரர்களிடையே ஏற்படுத்தி அவர்களை சூரிய சக்தியின் முன்னேற்றம் மற்றும் பயன்பாட்டில் முனைப்புடன் பங்கேற்கச் செய்து, இதனை மழைநீர் சேகரிப்பு திட்டப் பயன்பாட்டைப் போல் ஆக்குவதாகும்.*

*தமிழ்நாடு சூரிய எரிசக்தி கொள்கை 2012 வெளியிட்ட பின்பு, சூரியசக்தித் துறையில் பின்வரும் தனித்தன்மை வாய்ந்த சூரிய சக்தித் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.*

### 2.3.1 சூரிய ஒளியுடன்கூடிய முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்

*தமிழக அரசு நாட்டிலேயே தனித்தன்மை வாய்ந்த மற்றும் மிகப்பெரிய சூரிய மேற்கூரைத் திட்டத்தின்மூலம் கிராமப்புறங்களில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் பயன்பெறும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் 60,000 வீடுகள் வீதம் 3 இலட்சம் பசுமை வீடுகளில் சூரிய சக்தியால் இயங்கும் விளக்குகளை 2011-12-ல் இருந்து 2015-16 வரையிலான 5 வருட கால கட்டத்திற்குள் நிறுவும் பணியை செயல்படுத்தி வருகிறது. சூரிய சக்தியால் இயங்கும் வீட்டு விளக்குகள், 2,36,207 வீடுகளில் இதுவரை இயக்கிவைக்கப்பட்டுள்ளது. பயனாளிகளிடமிருந்து பெறப்படும் குறைகளைப் பதிவு செய்வதற்கும், அவைகளைக் களைவதற்கும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையில் ஒரு அழைப்பு மையம் இயங்கி வருகிறது. மேலும் கைத்தறி மற்றும் நெசவுத் துறை கேட்டுக்கொண்டதற்கிணங்க 9606 நெசவாளர்கள் குடியிருப்புகள் சூரியசக்தி விளக்குகளால் மின்னூட்டப்பெற்றுள்ளன.*

2017 ஜூன் 19]

### 2.3.2 தெரு விளக்குகளை சூரிய சக்திமூலம் ஒளிர்விக்கும் திட்டம்

தமிழக அரசு 2011-12 முதல் 2015-16 வரையிலான 5 ஆண்டுகளில் 1 இலட்சம் தெரு விளக்குகளில் உள்ள விளக்குகளை, மின் சிக்கன (LED) விளக்குகளாக மாற்றி (இரவு 10 மணியிலிருந்து காலை 5 மணி வரை தானாகவே மங்கலாகும் வழிவகையுடன்கூடிய) அவற்றை சூரிய சக்திமூலம் மின்னூட்டும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமும், நாட்டிலேயே முதலாவதாக செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்தெருவிளக்குகள் மின்கட்டமைப்புடன் இணைக்கக்கூடிய தொகுப்பாக மையப்படுத்தப்பட்ட சூரிய மின் நிலையங்கள்மூலம் மின்னூட்டப்பட்டு தொலைதூர கண்காணிப்பு கருவி அமைப்புகள்மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 39235 தெரு விளக்குகள் இதுவரை சூரிய சக்தியால் மின்னூட்டப்பட்டுள்ளன.

### 2.3.3 முதலமைச்சரின் சூரிய மேற்கூரை ஊக்கத்தொகை திட்டம்

1 கி.வாட் திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் கூடிய மின்கலன்கள் அற்ற சூரிய மேற்கூரை அமைப்புகளை 10,000 வீட்டு உபயோகிப்பாளர்கள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் மானியத்துடன் மூலதன ஊக்கத்தொகையாக ஒரு கி.வாட்டிற்கு ரூ.20,000-ஐ மாநில அரசு ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது. உற்பத்தி செய்யப்படும் சூரிய சக்தியை வீட்டு உபயோகத்திற்கோ அல்லது மின்கட்டமைப்பிற்கோ நிகர அளவி ஏற்பாட்டின்மூலம் செலுத்த முடியும்.

தனிப்பட்ட/அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு நிறுவும் திறன் ஒரு கிலோ வாட் ஆகும். அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு 5, 10 கிலோ வாட், மற்றும் அதன் பன்மடங்கு திறன் கொண்ட சூரிய அமைப்புகள் நிறுவ கூட்டாக விண்ணப்பிக்கலாம். 3382 சூரிய மேற்கூரை அமைப்புகள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன.

### 2.3.4 அரசு கட்டடங்களில் சூரிய மேற்கூரை அமைப்புகளை ஊக்குவித்தல்

அரசு கட்டடங்களில் சூரிய மேற்கூரை அமைப்புகளை நிறுவுவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்யும் செயல் முறைகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை வழங்கி வருகிறது. அரசு துறை

சாதனையின் அடிப்படையிலான ஊக்கத்தொகையை புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்திடமிருந்து பெற்று கொள்ளலாம்

| வ. எண் | முடித்த செயல் vs நிர்ணயிக்கப்பட்ட இலக்கு | கிடைக்கக் பெறும் ஊக்கத்தொகை |
|---|---|---|
| 1. | ஒப்புதல் அளிக்கப்பட்ட காலத்திற்குள், இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 80 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் | கிலோ. வாட் ஒன்றிற்கு ரூ.16250/- |
| 2. | ஒப்புதல் அளிக்கப்பட்ட காலத்திற்குள், 80 விழுக்காட்டிற்குக்கீழ் அல்லது 50 விழுக்காடு அல்லது அதற்கு மேல் | கிலோ. வாட் ஒன்றிற்கு ரூ.9750/- |
| 3. | ஒப்புதல் அளிக்கப்பட்ட காலத்திற்குள், 50 விழுக்காட்டிற்குக்கீழ் அல்லது 40 விழுக்காடு அல்லது அதற்கு மேல் | கிலோ. வாட் ஒன்றிற்கு ரூ.6500/- |
| 4. | ஒப்புதல் அளிக்கப்பட்ட காலத்திற்குள், 40 விழுக்காட்டிற்குக்கீழ் | -- |

**(அ) புழல் சிறையில் சூரிய மேற்கூரை அமைப்புகள்**

புழல் சிறைச்சாலை வளாகத்தில் ரூ.224 இலட்சம் செலவில் 330 கி.வாட் கூட்டு திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவும் பணி நிறைவுபெற்று, 2017 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் செயல்முறைபடுத்தப்படவுள்ளது.

**(ஆ) போக்குவரத்து துறையின் மண்டல அலுவலகங்களில் சூரிய மேற்கூரை அமைப்புகள்**

போக்குவரத்து துறையின் மண்டல அலுவலக கட்டடங்களில் ரூ.88 இலட்சம் செலவில் 69 கி.வாட் கூட்டுத் திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவும் பணி நிறைவுபெற்றுள்ளது.

### 2.3.5 சூரிய தொழில்நுட்ப வல்லுநர் பயிற்சி

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் 2016-17 அறிவிப்பின்படி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஐந்து வருட காலத்திற்குள் தமிழ்நாடு

திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் ரூ.13.50 கோடி நிதி உதவியுடன் இரு கட்டங்களில் 5000 (முன்னோடி-500, அதன் தொடர்ச்சி-4500) சூரிய தொழில் நுட்ப வல்லுநர்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இப்பாடத்திட்டமானது, தேசிய திறன்தர கட்டமைப்பு வகுத்துள்ள கட்டமைப்பினை கடைப்பிடித்துள்ளது. பயிற்சிக்கான வசதிகளை உள்ளடக்கிய மத்திய/மாநில மற்றும் தனியார் நிறுவனங்கள் இதற்காக தேர்வு செய்யப்படும். பயிற்சியாளர்கள் மூன்றாம் தரப்பினரால் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்ற மூன்றாம் தரப்பு திறன் சபையினரால் சான்றளிக்கப்படுவர். பயிற்சி பெற்ற 70 விழுக்காடு வல்லுனர்களுக்கு சூரியசக்தி துறையில் வேலை கிடைக்க செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முன்னோடி கட்ட பயிற்சிப்பணி 2017 ஜூன் மாத இறுதிக்குள் தொடங்கப்படும்.

## 2.3.6 10 மெகாவாட் காற்று சூரிய கலப்பின மின் நிலையம் நிறுவுதல்

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் 2016-17 அறிவிப்பின்படி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, கயத்தாரில் உள்ள அதன் சொந்த நிலத்தில், 10 மெகாவாட் காற்று சூரிய கலப்பின மின் நிலையத்தை கூட்டு பங்களிப்பு அல்லது பொது, தனியார் பங்களிப்பு முறையுடன் நிறுவ திட்டமிட்டுள்ளது. தற்போது காற்று சூரிய கலப்பின எரிசக்திக்கான கட்டணங்கள் இல்லாத நிலையில், காற்றாலைகள் மற்றம் சூரிய சக்தி மின் நிலையங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்திக்கு, தனித்தனியான மின் அளவிகளை நிறுவி தற்போதுள்ள காற்று மற்றும் சூரிய சக்திக்கான முறையான கட்டணங்களை பெற்றுக் கொள்ளலாம். தேசிய காற்று சக்தி நிறுவனத்திடம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து தர கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதர தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.3.7 50 மெகாவாட் சூரிய மின் நிலையம் நிறுவுதல்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, கயத்தாரில் உள்ள அதன் சொந்த நிலத்தில், 50 மெகாவாட் சூரிய மின் நிலையத்தை கூட்டு பங்களிப்பு அல்லது பொது, தனியார் பங்களிப்பு முறையுடன் நிறுவ திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தால் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பங்கேற்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆனணயத்தால்

[2017 ஜூன் 19

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு உற்பத்தி செய்யும் மின் சக்தியை வழங்குவதற்கு ஒப்புதலை வழங்கியுள்ளது.

### 2.3.8 தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி செயல் திட்டம், 2023 (ரீப்)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் 2016-17 அறிவிப்பின்படி தமிழ்நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் வளத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் 2023, வரைவு ஒன்றினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை தயாரித்துள்ளது. இவ்வரைவானது, தமிழ்நாடு தொலைநோக்கு 2023-ல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்குரிய முன்மொழியப்பட்ட வரைவுபடமாக விளங்கும். மேலும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி நிலையான எரிசக்தி எதிர்காலமாக மாநிலத்தை தயார்படுத்த இவ்வரைவு வழிவகுக்கும். இவ்வரைவு ஆவணம், பங்குதாரர்களின் பரிசீலினையில் உள்ளது.

### 2.3.9 தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் புதிய சாசனம்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் நிர்ணயித்துள்ள இலட்சிய இலக்குகளை அடைவதற்கான புதிய தொழில்நுட்பங்களை கண்டறியவும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், தொடர்புடையதாகவும் மாற்றவும், 10 புதிய சாசனங்களை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை உருவாக்கியுள்ளது. இச்சாசனமானது, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினை தனிப்பட்ட முறையில் பலப்படுத்தவும், மற்றும் பிற நிறுவனங்கள்/சங்கங்களுடன் இணைந்து பலப்படுத்தவும் மேலும் உற்பத்தித் துறையில் முதலீட்டாளர்களை கொண்டு வருவதற்கு மாநில அரசிற்கு உதவுவதற்காகவும் மாநிலத்தில் பயிற்சி பெற்ற ஊழியர்களை தொழிற்சாலைகளில் மறுசீரமைப்பிற்கு அடையாளம் காண உதவுவதற்கும், மேலும் தமிழகம் முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் நிர்ணயித்துள்ள இலக்கினை அடைய மேம்பட்ட விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கையை சிறப்பான முறையில் மேற்கொள்ள வழிவகுக்கிறது.

2017 ஜூன் 19]

## 2.3.10 விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு

முகமையின் இயங்கும் முறையை மாற்ற எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு இணங்க தற்போதைய செயல்படுத்தும் முறையினை மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க சக்தி துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப துரிதப்படுத்தும் நோக்கத்துடனும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை புதிய இலட்சினை ஒன்றை வெளியிட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறையின் சார்பில் தீவுத்திடலில் நடைபெற்ற 43-வது இந்திய சுற்றுலா தொழில் கண்காட்சி 2017-ல் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை அரங்கம் ஒன்றை அமைத்து 1 இலட்சம் பார்வையாளர்களை கவர்ந்துள்ளது. மேலும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு மாநில அரசின் 2 ஆம் இடத்திற்கான பரிசினை பெற்றுள்ளது.

## 2.3.11 கழிவிலிருந்து எரிசக்தி திட்டங்கள்

சவ்வரிசி தொழிற்சாலை மற்றும் கோழிப் பண்ணையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளிலிருந்து 2.2 மெகாவாட் கூட்டுத் திறன் மின்சாரம் தயாரிப்பதற்காக 15 திட்ட கருத்துருக்கள் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் ரூ.823.5 இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சவ்வரிசி தொழிற்சாலை மற்றும் கோழிப்பண்ணையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்ய 17 கருத்துருக்கள் 2.55 மெகாவாட் கூட்டுத் திறன் மின்சாரம் தயாரிப்பதற்கு ரூ.900 இலட்சம் மத்திய நிதி உதவி பெறுவதற்கு ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு வருகின்றது.

## 2.3.12 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி

### (அ) சூரிய மின் உற்பத்தி பயன்பாடு

சூரிய மின் உற்பத்தியை ஊக்குவிக்க ஊக்கத்தொகையுடன் கூடிய கீழ்க்கண்ட திட்டங்கள் உள்ளன. 126.92 மெ.வாட் ஒட்டு மொத்த எரிசக்தி திறனுடன்கூடிய சூரிய சக்தி மின் திட்டங்கள் நிறுவப்பட்டு, கடந்த 5 ஆண்டுகளில் மொத்த நிதி உதவியாக ரூ.227.85 கோடி பெறப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">திட்டத்தின் பெயர்</th><th colspan="2">கிடைக்கப் பெறும் நிதியுதவி / மானியம்</th></tr>
<tr><td>1.</td><td colspan="2">(அ) நேர் மின்சக்தி சூரியசக்தி நீரிரைப்பான்</td><td colspan="2"></td></tr>
<tr><td></td><td colspan="2">• 3 குதிரைதிறன் வரை</td><td colspan="2">ரூ.36000/ குதிரைதிறன்</td></tr>
<tr><td></td><td colspan="2">• 3 குதிரைதிறன் மேலாக 5 குதிரை திறன்வரை</td><td colspan="2">ரூ.28500/ குதிரைதிறன்</td></tr>
<tr><td></td><td colspan="2">• 5 குதிரைதிறன் மேலாக 10 குதிரை திறன்வரை</td><td colspan="2">ரூ.28500/ குதிரைதிறன்</td></tr>
<tr><td>2.</td><td colspan="2">(ஆ) மாற்று மின்சக்தி சூரியசக்தி நீரிரைப்பான்</td><td colspan="2"></td></tr>
<tr><td></td><td colspan="2">• 3 குதிரைதிறன் வரை</td><td colspan="2">ரூ.30000/ குதிரைதிறன்</td></tr>
<tr><td></td><td colspan="2">• 3 குதிரைதிறன் மேலாக 5 குதிரை திறன்வரை</td><td colspan="2">ரூ.25500/ குதிரைதிறன்</td></tr>
<tr><td></td><td colspan="2">• 5 குதிரைதிறன் மேலாக 10 குதிரை திறன்வரை</td><td colspan="2">ரூ.25500/ குதிரைதிறன்</td></tr>
<tr><td>3.</td><td colspan="2">சூரியஒளி மின் நிலையங்கள்/ (மின்கல சேமிப்புடன்கூடியது) (7.2 Vah / Wp)</td><td colspan="2"></td></tr>
<tr><td></td><td colspan="2">10 kWp வரை</td><td colspan="2">ரூ.60/Wp</td></tr>
<tr><td></td><td colspan="2">10 kWp மேல் 100 kWp வரை<br>100 kWp ற்கு மேல்</td><td colspan="2">ரூ.40.5/Wp</td></tr>
<tr><td></td><td colspan="2">500 kWp வரை</td><td colspan="2">ரூ.18/Wp</td></tr>
<tr><td>4.</td><td colspan="2">சூரிய சக்தி மின் நிலையம்மூலம் இயங்கும் தெருவிளக்குகள் 100 kWp வரை</td><td colspan="2">ரூ.6/Wp</td></tr>
<tr><td>5.</td><td>சூரியசக்தி விளக்கு அமைப்புகள்</td><td rowspan="2">LED</td><td rowspan="2">40 Wp வரை</td><td rowspan="2">ரூ.102/ Wp</td></tr>
<tr><td></td><td>தெருவிளக்குகள், வீட்டு விளக்குகள்</td></tr>
</table>

2017 ஜூன் 19]

அமைப்பின் செலவில் கிடைக்கும் மூலதன மானியத்தில் நிறுவுதல், செயல்படுதல், போக்குவரத்து செலவு, காப்பீடு, 5 ஆண்டிற்கான பராமரிப்பு செலவு மற்றும் வரிகளும் அடங்கும்.

## (ஆ) சூரிய வெப்பசக்தி பயன்பாடு

சூரியசக்தியை வெப்பசக்தியாக மாற்றும் பல்வேறு சூரிய வெப்பசக்தி பயன்பாடுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இது அதிக அளவில் வர்த்தக மற்றும் தொழிற்சாலைகளில் உலர் மற்றும் பிற பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது.

6530 சதுர மீட்டர் மொத்த சேகரிப்பு பரப்பளவில் 32 எண்ணிக்கையிலான சூரிய நீராவி சமையல்/ வெப்பப்படுத்துதல்/ வெளியை குளிரூட்டும் அமைப்புகளுக்கு மொத்த நிதியுதவியாக ரூ.274.26 இலட்சம் ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட 32 அமைப்புகளில், 28 அமைப்புகள் நிறுவப்பட்டுள்ள நிலையில் 4 அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் நிதியுதவி / மானியம் |
|---|---|---|
| 1. | நேரிடை வெப்ப பயன்பாட்டிற்கு சூரிய ஒளி சேகரிப்பான் அமைப்பு | ரூ.3600/.ச.மீ |
| 2. | மனித ஆற்றலால் இயங்கும் செறிவாக்கி (concentrator) | ரூ.2100/- ச.மீ |
| 3. | நிழலற்ற ஒருமுகப்படுத்தும் செறிவாக்கி | ரூ.3600/- ச.மீ |
| 4. | ஒரு அச்சில் சுழலும் ஒருமுகப்படுத்தும் செறிவாக்கி | ரூ.5400/- ச.மீ |
| 5. | இரு அச்சில் சுழலும் ஒருமுகப்படுத்தும் செறிவாக்கி | ரூ.6000/- ச.மீ |

## (இ) தாவர எரிசக்தி சார்ந்த திட்டங்கள்

மரம், மரக்கழிவு, எஞ்சியுள்ள விவசாயக் கழிவு போன்ற திடத்தாவரக் கழிவுமூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கு நிதியுதவி கிடைக்கிறது.

[2017 ஜூன் 19

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிடைக்கும் நிதி உதவி/ மானியம் |
|---|---|---|
| 1. | தாவர எரிசக்தி சார்ந்த திட்டங்கள் | ரூ.20 இலட்சம் வரை x (திறன் x மெகாவாட்) ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.1.5 கோடி உதவி |
| 2. | தனியார் கரும்பு ஆலைகளில் கரும்பு சக்கைமூலம் இணை மின் திட்டம் | ரூ.15 இலட்சம் x (திறன் x மெகாவாட்) ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.1.5 கோடி உதவி |
| 3. | கூட்டுறவு மற்றும் / பொதுத் துறை கரும்பு ஆலைகளில் கரும்பு சக்கை சார்ந்த இணை மின்திட்டங்கள் | 40 பார் கொதிகலன் அழுத்தம் மற்றும் அதற்கு மேல் ஒரு மெகா வாட் உபரி மின்சாரத்திற்கு ரூ.40 இலட்சம் |
| | | 60 பார் கொதிகலன் அழுத்தம் மற்றும் அதற்கு மேல் ஒரு மெகா வாட் உபரி மின்சாரத்திற்கு ரூ.50 இலட்சம் |
| | | 80 பார் கொதிகலன் அழுத்தம் மற்றும் அதற்கு மேல் ஒரு மெகா வாட் உபரி மின்சாரத்திற்கு ரூ.60 இலட்சம் (ஒரு திட்டத்திற்கு அதிகபட்ச உதவி ரூ.6 கோடி) |
| 4. | ஊரக பகுதிகளில் வி நி யோ கி த் த ல் / கட்டமைப்பற்ற மின் திட்டங்கள் கூடிய உயிரி வளிமமாக்கி திட்டங்கள் (2 மெகாவாட் வரை) | ஒரு கிலோ வாட்டிற்கு ரூ.15000/- |

| | | |
|---|---|---|
| 5. | நகர்புற தொழிற்சாலை மற்றும் வேளாண் கழிவுகள்/ சக்கைகளிலிருந்து எரிசக்தி | |
| (i) | நகராட்சி திடக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி | ஒரு மெகாவாட்டிற்கு ரூ.2 கோடி (ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.10 கோடி) |
| (ii) | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கரிம வாயுவிலிருந்து மின் உற்பத்தி அல்லது நகர்ப்புற மற்றும் வேளாண் கழிவு / சக்கைகளிலிருந்து நொதித்தல் (bio-methanation) மூலம் மின் உற்பத்தி | ஒரு மெகாவாட்டிற்கு ரூ.2 கோடி (அல்லது ஒரு நாளுக்கு 12000 கன மீட்டர் உயிரி வாயுவிலிருந்து அழுத்தம் செய்யப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்தி) (ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.5 கோடி) |
| (iii) | நகர்புற, தொழிற்சாலை மற்றும் வேளாண் கழிவு /சக்கைகளிலிருந்து கரிம எரிவாயு உற்பத்தி | சமமான ஒரு மெகா வாட்டிற்கு ரூ.0.5 கோடி (அல்லது ஒரு நாளுக்கு 12000 கன மீட்டர் உயிரி வாயு.) (ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.5 கோடி) |
| (iv) | இயந்திரம்/எரிவாயு சுழலி மூலம் உயிரி எரிவாயுவிலிருந்து மின் உற்பத்தி மற்றும் அழுத்தம் செய்யப்பட்ட உயிரி எரிவாயுவை உற்பத்தி செய்து எரிவாயு உருளைகளில் நிரப்புதல் | ஒரு மெகாவாட்டிற்கு ரூ.1 கோடி (அல்லது ஒரு நாளுக்கு 12000 கன மீட்டர் உயிரி வாயுவிலிருந்து அழுத்தம் செய்யப்பட்ட உயிரி எரிவாயு உற்பத்தி) (ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.5 கோடி) |
| (v) | கரும்பு சக்கை மூலமாக கொதி கலன் மற்றும் நீராவி சுழலி கட்டமைப்பு தவிர்த்து உயிரி எரிவாயு, திடக்கழிவு, தொழிற்சாலைக்கழிவு, வேளாண் கழிவுகள்/ சக்கைகளிலிருந்து மின் உற்பத்தி | ஒரு மெகாவாட்டிற்கு ரூ.0.20 கோடி (ஒரு திட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.1 கோடி) |

[2017 ஜூன் 19

### (ஈ) சிறிய அளவிலான காற்றுசக்தி மற்றும் கலப்பின அமைப்பு

சிறிய அளவிலான காற்று சக்தி மற்றும் கலப்பின அமைப்புகளான நீர் இறைக்கும் காற்றாலைகள், மின் உற்பத்தி செய்யும் சிறு திறன் காற்றாலைகள் மற்றும் காற்று சூரிய சக்தி கலப்பின அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மத்திய அரசின் நிதியுதவி 481.8 கிலோவாட் திறனுள்ள 10 அமைப்புகளுக்கு ரூ.481.8 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிடைக்கும் நிதி உதவி / மானியம் |
|---|---|---|
| 1. | சிறிய அளவிலான காற்றுசக்தி மற்றும் கலப்பின அமைப்புகள் (சிறு திறன் காற்றாலை /காற்று சூரிய சக்தி கலப்பின அமைப்புகள்) | ஒரு கிலோவாட்டிற்கு ரூ.1.00 இலட்சம் (சமுதாய பயனாளிகளுக்கு மட்டும்) |
| | | |

## 2.4 விருதுகள்

1. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் பல்வேறு வகைகளில் தங்கள் செயல்திறன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மாநில முகமைக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் விருதுகளை வழங்கி வருகிறது. அந்த வகையில் 24 ஜனவரி, 2017 புது தில்லியில்

   அ) நாட்டில் 2015-16 ஆம் ஆண்டில் சூரிய வீட்டு ஒளி அமைப்புகள் நிறுவுவதில் அதிக எண்ணிக்கையை நிறுவியதற்காக இரண்டாம் விருது வழங்கியது.

   ஆ) நாட்டில் 2015-16 ஆம் ஆண்டில் சூரிய சக்தி தொகுப்பு நிறுவுவதில் அதிக எண்ணிக்கையை நிறுவியதற்காக மூன்றாம் விருது வழங்கியது

2. 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி புது தில்லியில் 10-வது ENERTIA விருதுகள் 2016-ல் நிலையான சக்திக்கு சிறந்த முதலீடு மற்றும் சிறந்த கட்டமைப்புக்கான விருதை பெற்றது.

*2017 ஜூன் 19]*

*3. 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி புது தில்லியில் 10-வது ENERTIA விருதுகள் 2016-ல், சிறந்த மாநில முகமைக்கான விருதை பெற்றது.*

## III. மின் ஆய்வுத் துறை

*மின் அமைப்புகளில் பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வது மின் ஆய்வுத் துறையின் பொறுப்பாகும். மேலும் மின்தூக்கிகளுக்கு உரிமம் வழங்குதல், மின் கருவிகள் சோதனை செய்தல், மின் வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் மற்றும் எரிசக்தி சேமிப்பை ஊக்குவித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.*

### 3.0 மின் ஆய்வுத் துறையால் வழங்கப்படும் சேவைகள்

*இத்துறையினால் மாநில, மண்டல மற்றும் மாவட்ட அளவில் உள்ள அலுவலகங்கள் வழியாக கீழ்க்காணும் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன:*

1) *மத்திய மின்சார ஆணைய ஒழுங்குமுறை (பாதுகாப்பு மற்றும் மின் வழங்கல் தொடர்பான விதிமுறைகள்) விதிகள், 2010-ன்கீழ், உயர் மின்னழுத்தம் மற்றும் அதி உயர் மின்னழுத்த மின்னமைப்புகள் மற்றும் அடுக்குமாடி கட்டடங்கள் ஆகியவற்றிற்கான மின் வரைபடங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் ஆய்வு செய்து அனுமதி வழங்குதல்.*

2) *மின் சாதனங்கள் மற்றும் கருவிகளை சோதனை மற்றும் தர நிர்ணயம் செய்தல்.*

3) *எரிசக்தி சேமிப்பிற்கான மாநில முகமையாக எரிசக்தி சேமிப்பு சட்டம், 2001 (மத்திய சட்டம் 52/2001)-ஐ நடைமுறைபடுத்துதல் மற்றும் எரிசக்தி சேமிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயலாற்றுதல்.*

4) *தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2003-ன்படி மின் வரி வசூலித்தல் மற்றும் கண்காணித்தல்.*

5) *தமிழ்நாடு மின் தூக்கி சட்டம், 1997-இன்கீழ் மின் தூக்கிகளை ஆய்வு செய்து உரிமங்கள் வழங்குதல்.*

6) தமிழ்நாடு திரையரங்க (ஒழுங்குமுறை) விதிகள் 1957 இன்கீழ் திரையரங்குகளின் மின் அமைப்புகளுக்கான பாதுகாப்பினை உறுதி செய்து மின் சான்றிதழ் வழங்குதல்.

7) மின் உரிமம் வழங்கும் வாரியம் வாயிலாக, மின் ஒப்பந்ததாரர் மற்றும் தகுதி வாய்ந்த மின் பணியாளர்களுக்கு உரிமம் மற்றும் சான்றிதழ் வழங்குதல்.

## 3.1 செயலாக்கம் மற்றும் வருவாய் வரவினங்கள்

இத்துறையின் 2016-2017 ஆம் ஆண்டிற்கான செயலாக்கம் மற்றும் வருவாய் வரவினங்கள் மார்ச் 2017 வரை பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது:

| வ. எண் | இத்துறையால் வழங்கப்பட்ட சேவைகள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| அ) | புதிய மின்தூக்கிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது | 2845 |
| ஆ) | இயக்கத்திலுள்ள மின் தூக்கிகளுக்கான உரிமம் புதுப்பித்தல் | 12824 |
| இ) | புதிய மற்றும் கூடுதல் மின் அமைப்புகள் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது | 2213 |
| ஈ) | உயர்மின்னழுத்த நிறுவனங்களில் நடத்தப்பட்ட காலமுறை ஆய்வுகள் | 5156 |
| உ) | திரையரங்களுக்கு வழங்கப்பட்ட மின்தகுதி சான்றிதழ் | 463 |
| ஊ) | புதிய மின் அமைப்புகளுக்கான வரைபடங்களை கூராய்வு செய்தல் | 1908 |
| எ) | மின் அளவிகளை சோதனை மற்றும் தர நிர்ணயம் செய்தல் | 3874 |

இத்துறையினால் ஆய்வு மற்றும் சேவைகள் மூலமாக ரூ.14.46 கோடியும் மின் உற்பத்தியாளர்களிடமிருந்தும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தவிர்த்து இதர மின் உபயோகிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான மின் வரியாக ரூ.88.79 கோடியும் (மார்ச் 2017 வரை) வசூலிக்கப்பட்டுள்ளது.

*2017 ஜூன் 19]*

## 3.2 சோதனை மற்றும் தர நிர்ணயம்

*மின் கருவிகள், மின் அளவிகள் மற்றும் மின் சாதனங்களை சோதனை செய்ய ஏதுவாக, மின் ஆய்வுத் துறையின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தில் பல்வேறு மின் பகிர்மானம் மற்றும் உற்பத்தி கழகங்களின் மின் அளவிகள் மற்றும் மின் சாதனங்களை கொண்டு சோதனை மேற்கொள்ளப்படுகிறது.*

## 3.3 எரிசக்தி சேமிப்பு

### (i) கட்டடங்களில் எரிசக்தி சேமிப்புக்கான விதித் தொகுப்பு

*கட்டடங்களில் எரிசக்தி சேமிப்பிற்கான விதித் தொகுப்பினை இந்திய அரசின் மின் அமைச்சகம் ஒரு மாதிரி வழிகாட்டுதலாக வெளியிட்டுள்ளது. இவ் வழிகாட்டுதல்களின்படி குடியிருப்பல்லாத கட்டடங்களை வடிவமைத்து, நிறுவும்போது பின்பற்றப்பட வேண்டிய குறைந்தபட்ச எரிசக்தித் திறன் குறித்த அம்சங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன.*

*எரிசக்தி சேமிப்பு சட்டம் 2001, விதி எண் 15(அ)-ன்கீழ் கட்டடங்களில் எரிசக்தி சேமிப்பிற்கான விதித் தொகுப்பை மாற்றி அமைக்க மாநில அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*அதன் ஒரு பகுதியாக கட்டடங்களில் எரிசக்தி சேமிப்பு விதித் தொகுப்பை பின்பற்றும்போது கையாள வேண்டிய தொழில்நுட்ப யுக்திகளை வரையறை செய்ய தொழில்நுட்ப குழு ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அரசால் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப குழு உள்ளூர் வானிலை/ தட்பவெப்பநிலைக்கு ஏற்ப எரிசக்தி சேமிப்பின் கட்டட விதி தொகுப்பின் நடவடிக்கைகளை செயல்படுத்த ஏதுவாக விதி தொகுப்பில் உரிய திருத்தங்களை முன்மொழிந்து உள்ளது. மேலும், இந்நடவடிக்கைகளை துரிதப்படுத்த நகராட்சிகளின் துணை விதிகள் மற்றும் எரிசக்தி சேமிப்பு கட்டட விதி தொகுப்பு தொடர்பான வரைவு திருத்தங்கள் மேற்கொண்டு விரைவில் அரசாணை வெளியிடப்படும்.*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2017 ஜூன் 19

### (ii) வீணாகும் வெப்ப சக்தியை மீட்க வல்ல கொள்கை மற்றும் பல்வேறு எரிசக்தி உபயோகிப்பாளர்களுக்கு இடையிலான எரிசக்தி சேமிப்புத் திட்டம்

*வீணாகும் வெப்ப சக்தியை மீட்க வல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக மத்திய மின்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் வரும் தேசிய எரிசக்தி திறனூக்கத்தினால் "மாநில எரிசக்தி சேமிப்பு பாதுகாப்பு நிதிக்கு எரிசக்தி திறனூக்க செயலகத்தின் பங்களிப்பு" என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. இதன்படி, மின் ஆய்வுத் துறையால், வீணாகும் வெப்ப சக்தியை மீட்கவல்ல வழிமுறைகள் மற்றும் பல்வேறு எரிசக்தி உபயோகிப்பாளர்களுக்கு இடையிலான எரிசக்தி சேமிப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.*

### (iii) வீணாகும் வெப்ப சக்தியை மீட்க வல்ல மாதிரி திட்டத்தினைப் பொது நிறுவன அரிசி ஆலைகளில் மேற்கொள்ளுதல்

*வீணாகும் வெப்ப சக்தியை மீட்க வல்ல முறையின்மூலம் எரிசக்தி சேமிப்பினை அடைவதை உறுதி செய்ய, காற்று சூடாக்கி* (air pre-heater)-*ஐ, தமிழ்நாடு குடிமைப் பொருள் கழகத்திற்கு* (TNCSC) *சொந்தமான திம்மாவரம் காஞ்சிபுரம் மாவட்டம், திருநாகேஸ்வரம்/ தஞ்சாவூர் மாவட்டம், சுந்தரக்கோட்டை/ திருவாரூர் மாவட்டம் ஆகிய 3 அரிசி ஆலைகளில் ரூ.10,00,000/- மதிப்பீட்டில் 2017-2018 ஆம் ஆண்டில் காற்று சூடாக்கி அமைப்பு* (Air Pre-Heater) *பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், புகைபோக்கி வழியாக வீணாக வெளியேறும் வெப்பத்தினை மீட்டு கொதிகலனுக்கு செல்லும் காற்றை சூடாக்குவதன்மூலம் எரிபொருள் தேவையை குறைப்பதுடன் மின் சேமிப்பையும் அடைய இயலும்.*

### 3.4 மின் உரிமம் வழங்கும் வாரியம்

*மத்திய மின்சார ஆணைய ஒழுங்குமுறை (பாதுகாப்பு மற்றும் மின் வழங்கல் தொடர்பான விதிமுறைகள்) விதிகள், 2010-இன், விதி எண் 29-ன்படி மின்னமைப்புகள் தொடர்பான பணிகள், மின் ஒப்பந்ததாரர்கள் மற்றும் மின் பணியாளர்களை கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும். மின் ஒப்பந்ததாரர்களுக்கு உரிமம் வழங்கவும் மேலும் மின் கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கவும் இவ்வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உயர் மின்னழுத்த அமைப்புகளில் மேற்கொள்ளும் வேலையின் தகுதியினைப் பொருத்து மின் ஒப்பந்ததாரர்களின் உரிமங்கள் இ.எஸ்.ஏ., இ.ஏ., இ.எஸ்.பி., மற்றும் இ.பி., என வகைப்படுத்தப்பட்டுள்ளன.*

| | | |
|---|---|---|
| 1. | மின் ஒப்பந்தக்காரர்கள் உரிமங்கள் | 25395 |
| 2. | மின் பணியாளர்களான மின் மேற்பார்வையாளர்கள், மின் உற்பத்தி நிலைய இயக்குனர்கள், மின் கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர் போன்றவர்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள். | 215386 |

## 3.5 ஆய்வுத் துறையின் சேவைகள்

### (i) இணையதளம்மூலம் மின் தூக்கி உரிமம் வழங்குதல் மற்றும் மின் வரி செலுத்துதல்:

இணையதளம் வழியாக மின்தூக்கிகளுக்கு உரிமம் வழங்க ஏதுவாக, அதற்கான மென்பொருள் எல்காட் நிறுவனம் வழியாக உருவாக்கப்பட்டு, நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் அடுக்குமாடி குடியிருப்பு, வணிக வளாகங்கள் மற்றும் அலுவலக கட்டடங்களில் உள்ள மின்தூக்கி பயன்படுத்துவோர் பயன்பெறும் வகையில் மின்தூக்கிக்கான உரிமம் வெளிப்படையான முறையில் பெற இயலும்.

மேலும் இத்துறையின் மூலமாக மின்வரி செலுத்துதலை மேம்படுத்த இணையதளம் வாயிலாக மின்னாக்கி வரி மற்றும் கணக்கீடுகளை பதிவு செய்வதற்கான சேவை உருவாக்கப்பட்டு முடிவடைந்துள்ளது. இதன்மூலம் வருடத்திற்கு ரூ.150/- கோடி அளவில் மின் வரி வசூல் உயரும். இத்தகைய இணையதள நடவடிக்கைகளால் மின் வரி மற்றும் மின் இயங்கேணி குறித்த செயல்பாடுகளின் ஒவ்வொரு நிலைப்பாடும் உரிய விண்ணப்பத்தாரர்/பயனீட்டாளருக்கு மின்அஞ்சல்/ குறுந்தகவல்மூலம் சென்றடையும்.

தற்போது சென்னை மாவட்டத்தில் மின்னனுமுறைமூலம் மின்தூக்கி நிறுவ அனுமதி (Form-B) மே 2017 திங்கள் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், ஆறு மாதங்களில் தமிழகம் முழுவதிலும் மின்னாக்கி வரி மற்றும் கணக்கீடுகளை பதிவு செய்வதற்கான சேவையும், மின்தூக்கி நிறுவுவதற்கான அனுமதியும் (Form-B), மின்தூக்கி இயக்குவதற்கான உரிமம் (Form-F) மற்றும் மின்தூக்கி உரிமம் புதுப்பித்து வழங்கும் (Form-G) சேவைகள் மின்னனு முறைமூலம் பயனீட்டாளர்கள் பயன்பெற வழி வகை செய்யப்படும்.

[2017 ஜூன் 19

## IV. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

*தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், வங்கி சாரா நிதி நிறுவனமாக 27-6-1991 அன்று துவங்கப்பட்டது. இந்த நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம், செயல்படுத்தும் பல கட்டமைப்பு திட்டங்களுக்கு தேவையான நிதியை வழங்கி வருகிறது. இந்த நிறுவனம், மின் உற்பத்தி, பகிர்மானம் மற்றும் விநியோகத் திட்டங்களுக்கு தேவையான நிதியை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்திற்கும் வழங்க நிதியை திரட்டுகிறது. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை, இந்திய அரசு நிறுவன அலுவல் அமைச்சகம், ஒரு பொது நிதி நிறுவனமாக அறிவித்துள்ளது. இந்த நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.90 கோடியாகும். இந்த நிறுவனம் தொடக்கத்திலிருந்தே இலாபம் ஈட்டி வருகிறது.*

### 4.1 காலவரை வைப்புத் திட்டம்

*தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், பொதுமக்கள் மற்றும் நிறுவன வைப்பீட்டாளர்களிடமிருந்து நிதி திரட்டி வருகிறது. இந்த நிறுவனத்தின் வைப்பீடு அமைப்பு மிகப் பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளது. தொடர்ந்து இலாபம் ஈட்டி வருவதாலும் மற்றும் கூடுதலான வட்டி வழங்குவதாலும் இது சாத்தியமாகிறது. இதனால், 2016-2017 ஆம் நிதியாண்டில் வைப்பீடு கணிசமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த நிறுவனம், 1-4-2016 முதல் 31-3-2017 வரை ரூ.2,931.17 கோடி வைப்பீட்டுத் தொகையாக திரட்டியுள்ளது. 1-4-2016 முதல் 31-3-2017 வரை நிகர வைப்பீடு 19.71 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இந்த நிதியாண்டின் தொடக்கத்தில் ரூ.14870.48 கோடியாக இருந்த வைப்பீட்டுத் தொகை, 31-3-2017 அன்று ரூ.17801.65 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த வைப்பீட்டுத் தொகை பொதுமக்கள், நிறுவனங்களின் வைப்புத் தொகை மற்றும் மாநில அரசின் சில திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வைப்பீட்டுத் தொகை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மொத்த வைப்பீட்டுத் தொகையான ரூ.17801.65 கோடியில், ரூ.4,282.19 கோடி பொது மக்களிடமிருந்தும், ரூ.13,519.46 கோடி இதர நிறுவனங்கள் மற்றும் மாநில அரசின் திட்டங்கள்மூலம் கிடைத்த வைப்பீடுகளாகும்.*

2017 ஜூன் 19]

## 4.2 வட்டி விகிதம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் செலுத்தப்படும் வைப்பீடுகளுக்கு வட்டியாக ஓராண்டிற்கு 7.75%, 2 ஆண்டுகளுக்கு 8% மற்றும் 5 ஆண்டுகள் வரையில் உள்ள வைப்பீடுகளுக்கு 8.50% வழங்கப்படுகிறது. இந்த நிறுவனம், 58 வயது மற்றும் அதற்கு மேல் வயதுள்ள மூத்த குடிமக்கள் 12 மற்றும் 24 மாதங்களுக்கு செய்யும் வைப்பீடுகளுக்கு 0.25%, 36, 48 மற்றும் 60 மாதங்களுக்கு செய்யும் வைப்பீடுகளுக்கு 0.50% கூடுதல் வட்டியாக வழங்குகிறது.

## 4.3 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிதியுதவி

இந்த நிறுவனம் திரட்டும் நிதியை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு மட்டும் கடனாக வழங்கி வருகிறது. இந்த நிறுவனம் தொடங்கிய நாள் முதல், 31-3-2017 வரை மொத்தம் ரூ.59,432.39 கோடியை தவணைக் கொள்முதல், குத்தகைக் கடன் மற்றும் குறித்த கால நிதியுதவியாக அளித்துள்ளது. இந்த நிறுவனம், 2016-17 ஆம் ஆண்டில் அதிகபட்ச நிதியுதவியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ரூ.12,747 கோடி வழங்கியுள்ளது ஒரு பெரிய சாதனையாகும். 31-3-2017 நிலவரப்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு நிகர நிதியுதவியாக ரூ.21,772.59 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 4.4 மாநில அரசின் வைப்பீட்டுத் திட்டங்கள்

***1. பண ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்:*** தமிழக அரசு 2011-12-ல், அரசாணை (வா) எண் 141, பள்ளிக் கல்வித் துறை, நாள் 13-9-2011-ன் ஆணைப்படி, பள்ளி இடைநிற்றலை தவிர்க்க, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு, சிறப்பு ஊக்கத் தொகை வழங்க ஆணையிட்டது. இத்திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 11 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ/மாணவியர்களுக்கு ஊக்கத் தொகையாக, ஒரு மாணவருக்கு ஒரு வருடத்திற்கு ரூ.1,500/- வீதம், 12-ஆம் வகுப்பு படிக்கும் மாணவருக்கு ரூ.2000/- வீதம் வழங்கப்படுகிறது. அதன்படி, இத்திட்டத்தை, செயல்படுத்த பள்ளிக் கல்வித் துறை, 2016-17 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு

*நிறுவனத்தில் ரூ.313.58 கோடி வைப்பீடு செய்துள்ளது. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள ஊக்கத் தொகை மற்றும் வட்டித் தொகையுடன் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கு தலா ரூ.6011/- வீதம் அவர்களுடைய வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. இதுவரை, 24,61,970 மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக மொத்தம் ரூ.1219.56 கோடி வழங்கப்பட்டுள்ளது.*

***2. வருவாய் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவமாணவியருக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்:*** *தமிழக அரசு, அரசாணை நிலை எண் 195, பள்ளிக் கல்வித் துறை, நாள் 27-11-2014-ன், ஆணைப்படி அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது விபத்தில் நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.50,000/-லிருந்து ரூ.75,000/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ், 2005 ஆம் ஆண்டு முதல் 31-3-2017 வரை ரூ.33.80 கோடி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 6,668 மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.*

*3.* ***முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்:*** *தமிழக அரசு அரசாணை நிலை எண் 61, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 5-7-2013-ன் ஆணைப்படி, இந்த திட்டத்தின்கீழ், திட்டம்-I-ல், ஒரே ஒரு பெண் குழந்தைக்கு வைப்பீடாக செலுத்தப்பட்டிருந்த வைப்பீட்டுத் தொகை ரூ.22,200/-ஐ, ரூ.50,000/- ஆக உயர்த்தி, திட்டம்-II-ல், இரு பெண் குழந்தைகளுக்கான வைப்பீட்டுத் தொகை ரூ.15,200/-ஐ, ரூ.25,000/- ஆக உயர்த்தி, வைப்பீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வைப்பீடு செய்த ஐந்தாண்டு முடிவிலிருந்து, பதினெட்டாம் ஆண்டு வரை, அந்தப் பெண் குழந்தைகளின் கல்விக்காக ஆண்டுதோறும் ஊக்கத்தொகையாக, தலா ரூ.1,800/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2001 ஆம் ஆண்டு முதல் 31-3-2017 வரை ரூ.1203.39 கோடி வைப்பீடு செய்யப்பட்டு, 6,68,115 பெண் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.*

2017 ஜூன் 19]

4. **ஒரு காலபூஜைத் திட்டம்:** தமிழக அரசு அரசாணை நிலை எண் 197, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, (அ.நி.5.1), நாள் 20-9-2011-ன் ஆணைப்படி, நலிவடைந்த கோவில்களில் ஒரு கால பூஜை நடத்த, செலுத்தப்பட்டிருந்த வைப்பீட்டுத் தொகை ரூ.25,000/-ஐ, ரூ.1,00,000/- ஆக உயர்த்தி, மொத்தம் 11,654 திருக்கோவில்களுக்கு காலாண்டு வட்டி கிடைக்கும் வகையில், ரூ.116.54 கோடி இந்த நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.5 நிதி செயலாக்கம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. 2016-17 ஆம் நிதியாண்டின் மொத்த வருவாய் ரூ.2,259.91 கோடியாகும். இந்த நிறுவனம், 31-3-.2017 வரை நிகர இலாபமாக ரூ.1015.59 கோடி ஈட்டியுள்ளது. 2016-17ம் நிதியாண்டில் மொத்த தற்காலிக இலாபம் ரூ.179.31 கோடியும், வருமான வரி தவிர, நிகர தற்காலிக இலாபம் ரூ.128.38 கோடியாகும். 1995-1996 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் தொடர்ந்து அரசுக்கு ஈவுத் தொகை வழங்கி வருகிறது. இதுவரை மொத்தம் ரூ.150.67 கோடியை ஈவுத் தொகையாக வழங்கியுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு II

(505 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 37—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2017—2018

### முன்னுரை

இந்த அரசின் கொள்கையானது, படிப்படியாக பூரண மதுவிலக்கினை எய்துவதாகும். பூரண மதுவிலக்கை எய்தும் வகையில் இந்த அரசு முதற்படியாக, தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக் கூடங்கள் ஆகியவற்றின் பணி நேரம் குறைக்கப்படும் எனவும் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் எனவும் ஆணை பிறப்பித்தது. அதன்படி, 24-5-2016 முதல், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக் கூடங்கள் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை என இயங்கியதற்கு பதிலாக தற்போது நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரையில் இயங்கி வருகின்றன. மேலும், 500 தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் 19-6-.2016 முதல் மூடப்பட்டன. மேலும், 500 சில்லறை விற்பனை மதுபானக் கடைகள் 24-2-2017 முதல் மூடப்பட்டன. எனவே, 2016-2017 ஆம் ஆண்டில் 1000 கடைகள் கண்டறியப்பட்டு மூடப்பட்டன.

கள்ள மற்றும் போலி மதுவகைகளை ஒழிப்பதற்கு தீவிர நடவடிக்கைகளை எடுத்ததன்மூலம் இந்த அரசு, சீரிய ஆயத்தீர்வை நிருவாகத்தினை உறுதி செய்வதிலும் மேலும் வெற்றி கண்டுள்ளது. இச்சீரிய ஆயத்தீர்வை நடவடிக்கைகள் எடுத்ததன் பொருட்டு, 2011 முதல் கள்ளச் சாராய இறப்புகள் ஏதுமில்லை. ஆதலால், இம்மாநிலம் தற்போது கள்ளச் சாராய இறப்புகள் இல்லா மாநிலமாக திகழ்கிறது.

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை நிருவாக அமைப்பு மற்றும் செயல்பாடுகள்

2.1 தமிழ்நாடு அரசின் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் நான்கு அமைப்புகள் செயல்படுகின்றன:

(1) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

(2) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

(3) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)

(4) போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு

## 3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

3.1 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) மற்றும் அச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளைச் செயல்படுத்தும் அதிகாரி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஆவார். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள் பற்றிய விவரங்கள் இணைப்பு-1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.2 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவியாக, மாநிலத் தலைமையிடத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் இரண்டு இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித் துறை) நிலையில் ஒரு நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் ஐந்து உதவி ஆணையர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

3.3 மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள், 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வெவ்வேறு அம்சங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு துணை ஆணையரும் (ஆயத்தீர்வை) மற்றும் பிற மாவட்டங்களில் துணை ஆட்சியர் நிலையில் ஒரு உதவி ஆணையரும் (ஆயத்தீர்வை), இவர்களுக்கு உதவியாக வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் நிலையில் உள்ள இதர அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

[2017 ஜூன் 19

3.4 துணை ஆட்சியர் நிலையில், வடிப்பாலைகளில் வடிப்பாலை அலுவலர்களும் மற்றும் ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான, பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1955 ஆம் ஆண்டின் மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி, ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருள்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல் மற்றும் சாராவி பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் (Bonded Manufactory Officers) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

3.5 சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை தயாரிப்பின்போது துணைப் பொருளாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சாராவியைத் தயாரிப்பதற்கு ஒரு பொது மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்போது, இம்மாநிலத்தில் 46 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவுத் துறையிலும், 3 பொதுத் துறையிலும் மற்றும் 27 தனியார் துறையிலும் உள்ளன. மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் விவரங்கள் இணைப்பு-2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.6 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின் படி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் அவர்கள் மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கருப்பஞ்சாற்றுக் கசண்டினை கருத்தில்கொண்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கீடு செய்கிறார். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், விற்பனை, பயன்பாடு, போக்குவரத்து, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் உரிய அதிகாரிகளால் மேற்படி விதிகளின்படி வழங்கப்படுகின்றன.

3.7 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்கீழ்,

2017 ஜூன் 19]

வெளி மாநிலங்களிலிருந்து கருப்பஞ்சாற்றுக் கசண்டு இறக்குமதி செய்ய படிவம் எம்.எல்-2 அல்லது படிவம் எம்.எல்-4-ல் உரிமம் பெற்றவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. கருப்பஞ் சாற்றுக் கசண்டை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய படிவம் எம்.எல்-2-ல் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உரிமம் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் வழங்குவதற்கு முன், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு நிருவாக சேவைக் கட்டணமாக மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.300/-வீதம் வசூலிக்கப்படுகிறது.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி**

3.8 தமிழ்நாட்டில் 18 சாராவி உற்பத்தி செய்யும் வடிப்பாலைகள் உள்ளன. அவற்றில் 16 வடிப்பாலைகள் தனியார் துறையிலும் மற்றும் 2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. மாநிலத்தில் இயங்கிவரும் வடிப்பாலைகளின் விவரங்கள் இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

3.9 சாராவி, இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இச்சாராவி, கல்வி நிறுவனங்கள், இதர ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் குறைந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. வார்னிஷ் (Varnish) மற்றும் வண்ணப் பூச்சுகள் (Paint) உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் இயல்பு மாற்றப்பட்ட சாராவி, கரைப்பானாக (solvent) பயன்படுத்தப்படுகிறது.

**தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (Grain based ENA)**

3.10 தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு உயர்தர மதுபான வகைகள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. தற்போது தமிழகத்தில் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி தயாரிக்கும் வடிப்பாலைகள் எதுவும் இல்லை. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவியினை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்வதற்கு, அரசின் முன்அனுமதியை பெற்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதிக்கப்படுகின்றன.

[*2017 ஜூன் 19*

**எத்தனால் (Ethanol)**

*3.11 எத்தனால் என்பது படிமங்களிலிருந்து பெறப்படும் பெட்ரோலிய எரிபொருள்களைப் போல அல்லாமல் தாவரங்களிலிருந்து முதன்மையாக கிடைக்கக்கூடிய ஒருவகை எரிபொருளாகும். எத்தனால் பசுமை எதிர்விளை வாயுக் கசிவை வெகுவாக குறைத்து, அதன்மூலம் சுற்றுச்சூழலை மாசு இடர்களிலிருந்து பாதுகாக்கிறது. எத்தனால், கச்சா எண்ணெய் இறக்குமதியினைக் குறைத்து அந்நியச் செலாவணியை சேமிப்பதற்கு உதவுகிறது. இத்தகைய நன்மைகளை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள வடிப்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் எத்தனாலை பெட்ரோலுடன் கலந்து எண்ணெய் நிறுவனங்கள் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டு 1-1-2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும் 13-12-2006 முதல் எத்தனால் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அரசு ஆணை (நிலை) எண். 12, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (2) துறை, நாள் 26-3-2012-ல், மீண்டும் எத்தனால் தயாரிக்க அனுமதிக்கப்பட்டது. ஒவ்வொரு காலாண்டின் அடிப்படையிலும், எத்தனால் உற்பத்தியின் அளவினை மதிப்பீடு செய்வதற்கு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்கள் தலைமையின்கீழ் எத்தனால் உற்பத்தி மதிப்பீட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 8 வடிப்பாலைகளுக்கு எத்தனால் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் இணைப்பு-4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.*

*3.12 கடந்த சில வருடங்களில் பருவ மழை பொய்த்தல் மற்றும் இதர காரணங்களால் கரும்பு உற்பத்தியின் அளவு வெகுவாகக் குறைந்ததால், கருப்பஞ்சாற்றுக் கசண்டு உற்பத்தியின் அளவும் மிக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், எத்தனால் உற்பத்தி மதிப்பீட்டுக் குழு எத்தனால் உற்பத்தி செய்வதற்கு கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் மாசு சாராவியினை வடிப்பாலைகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இந்தக் குழு திருவாளர்கள். ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், நெல்லிக்குப்பம் நிறுவனத்திற்கு 16.4643 இலட்சம் லிட்டர் மாசுள்ள சாராவியை (கருப்பஞ்சாற்றுக் கசண்டை பயன்படுத்தாமல்) 15.4765 இலட்சம் லிட்டர்கள் எத்தனாலாக மாற்றம் செய்து கொள்ள அனுமதித்துள்ளது. எத்தனால் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட*

*2017 ஜூன் 19]*

*அளவு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-*

| ஆண்டு | காலம் | எத்தனால் உற்பத்தி செய்ய அனுமதிக்கப் பட்ட அளவு (இலட்சம் லிட்டரில்) | எத்தனால் உற்பத்தி செய்யப் பட்ட அளவு (இலட்சம் லிட்டரில்) |
|---|---|---|---|
| *2012-2013* | *1-6-2012 முதல் 30-9-2012 வரை* | *276* | *44.43* |
| *2013-2014* | *01-3-2013 முதல் 28-2-2014 வரை* | *450* | *105.57* |
| *2015-2016* | *11-9-2015 முதல் 31-3-2016 வரை* | *50* | *42.778* |
| *2016-2017* | *01-9-2016 முதல் 31-3-2017 வரை* | *65.4765* | *01.35* |

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

*3.13 தமிழ்நாட்டில் பதினொன்று இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களும், ஏழு பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் மற்றும் ஒரு ஒயின் தயாரிக்கும் நிறுவனமும் இயங்கி வருகின்றன. இவற்றின் விவரங்கள் இணைப்பு-5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.*

## பீர் ஏற்றுமதி

*3.14 2013 ஆம் ஆண்டில், பீரினை தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், பீரினை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நேர்வில் ஆயத்தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், ஏற்றுமதி கட்டணம் மற்றும் ஏற்றுமதி உரிமக் கட்டணம் ஆகியவற்றை மாற்றியமைத்து விதித்திருத்தங்கள் செய்தும் 2015 ஆம் ஆண்டில் அரசு ஆணையிட்டுள்ளது. வெளி மாநிலங்களுக்கு பீர் ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-*

| ஆண்டு | ஏற்றுமதி செய்யப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2015-2016 | 1,15,000 |
| 2016-2017 | 5,56,490 |
| 2017-2018 (31-5-2017 வரை) | 1,27,150 |

## அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி

3.15 1981 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், நட்சத்திர விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, உரிய சிறப்பு கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர் அனுமதி ஆணைகள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களால் வழங்கப்படுகிறது. அயல்நாட்டு மதுபான வகைகளின் இறக்குமதியை சீரமைக்க 2-3-2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் வழிப்படுத்தும் முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்ய செலுத்தப்படும் சிறப்புக் கட்டணத் தொகையில் 3% சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தால் வசூலிக்கப்படுகிறது. மேலும், அயல்நாட்டு மதுபான முதற்கட்ட விற்பனைமீது 58% மதிப்புக் கூட்டு வரியும் விதிக்கப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டில், சேவைக் கட்டணம் மூலமாக ரூ.21.55 இலட்சம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினால் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட சில சில்லறை விற்பனை மதுபானக் கடைகள்மூலம் இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை விற்பனை செய்கிறது.

3.16 அயல்நாட்டு மதுபானங்கள் மீதான சிறப்புக் கட்டணம் மூலமாக கிடைக்கப்பெற்ற வருவாய் பின்வருமாறு:

| வ. எண் | நிதியாண்டு | சிறப்புக் கட்டணம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | 2010-2011 | 1.86 |
| 2. | 2011-2012 | 1.96 |
| 3. | 2012-2013 | 2.70 |
| 4. | 2013-2014 | 3.30 |
| 5. | 2014-2015 | 7.39 |
| 6. | 2015-2016 | 7.74 |
| 7. | 2016-2017 | 10.80 |

**மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை**

3.17 மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 2016 டிசம்பர் 15 ஆம் நாள் மற்றும் 2017 மார்ச் 31 ஆம் தேதிகளில் தனது ஆணையில் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டது:

(i) தேசிய/மாநில நெடுஞ்சாலைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு உரிமங்கள் வழங்கப்படுவதை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

(ii) ஏற்கெனவே செயல்பட்டு வரும் உரிமங்கள் இந்த உத்தரவுக்கு முன்னால் புதுப்பிக்கப்பட்டிருப்பின் உரிமகாலம் காலாவதி ஆகும் வரை தொடர்ந்து செயல்படலாம். ஆனால், 1-4-2017-க்குப் பின்னர் செயல்படாது.

(iii) மது விற்பனை தொடர்பான தேசிய/மாநில நெடுஞ் சாலைகளில் குறியீடுகள் மற்றும் விளம்பரப் பலகைகள் வைப்பதை தடை செய்வதுடன் ஏற்கெனவே வைக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்ற வேண்டும்.

(iv) 20,000 மற்றும் அதற்கும் குறைவாக மக்கள்தொகை கொண்ட உள்ளாட்சி பகுதிகளில் தேசிய/மாநில நெடுஞ்சாலை /நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 220 மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக்கூடாது.

[2017 ஜூன் 19

(v) 20,000 க்கும் அதிகமாக மக்கள் தொகை கொண்ட உள்ளாட்சி பகுதிகளில் தேசிய/மாநில நெடுஞ்சாலை/நெடுஞ் சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்குள் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு உரிமம் வழங்கக்கூடாது.

3.18 மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் மேற்படி உத்தரவுகளை உடனடியாக செயல்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. மதுபானங்கள் விற்பனை தொடர்பாக தேசிய/மாநில நெடுஞ் சாலைகளில் வைக்கப்பட்டிருந்த விளம்பரங்கள்/குறியீடுகள் அனைத்தும் அகற்றப்பட்டன. மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின்படி டாஸ்மாக் தனது 3321 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை 1-4-2017 அன்று மூடியது. கடைகளை இடமாற்றம் செய்யும்பொழுது, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் 2003 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளின், விதி எண் 8(1)-ல் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி (norms) கடைகளின் புதிய அமைவிடம் அமைந்துள்ளதா என்று உறுதி செய்யப்படுகிறது. பொதுமக்கள் எழுப்பும் நியாயமான ஆட்சேபணைகளும், கடைகளை இடமாற்றம் செய்வது குறித்து முடிவெடுப்பதற்கு முன்பு, கவனத்தில் கொள்ளப்படுகிறது. மேலும், தேசிய/மாநில நெடுஞ்சாலைகள்/நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 500 மீட்டர்/220 மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள எப்.எல்.2/ எப்.எல்.3/எப்.எல்.3 ஏ/எப்.எல்.3ஏஏ உரிம இடங்களில் செயல்பட்டு வந்த மதுபானக் கூடங்கள் அனைத்தும் 1-4-2017 முதல் மூடப்பட்டன.

3.19 மொத்தம் 124 எப்.எல்.2 உரிமங்களும், 512 எப்.எல்.3 உரிமங்களும், 12 எப்.எல்.3.ஏ உரிமங்களும், 6 எப்.எல்.3.ஏஏ உரிமங்களும் 1-4-2017 முதல் மூடப்பட்டுள்ளன. மேலும் தேசிய /மாநில நெடுஞ்சாலைகள்/நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அணுகுபாதையிலிருந்து 500/220 மீட்டர் தூரத்தில் மதுபானங்கள் விற்பனை செய்வதற்கு எந்தவிதமான புதிய உரிமங்களும் வழங்கப்படவில்லை.

*2017 ஜூன் 19]*

**மாநில ஆய வில்லைகள்**

*3.20 கள்ள மற்றும் போலி மதுபானங்களின் நடமாட்டம் மற்றும் விற்பனையைத் தடுக்கும் பொருட்டு, 2003 ஆம் ஆண்டு முதல் அதிக பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய, செயற்கை இழை ஆயவில்லைகளை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்மூலம் விற்பனை செய்யப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள், பீர் மற்றும் ஒயின் பாட்டில்கள்மீது ஒட்டி விற்பனை செய்யப்படும் நடைமுறையானது, அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களும் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது மாதமொன்றுக்கு சராசரியாக 25.02 கோடி ஆயவில்லைகள் தேவைப்படுகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் ஆயவில்லைகளின் விற்பனைமூலம் அரசு ஈட்டியுள்ள வருவாய் ரூ.22.02 கோடியாகும்.*

**மனந்திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி**

*3.21 கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்ட மதுவிலக்குக் குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக, 2003-2004 ஆம் ஆண்டில் முதன் முதலாக அரசு கடனாக நிதி உதவி வழங்கியது.*

*3.22 2011-2012 ஆம் ஆண்டில் கடனாக வழங்கப்பட்டு வந்த மறுவாழ்வு நிதி ரூ.2.20 கோடியிலிருந்து ரூ.5.00 கோடியாக உயர்த்தப்பட்டதோடு மானியமாகவும் மாற்றப்பட்டது. இதேபோன்று, அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும், ரூ.5.00 கோடி மறுவாழ்வு நிதி மானியமாக வழங்கப்பட்டது.*

*3.23 ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் துணை/உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மறுவாழ்வு குழு மதுவிலக்கு குற்றவாளிகளின் பொருளாதார மறுவாழ்விற்காக வழங்கப்படும் மானியத் தொகையை அளிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ளது.*

*3.24 இக்குழு மதுவிலக்கு குற்றங்களுக்கு தண்டனை பெற்று, மனந்திருந்தி, பொருளாதார நிலையில் நலிவுற்று இருப்பவர்களின் மறுவாழ்விற்கென பயன்பெறுவோர் பட்டியலை தெரிவு செய்யும்.*

இந்த பயனாளிகளுக்கு கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, துணி சோப்பு, துணி சோப்புப் பொடி முதலியவைகளை தயாரித்தல் மற்றும் சிறு வியாபாரங்களை மேற்கொள்ள அதிகபட்சமாக நபர் ஒன்றுக்கு ரூ.30,000/-க்கு மிகாமல் மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

3.25 2016-2017 ஆம் ஆண்டிலும் அரசாணை (நிலை) எண் 17, உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறை, நாள் 17-10-2016-ன்படி, இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்றவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காக ரூ.5.00 கோடி அரசால் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

3.26 கடந்த 10 ஆண்டுகளில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட கடனுதவி/மானியம் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2007-2008 | 250.00 | 2004 |
| 2008-2009 | 250.00 | 1651 |
| 2009-2010 | 220.00 | 1569 |
| 2010-2011 | 220.00 | 1524 |
| 2011-2012 | 500.00 (மானியம்) | 1898 |
| 2012-2013 | 500.00 (மானியம்) | 1900 |
| 2013-2014 | 500.00 (மானியம்) | 1780 |
| 2014-2015 | 500.00 (மானியம்) | 1643 |
| 2015-2016 | 500.00 (மானியம்) | 1666 |
| 2016-2017 | 500.00 (மானியம்) | 1650 |

**கள்ளச்சாராயத்தினால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு**

3.27 சாராயம் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே மாநிலம் தழுவிய விழிப்புணர்வு ஏற்படுத்த, முதன் முதலில் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சமும், அதன்பின்பு 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் 2011-2012 முதல் 2014-2015 வரையிலான ஆண்டுகளில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அரசால் ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது.

3.28 2015-2016 ஆம் ஆண்டில், குடிப்பழக்கம் மற்றும் கள்ளச் சாராயத்திற்கு எதிரான விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ஒதுக்கப்பட்ட நிதியானது, ரூ.1.00 கோடியிலிருந்து, ரூ.3.00 கோடியாக அரசால் உயர்த்தப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில், அரசாணை (நிலை) எண்.15, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறை, நாள் 29-9-2016-ன் படி விழிப்புணர்வு முகாம்கள் நடத்த தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நிதியிலிருந்து ரூ.3.00 கோடி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையருக்கு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது.

3.29 அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும், தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விழிப்புணர்வு பேரணி, முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பொது இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டு பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலி போன்றவைகள் மாணவ மாணவிகள், சுய உதவி குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் மூலமாகவும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தின் தனித்துவமான சமூக, பொருளாதார, புவியியல் காரணிகளுக்கு ஏற்றவாறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட நிருவாகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

## 4. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

4.1 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தலை ஒழிப்பதற்காகவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் வெளி மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதை தடுப்பதற்காகவும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

4.2 காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக ஒரு காவல் துறை தலைவர், சென்னையில் மத்திய புலனாய்வுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளர் ஒருவரும், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரும் (அமலாக்கம்) பணியாற்றுகின்றனர். மத்திய புலனாய்வுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணை கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும், ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

4.3 மாநிலத்தில் தொண்ணூற்று ஆறு அமலாக்க அலகுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டம்/நகரங்களில் உள்ள துணைக்காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாநகரங்களில் காவல் ஆணையர்களின் நிருவாக மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் மற்றும் அதனைச் சார்ந்த அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

### சோதனைச் சாவடிகள்

4.4 வெளி மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், தெளிந்த சாராவி மற்றும் சாராய உறைகள் ஆகியவை தமிழ்நாட்டுக்குள் கள்ளத்தனமாக கடத்தப்படுவதை கண்காணித்து தடுக்க 45 மதுவிலக்குச் சோதனைச் சாவடிகள் மற்றும் 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தில் இயங்கி வருகின்றன:

2017 ஜூன் 19]

**அ) சோதனைச் சாவடிகள்**

| வரிசை எண் | மாவட்டம் | சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | 5 |
| 2. | கன்னியாகுமரி | 1 |
| 3. | தேனி | 1 |
| 4. | திருவள்ளூர் | 5 |
| 5. | வேலூர் | 5 |
| 6. | கடலூர் | 4 |
| 7. | விழுப்புரம் | 9 |
| 8. | கிருஷ்ணகிரி | 7 |
| 9. | ஈரோடு | 1 |
| 10. | சேலம் | 2 |
| 11. | நீலகிரி | 1 |
| 12. | திருவாரூர் | 1 |
| 13. | திருப்பூர் | 1 |
| 14. | கோயம்புத்தூர் | 1 |
| 15. | சென்னை மாநகரம் | 1 |
| | மொத்தம் | 45 |

**ஆ) நடமாடும் சோதனைச் சாவடிகள்**

| வரிசை எண் | மாவட்டம் | நடமாடும் சோதனைச் சாவடிகள் |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் | 2 |
| 2. | கடலூர் | 1 |
| 3. | விழுப்புரம் | 1 |
| 4. | கிருஷ்ணகிரி | 1 |
| 5. | திருவள்ளூர் | 1 |
| 6 | திருவாரூர் | 1 |
| | மொத்தம் | 7 |

[2017 ஜூன் 19

## திடீர் வாகனச் சோதனை

*4.5 தெளிந்த சாராவியானது கடத்தப்பட்டு, போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மதுபானமாக மலிவு விலையில் விற்கப்படுகிறது. இது, கள்ளச் சாராய இறப்புகளை ஏற்படுத்துகிறது. மாநிலம் முழுவதும் மத்திய புலனாய்வுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளின்மூலம் சேகரிக்கப்படும் நுண்ணறிவு தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகன சோதனைகள், முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் (31-5-2017 வரை) இத்திடீர் வாகன சோதனைகளின்மூலம் 395 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 108 வாகனங்கள் (1 லாரி, 6 டிரக்குகள், 10 ஈப்புகள், 25 கார்கள், 3 ஆட்டோக்கள் மற்றும் 63 இருசக்கர வாகனங்கள்) கைப்பற்றப்பட்டுள்ளன.*

## காந்தியடிகள் காவலர் பதக்கம்

*4.6 குடியரசு தினத்தன்று, கள்ளச் சாராய ஒழிப்புப் பணியில் சிறப்பாகப் பணிபுரிந்த காவல் துறை பணியாளர்களுக்கு, காந்தியடிகள் காவலர் பதக்கமும், ரூ.20,000/- பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டு, ஜனவரி 26 ஆம் நாள் குடியரசு தினத்தன்று, 2016 ஆம் ஆண்டிற்கான பதக்கமானது, ஐந்து காவல் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.*

*அரசாணை (நிலை) எண் 09, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (7) துறை, நாள் 27-3-2017-ல், இவ்வெகுமதியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.20,000/-லிருந்து ரூ.40,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.*

## இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்

*4.7 தெளிந்த சாராவி கடத்துதல் பற்றி தங்கள் உயிரை பணயம் வைத்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கு தகவல்கள் தரும் தகவலாளர்களுக்கு வெகுமதி வழங்குவதற்காக, 2015-2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் நிதியிலிருந்து ரூ.15 இலட்சத்தை ஒப்பளிப்பு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி 97 தகவலாளர்களுக்கு ரூ.13,49,000/- பகிர்ந்து வழங்கப்பட்டது.*

## மதுவிலக்கு உதவி தொலைபேசி எண். 10581

*4.8 கட்டணமில்லா மதுவிலக்கு உதவி தொலைபேசி எண் 10581 ஏற்படுத்த அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அது*

*மதுவிலக்கு தலைமையக மத்திய புலனாய்வுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டு 24-7-2013 முதல் செயல்பட்டு வருகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், தெளிந்த சாராவி கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராயம் விற்பனை செய்தல் ஆகிய மதுவிலக்கு குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக இருப்பது இந்த உதவி தொலைபேசி எண் ஏற்படுத்தியதின் நோக்கமாகும். 2016-2017 ஆம் ஆண்டில் (31-5-2017 வரையில்) உதவி தொலைபேசி எண்ணில், மொத்தம் 4098 புகார்கள் பெறப்பட்டு, அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்**

*4.9 2016-2017 ஆம் ஆண்டில் (31-5-2017 வரையில்) ரூ.2.92 கோடி மதிப்புள்ள 7.30 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயம், ரூ.99.88 இலட்சம் மதிப்புள்ள 99,884 லிட்டர் தெளிந்த சாராவி, ரூ.17.62 கோடி மதிப்புள்ள பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 17.62 இலட்சம் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான பாட்டில்கள் மற்றும் ரூ.78.17 இலட்சம் மதிப்புள்ள மற்ற மதுபான வகைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்கு குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 3658 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. திருவள்ளூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் சட்டத்திற்குப் புறம்பாக இயங்கி வந்த தலா ஒரு போலி மதுபான உற்பத்திக் கூடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.*

**கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

*4.10 கள்ளச்சாராயத்தில் முக்கியமாக "மெத்தனால்" என்ற இரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. ஆதலால் "மெத்தனால்" எளிதாகக் கிடைப்பதைத் தடுக்கும் பொருட்டு, அதனை 2002 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் அரசு கொண்டு வந்தது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் போன்றவற்றை தீவிரமாக கட்டுப்படுத்திடவும், 2002 ஆம் ஆண்டில், 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.*

[2017 ஜூன் 19

மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அப்பொருளை பயன்படுத்த மற்றும் வைத்திருக்க உரிமம் பெற்ற பிரிவுகள் முதலியவற்றைச் சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை மதுவிலக்கு அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

4.11 இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால், இம்மாநிலத்தில் 2011 முதல் கள்ளச்சாராய இறப்புகள் ஏதுமில்லை.

## தடுப்புக்காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982)

4.12 மாநிலத்தில் பொது ஒழுங்கு சீர்குலைவதற்கு மூலகாரணம் கள்ளச்சாராயக்காரர்கள், கணினிவெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் போன்றவர்களின் அபாயகரமான நடவடிக்கைகள் ஆகும். இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு சட்டம் 14/1982, 1982 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, மேற்கூறிய குற்றவாளிகள் ஓராண்டு வரை தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர்.

2016-2017 ஆம் ஆண்டில் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 14/1982), 312 தொடர் மதுவிலக்கு குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

5.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) 23-5-1983 அன்று 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் சாராயத்தை தமிழ்நாட்டில் மொத்த விற்பனை விநியோகம் செய்யும் உரிமையை தனியாரிடமிருந்து கையகப்படுத்தியது.

5.2 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) பிரிவு 17-C (1-A) (a)-ன்படி தமிழ்நாடு முழுவதும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள்

மற்றும் அயல்நாட்டு மதுவகைகளை மொத்த விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் மதுபான மொத்த விநியோகத்தை இந்நிறுவனம் 23-5-1983 முதல் செய்து வருகிறது. மேலும் 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பிரிவு 17-C (1-B) (a)-ன்படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் டாஸ்மாக் நிறுவனம் 29-11-2003 முதல் மதுபான சில்லறை விற்பனையை ஏற்று நடத்தி வருகிறது. மேலும், இந்நிறுவனம் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளையும் விற்பனை செய்து வருகிறது.

**இயக்குநர் குழுமம்**

5.3 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுமம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

5.4 இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.15.00 கோடி ஆகும். மொத்த பங்கு மூலதனமான ரூ.15.00 கோடியும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**பதிவு அலுவலகம்**

5.5 தமிழ்நாடு மாநில வாணிப கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக முதன்மை பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவனச் செயலர், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிருவாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை) மற்றும் தொழிலாளர் துணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்) மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

[2017 ஜூன் 19

## மண்டல அலுவலகங்கள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்

*5.6 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையில் 5 மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவ்வலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.*

*5.7 31-5-2017-ல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு 38 மாவட்ட மேலாளர் அலுவலகங்களும், 43 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும், 2,830 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் 897 சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்களும் உள்ளன. இந்த 43 மதுபானக் கிடங்குகளில் 30 மதுபானக் கிடங்குகள் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்குகின்றன.*

## சில்லறை விற்பனை பணியாளர்கள்

*5.8 31-5-2017-ல் சில்லறை விற்பனைக் கடைகளில் ஒப்பந்த/தொகுப்பூதிய அடிப்படையில் 7,203 கடை மேற்பார்வையாளர்களும், 15,744 விற்பனையாளர்களும் மற்றும் 3,732 உதவி விற்பனையாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், செப்டம்பர் மாதத்தில், இப்பணியாளர்களுக்கான தொகுப்பூதியமானது உயர்த்தி வழங்கப்படுகிறது.*

## சில்லறை விற்பனைப் பணியாளர் நலத்திட்டங்கள்

*5.9 சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியத்துடன் ஒவ்வொரு ஆண்டும் 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் வருங்கால வைப்புநிதித்திட்டம்* (EPF Scheme) *தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம்* (EDLI Scheme), *பணிக்கொடை* (Family GRATUITY), *குடும்ப சேம நலநிதித் திட்டம்* (Family Benefit Fund Scheme), *ஆண்டு கூடுதல் ஊக்கத் தொகை* (Annual Additional Fixed Incentive), *ஆகிய திட்டங்கள் சில்லறை விற்பனைப் பணியாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*2017 ஜூன் 19]*

**மூடப்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்த பணியாளர்களை மீளப் பணியமர்த்தல்**

*5.10 19-6-2016 மற்றும் 24-2-2017 அன்று மூடப்பட்ட 1000 சில்லறை விற்பனைக் கடைகளில் பணிபுரிந்த பணியாளர்கள் மற்றும் மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி மூடப்பட்ட கடைகளில் பணிபுரிந்த பணியாளர்கள், இந்நிறுவனத்தில் தகுந்த பணியிடங்களில் மீளப் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும், எந்தப் பணியாளருக்கும் பணியிழப்பு ஏற்படவில்லை.*

**மதுபான வகைகள் கொள்முதல்**

*5.11 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் ஒரு ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது, பீர் மற்றும் ஒயின் வகைகளை கொள்முதல் செய்து வருகிறது.*

**மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள்**

*5.12 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பற்றுச்சீட்டுகளை கையினால் எழுதும்போது ஏற்படும் தாமதம் மற்றும் தவறுகளைத் தவிர்க்கவும் மற்றும் சில்லறை விற்பனைக் கணக்குகள் மற்றும் சரக்கு இருப்பு விவரங்களைச் சுலபமாகப் பராமரிப்பதற்காகவும், சில மாவட்டங்களில் மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள் நிறுவப்பட்டன. இந்த இயந்திரங்கள் சென்னை (வடக்கு), சென்னை (மத்தியம்), சென்னை (தெற்கு), காஞ்சிபுரம் (வடக்கு), காஞ்சிபுரம் (தெற்கு), திருவள்ளூர் (கிழக்கு), திருவள்ளூர் (மேற்கு), திருச்சி, கோயம்புத்தூர் (வடக்கு), கோயம்புத்தூர் (தெற்கு), மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் அமைந்துள்ள மதுபானக் கடைகளில் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள மாவட்டங்களிலும் மின்னணு பற்றுச்சீட்டு இயந்திரங்கள் நிறுவப்படும்.*

**மது விற்பனை இல்லாத நாட்கள்**

*5.13 மது விற்பனை இல்லாத நாட்கள் 5-லிருந்து 8ஆக 3-1-2012 முதல் உயர்த்தப்பட்டு உள்ளன. அவை காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள்*

[2017 ஜூன் 19

நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகியவை ஆகும். இது தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

**அரசு வருவாய்**

5.14 அரசின் வருவாய் பற்றிய விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் கோடியில்) |
| 1. | 2003-04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2. | 2004-05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3. | 2005-06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4. | 2006-07 | 3986.41 | 3487.20 | 7473.61 |
| 5. | 2007-08 | 4764.05 | 4057.11 | 8821.16 |
| 6. | 2008-09 | 5755.42 | 4846.08 | 10601.50 |
| 7. | 2009-10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8. | 2010-11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9. | 2011-12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10. | 2012-13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11. | 2013-14(*) | 5034.82 | 16640.07 | 21674.89 |
| 12. | 2014-15(*) | 5731.18 | 18433.77 | 24164.95 |
| 13. | 2015-16(*) | 5836.01 | 20009.57 | 25845.58 |
| 14. | 2016-17(*) | 6248.17 | 20747.08 | 26995.25 |

(*) ஆயத்தீர்வை வருவாய் குறைவாகவும், மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) அதிகமாகவும் இருப்பது வரி விதிப்பு முறைகளில் செய்யப்பட்ட சில மாற்றங்களினால் ஆகும்.

*2017 ஜுன் 19]*

## 6. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

*6.1 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது (குற்றப் புலனாய்வு துறை) சென்னையில் 17-12-1963 அன்று ஏற்படுத்தப்பட்டது. 1987, 1990, 1994, 1995 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகளின்படி திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது மொத்தம் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய நுண்ணறிவு தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்வது ஆகியவை இப்பிரிவின் முக்கிய பணிகள் ஆகும்.*

### நிருவாக அமைப்பு

*6.2 உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின்கீழ் இயங்கும் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது காவல் துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்) அவர்களின் தலைமையிலும், காவல் துறை தலைவர் (குற்றம்)* (Anti Narcotics Task Force) *அவர்களின் மேற்பார்வையில், ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 12 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 126 காவலர்கள் ஆகியோரைக் கொண்டு மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு இயங்கி வருகிறது.*

### மத்திய போதைப் பொருள் பிரிவுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்

*6.3 1985 ஆம் ஆண்டில் போதை பொருள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து பணியாற்றுகிறது. மத்திய போதைப் பொருள் தடுப்புப்*

[2017 ஜூன் 19

*பிரிவானது, மாநில போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில், இப்பிரிவைச் சார்ந்த அதிகாரிகளுக்குப் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் அளிக்கிறது.*

## *6.4* 1985 ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள தண்டனை விவரங்கள்

- *1 கிலோ வரை கஞ்சா அல்லது 5 கிராம் வரை ஹெராயின் (குறைந்த அளவு) வைத்திருந்தால் ஒரு ஆண்டு வரை சிறைத் தண்டனை அல்லது ரூ.10,000/- அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.*
- *1 கிலோவிற்கு மேல் 20 கிலோ வரை கஞ்சா அல்லது 6 முதல் 250 கிராம் வரை ஹெராயின் (நடுத்தர அளவு) வைத்திருந்தால் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.1 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படலாம்.*
- *20 கிலோவிற்கு மேல் கஞ்சா அல்லது 250 கிராமிற்கு மேல் ஹெராயின் (வணிக அளவு) வைத்திருந்தால் 10 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.1 இலட்சம் முதல் ரூ.2 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படலாம்.*
- *இத்தகைய குற்றச் செயல்களில் மீண்டும் மீண்டும் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்ச சிறைத் தண்டனையின் ஒன்றரை மடங்கு வரை நீட்டிக்கத்தக்க கடுங்காவல் சிறை தண்டனையுடன் மற்றும் அதிகபட்ச அபராதத் தொகையில் ஒன்றரை மடங்கு வரை நீட்டிக்கத்தக்க அபராதமும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.*
- *யாதொருவர் இந்த சட்டத்தின்கீழ் மீண்டும் மீண்டும் தண்டிக்கத்தக்க குற்றங்கள் எதையும் செய்திருந்தாலோ அல்லது செய்ய முயன்றாலோ அல்லது குற்றமுறு சதி அல்லது அதற்கு உடந்தையாக இருந்திருந்தாலோ மற்றும் இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக போதை மருந்துகளை வணிக அளவிற்கு வைத்திருந்தாலோ மற்றும் மேற்படி சட்ட விரோத செயல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதியுதவி செய்திருந்தாலோ, அவர் மரண தண்டனை விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.*

*2017 ஜூன் 19]*

## 1988 ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (PIT NDPS Act 1988)

*6.5 1988 ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988) மத்திய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்கீழ், போதை மருந்துகள் மற்றும் மனமயக்க பொருட்களை கள்ளத்தனமாக கடத்தும் நபர்களை காவலில் வைக்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஓர் ஆண்டும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளும் இச்சட்டத்தின்கீழ் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைக்கலாம்.*

## போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் பயன்பாட்டைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

*6.6 2016-2017 ஆம் ஆண்டில் (ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை), போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு 2,153 வழக்குகளைக் கண்டுபிடித்து 2,249 குற்றவாளிகளை கைது செய்துள்ளது. அவர்களிடமிருந்து 6,410 கிலோ உலர் கஞ்சா, 2 கிலோ கெட்டமின், 2.125 கிலோ மெத்தகுலோன், 2.017 கிலோ கிராம் மெத்தாம்பிடாமின், 2.500 கிலோ கஞ்சா சாக்லேட் மற்றும் 34 போதை மாத்திரைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.14.55 கோடி ஆகும்.*

*2016-2017 ஆம் ஆண்டில் (31-5-2017 வரையில்) 35 போதைப் பொருள் குற்றவாளிகள், குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.*

*போதைப் பொருள் மற்றும் மனமயக்கச் சட்டம் 1985-ஐ சிறப்பாகச் செயல்படுத்த சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.*

*போதைப் பொருள் குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட புதிய குற்றவாளிகள்மீது குற்றப் பதிவேடுகள் (History Sheets) துவங்கப்பட்டு கண்காணிக்கப் படுகின்றன.*

*வனப் பகுதிகளில் கஞ்சா பயிரிடப்படுவதைத் தடுக்க வனத் துறையினருடன் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன.*

[2017 ஜூன் 19

பதிவேடுகளை சிறந்த முறையில் பராமரிக்க மற்றும் சிறப்பான மேற்பார்வைக்கு ஒழுங்கான முறையில் பயன்படுத்த குற்றப்பிரிவில், ஒரு குற்ற ஆவணப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

வணிக அளவு உள்ள வழக்குகளின் சீரிய மேற்பார்வைக்கு ஒரு கொடுங்குற்ற ஆவணப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

## சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள்

6.7 பொதுமக்கள் மத்தியில், போதைப் பொருட்கள் பயன்படுத்துதலைத் தடுக்கவும், போதை மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கடத்துவதைத் தடுக்கவும் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு/கடத்தல் தடுப்பு நாள் 26-6-2016 அன்று தமிழ்நாட்டில் தகுந்த முறையில் அனுசரிக்கப்பட்டது. அனைத்து போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலகுகள் உள்ள இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலுவலர்கள், கடலோரக் காவல்படை, இந்திய செஞ்சிலுவை சங்கம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியோரால் இந்நாளில், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சென்னையில், இந்நாளில் மாணவ மாணவியர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்ட மனிதச்சங்கிலி நடத்தப்பட்டது.

## 6.8 2017-2018 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை விவரங்கள்

1. போதைப் போருள் தடுப்பு சட்ட அமலாக்கம் குறித்து, போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவினருக்கு பயிற்சி அளித்தல்.

2. அண்டை மாநிலங்களிலிருந்து வரும் அதிகப்படியான போதைப் பொருட்களை தடுக்க தீவிர சோதனைகள் மேற்கொள்ளுதல்.

3. மலைப் பிரதேசங்களில் கஞ்சா செடி வளர்ப்பைத் தடுக்க தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளுதல்.

*2017 ஜூன் 19]*

*4. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவதைத் தடுக்க வனத்துறையினருடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்.*

*5. போதைப் பொருள் கடத்தும் குற்றவாளிகள் மீது தடுப்புக்காவல் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்.*

*6. மனுக்கள்மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணுதல்.*

*7. குற்றப் பிரிவில் உள்ள குற்ற ஆவண காப்பகத்தின்மூலம் தகவல்கள் சேகரித்து தகவல்களை ஒப்பிட்டு போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்துதல்.*

*8. வழக்கமான போதைப் பொருள் குற்றவாளிகளைக் கண்டறிந்து கண்காணித்தல்.*

*9. போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலகுகளை சிறப்பாக மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.*

*10. கொடுங்குற்ற வழக்குகளை கலந்தாய்வு கூட்டத்தில் ஆய்வு செய்து நமூனாக்கள்மூலம் அறிவுறுத்துதல்.*

*11. விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் வெவ்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க சிறப்பாக மேற்பார்வையிடுதல்.*

*12. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினர்மூலம் பொது இடங்களில் குறிப்பாக கல்வி நிறுவனங்கள் அருகில் சோதனை செய்து கல்வி நிறுவனங்களின் அருகில் போதைப் பொருள் விற்பனையைத் தடுத்தல்.*

*13. தனியார் கூரியர் நிறுவனங்களைப் பற்றிய நுண்ணறிவை சேகரித்து சட்டப்படி நடவடிக்கைக்கு உட்படுத்துதல்.*

*14. 1985 ஆம் ஆண்டின் போதைப் பொருள் மற்றும் மனமயக்கப் பொருள்கள் சட்டத்தின்படி பிற போதைப் பொருள் தடுப்பு பிரிவுகளுடன் இணைந்து சோதனைகள் மேற்கொள்ளுதல்.*

15. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, காவல் துறையினர் மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள மருந்து கடைகளை சோதனை செய்தல்.

## 7. முடிவுரை

அரசு, கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ள மற்றும் போலி மதுவகைகளின் விற்பனை மற்றும் கடத்தல், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் விற்பனை ஆகியவற்றைத் தடுப்பதற்கு உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளும். அரசு பூரண மதுவிலக்கினை மாநிலத்தில் படிப்படியாக கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2017 ஜுன் 19]

## இணைப்பு-1

### (பத்தி 3.1-ஐ பார்க்க)

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள் மற்றும் விதிகள்

| | |
|---|---|
| 1. | தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1937 (தமிழ்நாடு சட்டம் 10/1937). |
| 2. | தடுப்புக் காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1982) |
| 3. | தமிழ்நாடு நீரா மற்றும் பதநீர் விதிகள், 1939 |
| 4. | தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகள், 1958. |
| 5. | தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகள், 1959. |
| 6. | தமிழ்நாடு தீர்வு செய்ய வேண்டிய பொருள் (தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்பட்டவை) விதிகள், 1979. |
| 7. | தமிழ்நாடு வடிப்பாலை விதிகள், 1981. |
| 8. | தமிழ்நாடு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (உற்பத்தி) விதிகள், 1981. |
| 9. | தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள், 1981. |
| 10 | தமிழ்நாடு மதுபானம் (இடமாற்றம்) விதிகள், 1982. |
| 11. | தமிழ்நாடு மதுபானம் (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகள், 1983. |
| 12. | தமிழ்நாடு பீர் வடிப்பாலை விதிகள், 1983. |
| 13. | தமிழ்நாடு மதுவிலக்கு மேல்முறையீடு மற்றும் சீராய்வு விதிகள், 1983. |
| 14. | தமிழ்நாடு குளோரல் ஹைட்ரேட் விதிகள், 1984. |
| 15. | தமிழ்நாடு மாஸ் ஒயின் விதிகள், 1984. |

| | |
|---|---|
| 16. | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (கட்டுப்பாடு) விதிகள், 1984. |
| 17. | தமிழ்நாடு சாராவி தயாரித்தல் (மாநிலத்திற்குள் தொழில் மற்றும் வணிகம்) கட்டுப்பாடு விதிகள், 1985. |
| 18. | தமிழ்நாடு போதை மருந்துகள் விதிகள், 1985. |
| 19. | தமிழ்நாடு மதுபானம் (சொந்த பயன்பாட்டிற்கான உடைமை) விதிகள், 1996. |
| 20. | தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள், 2000. |
| 21. | தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகள், 2003. |
| 22. | தமிழ்நாடு ஒயின் (உற்பத்தி) விதிகள், 2006. |
| **இத்துறையால் செயல்படுத்தப்படும் மத்திய சட்டங்கள் மற்றும் விதிகள்** | |
| 1. | மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் (ஆயத்தீர்வை) சட்டம், 1955. |
| 2. | மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் (ஆயத்தீர்வை) விதிகள், 1956. |
| 3. | போதை மருந்துகள்- மன மயக்கப் பொருட்கள் சட்டம், 1985. |
| 4. | போதை மருந்துகள்- மன மயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம், 1988 |

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு -2

## (பத்தி 3.5-ஐ பார்க்க)

## தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு கொள்ளளவு மற்றும் உற்பத்தி பற்றிய விவரங்கள்

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015- செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **கூட்டுறவுத்துறை திருவாளர்கள்** | | | |
| 1. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருப்பூர் மாவட்டம். | 11000 | 13701 |
| 2. | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் மாவட்டம். | 12000 | 9565 |
| 3. | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம். | 14000 | 10244 |
| 4. | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 15000 | 7747 |
| 5. | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தருமபுரி மாவட்டம். | 12000 | 8562 |
| 6. | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், மதுரை மாவட்டம். | 17000 | 11139 |

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015- செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 7. | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 7000 | 4288 |
| 8. | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 10000 | 4882 |
| 9. | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், வேலூர் மாவட்டம். | 21000 | 3700 |
| 10. | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், விழுப்புரம் மாவட்டம். | 16000 | 2120 |
| 11. | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், அலகு -1, விழுப்புரம் மாவட்டம். | 15000 | 18712 |
| 12. | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், கடலூர் மாவட்டம். | 12000 | 9489 |
| 13. | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், அலகு -2, விழுப்புரம் மாவட்டம். | 12000 | 23196 |

2017 ஜூன் 19]

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015-செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 14. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல் மாவட்டம். | 19000 | 14663 |
| 15. | என்.பி.கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாகப்பட்டினம் மாவட்டம். | 18000 | 3365 |
| 16. | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், திருவண்ணாமலை மாவட்டம். | 12000 | 10990 |
| | மொத்தம் | 223000 | 156363 |
| **பொதுத் துறை திருவாளர்கள்** | | | |
| 17. | மதுரா சுகர்ஸ், மதுரை மாவட்டம். (இயங்கவில்லை) | 6000 | 0 |
| 18. | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை லிமிடெட், தஞ்சாவூர் மாவட்டம். | 14000 | 12516 |
| 19. | பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம். | 12000 | 13278 |
| | மொத்தம் | 32000 | 25794 |

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015- செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **தனியார் துறை திருவாளர்கள்** | | | |
| 20. | பத்மாதேவி சுகர்ஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 9000 | 0 |
| 21 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு - 1, தேனி மாவட்டம். | 12000 | 19716 |
| 22. | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு - 1, திருநெல்வேலி மாவட்டம். | 12600 | 9820 |
| 23. | சக்தி சுகர்ஸ் லிமிடெட், அலகு - 1, ஈரோடு மாவட்டம். | 19300 | 49506 |
| 24. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ், அலகு - 2, ஈரோடு மாவட்டம். | 18000 | 22257 |
| 25. | சக்தி சுகர்ஸ் லிமிடெட், அலகு - 2, சிவகங்கை மாவட்டம். | 12000 | 17784 |
| 26. | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ், தஞ் சாவூர் மாவட்டம். | 24000 | 9011 |
| 27. | இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், கடலூர் மாவட்டம். | 18600 | 59077 |

2017 ஜூன் 19]

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015- செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 28. | ராஜ்ஶ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு-2, விழுப்புரம் மாவட்டம். | 13000 | 39517 |
| 29. | பொன்னி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், நாமக்கல் மாவட்டம். | 12600 | 24604 |
| 30. | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், அலகு-1, கடலூர் மாவட்டம். | 24000 | 18598 |
| 31. | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், அலகு-2, தஞ்சாவூர் மாவட்டம். | 12000 | 10895 |
| 32. | இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட்,திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 11000 | 4179 |
| 33. | இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், கரூர் மாவட்டம். | 21000 | 36194 |
| 34. | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | 12100 | 13611 |
| 35. | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு-2, திருவண்ணாமலை மாவட்டம். | 15000 | 21354 |

[2017 ஜூன் 19

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015- செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 36. | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ், கடலூர் மாவட்டம். | 38000 | 23028 |
| 37. | இ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், புதுக்கோட்டை மாவட்டம். | 10000 | 15766 |
| 38. | அருணாசலம் சுகர்ஸ், திருவண்ணாமலை மாவட்டம். (இயங்கவில்லை) | 0 | 0 |
| 39. | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அரியலூர் மாவட்டம். | 16000 | 14105 |
| 40. | சக்தி சுகர்ஸ் லிமிடெட், அலகு-3, ஈரோடு மாவட்டம். | 10000 | 25040 |
| 41. | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு - 3, விழுப்புரம் மாவட்டம். | 27000 | 26092 |
| 42. | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், அலகு-3, விழுப்புரம் மாவட்டம். | 26000 | 27498 |

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட கொள்ளளவு (மெட்ரிக் டன்) | உற்பத்தி விபரம் (அக்டோபர் 2015-செப்டம்பர் 2016) (மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 43. | தனலக்ஷ்மி ஸ்ரீனிவாசன் சுகர்ஸ் பிரைவேட் லிமிடெட், பெரம்பலூர் மாவட்டம். | 18000 | 33894 |
| 44. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், திருவண்ணாமலை மாவட்டம். | 12000 | 31975 |
| 45. | எம்பீ சுகர்ஸ், திருநெல்வேலி மாவட்டம். (இயங்கவில்லை) | 20000 | 0 |
| 46. | மெட்ராஸ் சுகர்ஸ் லிமிடெட், விழுப்புரம் மாவட்டம். | 12000 | 35755 |
| | மொத்தம் | 435200 | 589276 |
| | ஓட்டு மொத்தம் | 690200 | 771433 |

[2017 ஜூன் 19

## இணைப்பு - 3

### (பத்தி 3.8-ஐ பார்க்க)

### தமிழ்நாட்டில் உள்ள வடிப்பாலைகளின் விவரங்கள்

| வ. எண் | உரிமதாரரின் பெயர் | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் ஆண்டு உற்பத்தி திறன் (கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **கூட்டுறவுத் துறை திருவாளர்கள்** | | | |
| 1. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல். | 55 | 16500 |
| 2. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருப்பூர். | 55 | 16500 |
| **தனியார் துறை திருவாளர்கள்** | | | |
| 3. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 67.5 | 20250 |
| 4. | சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஈரோடு. | 120 | 36000 |
| 5. | ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், கடலூர். | 75 | 26300 |
| 6. | திருச்சி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 18000 |

2017 ஜூன் 19]

| வ. எண் | உரிமதாரரின் பெயர் | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் ஆண்டு உற்பத்தி திறன் (கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 7. | சதன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், விழுப்புரம். | 20 | 6000 |
| 8. | மோகன் புரூவரீஸ் & டிஸ்டிலரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 62 | 18600 |
| 9. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், கடலூர். | 80 | 26400 |
| 10. | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், தஞ்சாவூர். | 60 | 19800 |
| 11. | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 60 | 20700 |
| 12. | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், தேனி. | 45 | 13500 |
| 13 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், திருநெல்வேலி. | 60 | 18000 |
| 14 | பவானி டிஸ்டிலரீஸ் & கெமிக்கல்ஸ், வேலூர். | 44 | 13200 |
| 15 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட், கடலூர். | 70 | 21000 |
| 16 | ஈ.ஐ.டி.பாரி (இந்தியா) லிமிடெட், சிவகங்கை. | 74 | 22200 |

| வ. எண் | உரிமதாரரின் பெயர் | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் உற்பத்தி திறன் நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) | அனுமதிக்கப் பட்ட தெளிந்த சாராவியின் ஆண்டு உற்பத்தி திறன் (கிலோ லிட்டர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 17 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 80 | 24000 |
| 18 | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட், விழுப்புரம். | 100 | 30000 |
| | மொத்தம் | 11875 | 366950 |

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

## இணைப்பு -4

### (பத்தி 3.11-ஐ பார்க்க)

### எத்தனால் தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள வடிப்பாலைகளின் விவரங்கள்

| வ. எண் | வடிப்பாலையின் பெயர் | அனுமதிக்கப் பட்ட எத்தனால் உற்பத்தி அளவு நாளொன்றுக்கு (கிலோ லிட்டர்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **கூட்டுறவுத் துறை திருவாளர்கள்** | | |
| 1. | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை | 30 |
| 2. | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 30 |
| **தனியார் துறை திருவாளர்கள்** | | |
| 3. | சக்தி சுகர்ஸ் லிமிடெட். | 50 |
| 4. | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 45 |
| 5. | தரணி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 6. | கோத்தாரி சுகர்ஸ் & கெமிக்கல்ஸ் லிமிடெட். | 30 |
| 7. | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட். | 45 |
| 8. | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட். | 60 |
| | மொத்தம் | 320 |

[2017 ஜூன் 19

## இணைப்பு - 5

## (பத்தி 3.13-ஐ பார்க்க)

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

| வ. எண் | உரிமதாரரின் பெயர் | சிறப்புரிமை வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் திருவாளர்கள்** | | |
| 1. | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 3-3-1982 |
| 2. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்டிரீஸ் (பி) லிமிடெட், விழுப்புரம். | 26-7-1982 |
| 3. | சிவா டிஸ்டில்லரீஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 26-8-1982 |
| 4. | எம்பீ டிஸ்டில்லரீஸ் லிமிடெட், காஞ்சிபுரம். | 6-6-1984 |
| 5. | என்ரிகா என்டர்பிரைஸஸ் (பி) லிமிடெட், திருவள்ளூர். | 28-7-1984 |
| 6. | மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 31-5-2002 |
| 7. | எலைட் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 28-11-2007 |
| 8. | எஸ்.என்.ஜெ. டிஸ்டில்லர்ஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 30-7-2008 |
| 9. | கால்ஸ் டிஸ்டில்லரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 10-1-2008 |
| 10. | கோல்டன் வாட்ஸ் (பி) லிமிடெட், திருவாரூர். | 20-10-2010 |

| வ. எண் | உரிமதாரரின் பெயர் | சிறப்புரிமை வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11. | இம்பீரியல் ஸ்பிரிட்ஸ் & ஒயின் (பி) லிமிடெட், கோயம்புத்தூர். | 24-1-2011 |
| **பீர் உற்பத்தி நிறுவனங்கள்** **திருவாளர்கள்** | | **இசைவுக் கடிதம் வழங்கப்பட்ட நாள்** |
| 1. | மோகன் புரூவரீஸ் & டிஸ்டில்லரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 24-8-1983 |
| 2. | எம்பீ புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 20-3-1987 |
| 3. | யுனைடெட் புரூவரீஸ் லிமிடெட், திருவள்ளூர். | 29-7-1994 |
| 4. | எஸ்.என்.ஜே. புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ்சிபுரம். | 8-3-2010 |
| 5. | கால்ஸ் புரூவரீஸ் (பி) லிமிடெட், புதுக்கோட்டை. | 30-9-2010 |
| 6. | அப்போல்லோ டிஸ்டில்லரீஸ் & புரூவரீஸ் (பி) லிமிடெட், திருவள்ளூர். | 1-7-2010 |
| 7. | ஏ. எம்.புரூவரீஸ் (பி) லிமிடெட், காஞ் சிபுரம். | 3-9-2010 |
| **ஒயின் உற்பத்தி நிறுவனம்** **திருவாளர்கள்** | | **இசைவுக் கடிதம் வழங்கப்பட்ட நாள்** |
| 1. | கம்பம் வேலி ஒயினரி (பி) லிமிடெட், தேனி. | 25-10-2007 |